வெத்தான்மறவாதேநினைக்கின்றேனமனத்துள்ளே
வைத்தாய்பெண்ணைத்தென்பால் வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளத்தாவுனக்காளாயினியல்லேனெனலாமே.

காரூர்புனலெய்திக்கைகல்லித்திரைக்கையாற்
பாரூர்புகழெழுதிப்பிதற்றும்பாமாலையுந்திச்
சீரூர்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளாரூரனெம்பெருமாற்காளல்லேனெனலாமே.

திருநள்ளாறு.

அதன்பின் கடவுளானவர் சுந்தரமூர்த்தியைநோக்கி தொண்டனே ! நீ இன்னும் நம்முடைய புகழைக்குறித்துப் பலவகையாகப்பாடு என்று அருளிச்செய்து அந்தரத்தானமானர். அதுநிற்க,புத்தூரிலிருக்கின்றசடங்கவிசிவாசாரியருடைய புத்திரி யாரோவெனில்,கலியாணந்தவிர்ந்ததினாலே சுந்தரமூர்த்தி நாயனாரைய தியானஞ்செய்துகொண்டிருந்துசிலகாலத்தின் பின் சிவலோகப்பிராப்தியானர்.

சுந்தரமூர்த்திநாயனர், திருவெண்ணெய் நல்லூரில் உள்ள திருவருட்டுறையென்னும் ஆலயத்தில் வீற்றிருக்கின்ற கடவுளானவர்தம்மை வணங்கொண்டபின்பு, திருநாவலூருக்குப்போய்ப் பதிகம்பாடியருளினர்.

திருவெண்ணெய்நல்லூரும்திருநாவலூரும்-பண்-நட்டராகம்

திருச்சிற்றம்பலம்.

கோவலனன்முகன்வாள்வர்கோனுங்குற்றேவல்செயய
மேவலர்முப்புரத்திமெழுவிதவனேமபிஞ
லேவலனர்வெண்ணெய்நல்லூரில்லவத்தென்னையாளுங்கொண்ட
நாவலனர்க்கிடமாவதுநந்திருநாவலூரே.

நாதனுக்கூர்கமக்கூர்நரசிங்கமுனையரைய
னுதரித்தீசனுக்காட்செயுமூரணிநாவலூரன்
சேதநற்றக்கவன்செண்டனஞ்ரனுனாத்தமிழ்
காதலித்துங்கற்றுங்கேட்டவர்தம்வினைகட்டறுமே.

பின்பு பரமசிவன் வாசம்பண்ணுகின்ற திருத்துறையூருக்குச் சென்று அக்கடவுளை நோக்கி அடியேன் தீவினையினாலே அவமானநெறியிற்செல்லாமல் தடுத்தாட்கொண்டாய் அடியேனுக்குத் தவநெறி தந்தருளென்று பவநெறிக்கு விலக்காகும் திருப்பதிகத்தைப் பாடியருளினர்.

திருத்துறையூர்த்தேவாரம்-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

மலையாரருவித்திரண்மாமணியுந்திக
குலையாரக்கொணர்ந்தெற்றியோர்பெண்ணைவடபாற்
கலையாரகுதற்கன்னியராடுந்துறையூர்த்
தலைவாவுனவெனழற்பொன்னேவென்றவதெறியே

செய்யார்கமலம்மலராவயல்மன்னன்
மையாற்பழிதீரகழ்ந்திடுந்துறையூர்மேற்
பொய்பாற்றவிராவுனைத்தனவல்லார்
மெய்யேபெறுவாரள்றவதெறிதானே.

திருச்சிற்றம்பலம்.

திருத்துறையூரை வணங்கி சிவபெருமான் எழுந்தருளிய பலதலங்களிலுஞ்சென்று வணங்கிதெம்பரத்தில் வீற்றிருக்கின்ற சபாநாயகரைத் தரிசிக்கவிரும்பி, பெண்ணாநதியைக்கடந்து அஸ்தமயனகாலத்திலே திருவதிகையென்னுந்தலத்தினெல்லையிலேபோய், திருநாவுக்கரசுநாயனார் உழவாரத்தினாலே பரமசிவனுக்குக்கைத்தொண்டுசெய்த இந்தஸ்தலத்திலே காலம்நிக்க அஞ்சுகிறேன் என்றுசொல்லி, அதற்கு உள்ளேபோகாமல் சமீபத்திலிருந்த சித்தவடமடத்திற்குப்போய், திருவதிகை வீரட்டானத்தில் வீற்றிருக்கும் கடவுளுடைய திருவடிகளைத் தியானித்துக்கொண்டு நித்திரைசெய்தார். நித்திரைசெய்யுபொழுது, வீரட்டானேசுவரர்ஒரு விருத்தப்பிராமணராகி அம்மடத்தினுள்ளே புகுந்து, சுந்தரமூர்த்திநாயனருடைய சிரசின்மேலே பாதங்களை வைத்து நித்திரைசெய்பவரைப்போலக் காட்டியருளினர்.

அப்பொழுது சுந்தரமூர்த்தி விழித்து, ஐயரே! என் உம்முடைய பாதத்தை என் சிரசின்மேல் வைத்தீர், என்றுசொல்ல ஐயர், என்னுடைய மூப்பினாலே நீர் தலைவைத்திருக்கும் திசையை அறியாமல் அப்படிச் செய்தீபோட்டேன் என்றார். சுந்தரமூர்த்திநாயனர் அதற்கு ஒத்துக்கொண்டு தமதுடைய சிரசை வேறொருதிக்கில் வைத்துக்கொண்டு நித்திரைசெய்தார் சுவாமி அவ்விடத்தினும் சென்று சுந்தரமூர்த்தியுடைய சிரசின்மேலே பின்னும் தம்முடைய பாதத்தை நீட்ட சுந்தரமூர்த்தி, இங்கே யென்னைப் பலமுறை மிதித்த நீர் யார்? என்றுகேட்டார். உடனே சுவாமி என்னை நீயறியாயோ, என்றுசொல்லி மறைந்தருளினர். அதுகண்டு, சுந்தரமூர்த்தி தம்மை மிதித்தவர் கடவுளென்று அறிந்து, நான் இறுமாப்படைந்து ஆண்டவனை அறியாமல் என்னசெய்தேன், என்றுசொல்லி வீரட்டானேசுவர்மேல் திருப்பதிகம்பாடினர்.

திருவதிகைவீரட்டானம்,

தேவாரம்-பண்-கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

நம்மானேயறியாதசாதியாருளரே சடைமேற்கொள்
பிறையானேவிடைமேற் கொள்விகிர்தன்
கைம்மாவினுரியானேக்கரிகாட்டிலாட
லுடையானேவிடையானேக்கறைகொண்டகண்டத்
தெம்மான்றனடிக்கொண்டென்முடிமேல்வைத்திடுமென்னு
மாசையால்வாழ்கின்றவதிலிராகயே
னெம்மானேயெறிகெடிலவடவீரட்டானத்
துறைவானேயிறைபோதுமிகழ்வன்போலியானே.

என்பினேயேகலனாகவணிந்தாடரெங்க
ளெருதேறும்பெருமானேயிசைஞானிசிறுவன்
வன்பனேயவளர்பொழில்சூழ்வயனூலூர்க்கோன்
வன்றொண்டனூரன்மதியாதுசொன்ன
வன்பனேயாவர்க்குமறிவரியவத்தப்
பெருமானேயதிகைமாகருள்வாழ்வினே
யென்பொன்னேயெறிகெடிலவடவீரட்டானத்
துறைவாணியிறைபோதுமிகழ்வன்போலியானே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு அத்திருவதிகைக்குத் தென்புறத்தில் இருக்கும் திருக்கெடில நதியிலே ஸ்நானம்செய்து, அந்த நதியின் தென்கரையில் திருமாணிக்குழியைச் சென்று வணங்கி திருத்தினை நகரத்திற்குப்போய்த் திருப்பதிகம் பாடியருளினார்.

திருத்தினைநகர்த் தேவாரம் - பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்.

நீறுதாங்கியதிருமுதலானே நெற்றிக்கண்ணனேநிறைவளைமடந்தை
கூறுதாங்கியகொள்கையினானேக் குற்றமில்லியைக்கறையுஞ்சடைமே
லாறுதாங்கியவழகனேயமரர்க் கரியசோதியையரியரானுக்ளுஞ்
சேறுதாங்கியதிருத்தினைநகருட் சிவக்கொழுந்தினைச்சென்றடைமனனே.

நீடுபோக்கையிற்பிறவியைப்பழித்து நீங்கலாமென்றுமனத்தினைத்தெருட்டிச்
சேடுலாம்பொழிற்றிருத்தினைநகருட் சிவக்கொழுந்தினைத்திருவடியினைத்தா
னுடலாம்புகழ்நாவலூராளி நம்பிவன்றொண்டனூரனுரைத்த
பாடலாந்தமிழ்ப்பத்திவைவல்லார் முத்தியாவதுபரகதிப்பயனே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின்னர், சிதம்பரத்தின் எல்லையை அடைந்து அவ்வெல்லை யை வணங்கி, ஊரினுள்ளேபோய் ஸ்தூலலிங்கமாகிய கோபுரத்தைக்க ண்டு, நிலத்திலேவிழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எழுந்து கோயிலி னுள்ளேபோய், கனகசபையிலே ஆனந்தத்தாண்டவஞ்செய்கின்ற சபா நாயகரைத் தரிசித்து அக்கினியிற்பட்ட மெழுகதுபோலக் கசிந்து உருகி, ஆனந்தபாஷ்பஞ்சொரிய விழுந்து நமஸ்காரஞ்செய்து எழுந்துநின்று எல் லையில்லாத பேரின்பசாகரத்திலே அமிழ்ந்தி இரண்டு கைகளையும் சிரசின் மேலே குவித்து திருப்பதிகம்பாடித்துதித்தார்.

கோயிற்றேவாரம் - பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

மடித்தாடுமடிமைக்களன்றியேமனனேநீவாழுநாளுந்
தடுத்தாட்டித்தருமனுர்தமர்செக்கிலிடும்போதுதடுத்தாட்கொள்வான்
கடுத்தாடுங்கரதலத்தினிற்றமருகமுமெரியகலுங்கியபாம்பும்
பிடித்தாடிபுலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானேப்பெற்றுமன்றே.

பாரூருமரவல்குலுமைநங்கையவள்பங்கன்பைங்கணேற்ற
னூரூரன்றருமனுர்தமர்செக்கிலிடும்போதுதடுத்தாட்கொள்வா
னூரூரன்றம்பிரானூரன்மீகொங்கிணிகாஞ்சிவாய்ப்
பேரூரர்பெருமானேப்புலியூர்ச்சிற்றமபலத்தேபெற்றுமன்றே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின் சபாநாயகருடைய திருவருளினால் நீ திருவாரூரிலே நம் மிடத்துக்கு வாவென்று ஆகாயத்தில் எழுந்த அசரீரிவாக்கைக்கேட்டு அந் தக் கட்டளையைச் சிரசின்மேல் வகித்து கனகசபையைப் பிரதக்ஷிணஞ்செ ய்து வணங்கிச்சென்று கோபுரத்தைக் கடந்து புறத்திலேநின்று அக்கோபு ரத்தை நமஸ்கரித்து திருவீதியைதொழுது தெற்குவாயிலைக்கடந்து அப் புறஞ்சென்று அந்த ஸ்தலத்தின் எல்லையை வணங்கி கொள்ளிடம் எனகிற திருநதியைத்தாண்டி சீர்காழிக்குச் சமீபித்தார். அந்தச் சீர்காழி திருஞான சம்பந்தமூர்த்திநாயனர் திருவவதாரஞ்செய்தருளிய ஸ்தலமாதலால் அத னுள்ளே மிதிக்கலாகாதென்று நிலைநின்று அதின் புற வெல்லையை வணங்கிப் பிரதட்சணஞ் செய்யும்பொழுது பரமசிவன காட்சிகொடுத்தருள அதி கண்டு திருப்பதிகம்பாடினர்.

திருக்கழுமலத்தேவாரம் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

சாதலுமீபிறத்தலுந்தவிர்த்தென்னைவருத்துந்தன்
னருள்தந்தவெந்தலைவனேமலையின்
மாதினைமதித்தங்கோர்பாலிருத்திமணியை
வருபுனல்சடையிடைவைத்தவெம்மானை
யேதிலென்மனத்துக்கொரிரும்புண்டாகநீ
யெண்வகையொருவனேயெங்கள்பிராணைக்
காதில்வெண்குழையனைக்கடல்கொளமிதந்த
கழுமலவளநகர்க்கண்டுகொண்டேனே.

செழுமலர்க்கொன்றையுங்கூவிளமலரும்
விரவியசடைமுடியடிகளிருந்திட்
டழுமலர்க்கண்ணினீயடியவர்க்கல்லா
லறிவரிதவன்றிருவடியிணையிரண்டுங்
கழுமலவளநகர்க்கண்டுகொண்டேன்
சடையன்றன்காதலன்பாடியபத்துந்
தொழுமலரெடுத்தகையடியவர்தம்மைத்
தன்பழமிடும்பையுஞ்சூழகிலாவே.

திருச்சிற்றம்பலம்.

அப்பால் திருக்கோலக்காவுக்கும், திருப்புன்கூருக்கும்போய்ப் பதிகம்பாடி காவேரிநதியின் கரையையடைந்து அதில் ஸ்நானம்பண்ணி மாயூரத்துக்கும், அமபர்மாகாளத்துக்கும், திருப்பாதாளீச்சுரத்துக்கும்போய் திருவாரூரைச் சமீபித்து வன்மீகநாதருடைய ஆஞ்ஞையினாலே அங்கிருந்து மகாலங்காரத்தோடுவந்த தத்தமை யெதிர்கொண்டழைத்தற்கு ஊரினுள்ளேபோய் கோயிற்பிரவேசித்து திருமாளிகை வாயிலையடைந்து வன்மீகநாதனைவணங்கிப் பதிகம்பாடினர்.

திருவாரூர்த்தேவாரம் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

கனையுங்கடலுமலையுங்காலியுமாலியுமெல்லா
முனையிலிவிரவிவருவானெருவனுருத்திரனிலோகன்
வனையின்மடமகள்கேள்வன்வுரானவர்தானவர்க்கெல்லா
மனையனிருப்பதுமாரூரவெம்மையுமாள்வரோகேளீர்.

எந்தையிருப்பதுமாரூரவெம்மையுமாள்வரோவென்று
சிந்தைசெயுந்திறம்வல்லான்றிருமருவுந்திருடோளான்

மந்தம்முழவம்மியம்பும்வளவயலூவலாரூரன்
சந்தமிசையெடும்வல்லார்தாம்புகழெய்துவர்தாமே.
திருச்சிற்றம்பலம்.

அப்பொழுது சுந்தரமூர்த்தி கேட்கும்படி வன்மீகநாதருடைய திருவருளினாலே நாம் உனக்குத் தோழனெனும் முன்னே நாம் உன்னை ஆட்கொண்ட விவாககாலத்திலே நீ கொண்டமணக்கோலத்தை எப்பொழுதும் கொண்டு பூமியின்மேல் விளையாடுவாயென்று ஒரு அசரீரிவாக்குளமுந்தது அதைக்கேட்ட சுந்தரமூர்த்திநாயனார் சுவாமி சந்நிதானத்திற்சென்றுவணங்கித் துதித்து வெளியேபோனர். அன்றுமுதற்கொண்டு அடியார்களெல்லாருஞ சுந்தரமூர்த்தியைத தம்பிரான்தோழர் என்று சொல்லிக்கொண்டார்கள். சுந்தரமூர்த்தி மஹா அலங்காரம்பொருந்திய கோலத்தையுடையவராய் வன்மீகநாதரைத் தினந்தோறும் போய்த் தரிசித்துவந்தார்.

இதற்கு முன்னே கைலாசகிரியிலிருந்த பார்வதிதேவியாருடையசேடிஸ்திரீகளிலொருவராகிய கமலினி என்பவர் அந்தத்திருவாரூரிலேஉருத்திரகண்ணிகையர் குலத்திலே பிறந்து பரவையாரென்னும் பெயரைப்பெற்றுப் பெதும்பைப்பருவம அடைந்திருந்தார். அவருந்தினந்தோறும் பாங்கிமாரோடு கோயிலுக்குப்போய் சுவாமி தரிசனம் பண்ணிவருவார்.

அந்தப் பரவையார் ஒருநாள் சுவாமி தரிசனம் பண்ணப்போம்போது அப்படியே சுவாமி தரிசனம பண்ணணும் பொருட்டுப பரிசனங்களோடு சென்ற சுந்தரமூர்த்திநாயனர் திருவருள் கூட்ட அந்தப் பரவையாரைக் கண்டு ஆசையொண்டு நின்றார். பரவையாரும் சுந்தரமூர்த்தியைக் கண்டு ஆசையொண்டு, பின் சுவாமிதரிசனம் பண்ணவேண்டும் என்னும் விருப்பமானது நம்மை அவ்வாசையினின்றும நீக்கி சன்னதானத்தைச் சமீபிக்கிக்கொண்டு கோயிலின் உள்ளே சென்றது. சுந்தரமூர்த்திநாயனர் அது கண்டு, என் மனதைக்கவர்ந்த சென்ற அரிசெளந்தரிய முள்ள இந்தப் பெண்யார்! என்று வினவ, அவரிருந்தவாகள், இவரைருத்திரகணிகையரில் ஒருவர். இவர் பெயர் பரவையார் என்றார்கள் அதைக்கேட்டசுந்தரமூர்த்திநாயனரோ கோயிலினுள்ளே போனர். அதற்கு முன் பரவையார் பிரதக்ஷிணஞ் செய்து சுவாமியை நமஸ்காரம் பண்ணித்துதித்துக்கொண்டு சன்நிதியில் நின்றும் புறப்பட்டார். சுந்தரமூர்த்திநாயனர், சுவாமி சன்நிதானத்திற்சென்று, பரவைபார்மேல் வைத்த பேராசையால் அவளைச்சேரவேண்டிச் சுவாமியினது திருவடிகளை வணங்கிக்கொண்டு புறப்பட்டு, பரவையாரைத்தேடி தேவாசிரியன் என்னும் பெயரையுடைய ஆயிரத்தால் மண்டபத்தை அடைந்து, வன்மீகநாதர் பரவையாரை எனக்குத் தந்தருளுவார் என்று நினைத்துக்கொண்டு அங்கிருக்க, சூரியன் அஸ்தமனமாயிற்று. அதனிற்க,

முன்னே சுவாமி தரிசனஞ்செய்துகொண்டு புறப்பட்ட பரவையார், சுந்தரமூர்த்தி யிடத்தில் தனியே சென்ற தமது மனசை ஒரு வகையாக வலிந்து தன்வசப்படுத்தி, அதிகமயக்கத்தோடு தமது மாளிகையை அடைந்து, பூவணியில் இருந்து தம்மருகிருந்த பாங்கியைநோக்கி, நாம் சுவாமி தரிசனம் செய்யப்போனபோது வழியில் எதிராகவந்தவர் யார்? என்றுகேட்க அவள், அவர் பிரமவிஷ்ணுக்களும் தேடியறியாத சமாளுதீதராகிய கடவுளே வலியவந்து ஆட்கொள்ளப்பெற்ற ஆதிசைவராகிய சுந்தரமூர்த்தி என்றுள். அதுகேட்ட பரவையார் நமது ஆண்டவருக்கு உரிய அடியவரோ என்றுசொல்லி, சுந்தரமூர்த்திமேல் முன்வைத்தஆசைமேன்மேலும் அதிகரிக்க சயனத்தின்மேல் விழுந்து புலம்பினர். அப்பொழுது கடவுளானவர் பரவையாரைச் சுந்தரமூர்த்திக்கு விவாகஞ்செய்து கொடுக்கும்படி அடியார்களுக்குக் கட்டளையிட்டு, சுந்தரமூர்த்தி யிடத்திற்சென்று உனக்குப் பரவையை விவாகம்செய்துதரும்படி நம்முடைய அடியார்களுக்கு ஆஞ்ஞாபித்தோம் என்று அருளிச்செய்து, பரவையாரிடத்திலும்போய் உனக்கும் சுந்தரமூர்த்திக்கும், விவாகம் நடக்கும் என்று சொல்லியருளினர். மற்றநாள் உதயகாலத்திலே சிவபத்தர்கள் எல்லாரும்கூடிவந்து சுந்தரமூர்த்திநாயனாருக்குப் பரவையாரை விதிப்படி விவாகஞ்செய்து கொடுத்தார்கள்.

சுந்தரமூர்த்திநாயனார் பரவையாரோடுகூடி வாழ்ந்திருக்குங்காலத்தில், ஒருநாள் கோயிலில் அடைந்தபோது தேவாசிரியமண்டபத்திலே சிவனடியார்கள் கூடியிருந்ததைக் கண்டு அவர்கள்மேலே பக்திமிகுந்து, இவர்களுக்கு நான் அடியனாகும்நாள் எந்நாள், என்று நினைத்துக்கொண்டு, சுவாமிதரிசனம் செய்வதற்குக் கோயிலின் உள்ளேபோனர். அப்பொழுது, அடியார்க்கு அடியனாகவேண்டுமென்று அவர் விரும்பிய வரத்தைக் கொடுக்கும்பொருட்டு, சுவாமி அவருக்குக் காட்சிகொடுத்தருளி, நீ நம்முடையஅடியார்களே வணங்கி அவர்கள்மேலே பதிகம்பாடி என்றருளிச்செய்ய, சுந்தரமூர்த்திநாயனர் வணங்கிநின்று, சுவாமீ! அடியார்களுடைய வரலாறு இன்னது என்றும் அவர்கள் தன்மை இப்படிப்பட்டதென்றும் அறியாத நான் எப்படிப்பாடுவேன், அவர்களைக்குறித்துப்பாடும் சத்தியைச் சர்வஞ்ஞத்துவம் உடைய தேவரீரே அடியேனுக்கு அருளிச்செய்யவேண்டும்என்றுபிரார்த்தித்தார். சுவாமி அதற்கு இசைந்து, அடியார்களுடையவழித்தொண்டு அவருக்குத் தெரியும்படிசெய்து "இல்லைவாழ்ந்தணர்த மடியார்க்குமடியேன்" என்று அடியெடுத்துக் கொடுத்து மறைந்தருளினர். அதுகண்டு, சுந்தரமூர்த்திநாயனர் புறப்பட்டுத் தேவாசிரியமண்டபத்தைஅடைந்து, அடியார் திருக்கூட்டத்தைப் பலமுறைவணங்கி அந்த அடியார்கள் யாவர்க்கும் வெவ்வேறாக அடியேன் அடியேன் என்று திருத்தொண்டத்தொகை என்னும் திருப்பதிகம்பாடி, அவர்களை வணங்கினர்.

திருத்தொண்டத்தொகைத்,

தோவாரம்-பண்-கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

தில்லைவாழந்தணர்தமடியார்க்குமடியேன்
மிருநீலகண்டத்துக்குயவனர்க்கடி யேன்
இல்லையேயென்னுதவிய்பகைக்குமடி யேன்
இனையான்றன்குடிமாறனடியார்க்குமடியேன்
வெல்லுமாமிகவல்லமெய்ப்பொருளுக்கடியேன்
விரிபொழில்சூழருன்றையார்விறன்மிண்டர்க்கடியே
னல்லிமென்முல்லையந்தார்அமர்நீதிக்கடியேன்
ஆரூரன்ஆரூரிலம்மானுக்காளே. (க)

இலைமலிந்தவேல்நம்பியெறிபத்தர்க்கடியேன்
ஏனாதிநாதன்றனடியார்க்குமடியேன்
கலைமலிந்தசீர்கம்பிகைகண்ணப்பர்க்கடியேன்
கடவூரிற்கலியன்றனடியார்க்குமடியேன்
மலைமலிந்ததோள்வள்ளல்மானக்கஞ்சாற
னெஞ்சாதவாள்தாயனடி யார்க்குமடியேன்
அலைமலிந்தபுனல்மங்கையானுயர்க்கடியேன்
ஆரூரன்ஆரூரிலம்மானுக்காளே. (உ)

மும்மையாலுலகாண்டமூர்த்திக்குமடியேன்
முருகனுக்கும்உருத்திரபசுபதிக்குமடியே
செம்மையேதிருநாளைப்போவார்க்குமடியேன்
திருகுகுமிப்புத்தொண்டர்தமடியார்க்குமடியேன்
மெய்ம்மையேதிருமேனிவழிபடாநிறைக
வெகுண்டெழுந்தகாதைதாள்மழுவினுலெறிந்த
அம்மையானடித்தண்டிப்பெருமானுக்கடியேன்
ஆரூரன்ஆரூரிலம்மானுக்காளே. (ஊ)

திருநின்றசெம்மையேசெம்மையாக்கொண்ட
திருநாவுக்கரையன்றனடி யார்க்குமடி யேன்
பெருகும்பிரமச்சிறைதன்னடியார்க்குமடியேன்
பெருமிழலைக்குறும்பர்க்கும்பேயார்க்குமடியே
னெருகும்பியப்பூதியடியார்க்குமடியே
னெளிபுனல்சூழ்சாத்தமங்கைநீலநக்கர்க்கடியே
னீருகும்பிகமிகுதியடியார்க்குமடியேன்
ஆரூரன்ஆரூரிலம்மானுக்காளே. (எ)

வம்பரும்வரிவண்டுமிணைகாதமலரு
மதுமலர்கற்கொன்றையானடியலாற்பேணு
ம்பிரான்சம்பந்தனடியார்க்குமடியேன்
யர்கோன்கலிக்காமனடியார்க்குமடியே
னம்பிரான்திருமூலனடியார்க்குமடியே
னுட்டமிகுதண்டிக்குசூர்க்கர்க்குமடியேன்
அம்பரானசோமாசிமாறனுக்குமடியேன்
ஆரூரன்ஆரூரிலம்மானுக்காளே. (கி)

வாரிகொண்டவனமுலையாருமைபங்கன்கழலே
மறவாதுகல்லெறிந்தசாக்கியர்க்குமடியேன்
சீர்கொண்டபுகழ்வள்ளல்சிறப்புவிக்குமடியேன்
செங்காட்டங்குடிமெய்யறிதற்தொண்டர்க்கடியேன்
கார்கொண்டகொடைக்கழறிற்றறிவார்க்குமடியேன
கறைகாழிக்கணநாதனடியார்க்குமடியே
னூர்கொண்டவேற்கூற்றன்னகளத்தைக்கோனடியேன்
ஆரூரன்ஆரூரிலம்மானுக்காளே. (சு)

பொய்யடிமையில்லாதபுலவர்க்குமடியேன்
பொழிற்கருவூர்த்துஞ்சியபுகழ்ச்சோழர்க்கடியேன்
மெய்யடியனரசிங்கமுனையரையர்க்கடியேன்
விரிதிரைசூழ்கடனாகையதிபத்தர்க்கடியேன்
கைதடிந்தவரிசிலையான்கலிக்கம்பன்கலியன்
கழற்சத்திவரிஞ்சையர்கோனடியார்க்குமடியேன்
ஐயடிகள்காடவர்கோனடியார்க்குமடியேன்
ஆரூரன்ஆரூரிலம்மானுக்காளே. (எ)

கறைக்கண்டன்கழலடியேகாப்புக்கொண்டிருந்த
கணம்புல்லனம்பிக்குங்காரிக்குமடியே
னிறைகொண்டசீர்த்தையானெல்வேலிவென்ற
நின்றசீர்நெடுமாறனடியார்க்குமடியேன்
றைக்கொண்டசெம்பவளமிருளகற்றுஞ்சோதிச்
தொனமயிலேவாயிலானடியார்க்குமடியே
னறைக்கொண்டவேல்பம்பிபுனையடுவார்க்கடியேன்
ஆரூரன்ஆரூரிலம்மானுக்காளே. (அ)

கல்சூழ்ந்தவுலகெலாங்காக்கின்றபெருமான்
காடவர்கோன்கழற்சிங்கனடியார்க்குமடியேன்
மடல்சூழ்ந்ததார்நம்பியிடங்கழிக்குந்தஞ்சை
மன்னவனஞ்செருத்துணைனடியார்க்குமடியேன்

* அம்பர் - ஒரு வெற்றலம்.

யுடைசூழ்க்தபுலியதண்மேலாவாடவாடி
பொன்னடிக்கீகமனம்வைத்தபுகழ்த்துணைகுமடியேன்
அடல்சூழ்க்தவேல்கம்பிகோட்பலிக்குமடியேன்
ஆரூரன்ஆரூரிலம்மானுக்காளே. (கஈ)

பத்தராய்ப்பணிவார்களெல்லார்க்குமடியேன்
பரமனேயேபாடுவாரடியார்க்குமடியேன்
சித்தத்தைச்சிவன்பாலேவைத்தார்க்குமடியேன்
திருவாரூர்ப்பிறக்தார்க ளெல்லார்க்குமடி யேன்
முப்போதுந்திருமேனிதீண்டுவார்க்கடியேன்
முழுநீறுபூசியமுனிவர்க்குமடியேன்
அப்பானடிக்சார்ந்தாரடி யார்க்குமடியேன்
ஆரூரன்ஆரூரிலம்மானுக்காளே. (கo)

மன்னியசிர்மறைநாவனின்றவூர்பபூசல்
வரிவளையாண்மானிக்கும் கேசனுக்குமடியேன்
தென்னவனுலகாண்டசெங்கணார்க்கடியேன்
திருநீலகண்டத்துப்பாணனார்க்கடியே
னன்னவனுமரனடியேயடைந்திட்டசடைய
னிசைஞானிகாதலன்திருநாவலூர்க்கோ
னன்னவனுமாரூரனடிமைகேட்டுவப்பா
ராரூரிலம்மானுக்கன்பராவாரே. (கக)

திருச்சிறறம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார் திருவாரூரிலே தினந்தோறும் திரிகாலத்திலும் அன்பினோடு சுவாமி தரிசனஞ்செய்துகொண்டு, பரவையாரோடு வாழ்ந்திருக்குங் காலத்திலே,வேளாளராகிய குண்டையூர்க்கிழவர் என்பவர் அவருடையமகிமையைக் கேள்வியுறறு அவருடைய திருவடிகளை அடைந்து அன்பினோடு வழிபடுவாராயினர். அவர் சுந்தரமூர்த்தி நாயனர்பொருட்டுப் பரவையாருடைய வீட்டுக்கு நெல்லும் பருப்பும் பிறபதார்த்தங்களும்நெடுங்காலஞ் தவறுமல அனுப்பிவருதார்.அப்படி அனுப்பிவருங்காலத்திலே,மழையில்லாமையால் வளம் சுருங்க, ஒருநாள் குண்டையூர்க்கிழவர் நெல்லுப பொதாமை கண்டு, வருததமுற்று, சுந்தரமூர்த்தி வீட்டுக்கு அனுப்புவதற்கு இன்றைக்கு நெல்லும்போதாதே, ஐயோ ! இதற்கு என்னசெய்வேன், என்று நினைந்து, பெருங்கவலைகொண்டு, போசனம்பண்ணமல் அன்றிரவு நித்திரைகொண்டார். அப்பொழுது பரமசிவனனவர் அவருக்குச் சொற்பனவத்தையிலேதோன்றி, சுந்தரனுக்கு அனுப்பும்படி உனக்கு நெல்லுத் தந்தோம் என்று சொல்லியருளி, பின் குபேரனுக்கு ஆஞ்ஞாபிக்க, அந்தக்

குண்டையூர் முழுதிலும் நெல்மலையானது ஆகாயமும் மறையத்தக்கதாக நிறைந்தொங்கியது. அன்றிரவு விடியும்போது குண்டையூர்கிழவர் விழித்தெழுகை அந்த நெல்மலையைக்கண்டு, அதிசயித்து பரமசிவனுடையதிரு வருளேத்தித்து, சுந்தரமூர்த்தி நாயனருக்குஅனுப்பும்படி பரமசிவன்தந் தருளிய இந்தநெல்லை யாவரெடுக்கவல்லவர்கள். இந்தச்சமாசாரத்தைஅவ ருக்குச் சொல்லும்படிபோவேன் என்று திருவாரூருக்குப்போக, நிகழ்ந்த சமாசாரத்தைப் பரமசிவனுல் அறிந்து சுந்தரமூர்த்திநாயனரும் எதிரேவந் தார். அதுகண்ட குண்டையூர்கிழவர் அந்நாயனரை விழுந்து நமஸ்கரித் து எழுந்துநின்று, சுவாமி! நெடுங்காலமாக அடியேன் தேவரீருக்குச்செய் துவந்த திருத்தொண்டுக்கு இந்நாளில் முட்டுவந்தது. அதுகண்டு கடவு ள் நெல்மலையைத் தந்தருளினர். அந்த நெல்மலை மனிதரால் எடுக்கப்ப டும் அளவினையுடையதன்று. இனி நிதுஎன்னுற் செய்யப்படக்கூடியதொ ண்டன்று என்றசொல்ல, சுந்தரமூர்த்திநாயனர் அதைம்கேட்டு, அவரோடு கூடிக்கொண்டு குண்டையூர்க்குப்போய், அந்நாயத்தை அளாவிய நெல்ம லையைக்கண்டு அதிசயித்து, திருவருளே வியந்து சமீபத்திலுள்ள திருக் கோளிலி எல்லும் ஸ்தலத்திலிருக்கின்ற சிவாலயத்தையடைந்து, அந்நெ ல்மலையைப் பரவையார் வீட்டுக்குக்கொண்டு போவதற்கு ஆள்விடும்பொ ருட்டு, திருப்பதிகம்பாடினர்.

திருக்கோளிலி-பரஸ்-நட் ராகம்.

திருச்சிற்றம்பலம்.

நீளநினைந்தடி யேனுமைநித்தலுங்கைகொழுவினை
வாளனகண்மடவாளவள்வரு வருந்தாமே
கோளிலியெம்பெருமான்குண்டையூர்ச்சிவலெல்லப்பெற்றே
ஞாளிலையெம்பெருமானைவையாடித்தரப்பணியே.

கொல்லிலவளம்புறவிற்றிருக்கோளிலியேமயலனே
கல்லவர்தாம்பரவுந்திருநாவலவூரனவ
னெல்லிவாட்களவெண்டிகிரிதியபாதமும்வல்லரா
அலலல்களேன்துலகினண்ணிவாழுமாகளபாவமே.

திருச்சிற்றம்பலம்.

அப்பொழுது பரமசிவபெருமானருளினாலே, இன்று பகற்கால ம் நீங்கியபின் நம்முடைய பூதங்கள் பரிவைகளிடு மாத்திரமன்றித் திருவா ரூர்முழுதும் நிறையும்படி நெல்மலையைக் கொண்டுவந்து தருமென்று ஆ காயத்தினின்றும் ஓர் அசரீரிவாக்குத் தோன்றியது. சுந்தரமூர்த்திநாயனர் அதைக்கேட்டு திருவாரூருக்குத் திரும்பிப்போய் கோயிலடைந்து, வன்

மீகநாதனைத் தரிசனஞ்செய்துகொண்டு பரவையார் வீட்டிலேசேர்ந்து, அவர் மகிழும்படி நிகழ்ந்த சமாசாரத்தைச்சொல்லி அங்கிருந்தார். அதன் பின் சிவாஞ்ஞையினாலே பூதங்கள் சுண்டையூரிலேயிருந்த நெல்மலையை எடுத்துக்கொண்டுபோய்ப் பரவையார் வீட்டை நிறைவித்து, திருவாரூர் முழுதிலும் நெல்மலையாக்கின. அன்றிரவு கழிந்தபின், பரவையார்அவ்வூர்ச் சனங்களெல்லாரும் தங்கள் தங்கள் வீட்டின் எல்லையைச்சேர்ந்த நெல்ம லையை யெடுத்துக்கொள்ளலாம் என்றுசொல்லிப் பறையறைவித்தார்.

சிலகாட்சென்றபின்பு, நாட்டியத்தான் குடியில்வசிக்கின்றகோட்புலி நாயனார் சுந்தரமூர்த்தியிடத்திலே சென்று, அவராவணங்கி, தம்முடைய ஊருக்கு எழுந்தருளிவரும்படி அவரைப்பிரார்த்தித்து அவர் அதற்கு இ சைந்ததுகண்டு, தமது ஊருக்குத் திரும்பிவிட்டார். அதன்பின், சுந்தரமூர் த்திநாயனார் வன்மீகநாதரை வணங்கி, அனுமதி பெற்றுக்கொண்டு காட்டிய த்தான்குடியை அடைந்தபோது, ஆங்கிருந்த கோட்புலிநாயனார் எதிர்கொ ண்டுவணங்கி, தம்முடையவீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய், ஆசனத் தில் இருத்தி விதிப்படி அருச்சனைசெய்து, திருவமுது செய்வித்து, அவ ராவணங்கி ஸ்தோத்திரம்பண்ணி சிங்கடியார், வனப்பகையார் என்கின்ற தமதுபுத்திரிகள் இருவரையும்கொண்டுவந்து அவரை நமஸ்கரிப்பித்து, தாமும் வணங்கி, சுவாமீ! அடியேன்பெற்ற இந்தப்பெண்கள் இருவரையும் அடிமையாகக்கொண்டருள வேண்டும் என்று பிரார்த்திக்க, சுந்தரமூர்த்தி நாயனார், இப்பெண்கள் இருவரும் எனக்குப் புத்திரிகள் என்றுசொல்லி, அவர்களைத் தம்முடைய தொடையின்மேலிருத்தி மனக்கசிவுடனே அணை த்து உச்சிமோந்து, அவர்கள் விரும்பியவைகளைக் கொடுத்தருளி பரமசிவ ன் வீற்றிருக்கும் ஆலயத்தை அடைந்து, அவராவணங்கித் திருப்பதிகம் பாடினார். அந்தப்பதிகத்தின் திருக்கடைக்காப்பிலே கோட்புலிநாயனாரைச் சிறப்பித்து, சிங்கடியாருக்குப் பிதாவாத்தும்மை நினைத்தபடியினால் தம் மைச் சிங்கடியப்பனென்று வைர்தருளினார்.

திருநாட்டியத்தான்குடி - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பூணணவுதே ரரவநீகண்டனீரென்புறங்காட்டாடல்கண்டி கமேன்
பேணிராகிலும்பெ ருமையையுணர்வின்பிறவேனுகிலுமறவேன்
காணிராகிலுங்காண்பனென்மனத்தார்கருதிராகிலுங்கருதிலிகிழே
னானேலும்மடபாடுதலொழிபேனுடியத்தான்குடிரும்பீ.

கூடாமன்னரைக்கூட்டத்துவென்றகொடிமன்கோட்புலிசென்னி
நாடார்தொல்புகழ்நாடியத்தான்குடிநம்பியைநாளுமறவாச

சேடார்பூங்குழற்சிங்கடியப்பன்றிருவாரூரானைத்த
பாடராகிலும்பாடுமின்றொண்டீர்பாடதும்பாவம்பற்றறுமே.

திருச்சிற்றம்பலம்.

பின், அவ்விடத்தினின்றும எழுந்தருளி, திருவலிவலத்துக்குப்போய்ப் பதிகம்பாடினர்.

திருவலிவலம் - பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்.

ஊனங்கைத்துயிர்ப்பாயுலகெலாமோங்காரத்துருவாகிநின்றூனே
வானங்கைத்தவர்க்குமளப்புரியவள்ளலேயடியார்கடம்முள்ளத்
தேனங்கைத்தமுதாகியுள்ளூறுந்தெனினைத்திலோத்தற்கினியானே
மானங்கைத்தலத்தீதந்தவல்லானேவலிவலந்தனில்வந்துகண்டேனே.

நல்லிசைஞானசம்பந்தனுரவினுக்கரசரும்பாடியநற்றமிழ்மாலை
சொல்லியவேசொல்லியேத்துகப்பானைத்தொண்டனேனறியாமையறிந்து
கல்லியென்மனதைக்கசிவித்துக்கழலடிகாட்டியென்கீளைகளையறுக்கும்
வல்லியல்வானவர்வணங்கநின்றூனேவலிவலந்தனில்வந்துகண்டேனே.

கலிவலங்கெடவாரழலோம்புங்கற்றகான்மறைமுற்றனலோம்பும்
வலிவலந்தனில்வந்துகண்டடியேன்மன்னுரவலரூரன்வன்றொண்ட
னெலிகொளின்னிசைசெந்தமிழ்பத்துமுள்ளத்தாலுகந்தேத்தவல்லார்போய்
மெலிவில்வானுலகத்தவரேத்தவிரும்பிவீண்ணுலகெய்துவர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

மீண்டும் திருவாரூரைஅடைந்து, பரவையார் வீட்டிலிருந்தார். இருக்கும்பொழுது பங்குனிஉத்திரத் திருநாள சமீபிக்கவும், பரவையார் திருவிழாச்செலவிறகுக் கொடுப்பதற்குப் பொனகொண்டு வரும்பொருட்டு, திருப்புகலூரை அடைந்து கோயிலிற்சென்று சுவாமியை வணங்கித் திருப்பதிகம்பாடி, சமீபத்தில் இருக்கின்ற ஓர்மடத்திலேபோய், திருப்பணிக்காகச் சுடப்பட்ட செங்கற்கள் பலவற்றை வருவித்து உயரம்பண்ணி, அதனேயே தலியணேயாகக்கொண்டு, உத்தரீகத்தை விரித்து நித்திரைசெய்தார். பின் விழித்தெழுந்தபோது, அந்தச் செங்கற்கள் எல்லாம் பொற்கல்லாய் இருக்கக்கண்டு திருவாரூரைத் துதித்து, கோயிலினுள்ளேபோய்த் திருப்பதிகம்பாடியருளினர்.

திருப்புகலூர்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்

தம்மையேபுகழ்ந்திசைபெறினுஞ்சார்விலாதொண்டர்கருதிலாப்
பொய்ம்மையாளரைப்பாடாதேயெந்தைபுகலூர்பாடுமினபுலவீர்காள
இம்மையேகருஞ்சோறுங்கூறையுமேதகலாமிடர்கெடலுமாம்
அம்மையேசிவலோகமாள்வதறியாதுமையுறவில்லீலையே.

செறுவினிறஞ்செருங்கமலமோங்குதென்புகலூராமேவியசெல்வன்
நறவம்பூம்பொழில்காவலூரன்வனப்பகையப்பனசடையனநன்
சிறுவன்வண்டிருண்டலூரன்பாடியபாடலபதிவைவல்லவா
அறவனடிசென்றுசேர்வதற்கியாதுமையுறவில்லீலையே.

திருசசிற்றம்பலம்

அப்பொற்குவையையுங்கொண்டு அவ்விடத்தினின்றும் புறப்பட்டு திருப்பனூருக்குப்போய் அங்கும் பதிகம்பாடினர்.

திருப்பனூர் - பண் - சிகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

மாடமாளிகைகோபுரத்தொடுமண்டபம்வளரும்வளர்பொழிற
பாடல்வண்டறையும்பழனத்திருப்பனூர்
தோடுபெய்தொருகாதினிறகுழைதூங்கத்தொண்டர்கடுள்ளிப
பாடநின்றருடமாறிவல்லாரவரேயழகியரே.

வஞ்சிதுண்ணிடைமங்கைபங்கினர்மூதவர்வளரும்வளாபொழிற்
பஞ்சின்மெல்லடியார்பயிலுந்திருப்பனூர்
வஞ்சியும்வளர்காவலூரன்வனப்பகையவளப்பன்வண்டிருண்டன
செஞ்சொற்கேடுகப்பாரவரேயழகியரே.

திருச்சிறறமபலம்

திருவாரூரை அடைந்து பரவையாரிடத்தில் இருந்தார். பின்பரம சிவனருளால் அங்குநின்றும் பெயர்ந்து, சிவனெழுந்தருளிய திருநன்னிலமென்னுந் திருப்பதியிறசென்று, அவ்வாலயத்தை வலம்வந்து உளளேசென்று வணங்கி, தண்ணியல் வெம்மையினனென்னு முதலியுடைய திருப்பதிகம்பாடினர்.

திருநன்னிலத்துப்பெருங்கோயில்-பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

தண்ணியல்வெம்மையினன்றலையிற்கடைதோறும்பலி
பெண்ணியன்மென்மொழியாரிடங்கொண்டுழல்பண்டரங்கன்
புண்ணியநான்மறையோர்முறையாலடிபோற்றிசைப்ப
நண்ணியநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே.

கோடுயர்வெங்களிற்றுரித்தகழ்கோச்செங்கணன்செய்கோயி
னீடியநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனைச்
சேடியல்சிங்கிதந்தைசடையன்திருவாரூரன்
பாடியபத்தும்வல்லார்புகுவார்பரமலோகத்துள்ளே.

திருச்சிற்றம்பலம்.

இத்திருப்பதிகம்பாடி அங்கிருந்த பின்னர் திருவீழிமிழலையினில் இருக்கும் அந்தணர் கூடிவந்து சபலிதப்பிரபோடும் சுந்தரமூர்த்திநாயனாரை இட்டுக்கொண்டுபோக அவரும் அத்திருப்பதியை வணங்கி கோயிலினுட் சென்று கடவுளைவணங்கித் திருப்பதிகம் பாடினார்.

திருவீழிமிழலை - பண் - சிகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

விடங்கொண்டமாமிடற்றீர்வெள்ளைச்சுருளொன்றிட்டுவிட்டகாதினீரென்
றிடங்கொள்சிக்கையினாகலிகாக்குந்திருமிழலை [று
மடங்கல்பூண்டவிமானமுமண்மிலசவர்திழிச்சியவானகாட்டையு
மடங்கல்வீழிகொண்டீரடியேற்குமருளுநிரே.

வேதவேதியர்வேதநீதியராதுவார்விரிதாமிழலையு
ளாதிவீழிகொண்டீரடிபேற்குமருளுமென்று
காதலிதம்வண்டோதுவார்பொழினல்லாண்வண்டுரைண்டனற்றமிழ்
பாதமோதவல்லார்பரனேடுங்கூடுவரே.

திருச்சிற்றம்பலம்.

அத்திருவீழி மிழலையின்கண்வாழுங் கடவுளினருளைப்பெற்றுத்திருவாஞ்சியத்தி லெழுந்தருளிய பரமசிவனது திருவடியை வணங்கிபொருவனென்னு முதலியுடைய திருப்பதிகம் பாடியருளினார்.

திருவாஞ்சியம்-பண்-பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பெரியவனுர்புரிநூலர்புணர்முலையமையவளோடு
மருவனுமருவார்பால்வருவதுவுமில்லேனும்மடி க
டிருவனுர்பணிந்தேத்தத்திகழ்திருவாஞ்சியத்துறையு
மொருவனடியாமையுமுள்ளினேனியவொட்டாமே.

செம்பெலங்கலங்கமழனித்திகழ்திருவாஞ்சியத்துறையு
மின்னலங்கலஞ்சடையெம்மிறைவனதடைகமல்பாவும
பொன்னலங்கலநன்மாடப்பொழிணிகாவலாரூரன்
பன்னலங்கனன்மாலைபாடுமின்பத்தருளீரே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின்னர் நீர்வளம்பொருந்திய திருநறையூரின்கண் விளங்கா
நின்ற திருசித்தீச்சரத்தை வணங்கித் திருப்பதிகம் பாடியருளினர்.

திருந்நறையூர்சித்தீச்சரம்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்

நீரும்மலருகிலவுஞ்சடை மேலோரும்
மாவமுடையாவிட்டமாம
வாரும்மருவிமணிபொனகொழித்துச
சேரும்நறையூர்சித்தீச்சரமே.

போராரம்புமெயபுனிதன்னைமருஞ
சீரார்நறையூர்சித்தீச்சரனைத
யாரூரன்சொலமிவையபலவா
ளேராரிமையோருலகெபரிவோ.

திருச்சிற்றம்பலம்.

அதனபின்னர் சிறந்த பெருந்தனமையினையுடைய திருநதொண்ட
ர்கள் அன்பினுடி மெதிகொண்டுவணங்கி, மழுவுமானுங் கையிற் பெற்ற
வராகிய சுடவளவாழும திருப்புத்தூரை வணங்கி சிவனைத துதித்து திருப்
பதிகம் ஈடு பாடினர்.

அரசிற்கரைப்புத்தூர்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

அகத்தடி மைசெய்யுமந்தணன்ருனரிசிற் புனல்கொண்டுவந்தாட்டுகின்ருன்
மிகத்தளர்வெய்திக்குடத்தைதும்முடி மேல்விழுத்திட்டுடனுங்குதலும்
வகுத்தவனுக்குருத்தற்படியும்வருமெனருருகாசினின் றன்றிப்
புகழ்த்துணைகைபுகச்செய்துகந்தீர்பொழிலார்திருப்புத்தூர்ப்புனிதரீரே.

காரூர்மழைபெய்துபொழியருவிக்கழையோடகிலுந்திட்டிருகரையும்
போரூர்புனல்சேரரிசிற்றென்கரைபொழிலார்திருப்புத்தூர்புனிதாதம்மை
யாரூரனருந்தமிழ்கிணைடைந்தழகாலுரைப்பார்களுங்கேட்பவருஞ்
சீரூர்தருதேவர்கணங்களொடுமிணங்கிச்சிவலோகம்சென்றுவரே.

திருச்சிற்றம்பலம்.

எனத் திருப்பதிகம்பாடி அக்கடவுளின்முன் புகழத்துணையார்க் கருளிய நிறத்தையும தித்து முனிவர்கள் புகழ அவவிடத்தினின் றெழுந்தருளி பரமசிவன் வாழுகினற பலதிருப்பதிகளையும் வணங்கித்திருவாவடுதுறைக் கெழுந்தருளி பரமசிவன் வீற்றிருக்கினறகோயில் வலமவந்து அன்போடு ஆலயத்துடபுகுந்து வணங்கி மறையவனெனறெடுத்து சோழன் செய்த திருப்பணியையும் சிறப்பித்துத் திருப்பதிகம்பாடியருளினர்.

திருவாவடுதுறை-பண்-தக்கேசி

திருச்சிற்றம்பலம்.

மறையவனெருமாணிவகுதடையவாரமாயவனருயிர்நிறுதகக்
கறைகொள்வேலுடைக்காலனைக்காலாற்கடந்தகாரணங்கண்டுகண்டடியே
னிறைவனெம்பெருமானென்றெப்போதுமேத்தியேத்திநின்றஞ்சலிசெய்து
னறைகொள்சேவடிக்கன்பொருமடைநதேனு வடுதுறையாதியெம்மானே.

தெருண்டவாயிடைநூல்கொண்டுசிலம்திசித்திரப்பத்தர்சிக்கனவிய ற்றச்
சுருண்டசெஞ்சடையாயதுதன்னைசுசோழனுக்கியதுடர்ச்சிகண்டடியேன்
புரண்டவீழ்தகினபொனமலர்பபாதமபோற்றிபோறறியெனறனபொபுலமபி
யருண்டென்மேல்வினைக்களுசிவந்தடைந்தேனுவடுதுறையாதியெம்மானே.

திருச்சிறறம்பலம்

இத்திருப்பதிகம்பாடி யங்கிருக்குகாளில அடியார்களோடு மீண்டும் அக்கவுளைவணங்கி யவரருள்பெறறு அங்குகினறும் புறம்போந்து காவேரியின் தென்கையாயில் விளங்காகினற பலதிருப்பதிகளையும் வணங்கிதிருவிடை மருதூரை யடைந்து மருதமரத்தி னீழலிலமர்ந்த மருதப்பாரைவணங்கித் திருப்பதிகம் பாடியருளினர்.

திருவிடைமருதூர் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

கழுதைகுங்குமந்தான்சுமந்தெய்த்தாற்கைப்பர்பாழ்புகழ்ற்றதுபோலப்
பழுதில்காலுழன்றுள்தடுமாறிப்படுசுழித்தலைப்பட்டனனெந்தா
யழுதுநீயிருந்தென்செய்திமனனேயங்கணவாவேயெனமாடடா
இழுதையேனுக்கோருய்வகையருளாயிடைமருதமையெந்தைபிரானே.

அலைக்குஞ்சுனைத்தடாகிலுந்தியைவனஞ்சுமீர்ந்தார்த்திருபாலு
மிரைக்குங்காவிரித்தென்கரைதன்மேலிடைமருதமையெந்தைபிரானே
யுரைக்குமூரனெளிதிகழ்மாலையுள்ளத்தாலுகந்தேத்தவல்லாகள்
கரைப்புசூழ்ப்பொடுகடலேயிமின்றிநாதன்சேவடி நண்ணுவர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

மருதப்பாரைத் தந்தித்து அவரருள் பெற்று அடியார்களோடு அந்த கேனைவிட்டுப் புறம்போந்து திருநாகேசுரத்தை யடைந்து கோயில் வலம் வந்து பரமசிவனை வணங்கித் திருப்பதிகம் பாடியருளினர்.

திருநாகேச்சரம்-பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

பிறையணிவாணுதலாளுமையாளவள்பேழ்கணிக்க
நிறையணிநெஞ்சனுங்கநீலமால்விடமுண்டதென்னே
சுறையணிகுல்லைமுல்லையனேத்துசுளிர்மாதவிமேற்
சிறையணிவண்டுகள்சேர்திருநாகேசுரத்தானே.

கொங்கணை வண்டலர்த்தக்குயிலும்மயிலும்பயிலுந்
தெங்கணி பூம்பொழில்சூழ்திருநாகேச்சரத்தானை
வங்கமணிகடல்சூழ்வயனவலஞ்சொன்ன
பங்கமில்பாடல்வல்லாரவர்தடவினைபற்றறுமே.

திருச்சிற்றம்பலம்.

அங்குநின்றும் போந்து சிவபுரத்துத் தேவர்பிரான் கழலேவணங்கி யன்புடன் புறம்போந்து பூர்வதிசைமேதாகிய கடவுளெழுந்தருளிய பலபதிகளையும் வணங்கி, திருக்கேய நல்லூரை யடைந்து இறைவரது திருவடியை அன்போடு பரவி குரும்பை முலையுமையாளென்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினர்.

திருச்சிற்றம்பலம்.

குரும்பைபழுகிலமலர்க்குழலிகொண்டதவங்கண்டு
குறிப்பினெடுஞசென்றவடன்குணத்தினோன்கறிந்து
விரும்பும்வரங்கொடுத்தவளேவேட்டருளிச்செய்த
விண்ணவர்கோன்கண்ணுதலோன்மேவியவூர்வினவில்
அரும்பருகேசுரும்பருவவறுபதம்பண்பாட
வணிழியில்கண்டமாடமணிபொழில்சூழியலின்
கரும்பருகேகருங்குவளைகண்வளருங்கழனிக்கமலங்
கண்முகமலருங்கலியகல்லூர்காணே.

தண்புனலும்வெண்மதியுந்தாங்கியசெஞ்சடையான்
மும்மையோன்றன்கலனுகமாமுண்பாடி
உண்பலிகொண்டுழல்பரமனுறையுமூர்நிறை
நீரொழுகுபுனலரிசிலின்றென்கலியகல்லூரதனை
நண்புடையநன்சடையனிசைஞானிசிறுவ
னுவலாகோஞரூரனுவினயந்துரைசெய்
பண்பயிலும்பத்துமிவைபத்திசெய்துநித்தம்
பாடவல்லாரல்லலொடுபாவமிலர்காமே

திருச்சிற்றம்பலம்.

அங்குநின்று திருக்குடமூக்கை யணைந்து கடவுளைவணங்கித் திருப்பதிகம்பாடிப் புறம்போந்து திருவலஞ்சுழியை யடைந்து பரமசிவத்தையன்போடு வணங்கித் தமிழ்ப்புகழ்ந்து திருநாவுக்கரைய நாயனுருக்குத்திருவடி தரிசனமளித்த திருநல்லூரைச் சென்றணைந்து சிவனைப்புகழ்ந்து அதன் சமீபத்திலுள்ள தலங்களையெல்லாம் வணங்கிப புகழ்ந்து பின்னர் சோற்றுத்துறையிறசென்று கோயிலை வணங்கி யுள்ளேசென்று வலம்வந்து அழனீரொழுகி யனையவெணு முகையுடையதிருப்பதிகம்பாடியருளினர்.

திருச்சோற்றுத்துறை-பண்-கவுசிகம்.

திருச்சிற்றம்பலம்.

அழனீரொழுகியனைசடையு, முழையிருளுடையானிடமாங்
கழைநீர்முத்துங்கனகக்குவையுஞ, சுழனீர்ப்பொன்னிச்சோற்றுத்துறையே.

சுற்றுர்தருநீர்ச்சோறுறைந்துறையுண், முற்றுர்மதிசேர்முதல்வன்பாதத்
தற்றுரடியாரடிநாயூரன், சொற்றுளில்வகற்றுர்துன்பிலரே.

திருச்சிற்றம்பலம்

அதன்பின் தேவர்பெருமானுமிய பரமசிவன் எழுந்தருளிய. கண்டிபூ ரை வணங்கித் திருவையாறெனும் திருப்பதியை யடைந்து வணங்கி திருப்பூந்துருத்தி யமர்ந்தருளிய கடவுளை வணங்கித் திருவாலம்பொழிலை சேர்ந்து பரமசிவத்தைத் தரிசித்து அன்றிரவில் நித்திரை செய்தார். சுவாமி அவருக்குச் சொப்பனத்திலேதோன்றி, மழபாடிக்கு வருவதற்கு மறந்தீரோ என்று சொல்லியருளினர். சுந்தரமூர்த்தி விழித்தெழுந்து காவேரிநதியைக்கடந்து அதன் வடபக்கத்திற் சேர்ந்து திருமழபாடிக்குப்போய் சுவாமிதரிசனஞ் செய்து திருப்பதிகம் பாடியருளினார்.

திருமழபாடி - பண் நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பொன்னார்மேனியனேபுலித்தோலையரைசுசைதது
மின்னார்செஞ்சடை மேல்மிளிர்கொன்றையணிந்தவனே
மன்னேமாமணியேமழபாடியுண்மாணிக்கமே
யன்னேயுன்னையல்லாலினியாரைநினைக்கேனே.

வராமுபுரமுமெரியசரிலேதொடடவனை
வாரார்கொங்கையுடன்மழபாடியுண்மேயவனைச
சீராராவலாகோணருணாத்ததமிழ
பாரோரேதவலலார்பரலோகதிருபபாரே

திருச்சிறறம்பலம்.

அதனபின சிலநாளங்கிருநது, காவேரிநதியின திருடக்கத்திலுமுள்ள ஸ்தலங்களை வணங்கி, மேறகுதிகுபகு யாதநிரைசெயய நினைநது, திருவானைக்காவுக்குப்போயப் பதிகமபாடி யருளினர்.

திருவானைக்கா-பண்-காந்தாரகம்

திருச்சிற்றம்பலம்.

மறைகளாயினநானகுமறுளபொருளகளுமெல்லாம
துறையுந்தோத்திரத்திறையுந்தொன்மையுமன்மையுமாய
வறையும்பூம்புனலானைக்காவுடையாதியையாளு
மிறைவனெனடி சேர்வாரெமையுமாளுடையாரே.

தாரமாகியபொன்னித்தண்டுறையாடிவிழுத்து
நீரினின்றுமடிபோற்றிகின்மலகொள்ளெனவாங்கே
மூரங்கொண்டுலெம்மானைக்காவுடையாதியையாளு
மீரமுள்ளவர்காளுமெம்மையுமாளுடையாரே.

ஆழியார்க்கருளாணைக்காவுடையாதிபொன்னடியி
னீழலேசரணெனநின்றருள்கூரநினைந்த
வாழவல்லவன்றொண்டன்வண்டமிழ்மாலைவல்லார்போ
யேழுமாபிறப்பற்றுவெம்மையுமாளுடையாரே.

திருச்சிற்றம்பலம்.

அங்குநின்று திருப்பாச் சிலாச்சிராமத்தை யடைந்து கோபுரத்தைக்கண்டு வணங்கி ஆலயத்தை வலம்வந்து, சந்நிதானத்துட்சென்று திருமுன்வீழ்ந்துவணங்கி, பொன்னைக் குறித்துத் துதிக்க, அவர் தராமையால் மனம் புழுங்கி பிரானர் இல்லையென்று திருப்பதிகம் பாடியருளினர்.

திருப்பாச்சிலாச்சிராமம் - பண் தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

வைத்தனன்றனக்கேதலையுமென்னவும்மெஞ்சமும்வஞ்சமொன்றின்றி
யுய்த்தனன்றனக்கேதிருவடிகடமையுரைத்துக்காலுமபமனேயொக்கும்
பைத்தபாம்பர்க்கன்றராகரவணைத்தபரமரிலாசிவாயசுதெம்பிரான்
பித்தரேயொத்தேதார்ந்சிலராகிலிவரஞ்சிலோபியரானர்

வசினவல்லவிகழ்ந்தனவுல்லவெலாபரமனென்றெப்போதும்
பாயினபுகழான்பாச்சிலாச்சிராமத்தநடினோயடிதொழுபன்னள
வாயினற்கூடிமனத்தினனினைவான்வளையவனலாரூரன்
பேசினபேசசைர்பொருத்திலாகிலிவரபழிலோபியரானர்.

திருச்சிற்றம்பலம்.

பின்பு அங்குபொற்குவை பெற்று சிலநாளங்கி நத்து பின்புறப்பட்டு மார்க்கத்தில் திருப்கங்காளினு மூள்ள தலங்களை வணங்கி சிவபெருமான் வீற்றிருந்தருளிய திருப்பஞ்ஞீலியையடைந்து அரவாபரணத்தையுடையாரனு மெகாப்தகலை வணங்கிக் கோயிலை வலம்வந்து சுவாமி தரிசனஞ்செய்து திருப்பதிகம் பாடியருளினர்.

திருப்பைஞ்ஞீலி - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

காருலாவியகருநையுண்டிருளகண்டர்வெண்டலையோடுகொண்
டிலொருதிரிந்தென்செய்வீர்பலியேரிடத்திலைகொள்ளுநீர்
பாலொடாம்பணிந்தும்மையேபரவிப்பணியும்பைஞ்ஞீலியீர்
ஆமாவதுநாகமோசொலுமாணையிடங்களே.

அன்னஞ்சேர்வயல்சூழ்பைஞ்ஞீலியிலாரணீயவிடங்கரை [ல்
மின்னும்நுண்ணிடைமங்கைமார்பலர்வேண்டிக்காதல்மொழிந்தசொ
மன்னுதொல்புகழ்நீள்நாவலூரன்வன்றொண்டன்வாய்மொழிபாடல்பத்
தன்னியின்னிசைபாடுவாருமைகேள்வன்சேவடிசேர்வரே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின்பு திருவீங்கோய்மலை முதலிய ஸ்தலங்களுக்குப்போய் வணங்கி, கொங்கதேசத்தை அடைந்து, அவ்விடத்திலே காவேரிக்குத்தென் கரையிலிருக்கும திருப்பாண்டிக்கொடுமுடிக்குப்போய் நமச்சிவாயப்பதிகம் பாடியருளினர்.

திருப்பாண்டிக்கொடுமுடி - பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

மற்றுப்பற்றெனக்கின்றியின்றிருப்பாதமேமனம்பாவித்தென்
பெற்றலும்பிறந்தேனினிப்பிறவாததன்மைவந்தெய்தினேன்
கற்றவர்தொழுதேத்துஞ்சீர்க்கரையூரிற்பாண்டிக்கொடுமுடி
நற்றவாவுனைநான்மறக்கிலுஞ்சொல்லுகாநமச்சிவாயவே.

கோணியபிறைசூடியைக்கரையூரிற்பாண்டிக்கொடுமுடி
பேணியபெருமானடிபிழைஞ்சுகப்பித்தனாபிறப்பில்லியைப்
பாணுலாவரிவண்டறைகொன்றைத்தாரனைப்படம்பலா
நாணனைத்தொண்டனாரன்சொல்லிவைசொல்லுவார்க்கில்லைதுன்பமே

திருச்சிற்றம்பலம்.

அதன்பின் அவிநாசியை அடைந்து, அங்கே பரமசிவன் கனகசபையிலே நடனஞ்செய்யும் திருக்கோலத்தைத் தரிசித்துக்கொண்டு, திருவெஞ்சாமக்கூடலையும் வணங்கித் திருப்பதிகம் பாடியருளினர்.

திருவெஞ்சாமக்கூடல் - பண் - கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

எறிக்குங்கதிர்வேயுதிர்முத்தமொடுமிலவங்கந்தக்கோலமிஞ்சி
செறிக்கும்புனலுட்பெய்துகொண்டு மண்டிதிரைதெற்றிமுன்றின்மேல்
முறிக்கும்தடமாமுடப்புன்னைஞாழல்குருக்கத்திகள்மேற்குயில்கூவலறா
வெறிக்குக்கூலமாவெஞ்சமாக்கூடல்விகிர்தாவடியேனையும்வேண்டுதியே.

வஞ்சிதுணிஞ்சிடையார்மனத்தாயல்கல்லார்வடிவேற்கணல்லார்பலர்வந்திறைஞ்சும்
வெஞ்சமாக்கூடல்விகிர்தாவடியேனையும்வேண்டுதியேயென்றுதான்விரும்பி

வஞ்சியோதளிகும்வயல்காலர்கோன்வனப்பகையப்பன்வெண்டன்சொன
செஞ்சொற்றமிழ்மாலைகள்பத்துமல்லவர்சிவலோகத்திருப்பதநிணமனதே.

திருச்சிற்றம்பலம்.

அங்குநின்று அனேக காவததூரம் சென்று, திருக்கற்குடி யென்னும் ஸ்தலத்திற்சென்று சுவாமியை வணக்கித் திருப்பதிகம்பாடியருளினார்.

திருக்கற்குடி - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

விடையாருங்கொடியாய்வெளியாம்மெய்க்கொன்றையினாய்
படையார்வெண்மழுவாயபரமாயபரம்பரனே
கடையார்பூம்பொழில்சூழ்திருக்கற்குடிமன்னினின்ற
அடிகேளெம்பெருமானடியேனுய்யுமாறெனனே.

அலையார்தண்புனல்சூழ்ந்தகாவிரிவடகரைக்
கலையார்மாதவர்தாபதர்நற்கமழ்தருபரசுக்கை
சிலையாவாளுருக்கலர்மும்மதிலெய்தபினாகா
விலையார்மாலிலவல்லாவிளம்புவதுகாள்விதியே

திருச்சிற்றம்பலம்.

ஆனன்மின்னார் நிலவுபொன்மாளிகைமேற் கீறுமிருப்பும் பெருமானை வணங்கியவரருள்பெற்ற தேவர்கள் தந்தருளும் பலவாலங்களையும் தரிசித்துத் திருவிளமபாடி வணங்கி மயிலையை வணக்கிக் கற்குடிமலையை அடைந்து வந்து மிகுந்த வன்பொடு திருப்பதிகம் பாடியருளினார்.

திருப்புறம்பியம் பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்

அங்கமொதிவாரானமறைமன்னினின்றும்பாடதவர்தினைமாப்பக்
தங்கிவீற்றைமயமின்னைதென்றென்னைமொழிஞசமே
கங்குலெமக்ள்ளிகாண்டுதேவர்களோடிவளவர்தாகடிகாழும்
பொங்குமாலவிடையேறியசெல்வபுறம்பியங்கொழுப்பதாமே.

துஞ்சியும்பிறந்துஞ்சிறந்துவையகருதமயக்கிலை
யஞ்சியூரன்திருப்புறம்பியத்தபனைத்தமிழ்சரினல்
நெஞ்சினுலேபுறம்பியங்தொழுதுய்துமென்றுறினைத்தன
வஞ்சியாதுலறசெய்யவல்லவர்வல்லுவானுலகாள்வரே.

திருச்சிற்றம்பலம்.

அங்கு சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு அப்பாற் செல்லும்போ
து திருக்கூட்டலையாற்றூருக்குச் சமீபித்தும், அதற்குட்போகாமல் திருமு
துகுன்றைநோக்கிச் சென்றார். செல்லும்வழியிலே பரமசிவன் ஒருபிராம
ணராகி, சுந்தரமூர்த்திக்கு முன்னின்றார். நின்ற அந்தப்பிராமணரைச் சுந்
தரமூர்த்திநாயனார் பார்த்து, ஐயரே! திருமுதுகுன்றுக்குப் போம்வழிஎது
சொல்லும் என்று கேட்க, ஐயா! இது கூடலையாற் றூருக்குப் போம் வழி
என்று சொல்லி, வழிகாட்டிக்கொண்டு முன்னே சென்றார். சுந்தரமூர்த்தி
நாயனார் அவரைத்தொடர்ந்து சென்று, பின் அவனைக்காணாதுவராய் "அடி
களிவ்வழிபோந்தவதியமரியேமென்" என்னும் திருப்பதிகத்தைப் பாடி
யருளினார்.

திருக்கூடலையாற்றூர் - பண் புறநீர்மை.

கிரந்திரிபலம்.

வடிவுடைமழுவினர் விதரரியுரிபோர்த்தபொ
ழியனிழிந்தமெனிப்புரிகுழலையோடுமெ
கொடியனிடைமாதுக்கூடலையாற்றூரி
லடிகளிவ்வழிபோந்தவதியமரியேமினே.

கூடலையாற்றூரிறைகொடியிடைபவனோடும்
ஆடலுகந்தானையதிசயமதுவென்று
காடியவின்றமிழால்காலலவுரன்சொற்
பாடல்கள்பா நம்வல்லார்தம்வினைபற்றறுமே.

திருஞானசம்பந்தம்பலம்.

அதனைவிட கூடலையாற்றூரை அடைந்து, சுவாமிதரிசனஞ்செய்து
கொண்டு திருமுதுகுன்றம்போனார். அந்த ஸ்தலத்திலே சுவாமி தரிச
னஞ்செய்து திருப்பதிகம் பாடியருளினார்.

திருமுதுகுன்றம் - பண் - கொலிக்கௌவாணம்.

திரந்திரிபலம்

நஞ்சியிடையொன்றுகாணெயென்றுமைகூறவா
னஞ்சியிடாற்பின்னைச்செய்வதென்னடிகேள்சொலீர்
பஞ்சியிடப்புட்டில்சிமோட்டினிரைருள்
முஞ்சியிடைச்சங்கமார்க்குஞ்சீர்முதுகுன்றமே.

மூத்தமுதாறுவிஞ்செயும்முதுகுன்றனைப்
பித்தனெப்பானடிஞ்தொண்டனூரன்பிதற்றிவை

தத்துவஞானிகளானார்தமோற்றிலார்
எத்தவத்தோர்களுமேத்துவார்க்கிடரில்லையே.

திருச்சிற்றம்பலம்.

திருப்பதிகம்பாடி பின்னும் பழமலைநாதரை தமக்குப்பொருள்வேண்டிவந்த கருத்தை மனத்துட்கொண்ட குறிப்போடு வணங்கித் தொழுது பாடியருளினார்.

நம்பியென்றதிருப்பதிகம் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

மெய்யைமூற்றப்பொடிப்பூசியோர்கமபிவேதகான்கும்விரித்தோதியோர்கம்பி
கையிலோர்வெண்மழுவேந்தியோர்கம்பிகண்ணுமூன்றுமுடையாயொருகம்பி
செய்யகம்பிசிறுசெஞ்சடைகம்பிதிரிபுரந்தீயெழச்செற்றதாவிலா
லெய்தகம்பியென்னையாளுடைகம்பியெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே.
காத்தினம்பிகசியாதவர்தம்மைக்கசிந்தவர்க்கிம்மையாகடம்மையிலின்பம்
பெருக்குகம்பிபெருகக்கருத்தா.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின் சுவாமி பனைபீராயிரம பொன்கொடுத்தருள, சுந்தரமூர்த்திநாயனார் வணங்கிநின்று சுவாமீ! தேவரீர் தந்தருளிய இந்தப் பொன்னெல்லாம் திருவாரூரிலே உள்ளவர்கள் அதிசயிக்கும்படி அங்கே வரச்செய்யவேண்டும் என்றுபிரார்த்தித்தார், அப்பொழுது சுவாமியுடைய திருவருளினாலே, சுந்தரனே! நீ இந்தப்பொன்னெல்லாவற்றையும் மணிமுத்தநதியிலே இட்டுத் திருவாரூர்க் குளத்திலேபோய் எடுத்துக்கொளளென்று ஓர் அசரீரிவாக்கு எழுந்தது. அதைக்கேட்ட சுந்தரமூர்த்திநாயனார் மச்சம்வெட்டி வைத்துக்கொண்டு, பொன் முழுவதையும் மணிமுத்த நதியிலே புகவிட்டு, அன்று என்னை வலிந்தாட்கொண்ட திருவருளே அறிவேன் என்றுசொல்லி, சிதம்பரத்துக்குப் போகநினைத்து வழிக்கொண்டு இடையிலே திருக்கடம்பூரை வணங்கி சிதம்பரத்தை அடைந்து சபாநாயகரை நமஸ்கரித்துத் திருப்பதிகம் பாடியருளினார்,

கோயில் - பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்.

மடித்தாடுமடிமைக்கண்ணிப்பேணுவீரீவாழுநாளுங
தடுத்தாட்டித்தருமனர்தமாச்செல்லிடும்போதுதடுத்தாட்கொள்வான
கடுத்தாடுங்கரதலத்திற்றமருகமுமெரியதழலுங்கரியபாம்பும்
பிடித்தாடிபுலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானப்பெற்றுமன்றே.

பாரூருமாவல்குலுமைங்கையவள்பங்கண்பைங்கணேற்ற
னூரூன்றருமனூர்தமர்செக்கிலிடும்போதுதடுத்தாட்கொள்வா
னூரூன்றம்பிரானூரன்மிக்கோங்கிலணிகாருசிலாய்ப்
பேரூரார்பெருமானேப்புலியூர்ச்சிற்றம்பலத்தெப்பெறுமன்பே.

சிற்றம்பலம்.

அங்குநின்று புறப்பட்டு கருப்பறியலூரைக் கண்டு வணங்கிக்கோபுரத்துள் அடியார்களுழப்போய் சுவாமிதரிசனஞ்செய்து சிம்மாசனலு முதலியுடைய திருப்பதிகம்பாடியருளினர்.

திருக்கருப்பறியலூர் - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

சிம்மாசனஞ்சிலம்புளித்தசெங்கையிலேலைத்தாரகந்தித்திறம்பாவண்ணங்
கைம்மாவினூரிவையிபார்த்துமையெருவக்கண்டனேக்கருப்பறியலூர்க்
கொம்மாவின்மலர்ச்சோலைக்குயிலாடயிலாடுங்கொடிக்கோயி
லெம்மானேமனத்தினுளேநினைந்தபோதவர்காக்கினியவாமே.

கலைமலிந்தகின்புலவர்நம்பிரும்பிரான்மிடர்தீர்ந்தருங்கருப்பறியலூர்க்
குலைமலிந்தகோட்டெங்குமட்டொழுகும்பூஞ்சோலைக்கொருடிக்கோயி
லிலைமலிந்தசமுவானேமனத்தினுளன்புசெயநின்றியோர்தி
மலைமலிந்தாளாரூரன்வனப்பகையப்பனுரைத்தவண்டமிழ்களே.

திருக்கச்சிற்றம்பலம்.

கருப்பறியலூரினையும் புறப்பட்டு மண்ணிவளம்படிக்கரையிற்சென்று அங்கு உமையையொருபாகத்திலுடைய சடவுளேவணங்கி ஒப்பற்றமுழினையுடைய திருப்பதிகம் முன்னவனென்றெடுத்துபாடியருளினர்.

திருப்பழமண்ணிப்படிக்கரை - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

முன்னவனெய்ஞ்சிரான்முதற்கண்ணப்பரிதாயபிரான்
சென்னியிலெங்கள்பிரான்சிரபுரமிடற்றெம்பிரான
மன்னியவெங்கள்பிரான்மலைநான்குகல்லாலநிழற்கீழ்ப்
பன்னியவெங்கள்பிரான்பழமண்ணிப்படிக்கரையே.

பல்லுயர்வாழுந்தெண்ணீர்ப்பழமண்ணிப்படிக்கரைய
யல்லியந்தாமரைத்தாராரூரனுரைத்ததமிழ்
சொல்லுதல்கேட்டல்வல்லாரவர்க்குந்தமர்க்குங்கிலேக்கும்
எல்லியுநண்பகலுமிடர்கூருதலிலையன்றே. திருச்சிற்றம்பலம்.

அங்குநின்றுஞ்சென்று வாழ்கொளிபுத்தூருக்குப் போகாதமற்று சுந்தரமூர்த்திநாயனர் செல்லும்போது மார்கத்தில் நினைத்திரும்பிஅத் தலத்தையடைந்து தலைக்கலனென்றெடுத்துத்திருப்பதிகம்பாடியருளினர்

திருவாழ்கொளிபுத்தூர்-பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

தலைக்கலன்தலைமேற்றரித்தானைத்தன்னையென்னினைக்கத்தருவானைக்
கொலைக்கையானைபுரிபோர்த்துகந்தானைக்கூற்றுதைத்தருளைசேர்கழலானை
யலைத்தசெங்கண்விடை யேறவல்லானையானையாலடியேனடிநாயேன்
மலைத்தசெந்நெலவயல்வாழ்கொளிபுத்தூர்மாணிகத்தைமறந்தென்னினைக்கேனே.

வளங்கிளர்பொழில்வாழ்கொளிபுத்தூர்மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனென்
றுளங்குளிர்தமிழ்ஞான்வன்றொண்டன்சடை பன்காதலன்வனப்பகையப்பன்
நலங்கிளர்வயல்காவலர்வேந்தனங்கைகிங்கடி தந்தைபுயத்த
பலங்கிளர்தமிழ்பாடவல்லார்மெய்ப்பரையுமாஞ்செய்தபாவங்கள்தானே.

திருச்சிற்றம்பலம்.

பதிகம்பாடிச்சென்று ஆலயத்துள்ளடைந்து மயிர்ப்புளகமெழத் தொழுது உள்ளணைந்து வணங்கி யுமாமகேசுவரனைத்துதித்து, வெளியே வந்து தங்கியிருந்து அந்நகரின்மும் புறப்படு காஞ்சிப் முள்ளூரைச்சாரும்போது ஆண்டவன எதிரகக் காட்சிகொடுக்கக்கண்டுவள்ளாயென்ன வெடுத்துதிருப்பதிகம்பாடியருளினர்.

திருக்காஞ்சிமுள்ளூர்-பண்-கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

வள்வாயமதிமிளிரும்வளர்சடையினைமறையவனை
வாய்மொழியையவானவர்தங்கோனைப்
புள்வாயைக்கீண்டுலகம்விழுங்கியுமிழ்ந்தானைப்
பொன்னிறத்தின்மூப்புரிந்நூனன்முகத்தினனை
முள்வாயமடல்தழுவிமுடத்தாழைமீன்று
மொட்டளர்ந்தவிரைகாறும்பூருகுவிரிபொழில்சூழ்
கள்வாயகருங்குவளைகண்வளருங்கழனிக்
காஞ்சிமுள்ளூரிற்கண்டுதொழுதேனே.

தாயினர்கடல்சூழ்ந்ததென்னிலங்கைக்கோனைச்
செற்றவனைச்செஞ்சடைமேல்வெண்மதியினானை
நாயினர்களைத்தழுவுகொள்ளிடத்தின்கரைமேற்
கானுட்டுமுள்ளூரிறகண்டுகெழுல்தொழுது
உரையினர்மதயானைரவலாரூரனுரைமபா
லுரைசெய்தவண்டமிழ்கள்வல்லார்
வரையினர்வகைஞாலமாண்டு வர்க்குந்தாம்போய்
வானவர்க்குந்தலைவராய்நிற்பரவர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

அங்குநின்றும் புறப்பட்டு திருவெதிர்கொள்பாடியினை யணைந்துமகத் தயானையென் றெடுத்துத் திருப்பதிகம் பாடியருளினர்.

திருவதிர்கொள்பாடி - பண் இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

மத்தயானையின்மன்னர்சூழவருவீர்காள்
செத்தபோதிலாருமில்லைச்சிக்கையுள்வம்மின்கள்
வைத்தவள்ளமாற்றவெண்டாவம்மின்மனத்தீரே
அத்தர்கோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே.

மூத்தநிறப்பவளமேனிரசெஞ்சடையாணுறையும்
பத்தர்பத்தரதெதிர்கொள்பாடிப்பரமனீயேபணியர
சித்தம்வைத்தகொண்டாதொண்டனசடையனவன்சிறுவன்
பத்தனூரன்பாடல்வல்லார்பாதம்பலிவாரே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு அக்கடவுளை வணங்கியவரருள்பெற்று திருவேள்விக்குடியில் வந்து சுவாமியைவணங்கி மூப்பதுமில்லையென் றெடுத்துத் திருப்பதிகம பாடியருளினர்.

மூப்பதுமில்லை - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

மூப்பதுமில்லைபிறப்பதுமில்லையிறப்பதில்லைச்
சேர்ப்பதுகாட்டகத்தூரினுமாக்கச்சிந்திக்கிலல்லா
காப்பதுவேள்விக்குடிதண்டுருத்தியெங்கோன்றலைமேல்
ஆர்ப்பதுநாகமதிக்தோமேல்நாமிவர்க்காட்படோமே.

கூடலர்மன்னன்குலகாவலனார்க்கோனலத்தமிழைப்
பாடவல்லடியமன்னடியார்கடமைவழுவார் •
நாடவல்லதொண்டனைநானுட்படுமாறுசொல்லிப்
பாடவல்லார்பரலோகத்திருப்பதுபண்டமன்றே.

திருச்சிற்றம்பலம்.

பின்னும் மார்க்கங்களில் பல ஸ்தலங்களே வணங்கி, திருவாரூரை அடைந்தார். அங்கே சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு பரவையாரோடுகூடியிருக்கும்காலில் ஒருநாள் பரவையாரை நோக்கி எனக்குத்திருமுத குன்றர் தந்தருளிய பொன்னே மணிமுத்தரத்தியிலே புகவிட்டுவந்தேன் இப்போது இந்த ஸ்தலத்திலே இருகின்ற கோயிலுக்கு மேற்திசையிலுள்ளகுளத்திலேபோய் அவருடைய அருளினாலே எடுத்துக்கொண்டு வருவோம்வா என்றார். பரவையார் அதைக்கேட்டு, இது என்ன அதிசயம் என்றுசொல்லி, புன்னகைசெய்ய, சுந்தரமூர்த்திகாயனர், பெண்ணேநமது கடவுளுடைய திருவருளினாலே பொன்முழுதும குளத்திலே எடுத்து உனக்குத்தருவேன், இதுசத்தியம் என்றுசொல்லிப்பரவையாரும் கூடவர கோயிலிலே பிரவேசித்து வன்மீகநாதரை வணங்கிக்கொண்டு கோயிலைவலம்வந்து மேற்றிசையிலிருக்கின்ற திருக்குளத்தை அடைந்து, அதன் வடகீழ்க்கரையிலேபோய், பரவையாரை நிறுத்தி சுவாமியைவணங்கி, குளத்திலே இறங்கி, அங்கே தடவினார். அப்போழுத பரமசிவன் சுந்தரமூர்த்தியைக்கொண்டுதிருப்பதிகம் பாடுவிக்கவேண்டும் எனனும் திருவிளையாட்டினாலே, பொன்னே அக்குளத்திலே வருவியாதொழிக்தருள, பரவையார், ஆற்றிலே இட்டுக்குளத்திலேதேடுகிறீரா என்றார். அதுகேட்ட சுந்தரமூர்த்திகாயனர், சுவாமீ தேவரீர் முன் அருளிச்செயதபடியே பரவையார் கையாதபடி பொன்னைத்தாரும் என்று திருமுதகுன்றம்மேல் திருபதிகம்பாடியருளினார்.

திருமுதுகுன்றம் - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பொன்செய்தமேனியினீர்புலித்தோலையரைக்கசைத்தீர்
முன்செய்தமூவெயிலுமெரித்தீர்முதுகுன்றமமர்ந்தீர்
மின்செய்தநுண்ணிடையாளபரவையிவள்தனமுகப்பே
யென்செய்தவாறடிகேளடியேனிட்டளங்கெடவே.

பிறையார்சுஞ்சடையெம்பெருமானருளாயென்று
முறையாலவ்வதமரர்வணங்கும்முதுகுன்றர்தம்மை
மறையார்தங்குரிசில்வயல்காவலாரூரன்சொன்ன
இறையார்பாடல்வல்லார்க்கெளிதாஞ்சிவலோகமதே.

ஏத்தாதிருந்தறியேனெமையாளுடைநாயகனே
மூத்தாயுலகுக்கெல்லாமுதுகுன்றமமர்ந்தவனே
பூத்தாருங்குழல்வாள்பரவையிவள்தன்முகப்பே
கூத்தாதந்தருளாய்கொடியேனிட்டளங்கெடவே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு பரமசிவனுடைய திருவருளினால் வந்தெழுந்த பொற்சோதியைத் தரிசித்து, கையிலேற்றி அந்தப்பொன்னையும் முன்கொண்டுவந்த மச்சத்தையும உளப்பித்து, மச்சத்திலும் பார்க்க இது உரைதாழ்ந்தது கண்டு, பின்னும் கடவுளைப்பாடினர். பாடியபோது கடவுளானவர் உரைதாழாதுஅருள்செய்ய, சுந்தரமூர்த்திநாயனர் மனமகிழ்ந்து, பொற்குவையைமாட்டிற்சுமத்தி, பரவையாரோடு வீடுதிரும்ப அனுப்பி,' கோயிலிலேபோய்ச் சுவாமியை வணங்கி வீட்டுக்குப்போய் பரவையாருடன் இன்புற்று வாழ்ந்திருந்தார். அப்படி வாழ்ந்திருக்குங்காலத்தில் மாடாறும் திருவாரூரில் சுவாமி தெரிசனஞ் செய்துவருகாளில் புற்றிடமாகவீற்றிருந்தருளிய பரம்பொருளை பாறுதாங்கியெனவெடுத்தது திருப்பதிகம் பாடியருளினர்.

திருவாரூர்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

பாறுதாங்கியகாடரோபடுகலையதோரமலிப்பாவையோர்
கூறுதாங்கியகுழகரோகுழைக்காதரோகுறுங்கோட்டிள
ஏறுதாங்கியகொடியரோடுடுபொடியரோவிளங்கும்பிறை
யாறுதாங்கியசடையரோரமக்கடிகளாகியவாடலே.

படிசெய்நீர்மையிற்பத்தர்காள்பணிந்தேநந்தினன்பணியீரருள்
வடிவிலானதிருவாவூரனவனப்பகையப்பன்வன்றொண்டன்
செடியனாகிலுந்தீயனாகிலுந்தமைமெய்மனஞ்சிந்திக்கும்
அடியனாரடியாள்வரோரமக்கடிகளாகிவாடுகவே.

திருச்சிற்றம்பலம்.

திருப்பதிகம்பாடி பரவையாருடனே வாழ்ந்திருக்குங்காலத்தில், சிவஸ்தலயாத்திரை செய்ய விரும்பித்திருவாரூரினின்றும் புறப்பட்டு திருநள்ளாறுஎன்னுங் கலத்தில் சென்று திருப்பதிகம் பாடியருளினர்

திருநள்ளாறு - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

பூலிலவாசதைப்பொன்னினமணியைப்புவியைகாற்றினைப்புனலைவெளியைச்
சேவின்மேல்வருஞ்செல்வனைச்சிவனைத்தேவதேவனைத்தித்திக்குந்தேனைக்
காவியங்கண்ணிபங்கனைக்கங்கைச்சடையனைக்காமரத்திசைபாட
நாவினாறுநள்ளாறனையமுதைநாயினேன்மறந்தென்னினைக்கேனே.

செறிந்தசோலைவள்ளூருந்தளராற்றெஞ்சிவனைநாவலூர்சிங்கடி தக்தை
மறந்துநான்மற்றுநினைப்பதென்னென்றுவனபபகையபபனூரன்வனமுண்டன்
சிறந்தமாலைகொடைஞசிஞைடைஞசுஞசிங்தையுள்ளுருகிச்செப்புவல்லார்
கிறந்துபோக்கில்லைவரவில்லையாகியினபவெளளதநுளிருபபாகளினிதே.

திருச்சிற்றம்பலம்.

திருப்பதிகம்பாடிச் சுவாமி தரிசனஞசெய்துகொணடு ஆகாயததை யளாவிய மணிமாடங்கணிறைந்த திருக்கடவூர்வந்து திருமயானத்தையும் வணங்கித் திருப்பதிகம் பாடியருளினார்.

திருக்கடவூர்மயானம் - பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

மருவாகொன்றைமதிசூடி மாணிக்கத்தின்மலைபோல
வருவார்விடை மேல்மாதோடுமகிழ்ந்துபூதபடைசூழத்
திருமால்பிரமனிந்திரனுக்கேதவர்காகர்தானவாக்கும்
பெருமான்கடவூர்மயானத்துப்பெரியபெருமானடிகளே.

மாடமல்குகடவூரில்மறையோர்த்துமயானத்துப்
பீடைதீரவடியாக்கருளும்பெருமானடிகள்தீர்
நாடிநாவலாரூரனம்பிசொன்னநறுமிழ்கள்
பாடுமடியார்கேடுபார்மேறபாவமானபறையுமே.

திருச்சிற்றம்புலம்.

அதன்பின்பு, திருக்கடவூரினின்றும், திருவீரட்டானத்தில் நமன துவீரத்தைத்தொலைத்த திருவடியை வணங்கித் திருபபதிகம் பாடியருளினார்.

திருக்கடவூர் - பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்.

பொடியார்மேனியனேபுரிநூலொருபாம்பொருக்க
வடியார்மூவிலைவேல்வளர்கங்கையின்மங்கையொடுங்
கடியாகொன்றையனேகடவூர்தனுள்வீரட்டத்கெம
மடிகேளென்னமுதேபெனக்காதுணைநீயலதே.

காராரும்பொழில்சூழ்கடவூர்த்திருவீரட்டத்துள்
ஏராரும்மிறையைத்தூணியாவெதிலிகாவலர்கோன்
ஆரூரனன்னடியானடிதொண்டனுரைத்ததமிழ
பாரோர்தவல்லார்பரலோகத்திருப்பாரே.

திருச்சிற்றமபலம்.

அங்குநின்று புறபபட்டு பொனமலையை வில்லாகவளைத்த மிகுந்த வீரத்தையுடைய பரமசிவன் வாழ்கின்ற திருவலம்புரத்திற்சென்று சுவாமியை வணங்கி எனக்கினியெவெதெதுத தொபபதிகமபாடியருளினர்.

திருவலம்புரம் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்

எனக்கினிநதினைகனாபகலீடமிகுதலை
பனைக்கையிபபமும்பிறைபபவையின்சடைமே
லெனக்கினியவன்றமர்கினியவெழுமையு
மனகிரியவன்னதிடம்வலம்புரமே.

வருங்கலபுல்லலேணுகல்கருங்கட
லிருங்குலபாறைபாரத்தமிடம்வலமபுரதனை
யருங்குலதருந்தமிழரனவனைணடனெராற
பெருங்குலதவதொடுபிதறுகல்பெருமையே.

திருச்சிறறம்பலம்.

திருவலம்புரியைபபணிந்துபின திருநாசாபகைகடுசென்று தேவாரிணைபபுணிந்து திருபபதிகமபாடிப புறமபபாகது, திருவெணகாட்டையடைந்து அகடவளைபபணிந்து புகழ்ந்து சுந்தரமூர்தி நாயனார திருகளிபள்ளிக்குச் சென்று திருப்பதிகம் பாடியருளினர்.

திருநனிபள்ளி - பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்

ஆதியனதியையனையன்மாலிதிதகரிய
சோதியனசொற்பொருளாய்ச்சுருங்காமறைகான்கினையு
மோதியனும்பாதங்கோலுலகத்தினுளெவ்வுயிர்க்கு
நாதியல்லம்பெருமானண்ணுமூர்நனிபள்ளியதே.

காலமுமாண்கழியுமனிபள்ளிம்மன்றினுள்ளிக
கோலமதாயவனைக்குளிராகவலஞானசொன்ன
மாலைமதிதனைப் பாமண்மறைதுவானேர்நிலகிற்
சாலகலின்பமெய்தித்தவலோகத்திருப்பவரே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின்பு திருச்செம்பொன்பள்ளி முதலிய அநேக திருப்பதிகளை வணங்கி எம்பிரானெழுந்தருளிய திருநின்றியூரைச் சார்ந்து ஆலயத்துட் புகுந்து வணங்கித் திருப்பதிகம் பாடியருளினார்.

திருநின்றியூர்-பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

அணிகொளாடையம்பூணனிமாலையுமதுசெய்தமுதம்பெறுதண்டி-
யிணைகொளேழிமைதாழிருபயனுவலினைதவனதிருநாவினுமகரையன
கணைகொள்கண்ணப்பனெனவிவர்பெறுநாகன்னருளாதரிததடைந்தேன
நிணைகொள்செந்தமிழைபங்கினிரியுஞ்செல்வத்தென்றிருநின்றியூரானே

இரவிநீள்சுடரொழுதன்புனனமெழுதுதனமுலைகளல்சங்களேந்திச
சுரபிபால்சொரிந்தாடிநினபாகத்துநாநவார்த்தை திடம்படக்கேட்டுப்
பரவியுளகிவன்பாசத்தைநயமுத்தப்பரமவடிநினபாதத்தையடைநதே
னிரவிகிதிலமதகுரெமபொனளிசுருதெனறிருநினறியூரானே.

திருச்சிற்றம்பலம்.

திருப்பதிகம்பாடியகத திருபபதியி லனபகளோடமர்ககருள்வ
ராகிய சுக்தரமூர்த்திநாயனர் அதைவிடடுப் புறபபடடுத் திருநீலைவணங்
காது மறத்துபோகுமபோது நிலைந்து அதனைவணங்கித் திருப்பதிகம் பா
டியருளினர்.

திருநீர்-பண்-தக்கேசி

திருச்சிற்றம்பலம்

ஊர்வதோர்விடை யொன்றுடையானையொணுதறறளிகலணுதலானைக்
காரதார்கறைமாமிடறுனைக் காதலார் புரமூனறெரி நதனை
நீரில்வாளைவராலரிகொளளுநிலறபுனற புனிசசெல்வமேர்
பாருளாபரவிதொழுகின்றபரமனைபபணியாவிடலாமே.

பேரோராயிரமும்முடையானைபெரினுமபெரிதும்மினியானை
நீரூர்வாசடைநின்மலனனனீரோனிலுமகநிடடபிரானை
யாரூரன்னடிகாணபதற்கன்பாயாதரித்தலைழத்நிடட விம்மாலை
பாரூரும்பரவிதொழவல்லார்பத்தராய்முத்திதாம்பெறுவாரே.

திருச்சிற்றம்பலம்.

பதிகம்பாடி அவ்விடத்து நின்று திருப்புன்கூரினைத்து வணங்கிப்புற ப்பட்டு வாசனைவிரிந்தமலர்ச்சோலைகள் சூழ்ந்த திருக்கோலக்காவில்வந்த போது பரமசிவன் எதிராகக் காட்சிகொடுத்தருள மிகுந்த விருப்பத்தோடு தொழுது திருஞானசம்பந்த சுவாமிகளுக்குத் திருக்கைகளா லொத்திப்பா டப் பொற்முளங்கொடுத்தருளியதைச் சிறப்பித்து திருப்புகம்பாடியரு ளினர்.

திருக்கோலக்கா-பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

தாருமினவிசையாறமிழ்பரப்புஞானசம்பந்தனுக்குலகவர்முல
முளமீயுந்தவன்பாடலுக்கிரங்குந்தனமையாளனேயென்மனக்கருத்தை
யாளும்பூதங்கள்பாட நின்றுடமங்கணன்றனேயெண்கணமிறைஞ்சுங்
கோளிலிப்பெருங்கோயிலுளானக்கோலக்காவினிற்கண்டுகொண்டேனே.

கோடரம்பயில்சடை யுடைக்கரும்பைக்கோலக்காவுளெம்மானெய்ம்மா
பாடரம்குடியாழ்யுவர்யிரும்பபயிலுநாவலாரனவன்றெண்ட [னப்
ணிடிரங்கிழுன்னநியுமனெனியானவின்றபதகிலவிளம்பியமாந்தர்
காடரங்கெனநடாவின்றுன்பாதகதியுமெய்துவர்பதிய வர்க்கதுவே

திருச்சிற்றம்பலம்.

பின் சீர்காழியினெல்லையை வலங்கொண்டு வணங்கி, திருஞானசம் பந்தமூர்த்தி நாயனருடைய திருவடிகளைத் துதித்து, குருகாவூருக்குப்போ ம்படி வழிக்கொண்டார். வழியில், சுவாமி அவர்பசியினாலும் தாகத்தினு லும் வருத்தமை அறிந்து, தணணீரும் பொதிசோறும கொண்டுவந்து வெய்யில்வெப்பத்தைத் தணிக்கும்பொருட்டு ஒருபக்கத்தில ஒருபக்கலை யுண்டாக்கி, அங்கே பிராமணவேடங்கொண்டு, சுந்தரமூர்த்தியை எதிர்பா ர்த்துக்கொண்டிருந்தார். அப்பொழுது சுந்தரமூர்த்திநாயனர் திருத்தொ ண்டர்களுடனே அவ்விடத்திலேவந்து, பந்தரின்கீழ்போய் அந்தப் பிராம ணர் சமீபத்திலே பஞ்சாக்ஷரத்தைச் சொல்லிக்கொண்டிருந்தார். பிராமண ர் அவரைப்பார்த்து, நீர் மிகப்பசிகொண்டிருக்கின்றீர். இந்தப் பொதிசோ ற்றை உண்டு இந்தத் தண்ணீரைக்குடித்து இளைப்பாறும் என்றுசொல்லிய ருள சுந்தரமூர்த்திநாயனர் அதற்கு இசைந்து, அந்தப பொதிசோற்றை வாங்கி, திருத்தொண்டருடன அமுதுசெய்து, அளவில்லாதபரிசனங்களெ ல்லாரும் அமுதுசெய்யப்பண்ணினர். பண்ணிய பின்னும், அந்தப பொதி சோறு அவ்விடத்திலே பசித்தவந்த பிறரும் உண்ணும்படி குறையாது பொலிந்தது. சுந்தரமூர்த்திநாயனர்போசனம்பண்ணியபின் சலபானம்பண் ணி, அந்த ஐயரைப்புகழ்ந்து, அவர் சமீபத்திலே பரிசனங்களோடு நித்து

னாசெய்ய, ஐயர் பக்தருடனே மறைந்தருளினார். சுந்தரமூர்த்தி விழித்து எழுந்து, ஐயரைக்காணுமையால் அதிசயங்கொண்டு திருப்பதிகம்பாடிகுரு காவூரை அடைந்து சுவாமி தரிசனஞசெய்துகொண்டு அங்கேயிருந்தார்.

திருக்குருகாவூர்-பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

இத்தனையாமாற்றையறிந்திலேனெம்பெருமான்
பித்தனேயெனுமைபபேசுவார்பிறரெலலா
முத்தினைமணிதன்னைமாணிக்கமுளைத்தெழுந்த
வித்தனேகுருகாவூாவெள்ளடையீயனமே.

வளங்கனிபொழின்மல்குவயலணிந்தழகாய
விளங்கொளிகுருகாவூாவெள்ளடையுறைவானே
யிளங்கிளையாரூரன்வனப்பகையவளப்பன்
உளங்குளிர்தமிழமாலைபதர்கடகுரைபாமே.

திருச்சிற்றம்பலம்.

பின் அவ்விடத்தைவிட்டுப்போய், திருக்கழிப்பாலையைவணங்கி, சித ம்பரத்தை அடைந்து, சபாநாயகனாத தரிசனஞசெயதுகொண்டு, திருத தினை நகரைவணங்கி, திருநாவலூரை அடைந்து சுவாமிதரிசனஞ செயது கொண்டு, சிலநாள் அங்கிருந்து அடியார்களுழ திருமுன்பெய்திஉயிரினு ஞிறைந்த பரமசிவனது அருளைததுதித்து கோவலனுனமுகனென்றெடுத்து த் திருப்பதிகம் பாடியருளினார்.

திருவெண்ணெய்நல்லூருந்திருநாவலூரும்-பண்-நட்டராகம்

திருச்சிற்றம்பலம்.

கோவலனுன்முகன்வானவர்கோனுங்குறைவல்செய்ய
மேவலர்முப்புராந்தீயெழுவித்தவனேரம்பினு
லேவலனாவெண்ணெய்நல்லூரில்வைத்தென்னையாளுங்கொண்
நாவலனுர்க்கிடமாவதுநந்திருநாவலூரே.

நாதனுக்கூர்நமக்கூாரசிங்கமூனியரையன்
ஆதரிதசனுக்காட்செயுமூணிநாவலூரென்
ரூதனற்கவன்றெண்டனூரனுரைத்ததமிழ்
காதலித்துங்கறுஞகேட்பவர்தம்வினைகட்டறுமே.

திருச்சிற்றம்பலம்.

பின் தொண்டைமண்டலத்தில் இருக்கின்ற ஸ்தலங்களுக்கு யாத்திரைசெய்ய விரும்பி, அவ்விடத்தினின்றும் புறப்பட்டு திருக்கழுக்குன்றிற் சென்று சுவாமிதரிசனஞ்செய்து திருப்பதிகம் பாடியருளினார்

திருக்கழுக்குன்றம் - பண் - நட்டபாடை.

தீருச்சிற்றம்பலம்.

கொன்றுசெய்தகொடுமையாற்பலசொல்லவே
நின்றபாவம்வினைகடாம்பலநீங்கவே
சென்றுசென்றுதொழுமின்றேவர்பிரானிடங்
கன்றினேடுபிடிசூழ்தண்கழுகுன்றமே.

பல்லில்வெள்ளோத்தலையன்றுன்பயிலும்மிடங்
கல்லில்வெளாலையருவித்தண்கழுக்குன்றினை
மல்லின்மல்குதிரடோளரனவனப்பினற்
சொல்லல்சொல்லித்தொழுவாரைத்தொழுமின்களே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின் திருக்கச்சூரிலேபோய்க் கோயிலுள்ளே பிரவேசித்துச்சுவாமியை வணங்கிக்கொண்டு, புறத்திலேவந்து, ஸ்துதிசெய்யும் பொழுதாகியும், பாகம்பணணிக்கொடுக்கும பரிசனங்கள வாராமையால் மிகுந்த பசிவருத்தத்தினுலே மதிமயங்கி இருந்தார். அப்பொழுது, பரமசிவனுனவர் ஒருபிராமணராகி, ஓருவெற்றோட்டை ஏந்திகொண்டு, அங்கேசென்று, அவருடைய முகத்தைப்பார்த்து, நீர பசியினுல் மிகவருந்தி இளைப்புற்றிருக்கின்றீர். நான் இப்பொழுது உமக்கு அன்னம்யாசகம்பண்ணிக்கொண்டு வருவேன். நீர்அப்புறம்போகாமல் சிறிதுபொழுது இங்கேஇரும்என்றுசொல்லி, அந்தத் திருக்கச்சூரிலே இருக்கின்ற அக்கிரகாரங்களிலேபோய், அன்னமும் கறியும் யாசகம் பண்ணிக்கொண்டு, சுந்தரமூர்த்தி சுவாமிகளிடத்திற் சென்று, பசிதீர இதை உண்ணும் என்று சொல்லிக்கொடுக்க நாயனுர் அவ்வையருடைய அன்பைப்புகழ்ந்து, மிகுந்த மகிழ்ச்சியோடு அமுதுசெய்து வாங்கி, தம்மோடுவந்த தொண்டர்களுடனே அமுதுசெய்தார். உடனே அவ்வையர் மறைந்தருளினர். அதனைக்கண்டு, சுந்தரமூர்த்திசுவாமிகள் அவா பரமசிவனென்று உணர்ந்து, இந்தபெரும்பகலிலே திருவடிவருத்தத் திருமேனிகொண்டு அடியேன்பொருட்டு எழுந்தருளிவந்தபெருங்கருணை இருந்தபடி என்னஎன்றுமனங்கரைந்துருகி உரோமாஞ்சிதங்கொள்ள, கண்ணில்நின்று ஆனந்த அருவிசொரிய, திருப்பதிகம்பாடியருளினர்,

திருக்கச்சூர் ஆலக்கோயில் - பண் - கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

முதுவாயோரிகதறமுதுகாட்டெரிகொண்டாடல்முயல்வானே
மதுவார்கொன்றைபுனைவாய்மதவேழமுமலையான்மகடன்மணவாளா
கதுவாய்க்கலையினிதபனிநிகொள்ளக்கண்டாலடியார்க்கலலோ
யதுவேயாமதிதுவோகசரூரிலக்கோயிலும்மானே.

அனைமன்னும்வயல்சூழ்கச்சூரிலக்கோயிலம்மானே
யுன்னுமுள்ளுமனத்தாரூரனூரன்பெயரமுடிவைத்த
மன்னுபுலவன்வயல்நாவலர்கோன்செஞ்சொல்நாவன்வண்டமிழ்கொண்டன்
பன்னுதமிழ் நூல்மாலைவல்லாரவரெய்தலுமெய்தியில்வானோ.

திருச்சிற்றம்பலம்.

அரன்பின்பு சுவாமியை வணங்கிக்கொண்டு, அவ்விடத்தைவிட்டு நீங்கி காஞ்சிபுரத்தைச சமீபித்து, அவ்விடத்தில் நின்றுதமதமகிமையையும் வாவையும் கேள்வியுற்று வந்து எதிர்கொண்டு வணங்கிய பத்தர்களைத் தாமும் வணங்கி, அவர்களோடு நகரத்தினுளளே சென்று திருவேகாம்பரத்தை அடைந்து, "உலகமாதாவாகிய காமாட்சியும்மையால்" அருச்சிக்கப்பட்ட ஏகாம்பரநாத சுவாமியைத் தரிசித்து, பரவசமாய் அடியறறமரம்போல விழுந்து எழுந்து விமலி ஆனந்தபாஷ்பஞ்சொரிய, அஞ்சலியஸ்தராகி, மெய்யன்பினோடு திருப்பதிகம்பாடி, புறத்தேபோந்து, திருத்தொண்டாகளோடு அக்காஞ்சீபுரத்திலே, சிலநாள் வசித்தார். வசிக்கும் நாட்களிலே அந்நகரத்தில் இருக்கின்ற காமகோட்டத்திற்சென்று, அங்கிருக்கும் காமாட்சியம்மையைவணங்கி, திருமேற்றளியை அடைந்து சுவாமிதரிசனஞ் செய்து திருப்பதிகம் பாடியருளினார்.

திருவேகம்பந் திருமேற்றளி - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

நெறந்தாவொன்சுடரேதுனையெனினோக்கிருந்தேதன்
வறதாய்பிரியலியாய்மனமேபுகுந்துகின்ற
சிறதாயெல்லைதிரான்மிருமேற்றளியுறையு
மெந்தாயுனையலலாலினியேத்தமாடேனே.

பாருர்பல்லவனூர்மதிற்காஞ்சிமாகதர்வாய்ச்
சீரூருபுகழிற்றிருமேறறளிச்சிவனே
யாரூரனடியானடித்தொண்டனூரன்சொன்ன
சீரூர்பாடவல்லார்சிவலோகஞ்சேர்வாரே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின்பு ஓணகாந்தன்றளியையடைந்து ஒப்பற்ற பரமசிவத்தை வணங்கித் தன்னைத்தொழுமைகொண்ட அழகைத் திறத்தைப்பேசி பொன்வேண்டி நெய்யும்பாலுமெனவெடுத்துஅழகிய திருப்பதிகம்பாடியருளினர்.

திருஓணகாந்தன்றளி பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நெய்யுமபாலுநதயிர்நங்கொணடுநித்தம்பூசனைசெயயுமுமுர்
தையிலொன்றுங்காணமில்லைக்கழடிதொழுதுய்யினல்லா
லெவராகொனறிங்காடவாடியாபுகுழிப்படடழுநதுமேலுக்
குய்யுமாரெனறருளிசெயயிரொணகாந்தனறளியுளீரே.

ஓவணமேல நகொணறெறி மொணகாதனறளியுளார்தா
மாவணஞ்செயதாருங்கொணட வாதுகிலொடுபடடுவீசிக்கி
கோவணமேறகொணடவேடங்காவையாகவாருரனசொனன
பாவணத்தமிழபாடுமவல்லார்கருப்பறையுநதாஞசெய்தபாவந்தானே.

திருச்சிற்றம்பலம்.

ஓணகாநகேசுவரர்மேற் பதிகம்பாடிப பொன்பெற்று அனேக நங்கா பதத்தையடைந்து மூலயத்தட சென்று சுவாமியை வணங்கி தேனெய்பு ரிந்தென்றெடுத்துத் திருப்பதிகம் பாடியருளினர்.

திருக்கச்சியனேகதங்காபதம்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

தேனெய்புரிந்துழல்செஞசடையெம்பெருமானதிடந்திகழுங்கணையக்
கோனெயெரித்தெரியாடியிடங்குலவானதிடங்குறையாமறையா
மானெயிடதததோர்கையனிடம்மதமாறாபடபொழியும்மலிபோல்
யானையுரிததபிரானதிடங்கலிக்கச்சியனேகதங்காபதமே.

வீடுபெறப்பலஞழிகினின்றுநீனைக்குமிடம்மினீருமிடம்
பீடுபெறப்பெரியோர்திடங்கொண்டுமேவினர்தங்களைக்காக்குமிடம்
பாடுமிடத்தடியான்புகழுரனுரைத்தவிம்மாலைகள்பத்தும்வல்லார்,
கூடுமிடஞசிவலோகனிடங்கிலிக்கச்சியனேகதங்காபதமே.

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திசுவாமிகள் காபதேசுரரைப் பாடி யங்கிருந்து பல திருப்பதிகளையும் தரிசிக்கும்விருப்பால் சென்று திருப்பனங்காட்டூர் வந்து தன் பதாதை யழுக்கும் அருமருந்தை வணங்கி, விடையின்மேல் வருவானென வெழுத்துத் திருப்பதிகம் பாடியருளினர்.

திருவன்பார்த்தான்பனங்காட்டூர்-பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

விடையின்மேல்வருவானேவேதத்தின்பொருளானே
யடையிலன்புடையானேயாவர்க்குமறியொண்ணு
மடையில்வாளைகளபாயுஞ்வனபார்த்தான்பனங்காட்டூர்ச்
சடையிற்கங்கைதரித்தானேச்சாராதார்சார்வென்னே.

பாரூரும்பனங்காட்டூர்ப்பவள்ளத்தின்படியானைச்
சீரூருந்திருவாரூர்ச்சிவன்போசென்னியில்வைத்த
வாரூரனடித்தொண்டன்னடியன்சொல்லடிநாய்சொல்
லூரூரனைசெய்வாருயர்வானத்துயர்வாரே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின் திருமாற்பேறு திருவல்லம் முதலிய ஸ்தலங்களுக்குப் போய் வணங்கிக்கொண்டு, திருக்காளத்திமலையை அடைந்து, அதனைப் பிரதக்ஷிணஞ்செய்து நமஸ்கரித்து மேலே ஏறி, காளத்தியப்பர் சந்நிதானத்திற்சென்று, அவரை வணங்கி, மகமகிழ்ந்து துதித்து, சென்டாடும் விடையாய் என்றெடுத்துத் திருப்பதிகம்பாடியருளினர்.

திருக்காளத்தி-பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

செண்டாடும்விடையாய்சிவனேயென்செழுஞ்சுடரே
வண்டாடுங்குழலாருமைபாகமகிழ்ந்தவனே
கண்டார்காதலிக்குங்கணகாதனெங்காளத்தியா
யண்டாவுன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே.

காராரும்பொழில்சூழ்கணகாதனெங்காளத்தியுள்
ஆராவின்னமுதையணிநாவலாரூரன்சொன்ன
சீரூசெந்தமிழ்கள்செப்புவார்வினையாயினபோய்ப்
பேராவின்னுலகம்பெறுவார்பிழைப்பொன்றிலரே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு அவருக்கு வலப்பக்கத்தில்நிற்கின்றஅன்பிலே தமக்குவெறுப்பிலாத கண்ணப்பநாயனருடைய திருவடித் தாமரைகளைவணங்கி, கீழே இறங்கி, திருத்தொண்டர்களுடனே சிலநாள் அந்த ஸ்தலத்தில் இருந்தார். இருக்கும் நாட்களிலேஉத்தர பூமியில் இருக்கின்ற ஸ்ரீசைலம்திருக்கேதார மலே முதலாகிய சிவஸ்தலங்களை அங்கிருந்தே வணங்கி, அவைகளின்மேல் திருப்பதிகம் பாடியருளினர்.

ஸ்ரீபர்ப்பதம்-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

மானுமழையினமுமையினமுங்கலந்தெங்குந்
தாமேமிகமேய்ந்துதடஞ்சுனைநீர்களைப்பருகிப்
பூமாமரமுரிஞ்சிப்பொழிநீழலே சென்றுபுக்குத்
தேமாம்பொழிநீழற்றயில்ப்பர்ப்பதமலையே.

நல்லாரவர்பலர்வாழ்திருவயனவலூரான்
செல்லுந்நவரியசிவன்சீர்ப்பர்ப்பதமலையை
யல்லலவைதீரச்சொன்னதமிழ்மாலைகள்வல்லா
ரொல்லைச்செலவுயர்வானகமாண்டங்கிருப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கேதாரம்-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

வாழ்வாவதுமாயம்மிதமண்ணைவதுதிண்ணம்
பாழ்போவதுபிறவிக்கடல்பரிதோய்செய்தபழிதான்
ஊழாதறஞ்செய்ம்மின்றடங்கண்ணன்மலரோனுங்
கீழ்மேலுதநின்றுருத்திருக்கேதாரமெனீரே.

நாவின்மிசையாயன்னெடுதமிழ்ஞானசம்பந்தன்
யாவர்சிவனடியார்களுக்கடியானடித்தொண்டன்
தேவன்றிருக்கேதாரத்தையூண்ணுரைசெய்த
பாவின்றமிழ்வல்லார்பரலோகத்திருப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின் அவ்விடத்தைவிட்டு நீங்கி சமுத்திரதீரத்தில் இருக்கின்ற திருவொற்றியூரிற் சென்று திருப்பதிகம்பாடி, திரிகாலங்களிலும் சுவாமி தரிசனஞ்செய்துகொண்டு அங்கேயிருந்தார்.

திருஒற்றியூர்-பண் குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பாட்டுமபாடிப்பரவித்திரிவா,, ரீட்டும்வினைகடீர்ப்பார்கோயில்
காடுடங்கலமுந்திமிலுங்கரைக்கே,, யோட்டுநுதிரைவாயொற்றியூரே.

ஒற்றியூருமவும்பிறையும்,, பறறியூருமபவளச்சடையா
னெற்றியூர்மேலூரனுரைத்த,, கற்றபபாடக்கழியும்வினையே.

திருக்சிறறம்பலம்.

இதற்குமுன் கைலாசகிரியிலே சுந்தரமூர்த்திசுவாமிகள்மேல்ஆசை வைத்த சேடியர்கள் இருவரில் அவிர்திதையார் என்பவர் காயிறு என்னும் ஊரிலே ருருக்கும் வெளர்ளாறிற சிறந்தோங்கிய காயிறுகிழவர் என்பவருக் குப் புத்திரியாராய்த் திருவவதாரஞ்செய்து, ஏங்கிலியார் என்னும் பெய ரைப்பெறறு, உமாதேவியாருடை பதிருவழலிலே மிருக்க பத்தியுடைய வராய் இருந்தார். அவர் பெதும்பைப்பரவ மடைந்ததுகண்டு, தந்தையா ராகிய காயிறுகிழவர் தம்முடைய மனைவியாரைநோக்கி, நம்முடைய புத்தி ரி நம்முடைய வம்சத்தில் ஸ்திரீகளெல்லாரிலும் பார்க்க அதிகசௌந்தரிய மும் நற்குணமும் உடையவளாய் இருக்கிறாள். அவளுக்கு விவாகஞ் செய்து கொடுக்குங்காலமாயிற்று. இதற்கு என்னசெய்வோம், என்றுசொ லல, மனைவியார அவளுடைய சௌந்தரியதுதுக்கும குணத்துக்கும இசை ய ஒருபுருஷனைத்தெரிந்து விவாகஞ்செய்துகொடும் என்றார். அதைக்கேட் டுக்கொண்டிருந்த சங்கிலியார், இவர்கள் பேசும்வார்த்தை எனக்குப் பொ ருந்தும் வார்த்தையன்று. நானே நமதுகடவுளாகிய பரமசிவனுடையதிரு வருளைப்பெற்ற ஒருவருக்கு மனைவியாதற்கு உரியேன் இப்படியன்றி மற் றெப்படிவினையுமோ தெரியேன் என்று நினைந்து அச்சங்கொண்டு அழிவுற யங்கி மிகசசோகித்து நிலத்திலே விழுந்தார். சமீபத்தில் நின்ற தந்தையா ரும் தாயாரும் அதைக்கண்டு பதைபதைதது அவளை எடுத்து, ஏங்கியம னத்தை யுடையவர்களாகி, இவளுக்கு நிகழ்ந்ததுயாதோ என்று, பயந்து, தாங்கிப் பனிநீர் தெளித்துத்தடவி அவருக்குச் சோகம்நீங்கியபின், அவ ளைப்பார்த்து மகளே! உனக்கு நிகழ்ந்ததுயாது சொல்என்று கேட்க, சங் கிலியார், இப்பொழுது என்னைக்குறித்து நீங்கள்பேசியது எனக்கு இசை யாதுகானே பரமசிவனது திருவருளைப்பெற்ற ஒருவருக்குமனைவியாதற்கு உரியேன். நான் இனிமேல் திருவொற்றியூரை அடைந்து சிவனது திருவ ருளிற்செல்லுவேன் என்றார். அதைக்கேட்டதந்தையாரும் திருவருமசோ கமும் அச்சமும் அதிசயமும் உடையவர்களாகி அந்தச்சங்கிலியார் சொல் லியவார்த்தையை மறைத்து ஒழுகினார்கள். ஒழுகும்காட்களில், அவர்களு டைய குலத்துக்குஒப்பாகிய குலத்தில் உள்ள ஒருவன், நிகழ்ந்த அந்தச்

சங்கிலியை அறியாதவனுகி, சங்கிலியார்மேல் விருப்பங்கொண்டுஅவருடைய தந்தையாரிடத்திலே கலியாணம் பேசுமபொருட்டுச் சிலரை அனுப்பினன். அனுப்பப்பட்ட அவர்கள்அத்தந்தையாரிடத்திற சென்றுபேச, அது கேட்டுத் தந்தையார நிகழ்ந்த சங்கதியைச் சொல்லுதல் தருதியன்று என்று நினைத்து, வேறோர் உபாயத்தினுல் அனுப்பிவிட்டார். அவர்கள் திரும்பிப்போய்ச் சேர்ந்தவுடனே,அவாகளை அனுப்பினவன அவாகளோடு இறந்து போயினன். அதைச் சங்கிலியாருடைய தந்தைதாயார கேள்வியுற்று மனமயங்கி, உய்யவேண்டும் என்கின்ற நினைவுடையவர்கள் சங்கிலியார பட்சத்திலே பேசத்தகாத வார்த்தையைப் பேசார்கள் எனபதை உலகம் அறியும்படிசெய்த திருவருளைக்கண்டு, அதனை யாவாக்கும் உள்ளபடிசொல்லி மிகப்பயந்து, இனி நாங்கள் இவரெண்ணதநின்படியே இவரைச் சிவபுண்ணியஞசெய்துகொண்டு இருக்கும்பொருட்டுத் திருவொற்றியூரிலே கொண்டுபோய் விடவேண்டுமெனறு துணிந்து, தங்கள் ஞாதிகளோடும் சங்கிலியாரைப பார்த்து, நீதிருவொற்றியூரை அடைதுகனனிமாடத்தில இருந்து பரமசிவனுடைய திருவருளே முன்னிட்டுத தவஞசெய்யும் என்றுசொல்லி, மிகுந்த செல்வத்தோடும் அவரைத் திருவொற்றியூருக்குக் கொண்டுபோய், கோயிலிலே பிரவேசித்து, சுவாமியை வணங்கிகொணடு சமீபத்திலே ஒரு கன்னிமாடஞசெய்வித்து அதிலே அவரை இருத்தி, அவருக்கு வேண்டும் திரவியங்களையும் அமைத்து, அவரை வணங்கிநின்று, நீர் இந்தக்கன்னிமாடத்திலேபரமசிவனுக்குத் திருத்தொணடு செய்துகொண்டு இரும் என்றுசொல்லி, அவரைப்பிரிதலினுலே இரண்டு கண்ணினின்றும் சோகபாஷ்பஞசொரிய, அனுமதிபெறறுக்கொண்டு, தங்கள் ஊருக்குதிரும்பினிட்டார்கள். சங்கிலியார அநதக கன்னிமாடதில் இருநது, தினக்தோறும திரிகாலங்களினும் கோயிலிலேபோய், சுவாமி தரிசனஞசெய்து பூக்கடமண்டபதிலே நிறைடிருக்கின்ற ஜலிடத்திற போயிருந்து, புஷ்பமாலைகடி சுவாமிக்குச சாத்தமபடி கொடுத்தகொணடு வருவார்.

இப்படி நிகழுங்காலத்திலே, ஒருநாள் சுந்தரமூர்த்திசுவாமிகள் கோயிலிலேபோய்ச் சுவாமி தரிசனஞ செயதுகொண்டு புறப்படடு, அடியாகள் செய்கின்ற பலவகைதிருத்தொணடைப் பார்ப்பவராகி, புஷ்பமணடபத்தினுளளே போனுர். போனபொழுது முன்போலத் நிறையைநீக்கிப் பரமசிவனுக்குச்சாத்தும்படி தாம்கடடிய பூமாலைகளைக கொடுத்துவிடடுமின் போல மறைந்த சங்கிலியாரை விதிகூடடக்கண்டு, அவர்மேல் ஆசைகொண்டு, புறத்திலேபோய, புஷ்பமண்டபதினுள்ளே ஒருபக்கத்திலே நிறைக்குள்ளேநின்று ஒருபெண் எனனுடைய மனசைக் கவர்துகொணடாள் அவள் யார? என்ரு. சமீபத்திலே நின்றவர்கள், அவர் பரமசிவனுக்கு விருப்பத்தையோடு திருத்தொண்டு செயகின்ற கன்னிகையாகிய சங்கிலியாரென்ஸ

மூர்கள். அதைக்கேட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள் கோயிலினுள்ளேபோய் சுவாமியை வணங்கி நின்று, சங்கிலியாரைத்தமக்குத் தந்தருளும்படிபிரார்த்தித்துக்கொண்டு கோயிலின் புறத்திலேபோய் ஒரிடத்திலேயிருக்கருரியன்அஸ்தமயனமாயிற்று, அப்பொழுது பரமசிவன் சுந்தரமூர்த்திசுவாமிகளிடத்திலேபோய், இவ்வுலகத்தில் உள்ளவர்கள் யாவராலுஞ் செய்யப்படுதல் கூடாத பெருந்தவத்தைச் செய்கின்ற உத்தமியாகிய சங்கிலியை உனக்குத்தருவோம். நீகொண்ட கவலையை ஒழிஎன்று திருவாய்மலர்ந்தருளி,அத்தியாமத்திலே கன்னிமாடத்திலே நித்திரைசெய்கின்ற சங்கிலியாருக்குச் சொப்பனத்திலே தோன்றினர். தோன்றியபொழுது, சங்கிலியார் பரவசமாய் விழுந்து நமஸ்கரித்து எழுந்துநின்று சுவாமி! அடியேன் உய்யும்படி தேவரீர் அடியேனிடத்திலே எழுந்தருளி வரும்பொருட்டுப பூர்வசன்மத்திலே என்னதவஞ செய்தேன், என்றுசொல்ல, பரமசிவன் சங்கிலியே ! நம்மேலே மிகுந்த பத்தியுடையவனும், திருவெண்ணெய் நல்லூரிலே சமஸ்தரும் அறியும்படி நம்மாலே தடுத்தாட கொள்ளபபட்டவனும், நமக்குத் தோழனும் ஆகிய சுந்தரன் தனக்கு மனைவியாக உனைத் தரும்பொருட்டு எனனைப் பிரார்த்தித்தான் நீமகிழ்ச்சியோடும் அதற்குஉடன்படு என்று சொல்லியருளினர்.அதற்குச் சங்கிலியார் சுவாமீ!அடியேன்தேவரீருடைய ஆஞ்ஞையைத் தலைமேற்கொண்டேன். தேவரீர் சொல்லியருளிய நாயனுருக்கே மனைவியாதற்கு உரியேன். ஆயின், அவர் திருவாரூரினிடத்தேமிகுந்தசந்தோஷத்தோடு வசிக்கினறவர் எனபதை தேவரீர் திருவுளம்கொண்டருளும் என்றார். அதுகேட்ட கடவுள், பெண்ணே அந்தச்சுந்தரன் உன்னைப்பிரிந்துபோகேன் என்று ஒருசபதம் செய்துதருவான் என்றுசொல்லியருளி, சுந்தரமூர்த்தி சுவாமிகளிடத்திறசெனறு,நாமசங்கிலியிடத்திலேபோய்உன்னெண்ணத்தைத தெரிவித்தோம். நான்உன்னைப்பிரிந்துசெல்லேன்என்று நீ அவளுக்குச் சபதஞசெய்து கொடுத்தால் அவள உடன்படுவாள். இனி உனக்கு நாம் எனனசெய்யவேணடும் எனறு அருளிச்செய்ய, சுந்தரமூர்த்திசுவாமிகள் இக்கட வுளுடைய பிறதலங்களையும் சென்று வணங்கி நமபுகின்ற அடியேனுக்கு இதுவிலக்காகும எனறுநினைத்து, அவரை வணங்கி சுவாமீ சங்கிலிக்கு நான் உன்னைப்பிரியேன் என்று சபதஞசெய்து கொடுக்குமபொருட்டு அடியேன் அவளோடு தேவரீருடைய ஆலயத்துக்குவந்தால், அப்பொழுது தேவரீர் அவவாலயத்தை விட்டுத் திருமகிழின்கீழ் இருந்தருளவேண்டும் என்று பிரார்த்தித்தார். அதற்குக்கடவுள் இசைந்தருளி, சங்கிலியாரிடத்திலே முன்போலபோய், பெணணே! சுந்தரன் உனக்குச் சபதஞ் செய்து தருதற்கு உடன்படடிருக்கிறான். அவன நம்முடைய ஆலயத்திலே சபதஞசெய்து தருதற்குவந்தால், நீ அதற்கு உடன்படாமல் மகிழின்கீழே சபதஞசெய்து தரும்படிகேள் என்றுசொல்லி மறைந்

தருளினார். சங்கிலியார் விழித்தெழுந்து அதிசயித்து, அவ்விரவிலே பரம சிவனுடைய திருவருளே நினைந்துநினைந்து நித்திரை செய்யாதவராகி, சமீ பத்திலே நித்திரைசெய்கின்ற தம்முடைய சேடியர்களே எழுப்பி, தமக்கு க்கனவிலே பரமசிவன் அருளிச்செய்த எல்லாவற்றையும் அவர்களுக்குத் தெரிவிக்க, அவர்கள் அச்சம் அதிசயம் ஆனந்தம் மூன்றும் அடைந்தசங்கி லியாரை வணங்கினார்கள். திருப்பள்ளி எழுச்சிக்குப் புஷ்பம்தொடுக்கும் பொழுது ஆனமைகண்டு, சங்கிலியார்சேடியர்களோடு கோயிலுக்குச்செல ல, அவருக்குச் சபதஞசெய்து கொடுக்கும்பொருட்டு, அதற்குமுன் அவ் விடத்தில் வந்து அவருடைய வரவை எதிர் பார்த்துக்கொண்டு நின்ற சுந்தரமூர்த்திசுவாமிகள் தமக்கு எதிரேவந்த அவர் சமீபத்திற்சென்று, தம க்குப் பரமசிவன் அருளிசெய்ததைச் சொன்னார். அதற்குச் சங்கிலியார் எதிர்வார்த்தை ஒன்றும் சொல்லாமல் நாணங்கொண்டு சேடியர்களோடும் கோயிலினுள்ளே புகுந்தார். சுந்தரமூர்த்திசுவாமிகள் அவர் பின்னேபோய் பெண்ணே ! நான் உம்மைப்பிரியேன் என்று சபதஞசெய்யும்பொருட்டுச் சுவாமிசக்நிதானத்துக்கு வாரும்என்றுசொல்ல, சங்கிலியார்கண்டகனவை க் கேட்டறிந்த சேடியர்கள் சுவாமீ இதன்பொருட்டுத் தேவரீர் சிவசந்நிதா னத்திலே சபதஞசெய்வது தகாது என்றார்கள். அப்பொழுது சுந்தரமூர்த் தி சுவாமிகள் பரமசிவனுடைய செய்கையை அறியாமல்,பெண்களே நான் வேறெங்கே சபதஞசெய்து தரவேண்டும் என்றுகேட்க, சேடியர்கள் மகி ழின்கீழே சபதஞ செய்துகொடும் என்றார்கள். அதைக்கேட்ட நாயனார் ம னம்மருண்டு, இவர்களை சொல்லியதை மறுக்கில், விவாகந் தவழினுந் தவ றும்-ஆதலால் இதற்கு உடன்படவேண்டும் என்று துணிந்து அப்படியே செய்யலாம், வாருங்கள என்றுசொல்லி, அவர்களோடு மகிழின கீழேபோ ய்ச்சேர்ந்து சங்கிலியார் காணுமபடி அந்த மகிழை மூன்றுதரம் வலஞ்செ ய்து, உன்னை நான்பிரியேன் என்று சபதஞ்செய்து கொடுத்தார். அதுகண் டு சங்கிலியார் மனங்கலங்கி, கடவுளுடைய ஆஞஞையினாலே பாவியேன இதைக் கண்டேனே என்று துக்கித்துக்கொண்டு ஒரு பக்கத்திலே மறைந் து நின்றார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் சபத முடித்தபின், ஆலயத்தினுள் ளேபோய்க் கடவுளே வணங்கி ஸ்தோத்திரம செய்துகொண்டு திரும்பிவிட் டார். அதற்குப் பின்,சங்கிலியார் புஷ்ப மண்டபத்திலேபோய்தம்முடை யபணியை முடித்து, பரமசிவன தம்க்கு அருளிச்செய்ததை நினைந்து, அவ னை வணங்கிக்கொண்டு விடியும்பொழுது கன்னிமாடத்துக்குத் திரும்பிவி ட்டார். அவ்விரவிற்றானே பரமசிவன் திருவொற்றியூரில் இருக்கின்ற தம் முடைய தொண்டர்களுக்குச் சொப்பனத்திலேதோன்றி, தம்முடையஅடி யானுகியசுந்தரனுக்குச் சங்கிலியென்னும் கன்னிகையை விவாகஞ்செய்து கொடுங்கள் என்று ஆஞ்ஞாபித்து மறைந்தருளினார். அவர்கள் அவ்வாஞ்

கஞ்சியத் தலைமேற்கொண்டு, மற்றநாளிலே அவ்வூரில் இருக்கின்றசமஸ்த சனங்களோடுங்கூடி மிகுந்த மகிழ்ச்சியோடும் மகா அலங்காரத்தோடும் சங்கிலியாரைச் சுந்தரமூர்த்திக்கு விவாகஞ்செய்து கொடுத்தார்கள். விவாகஞ்செய்த சுந்தரமூர்த்திசுவாமிகள் சங்கிலியாரோடுகூடி அவ்வூரிலேவாழ்ந்திருந்தார். இருக்கும்காலிலே ஒருநாள் திருவாரூரிலிருக்கின்ற வீதிவிடங்கப்பெருமானுடைய வசந்தோற்சவகாலம்சமீபித்ததை அறிந்து, வன்மீகநாதரை இவ்வளவுகாலமும் மறந்திருந்தேனே என்று தக்கித்து, அவாமேலே திருப்பதிகம்பாடியருளினர்.

திருவாரூர்-பண்-பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

பத்திமையுமடிமையையுங்கைவிடுவானபாவியேன்
பொத்தினோயதுவிதனைப்பொருளதிதன்போய்த்தொழுவேன்
முத்தினைமாமணிதனைவயிரத்தைமூர்க்கனேன்
எத்தனோள்பிரிந்திருக்கேனெனைஞரிறவனையே.

பேரூருமதகரியினுரியானபெரியவர்தஞ்
சீரூருந்திருவாரூர்ச்சிவனடியேதிறம்விரும்பி
யாரூரனடிக்தொண்டனடியனசொலகலிடத்தில்
ஆரூரனிவைவல்லாருலகவர்க்குமேலாரே.

திருச்சிற்றம்பலம்

பினனெருநாளிலே அவனை மிகநினைந்து, திருவாரூருக்குப் போகக்கருதி, ஆலயத்திலே புகுந்து, சுவாமி தரிசனஞ்செய்துகொண்டு, திருவொற்றியூரை நீங்கினர். நீங்கியபொழுது சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு அவர் சபதந தவறினமையால் இரண்டு கண்களும் மறைந்தன, அப்பொழுது நாயனர் திகைத்துநெடிதுயிர்த்து, சபதந்தவறினமையால் எனக்கிது நிகழ்ந்தது என்று நினைந்து, இந்தக்கொடுந்துயரத்தை நீக்கும்பொருட்டு நமது கடவுளைப்பாடுவேன் என்று துணிந்து அழுக்குமெய்கொடென்றெடுத்துத் திருப்பதிகம்பாடியருளினர்.

திருவொற்றியூர்-பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்

அழுக்குமெய்கொடின்றிருவடியடைந்தேனதுவுநான்படப்பாதொன்றுனைப்
பிழுக்கைவாரியுயபால்கொள்வரடிகேள்பிழைப்பனகிலுந்திருவடிபபிழையேன்
வழுக்கிவீழினுந்திருப்பெயரல்லால்மற்றுநானறியேன்மறுமாறறம்
ஒழுக்கவெண்கணுக்கொருமருந்தையாயொற்றியூரெனுமூருறைவானே.

ஓதம்வந்துலவுங்கரைதன்மேலொற்றியூருறைசெல்வனேகாரு
ஞாலந்தான்பரவப்படுகின்றதான்மறையங்கமோடியகாவன
சீலந்தான்பெரிதும்மிகவல்லசிறுவன்வன்றொண்டனூரனுரைத்த
பாடல்பத்திவைவல்லவர்தாம்போயபபரகதிநிண்ணருணுவர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

திருப்பதிகம்பாடியும், கடவுள் அத்தியாத்தை நீக்கினரில்லை. ஆயினும் திருவாரூருக்குச செல்லவேண்டுமென்கிற பேராவினல் சிலர் முன்னே வழிதாடிக்கொண்டு செல்ல, திருமுல்லைவாயிலுக்குப்போய, சுவாமியைவணங்கித் திருப்பதிகம் பாடியருளினர்.

திருவடமுல்லைவாயில்-பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

விண்பணிந்தேத்தும்வேதியர்மாதர்வெருவிடவேழமொன்றுரித்தாய்
சென்பகச்சோலைசூழுதிருமுல்லைவாயிலாய்தேவர்தமமரசே
தணபொழிலொறறிமாகருடையாய்சங்கிலிக்காகவென்கண்கொண்ட
பண்பகின்னடியேன்படுதுயர்கடீயாய்பாசுபதாபரஞசுடரே.

வினைதருமலர்மேலயனெமாலும்வெருவிடநீண்டவெம்மானைத்
தினைதருபுனல்சூழுதிருமுல்லைவாயிறசெலவனேகாவலாரூர
னைதருமாலேபோனைஞசினெ டைஞசுமுளகுளிர்கேதத்தவல்லார்க
ணைதிமைமூப்புடலியுமினறிணணுவாவிண்ணவாக்கைசே.

திருசசிற்றம்பலம.

அதன்பின்பு தொண்டரானுக்கு கிருபைசெய்தருளும் பழமையான புகழையுடைய திருமுல்லைவாயிலின் கண வாழாநின்ற பரமசிவத்தையான கொண்ட கொடிய துயரத்தை நீக்குவாயெனத் துதித்து சுட்டியகாதலின் படி வழிகொண்டு வருபவராகிய சீர்காழிமூத்தி சுவாமிகள் சோலைகள்சூழ்ந்து மாடமாளிகைகள்நிறைந்த வெண்பாக்கத்தையடைந்து திருப்பதிகம் பாடியருளினர்.

திருவெண்பாக்கம்-பண் - சிகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

மான்றிகழுஞ்சங்கிலியைத்தந்துவருபயன்களெல்லாந்
தோன்றவருள்செய்தளித்தாயென்றுரைக்கவுலகமெல்லா
மீன்றவனேவெண்கோயிலீங்கிருந்தாயோவென்ன
வூன்றுவதோர்கோலருளியுளோம்போகென்றனே.

பிழையுளனபொறுத்திடுவதென்றடியேன்பிழைத்தக்காற
பழியதனைப்பாராதேபடலமென்கண்மறைப்பித்தாய்
குழைவிரவுவடிகாதாகோயிலுளாயேயென்ன
வுழையுடையானுள்ளிருந்துளோம்போகென்றனே.

வராருமபொழினிலவுவெண்பாக்கமிடங்கொண்ட
காராருமிடற்றனேக்காதலித்திடடன்பினெடுஞ்
சீராருந்திருவாரூர்ச்சிவன்போய்சென்னியில்வைத்த
வாரூரன்றமிழ்வல்லார்க்கடையாவல்வினைதானே.

திருச்சிற்றம்பலம்.

அங்ஙனம் ஊன்றுகோல்பெற்று, பழையனூரிலேபோய், காரைக்கா லம்மையார் தலையாலே பிரதக்ஷிணஞ் செய்த திருவாலங்காடுக்குச் சமீ பத்திலே நின்று அதனை வணங்கித் திருப்பதிகம் பாடியருளினர்.

திருவாலங்காடு-பண்-பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

மூத்தாமுத்திதாவல்லமுகிழ்மென்முலையாளுமைபங்கா
சித்தாசித்தித்திறங்காடுளசிவனேதவர்சிங்கமே
பத்தாபத்தர்பலர்போற்றுமபரமாபழையனூமேய
அத்தாவாலங்காடாவுன்னடியார்க்கடியேனுவேனே.

பத்தர்சித்தர்பலரேத்தும்பரமன்பழையனூர்மேய
அத்தனாலங்காடன்றனடிமைத்திறமேயன்பாகி
சித்தர்சித்தம்வைத்தப்புகழ்ச்சிறுவனூரனெண்டமிழ்கள்
பத்தும்பாடியாடுவார்பரமனடியேபணிவாரே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின்பு திருவூறலிற்சென்று வணங்கி காஞ்சிபுரத்தை அடைந்தார். அங்கே முன் காமக்கோட்டத்திற சென்று தருமத்தை வளர்க்கின்ற பெருங்கருணையையுடைய உலகமாதாவாகிய காமாட்சியம்மையை வணங்கித் துதித்துக்கொண்டு, திருவேகம்பத்தை அடைந்து, ஏகாம்பரநாத சுவாமியை வணங்கி, ஆதிகாலத்திலே திருப்பாற்கடலினின்று எழுந்து தேவர்களுவருத்தத்தொடங்கிய ஆலகாலவிஷத்தைத் திருமிடற்றிலடைத்துஅவர்கள் அழுதண்ண அருள்செய்த கருணைநிதியே ! சிறியேன்செய்த பிழையைப்பொறுத்துச் சிறியேனுக்குத் தேவீசாத்தரீசிக்கும்பொருட்டுக்கண்ணுக் தந்தருளுமென்று பிரார்த்தித்தார். அப்பொழுதுகடவுள் இடக்கண்ணை மாத்திரம் கொடுத்து தமது திருக்கோலத்தைக்காட்ட, சுந்தரமூர்த்தி சுவாமிகள் கண்டு பரவசமாகி அடியற்றமரம்போல வீழ்ந்து எழுந்து திருப்பதிகம் பாடியருளினார்.

திருவேகம்பம்-பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

ஆலந்தானுகந்தமுதுசெய்தானையாதியையமரர்தொழுதேத்துஞ்
சீலந்தான்பெரிதும்முடையனீசனிடப்பாரவாசிக்கையுளானை
யேலவாகுழலாளுமைகங்கையென்றுமேத்திவழிபடப்பெற்ற
காலகாலனைக்கம்பனெம்மானைக்காணக்கண்ணடியேனும்பெற்றவாறே.

பெற்றமேறுகந்தேறவல்லானைப்பெரியவெம்பெருமானென்றெப்போதுங்
கற்றவர்பரவப்படுவானைக்காணக்கண்ணடியேன்பெற்றதென்று
கொற்றவன்கம்பன்கூத்தனெம்மானைக்குளிர்பொழிற்றிருநாவலாரூ
னற்றமிழ்விரவியிசைத்தும்வல்லார்நன்னெறியுலகெய்துவர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின்பு அந்த ஸ்தலத்திலே சிலநாளிருந்து பின் அந்தஸ்தலத்தை நீங்கி வழியிலே "தென்றிருவாரூர்புக் கெந்தைபிரானையென்றுகொலெய்துவதே" என்னுந் திருப்பதிகத்தைப பாடியருளினார்.

திருவாரூர் - பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

அந்தியுண்பகலுமஞ்சுபாதஞ்சொல்லி
முந்தியெழும்பழையவல்வினைமூடாமுன்
சிந்தைபராமரியாத்தென்றிருவாரூர்புக்
கெந்தைபிரானையென்றுகொலெய்துவதே.

மின்னெடுஞ்செஞ்சடையான்மேவியவாரூரை
நன்னெடுங்காதன்மையானுவலர்கோனூரன்
பன்னெடுஞ்சொன்மலர்கொண்டிட்டனபத்தும்வல்லார்
பொன்னுடைவிண்ணுலககண்ணுவார்புண்ணியரே.

திருச்சிற்றம்பலம்.

அங்கிருந்து தொண்டமண்டலத்தைக் கடந்து திருவரமாத்தூரிற் சென்று பதிகம்பாடி, திருவரத்துறையை வணங்கி, கல்வாயகிலென்ன வெடுத்துத் திருப்பதிகம் பாடியருளினர்.

திருநெல்வாயில் திரு அரத்துறை - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

கல்வாயகிலுங்கதிர்மாமணியுங்கலந்துந்திவருநிவவின்கரைமே
னெல்வாயிலரத்துறைநீடுறையுந்நிலவெண்மதிசூடியநின்மலனே
கல்வாயில்செய்தார்கடந்தாருடதாகாதைத்தாரிதந்தாரென்றுகானிலத்திற்
சொல்வாய்க்கழிக்கின்றதறிந்தடியேன்றொடர்ந்தேனுய்யப்போவதோர்சூழ
[ல்சொல்லே.

நீரூருகெடுவயல்சூழ்புறவினெல்வாயிலரத்துறைநின்மலனைத்
தேரூர்நெடுவீதிநன்மாடமலிதென்னவலர்கோனடிந்தொண்டுபண்ணி
யாரூரனுரைத்தனநற்றமிழினமிருமாலுயோர்பத்திவைகற்றுவல்லார்
காரூரருளிவண்டமையாளமன்னரவராகியோர்விண்முழுதாள்பவரே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின்பு அங்கிருந்து புறப்பட்டு, பலதிருப்பதிகளையும் அடைந்து, கடவுளுடைய திருவடிகளே வணங்கித் துதித்துச்சோழமண்டலத்தை யடைந்து சர்ப்பபரணராகிய கடவுள் வசிக்கும் திருவாவடுதுறையிற்சோர்ந்து அப்பதியிலுள்ளார் எதிர்கொள்ள ஆலயத்தை வலம்வந்து உள்ளேபுகுந்து ஒரு கண்ணில்லாமையைக் குறித்து மகங்கவன்று இங்கெனக்காருறவென்னத் திருப்பதிகம் பாடியருளினர்.

திருவாவடுதுறை - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

கங்கைவாழ்சடையாய்கணநாதாகாலகாலனேகாமனுடல்
பொங்குமாகடல்விடமிடற்றுனேபூதகாதனேபுண்ணியாபுனிதா
செங்கணமால்விடையாய்தெளிதேனேதீர்த்தனேதிருவாவடுதுறையு
ளங்கணவனேயஞ்சலென்றருளாயாரொன்க்குறவம்மார்களேமே.

வெண்டலைப்பிறைகொன்றையுமரவும்விரிமத்தமும்விரவிமுன்முடித்த
விண்டைமாமலர்ச்செஞ்சடையாயேயிசைந்திருவாவடுதுறையு
ளண்டவாணனேச்சிங்கடியப்பனனுக்கவன்றெண்டனுர்வத்தாளுனைக்க
தண்டமிழ்மலர்ப்பத்தும்வல்லார்கள்சாதலும்பிறப்பும்மையப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

அங்கிருந்த திருத்துருத்திக்குப்போய்ச் சுவாமியை வணங்கி அடியேன்மேலே பொருந்தியகோயிங்க, அருள்செய்யவேண்டும் என்று பிரார்த்தித்தார். அரன்குடவுள் நீ நிக்கோயிலுக்கு வடபுறத்தில் இருக்கின்ற குளத்திலே ஸ்நானம்பண்ணுவாயாகில் நிந்த நோய் நீங்கிவிடும் என்று திருவாய்மலர்ந்தருளினர். அதுகேட்டுச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் கைதொழுது புறப்பட்டு அந்நதீர்த்தக்கை அடைந்து,சுவாமியைவணங்கிக்கொண்டு, அவருடைய திருவடிநிழலே அன்போடு பதிந்த இருதயத்துடனே அத்தீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணினர். உடனே அவருடைய திருமேனிநோய் நீங்கிப் பிரகாசம் அடைந்தது. அவர்கண்டவாகள் அதிசயிக்கும்படி கரையேறி வந்திரந்தரித்துக்கொண்டு கோயிலிலேபோய், சுவாமியைவணங்கித் திருப்பதிகம் பாடியருளினர்.

திருத்துருத்தியுந் திருவேள்விக்குடியும்- பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மின்னுமாமேகங்களொழிந்நிழாதருவிவெடிகடடகைபொகெ தினைகொணாநதெ
மன்னுமாங்காவிரியகன்கரையுறைவாரடியினைதொழுதெழுமனந்தாமடியார [ற்று
சொன்னவாற்றிவாதருத்திபாவேள்விக்குடி புளாடிகளேரத்திசடியனேனுயே
னென்னைகான்மதக்குமீறெமபெருமானெயெனனுடம்பிம்பிணிபிடர்கெடுத்தானே.

மங்கையோர்கூறுகந்தேறுகந்தெறிமாற்றலாதிரிபுரம்நிறெழச்செறற
வங்கையான்கழலடியனறிமற்றறியானடியவர்க்கடியவன்றெழுவனுரீன்
கங்கையார்காவிரித்துருத்தியாவேள்விக்குடியுளாரடிகளேச்சேர்த்தியபாட
றங்கையாற்றெழுதுதங்காவின்மேற்கொள்வார்தவநெறிச்சென்றமருகமாள்பவரே.

திருச்சிற்றம்பலம்.

அத்திருப்பதியை நீங்கி திருவாரூரிற் சென்று மூலக்கோயிலத்திலே தூவாயரை வணங்கும்படி அடியார்களோடு கோயிலிலே பிரவேசித்துவணங்கிக் கணதந்தருளும்படி திருப்பதிகம் பாடியருளினார்.

திருவாரூர்ப் பரவையுண்மண்டளி-பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

தூவாயாதொண்டுசெய்வார்படுதக்கங்கள்
காவாயேகண்டுகொண்டாரைவர்க்காகிலு
நாவாயாலுன்னையேநல்லனசொல்லுவேற
காவாவெனபரவையுண்மண்டளியம்மானே.

கரந்தையும்வன்னியுமதகுமுங்கூவிளமும்
பரந்தசிர்ப்பரவையுண்மண்டளியம்மானே
நிரம்பியவூரனுளாத்தனபத்தினை
விரும்புவார்மேலையார்மேலையார்மேலாரே.

திருச்சிற்றம்பலம்.

வெளியேபோய் ஒரிடத்தில் இருந்து, பின் அடியாகளோடு திருமூலத்தானத்திலே திருவொத்தாயாமத்திலே சுவாமி தரிசனஞ செய்வதற்கு எழுந்து வழிக்கொண்டு வழியிலே அடியார்கள் தமக்கெதிரோவர அவர்கள் முகத்தைபப்பார்த்து, கைக்கிளையினலே ஒரு திருப்பதிகம் பாடியருளினார்.

திருவாரூர்-பண்-கொலலி.

திருச்சிற்றம்பலம்

குருகுபாயகொழுல்கரும் புகணெரிநகசா
பருகுபாயும்வயலந்தணரூரரைப்
பருகுமாமபனிநதெத்துமாறுநினை
துருகுமாறும்மவையுணாத்தவல்லீர்களே.

நித்தமாகநினைந்தாளமேதகுத்தொழும்
அத்தனம்பொறகழலடி களாரூரனை
சித்தம்வைத்தபுகழசிங்கடி யபபன்மெயப்
பத்தனூரன்சொன்னபாடுமினூர்தனே

திருச்சிற்றம்பலம்.

அதனபின்பு தேவாசிரிய மண்டபத்தின் முன் நமஸ்கரித்து, கோபுரத்தையும் வணங்கி, உளளே புகுந்து சுவாமி சநநிதானத்திலே போய்விழு

ந்து நமஸ்கரித்து எழுந்து நின்று, சுவாமியைத் தரிசனஞ்செய்தற்கு ஒரு கண் போதாமையால் அதிக துக்கங்கொண்டு, சுவாமீ ! அடியேனுக்கு வல க்கண்ணையுந்தந்து அடியேனை இத்துக்கசாகரத்தினின்றும் கரையேற்றியரு ளவேண்டும் என்று பிரார்த்தித்து, "மீளாவடிமையுமக்கேயாளாய்" என் னுந் திருப்பதிகம் பாடியருளினர்.

திருவாரூர்-பண்-செந்துருத்தி

திருச்சிற்றம்பலம்.

மீளாவடிமையுமக்கேயாளாய்ப்பிறரைவேண்டாதே
மூளாததீப்போலுள்ளேகனன்றுமுகத்தான்மிகவாடி
யாளாயி நுக்குமடியார்தங்களல்லல்சொன்னக்கால
வாளாங்கிருப்பீர்திருவாரூர்வாழ்துபோதீரே.

காரூர்கண்டத்தெண்டோணான்முக்கனலேகள்பலவாகி
யாரூர்த்திருமூலத்தானத்தேயடிப்பேரரூரன
பாரூரமியவெண்கணொடுநீரோபழிப்பட்டீர்
வாரூர்முலையாள்பாகங்கொண்டீர்வாழ்துபோதீரே.

திருச்சிற்றம்பலம்.

அப்பொழுது வண்மீக நாதர் திருவுளமிரங்கி, அவருக்கு வலக் கண் ணையுங் கொடுத்தருளினர். உடனே சுந்தரமூர்த்தி சுவாமிகள் பரவசமாய்ப் பலமுறைவீழ்ந்தும் எழுந்தும் மிகுந்த களிப்பினால் ஆடியும் பாடியும் இன்பசாகரத்தில் அமிழ்ந்தி, வண்மீக நாதருடைய திருக்கோலத்தை இர ண்டு கண்களினாலும் தரிசனஞ்செய்து வணங்கித் துதித்துக்கொண்டுபுறப் பட்டு, தேவாசிரிய மண்டபத்திலேபோய் அங்கிருந்தார்.

முன் சுந்தரமூர்த்திசுவாமிகள், கோயிலுக்குப் போம்போது, அவ ருடைய பரிசனங்களிற சிலர் பரவையார் வீட்டுக்குப்போக நினைத்து, அவ ர் வாயிலிலேபோய், அப்பரவையார தம்மைப் பிரிந்து சென்ற சுந்தரமூர்த் தி சுவாமிகள் திருவொற்றியூரிலே சங்கிலியாரை விவாகஞ்செய்துகொண் டிருந்த சங்கதியைக் கேள்வியுற்று அதிக துக்கமும் கோபமுங்கொண்டிருந் தமையால், உள்ளே போகப்பெறாமல், திரும்பி தேவாசிரிய மண்டபத்தி லிருந்த சுந்தரமூர்த்தி சுவாமியை அடைந்து, சுவாமீ பரவையார், தெவீர் திருவொற்றியூரிலே சங்கிலியாரை விவாகஞ்செய்த சமாசாரம முற்றும் கேள்வியுற்றமையால், இப்பொழுது அவர வீட்டுப்புறத்தும் செல்லப்பெ றாமல் திரும்பிவிட்டோம் என்றார்கள். அதைக்கேட்ட நாயனர் மனங்கலங்

கி, இனி இதற்கு என்னசெய்வோம் என்று ஆலோசித்து, லௌகீகவியலுயத் திலே வல்ல சில மனிதர்களை, பரவையார் கொண்டகோபத்தை நீக்கிக்கொ ண்டு வரும்பொருட்டு, அவரிடத்திற்கு அனுப்பினார். அனுப்பப்பட்டஅவர் கள் பரவையார்முன் சென்று, அவருகருப் பல நியாயங்களையும் எடுத்துச் சொல்லி சுந்தரமூர்த்தி சுவாமிகளோடு முன்போலக்கூடியி நக்கவேண்டும் என்று பிரார்த்தித்தார்கள். அதற்குப் பரவையார் திசையாதவராகி, கோப ம் அதிகரித்து, எனக்குக் குறைஞ்செய்த அவர்பக்கத்தில் இன்னும் இப்படி ப் பேசுவீர்களாகில், நான் பிராணத்தியாகம் பண்ணிப்போடுவேன் என்றார் அவர்கள் அதைக்கேட்டு மிகப்பயந்து, சுந்தரமூர்த்தி சுவாமிசளீடத்திற்சென் று, நிகழ்ந்த சங்கதியைத் தெரிவித்தார்கள் அதைக்கேட்ட நாயனர்மிகு ந்த துக்கசாகரத்தில் அமிழ்ந்தி, சமீபத்தில் இருந்தவர்கள் எல்லாரும் நித் நிரைசெய்யும்பொழுது, அத்தயாமத்திலே தனியேவருந்தி பரமசிவனுடை ய திருவடிகளைத் தியானித்து ஆன்டிராக்கள் செய்த கன்மங்களைத் தொ லைக்கும் பொருட்டு அவைகளின் பலங்களைப் புசிப்பித்த தருளுகின்ற கடவுளே, அடியேன் பூர்வத்திலே செய்த கர்மத்தினுலே அடியேனு க்குத் தேவீராலே கூட்டப்பட்ட பரவையினுடைய புலவியைத்தேவீ ரே இந்த அத்தயாமத்திலே எழுந்தருளிவந்து தீர்த்தருள வேண்டும் என்று பிரார்த்தித்தார். அப்பொழுது, தனுகரணங்களே யானென்றும் புவ னபோகங்களே எனதென்றும் அபிமானிக்கின்ற அகங்காரம் மமகாரங்களை ஒழித்து தம்மை உணர்ந்த தமது திருவருள் வழிநிற்கும் மெய்ஞ்ஞானிக ளுக்குப் பிரசாதத்துவமாத்திரம் புசிப்பித்து அவர்கள அது புசிக்கும்போது மனம் வாக்கு காயம் என்னும் நிகரணகளாற் செய்யும் செயல்கள் அவ ர்களுக்கு ஆகாமியமாய் பறந்து அவைகளைத்தருசெயலாகக்கொண்டருளு ம் பரமசிவனனவர், சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குப் பிரசாத்துவமுற்றும்புசி ப்பித்துத் தொலைப்பிக்கும்பொருட்டும் தாம் அப்படிச்செய்தல் அவன்அவ ள் அது முன்னிலையாயாம் ஆயினும், அம்முன்னிலையாப் அது செய்பவர் தாமே என்பது நம்மைனேர்க்கும் தெளிவுறப் புலப்படும்பொருட்டும், விஷ் ணுமூர்த்தியாலும் தேடிக் காணப்படாத அ நமைத் திருவடிகள் பூமியிலே தீண்டும்படி அக்காயனருக்கு வெளிப்பட எழுந்தருளிவந்தார். அதுகண்ட காயனர் எழுந்து, தாங்கரிய ஆனந்தமேலீட்டினுலே சரீரம்பூங்கஉரோ மஞ் சிலிர்க்க, இரண்டுகைகளும் சிரசின்மேல் தூக்கியவ, கடவுளுடைய திருவடியின்கீழ் விழுந்து, எழுந்து, ஸ்தோத்திரம் பண்ணிக்கொண்டு நின் றார். கடவுள் அவரைநோக்கி, உனக்கு நிகழ்ந்ததுயாது, என்று கேட்டரு ள, அவர் தேவீருடைய திருவருள்கூட்ட அடியேன் திருவொற்றியூரிலே சங்கிலியை விவாகஞ்செய்த சமாசாரமுழுதும் பரவையானவள் கேள்வியு ற்று அறிந்து தன்னிடத்திலே நான்வரில் தான் பிராணத்தியாகம்பண்ணுத ல் தவருதுஎன்று சொல்லிக்கொண்டு இருக்கிறுள். சிறியேன் தேவீருக்கு

அடியாளும் தேவரீர் சிறியேனுக்குத் தோழரும் ஆண்டவருமாயிருத்தல் மெய்யானால் சிறியேன் படுத்துன்பத்தைப் பார்த்துத் தேவரீரோ இவ்விரவில் பரவை வீட்டுக்குச்சென்று அவளுடைய புலவியைத் தீர்த்தருளல்வேண்டும் என்று விண்ணப்பஞ் செய்தார். அதைக்கேட்ட கடவுள், தோழனே! நான் இப்பொழுது உனக்கு ஒரு தூதனுப்பி பரவை வீட்டுக்குப் போகின்றேன். நீ உன் துன்பத்தை ஒழியென்று திருவாய் மலர்ந்தருளி, தேவர் மூனிவர் பூதங்கள் முதலாகிய சமஸ்தரும் ஸ்தோத்திரஞ் செய்துகொண்டுபுறத்திலே சூழும்படி, பரவையார் வீட்டைநோக்கி நடந்து, அவ்வீட்டுவாயிலை அடைந்து,தம்மோடு வந்த கணங்கள் புறத்திலே நிற்க,தாம் நீமக்குஅருச்சனை செய்கின்ற ஒரு ஆதிசைவர் வடிவங்கொண்டு உள்ளே தனியேசென்று கதவு பூட்டியிருத்தலால் அதருருமுன்னின்ற பரவையே! கதவைத்திறவென்று அழைத்தார்.நித்தினியின்றித்தகைதோடு பரவையார் அதைக்கேட்டு,தம்மை அழைத்தவர் சுவாமிக்கு அருச்சனைசெய்கின்ற ஆதிசைவரெனத்தனிற்தசுவாமிக்கு அருச்சனைசெய்யும் பெரியவர் இந்த அத்தயாமத்திலே இங்கேவந்தது யாதுகாரணம் பற்றியோ, என்று பயந்து,பயதாபத்தைத்துப்போய் கதவைத்திறந்து, அவராகண்டு, சுவாமீ தேவரீர் இப்பொழுது இங்கே எழுந்தருளிவந்த காரணம் யாது, என்றுகேட்டார். அதற்குக் கடவுள் நான்சொல்வதைநீமறாதுசெய்வாயாகில்,சொல்லுவென்றுசொல்ல,பரவையார்.நீர் அதைச்சொல்லும் அதுஎன்னுயிலுமாகில்,செய்வேன் என்றார்.கடவுள், சுந்தரமூர்த்தி இங்கே வருவதற்குநீஉடனபடல்வேண்டும்என்றுசொல்ல,பரவையார,உம்முடையபெருமைஎன்றுய் இருக்கின்றது என்னைப் பிரிந்துசென்று திருவொற்றியூரிலே சோத்து அங்கே சங்கிலியினுலே பிணிப்புண்டவருக்கு இங்கே ஒருசார்பு உண்டாகுமோ, என்றார். சுவாமி அதைக்கேட்டு, நீ உனக்குச் சுந்தரமூர்த்திசெய்த குற்றங்களை மனதிலே கொள்ளாமல் சோடம்நீங்கி அவரை இங்கே வருவிக்கும்பொருட்டு உன்னைநான் வேண்டிக்கொண்டேன். நீ மறுப்பது தகுதியல்ல, என்று அருளிச்செய்ய, பரவையார், நீர் இத்தகாரியத்தின் பொருட்டு இந்த வீட்டுக்கு வருதல் உம்முடைய பெருமைக்குத் தகுதியல்ல, அவர் இங்கேவருதற்கு நான் இசையமாட்டேன். நீர் போயவிடும் என்றார். அதைக்கேட்ட கடவுள் உள்ளே நகைத்துக்கொண்டு தம்முடைய திருவுருவத்தைப்பரவையாருக்குக் காட்டாமல், சுந்தரமூர்த்தியிடத்திற்குத் திரும்பிச்சென்றார்.சென்ற கடவுளைச் சுந்தரமூர்த்திசுவாமிகள மகிழ்ச்சியோடு எதிர்கொண்டு நமஸ்கரித்து, அவருடைய திருமுகத்திலே தோன்றிய சிரிப்பைக்கண்டு, அவருடைய திருவுள்ளக் கருத்தை அறியாமல், தாம் நினைத்த கருத்தை முடித்துவந்தனர் என்று துணிந்து, தேவரீர் அன்றைக்குச் சிறியேனை ஆட்கொண்டதற்கு இசைய இன்றைக்குப் பரவையுடைய கோபம் முழுதையும்தீர்த்துவந்தருளினீர் என்றார். கடவுள் அதைக்கேட்டு, உன்வேண்டுகோளின்

படி. நாம் பரவை வீட்டுக்குப்போய் அவளிடத்திலே பேசினோம். அவள் இசையவில்லை என்றார். உடனே நாயனார் நடுக்கங்கொண்டு வணங்கி தேவரீர் அருளிச்செய்ததை அடியாளாகிய பரவையாமறுப்பாள். தேவரீர் என்னுடைய அடிமைத் தன்மையை வேண்டுவதில்லையாகில், அன்றைக்கு என் ஊன்வலிய ஆட்கொண்டதேது கண்டுதுக்கத்தைக் கண்டீர். இன்றைக்கு நான் அவளிடத்திலே போவதற்கு அருள் செய்யீராகில், என்னுயிர்நீங்கிவிடும், என்று சொல்லிவிழுந்தார். அதுகண்டு கடவுள், நாம் இன்னும்பரவையிடத்திலேபோய் இப்போதே அவளிடத்திற் செல்லும்படி செய்குவோம் நீ துக்கிக்கவேண்டாம் என்று அருளிச்செய்து, கணங்களோடு பரவையார் வீட்டை அடைந்தார். அதற்குமுன், பரவையார், தம்மிடத்தில் வந்த ஆதிசைவர்போனபின்பு, அவனாதிசைவராய் வந்தவர் பரமசிவன்என்றெ பல அதிசயத்தே நாற்றத்தால அறிந்து பயங்கொண்டு ஐயோ கெட்டேன் எங்கள சுவாமிவாக்குக்கு எதிர்வாகுகச் சொல்லி மறுத்தேனே என்று புலம்பி, நித்திரைசெய்யாதவராகி, தம்முடைய தோழருக்காக அருச்சகர் வடிவங்கொண்டு வந்த கடவுளைப் பாவியேன் மதித்தேனில்லை என்று வாயிலே பார்த்துக்கொண்டிருந்தார், பரமசிவனுனவர் தாமாந்தன்மையை அறிதற்கு எறுமைகொலத்தாடும் தேவர் முனிவர் முதலியகிய சமஸ்தகணங்களும் சூழும்படி பரவையார் வீட்டினுள்ளோ பிரவேசித்தார். அதுகண்ட பரவையார் அதிசிக்கிரமாகஎழுந்துபோய்க் கடவுளுடையதிருவடியிலேவிழுந்து நமஸ்கரிக்க, கடவுள் அவளைநோக்கி பரவையே நாம் நந்தனை அனுப்பத்திருப்பவும் உன்னிடத்திலே வந்தோம் நீ இன்னும் முன்போல மருமல் புலவியினுல் வருந்துகின்ற அவன் உன்னிடத்திலே வருதற்கு உடன்படல் வேண்டுமென்றார்.

அதற்குப பரவையார் தேவரீர பிராமணவடிவங்கொண்டு முன் இங்கே எழுந்தருளிவந்தீர். பின் அனைமையாகிய இதத்திருக்கோலத்தோடு இப்பொழுது எழுந்தருளிவந்தீர். நான் பூர்வசன்மத்திலே செய்த தவப்பயன் இதுவோ என்றுசொல்லி வியக்க, பின்பு பிரமவிஷ்ணுக்களாலும் அறியப்படாத தேவரீர் அன்பர்பொருட்டு இரவிலே மாருமல் அங்கும்இங்கும திரிந்து எளியவராவீராகில், நியேன் இதற்கு உடன்படாமல் யாதுசெய்வேன் என்றார். கடவுள் அதைக்கேட்டு நன்றுசொன்னாய் என்று திருவாய் மலர்ந்தருளி, புறப்படும் சுந்தரமூர்த்தியிடத்திறபோனர். சுந்தரமூர்த்தி அவரைக்கண்டு எதிர்கொண்டு, நமஸ்கரித்து, சுவாமி யாது சொல்வாரோ என்று அறியாதவராகி, சுவாமி என்னுடைய உயிரைக்காவாமல் இடர்செய்கின்ற பரவையிடத்தில் நின்றும் என்ன உத்தரம் கொண்டுவந்தீர் என்று கேட்க, கடவுள், உன்மேலே பரவைகொண்ட கோபத்தைத் தணிவித்தோம் நீ இனி அவளிடத்திற்போகலாம் என்றார். அதுகேட்ட நாயனார், மன்னி

லே களிப்புடைத்து, சுவாமீ! போகமோக்ஷம் இரண்டையும் கொடுத்தரு ளுகின்றவர் தேவரீரே என்பதை யாவாக்கும் புலப்படுத்தினீர். இனி எனக் கு இடர் ஏது. என்றுசொல்லித் திருவடிகளிலேவிழுந்தார். உடனே பரமசி வனவர் மறைந்தருளினர். விழுந்தநாயனர் எழுந்து, பரமையார் வீட்டு க்குப்போகத் தொடங்கினர். அப்பொழுது அவரடைய பரிசனங்களெல் லாம் விழித்து எழுந்தன, நாயனர் அப்பரிசனங்கள் பக்கத்திற்போய், தேவ ர்கள் புஷ்பமாரிபொழிந்து நிற்க, சென்று பரமையார் வீட்டை அடை ந்தார். அதற்குமுன் மிருந்த விருப்பத்தினும் தம்முடைய வீடுமுழுவ தும் ஆலங்கரிப்பித்துத் தீபதூபங்களும் நிறைகுடமும் நிறைநெற் பொரி யாகளோடு வாயிலிலே வரவுபார்த்து நின்ற பரமையார் அங்கே எழுந்தரு ளிவந்த நாயனரைக்கண்டு மகாசந்தோஷங்கொண்டு அவரை நமஸ்கரிக்க, அவர் கையினாலே பரமையாரைப்பிடித்தெடுத்துக்கொண்டு, உள்ளேபோய்ச்சே ர்ந்தார். அவ்விருவரும் பரமசிவனுடைய திருவருளின் மகிமையைப்புகழ் ந்துகொண்டு முன்போல ஐக்கியமாய்க் கூடியிருந்தார்கள்.

சுந்தரமூர்த்திநாயனார் தாம் நினைத்தோறும் சுவாமி தரிசனஞ்செ ய்து திருப்பதிகங்கள் பாடிக்கொண்டு திருவாரூரில் வசித்துவருங் காலத்திலே, தாம் பரமசிவனைத் துதனுப்பிய சமாசாரத்தைத் திருப்பெருமங்கலத்திலி ருந்த எயர்கோன் கலிக்காமநாயனர் கேள்வியுற்று அது தகுதி அன்று என் று தம்மேலே கோபங்கொண்டிருந்தலை அறிந்து அதைக்குறித்துப் பரமசி வனுக்கு விண்ணப்பம்செய்தார். பரமசிவன் அக்கலிக்காம நாயனரைச்சூலை நோயினால் வருத்தி, அவரிடத்திலெழுந்தருளி, சுந்தரனலன்றி இக்நோய் தீராது என்றருளிச்செய்து, அவர் சுந்தரமூர்த்தியைக்கொண்டு அந்நோ யைத் தீர்ப்பித்தற்கு உடன் படாமையைக்கண்டு, சுந்தரமூர்த்தியிடத்திற் சென்று நம்முடைய ஏவலாலே கலிக்காமனை வருத்துகின்ற சூலையை நீ போய்த்தீர்ப்பாய் என்றார். சுந்தரமூர்த்திசுவாமிகள் அதைக்கேட்டு மனம கிழ்ந்து, அவரிடத்திற்குப் போம்படி புறப்பட்டு, சூலைநீக்கும்படி தாம்வ ருஞ் சமாசாரத்தை அவருக்குத் தெரிவித்தற்கு ஆளனுப்பினர் அவ்வாளி னாலே அவ்வரவை அறிந்த கலிக்காமநாயனர் உடைவாளினாலே தன் வயி ற்றைக் கிழித்துக்கொண்டு இறந்துபோனர். சுந்தரமூர்த்திசுவாமிகள், அங் கே சென்றபோது கலிக்காமநாயனர் இறந்து கிடத்தலைக்கண்டு, நானும் இவர்போல இறந்து போவேனென்று சொல்லி உடைவாளையெடுத்தார். உடனே பரமசிவனுடைய திருவருளினால் கலிக்காமநாயனர் உயிர்த்து எழு ந்து, அவர்கையில் வாளைப்பிடித்துக்கொள்ள அவர் விழுந் நமஸ்கரித்தா ர். கலிக்கர்ம நாயனரும், சுந்தரமூர்த்திசுவாமியை நமஸ்கரித்தார் அப்பால் இருவரும் எழுந்து ஒருவரை யொருவர் தழுவி அதிக ண்புள்ளவரானர்

கள். பின்சுந்தரமூர்த்தி சுவாமிகள் கலிக்காமநாயனாரோடு திருப்புன்கூருக் குப்போய், சுவாமி தரிசனஞ்செய்து பதிகம்பாடியருளினர்.

திருப்புன்கூர்-பண்-தக்கேசி.

நிருச்சிற்றம்பலம்.

அந்தணளனுன்னடைக்கலம்புகுதவவனைக்காப்பதுகாரணமாக
வந்தகாலன்றனருயிரதனைவவவினுய்க்குன்றன்வண்மைகண்டடியேன
எந்தைநீயெனைநமன்றமர்கலியிலிவன்மற்றென்னடியானெனவிலக்குஞ்
சிந்தையால்வந்துன்திருவடியடைகதேன்செழும்பொழிற்றிருப்புன்கூருளானே.

கம்பமால்களிற்றின்னுரியாரனைக்காமற்காய்ந்ததோர்கண்ணுடையானைச்
செம்பொனேயொக்குநிருவுநவாணிசெழும்பொழிற்றிருப்புன் கூருளா
யும்பராளியையுமையவளகோனையூரனவனருணடனுள்ளத்தாலுக [ணே
தன்பினுற்சொன்னவ நந்தமிழைதோடைத்துமவல்லவரருவினையிலரே.

திருச்சிற்றம்பலம்.

சிலநாட்சென்ற பினபு திருவாரூரை அடைந்தார் அவ்விடத்திலே சுவாமி தரிசனஞ செய்துகொண்டு கலிக்காம நாயனார் தம்முடைய ஊருக் குத் திரும்பிவிட, சுந்தரமூர்த்தி சுவாமிகள சிலகால அங்கிருந்து, பின் திருநாரையூர் காரோணத்துக்குப் போய சுவாமி தரிசனஞ்செய்து பதிகம்பா டி பொனனும், நவரத்தினங்களும், ஆபரணங்களும், வஸ்திரங்களும், குதி ரைகளும், உடைவாரும், பிறவுமபெற்றுப்பிறகலதலங்களிலும்வணங்கிக்கொ ண்டு மீண்டு, அத்திருவாரூரிற்சேர்ந்து திருந்தார்.

அப்பொழுது சேரமண்டலத்திலுளள கொடுங்கோளூரிலிருந்த சே ரமான்பெருமாணயனார் சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய பரந்திமகிமையை ப் பரமசிவனுல் அறிந்து, அவரை தரிசிக்க விரும்பி திருவாரூரை அடைந் தார். சுந்தரமூர்த்திசுவாமி மகிழ்ச்சியோடும் அவரை எதிர்கொள்ள, அவர் சுந்தரமூர்த்தியை நமஸகரித்தார். உடனே சுந்தரமூர்த்தியும அவரை நமஸ் கரித்து அவரை எடுத்துத் தழுவ, அவரும் தழுவினர். இப்படி இவர்கள் நண்பு கலந்தமையால், சுந்தரமூர்த்தி சுவாமிக்குச் சேரமான்பெருமூர் என்னும் பெயர் உணடாயிறறு. சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேரமான்பெருமாணயனு நாக் கையிலே பிடித்துக்கொண்டு கோயிலிலே பிரவேசித்து, சுவாமி தரிச னஞ் செய்துகொண்டு பரவையாசீட்டுக்கு அழைத்துக்கொண்டு போய் அவருக்கும் அவரோடுவந்த சமஸ்தசனங்களுக்கும் விருந்துசெய்து, சில நாள் அவரோடு அங்கிருந்து, பின் பாண்டிநாட்டிலிருக்கின்ற மதுரைமுத

லாகிய சிவஸ்தலங்களுந்தரிசனஞ்செய்ய விரும்பி, வன்மீகநாதரை வணங்கிக்கொண்டு திருவாரூரை நீங்கி, கிழ்வேளூரை அடைந்து சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு, திருநாகைக் காரோணத்துக்குச் சென்று திருப்பதிகம் பாடியருளினர்.

திருநாகைக்காரோணம்-பண்-கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்

பத்தார்புக்கிரந்தண்டுபலபதிகம்பாடிப்
பாவையரைக்கிறிபேசிப்படிருடித்திரிவீர்
செத்தார்தமெலும்பணிந்துசேவேறித்திரிவீர்
செலவத்தைமறைத்துலவைத்தீரெனக்கொருநாளிரங்கீர்
முத்தாரமிலங்கிமிளிராமணிவயிரக்கோவையவை
பூணத்தருளிமெய்க்கினிதீராறுங்
கத்தூரிகமழ்சாந்துபணித்தருளவேண்டுங்
கடனுகைக்காரோணமேவியிருந்தீரே.

பண்மயதமொழிப்பரவைசங்கிலிகதுமெனகுமை
பற்றுயபெருமானேமறுரையுடையேன்
உண்மயத்தவுமக்கடிபேன்குறைநீர்க்கவேண்டுமொளி
முத்தம்பூணரமொண்பட்டும்பூவுங்
கண்மயத்தகத்தூரிகமழ்சாந்தும்வேண்டுங்
கடனுகைக்காரோணமேவியிருந்தீரென்
றண்மயதாலணிநாவலாரூரன்சொன்னவருந்
தமிழ்களிவைவல்லாரமருலகாள்பவரே.

திருசிற்றம்பலம்.

சிலகாள் அங்கிருந்து, வேதாரணியத்துக்குப் போய்க் கோயிலிலே சென்று, திருநாவுக்கரசு சுவாமிகளாலும் திருஞானசம்பந்த சுவாமிகளாலும் முன்றயே திறத்தறகும் அடைதறகும் பதிகம்பாடப்பெற்ற திருவாயிலை அடைந்து, ஆநந்தபாஷ்பஞசொரிநது அந்நாயன்மார்களை நினைந்து வணங்கி வேதங்களாற்அருச்சிக்கப்பட்டகடவுளை நமஸ்கரித்துதிருப்பதிகம் பாடியருளினர்.

திருமறைக்காடு-பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்

யாழைப்பழித்தன்னம்மொழிமங்கையொருபங்கனை
பேழைச்சடைமுடிமேற்பிறைவைத்தானிடம்பேணிற்
றூழைப்பொழிலூடேசென்றுபூழைத்தலைதுழைத்து
வாழைக்கனிகூழைக்குரங்குண்ணுமறைக்காடே.

பாரூர்பலபுடைசூழ்வளவயனுவலர்வேந்தன்
வாரூர்வனமுலையாளுமைபங்கன்மறைச்சா டை
யாரூரனதமிழ்மாலைகள்பாடும்படித்தொண்டா
ரீரூர்தருநிலனேடுயர்புகழாருவர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

பின் புறப்பட்டு சிலநாள் அங்கிருந்து, அருத்தியான் பள்ளிக்குப்போய்ச் சுவாமி தரிசனஞ்செய்து குழகர்கோடிக்குப்போயச் சுவாமிதரிசனஞ் செய்து திருபபதிகம பாடி பருளினர்

திருக்கோடிக்குழவர்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்

கடிதாய்க்கடறகாற்றுவந்தெற்றக்கரைமேற்
குடிதானையலேயிருந்தற்றுறமாமோ
கொடியேன்கண்கள்கண்டனகோடிக்குழகீர
அடிகேளுமக்கார்துணையாகவிருத்தீரே.

பாரூர்மலிசூழமறைக்காடதன்றென்பா
லேரார்பொழில்சூழ்தருக்கோடிக்குழகை
யாரூரனைத்தனபத்திவைவல்லார்
சீரார்சிவலோகத்திருப்பவர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

பின் சோழநாடடைக்கடந்து பாண்டிநாட்டை அடைந்தார். அங்காட்டிலே திருப்புத்தூரை வணங்கி மதுரைக்குச் சமீபித்து அம்மதுரையிலினறு வந்து தங்களே எதிர்கொண்ட பாண்டியராசாவோடும் பாண்டியராசாவுடைய புத்திரியை விவாகஞ்செயதுகொண்டு அங்கிருந்த சோழராசாவோடும் கோயிலிலேபோய், சுவாமியையவணங்கிப் பதிகம்பாடிப் புறப்பட்டார். பாண்டியர் அவர்களே ஓர் இரத்தினமாளிகைக்கு அழைத்துக்கொண்டுபோய் அங்கே இருத்தினர். சுந்தரமூர்த்தி சுவாமிகளும் சேரமான்பெரு

மாணையனூரும், சிலகாள் அங்கே இருக்துகொண்டு தினக்தோறும் சுவாமி தரிசனம் செய்துவந்தாகள். பின் சுக்தரமூர்த்திசுவாமிகள் அவ்வரசர்மூவ ரோடும் மதுரையை நீங்கி, திருப்பூவணத்துக்கு சமீபித்து பக்கத்திலேவ ரும் திருத்தொண்டர்கள் அந்தத் தலத்தைக்காட்ட, அதன்மேல் திருப்பதி கம் பாடிக்கொண்டு ஸ்தலத்திலேபோய் கோயிலிலே பிரவேசித்து சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு அத்தத் தலதநில் இருந்தார்.

திருப்பூவணம் பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

திருவுடையாரதிருமாலையனலும், உருவுடையாருமையாளையோர்பாகம்
பரிவுடையாரடைவாவினைதீர்க்கும், புரிவுடையாருறைபூவணமீதே.
சிரின்மிகப்பொலியுந்திருப்பூவண, மாரவிருப்பிடமாவுறைவானே
ஊரனுரைத்தசொன்மாலைகள்பத்தினவை, பாரினுரைப்பவர்பாவமறுப்பரே.

திருச்சிற்றம்பலம்.

பின் அவ்வரசர் மூவரோடும் திருப்பூவணத்தை நீங்கி மதுரையிற் சென்று தினந்தோறும் சுவாமி தரிசனம் செய்துகொண்டு சிலகாள் அங்கிரு ந்தார். அந்காட்களிலே திருவாப்பனூர் திருவேடகம் முதலாகிய சிவஸ்தல ங்களுங்கும்போய்த் தரிசனம்செய்துகொண்டு திருமறி மதலாயில்வந்திரு ந்தார். அதற்குப் பின் அரசர்மூவரோடும் திருஆப்பாக்குளமுதலியபோய் சு வாமிதரிசனம்செய்து பரமசிவனுடைய திருவடிகளுக்குத் தொண்டுசெய் யும் அருமையைக் குறித்துப் பதிகம் பாடியருளினார்.

திருக்கோத்திட்டையும் திருக்கோவலூரும்-பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்

கோத்திட்டையுங்கோவலுங்கோயில்கொண்டமருமைக்
கொண்டுழல்கின்றதோர்கொல்லேச்சில்லேச்
சேத்திட்டுக்குத்தித்தெருவெதிரியுஞ்சில
பூதமுரீருந்திசைதிசையான
சோத்திட்டுவினீணேர்பலருக்கொழுதும்மாைக
கோவணத்தோடொருதோல்புடைசூழும்
தார்த்திட்டதும்பாம்புகைக்கொண்டதும்பாம்
படிகேளுமக்காட்செயவஞ்சுதுமே.

அடிகேளுமக்காட்செயவஞ்சுதுமென்றமரர்
பெருமானியாரூரனஞ்சி

முடியாலுலகாண்டமூவேந்தர்முன்னே
மொழிந்தாறுமோர்கான்குமோரொன்றினையும்
படியாயிவைகற்றுவல்லவடியார்
பரங்குன்றமேயபரமனடிக்கே
குடியாகிவானோர்க்குமோராகோவுமாகிக்
குலவேந்தராய்விண்முழுதாள்பவரே.

திருச்சிற்றம்பலம்.

அவருமையை அரசர் மூவருங்கேட்டு அஞ்சி சுந்தரமூர்த்தி சுவாமிகளிவணங்கினர்கள். அப்பால சுந்தரமூர்த்திசுவாமிகள், பாண்டியராசாவும் சோழராசாவும் அனுமதி பெறறுக்கொண்டு மதுரைக்குத் திரும்பிவிட, சேரமான்பெருமாணாயனாரோடும் அந்த ஸ்தலத்தைநீங்கி வழிக்கொண்டு திருக்குற்றாலம் குறும்பாலா திருநெல்வேலிமுதலிய ஸ்தலங்களிவணங்கிக்கொண்டு இராமீச்சரத்துக்குப்போய் சுவாமிதரிசனம் செய்துகொண்டு சிலநாள் அங்கிருந்தார். ஈழமண்டலத்தில் இருக்கின்ற மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச்சரத்தை அவ்விராமீச்சரத்திலிருந்துகொண்டேவணங்கி அதன்மேலே பதிகம்பாடியருளினார்.

திருக்கேதீச்சரம் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

நந்தாபுடைஞானன்பசுவேறிநனைகவிழ்வாய்
மத்தம்மதயானையினீர்போர்த்தமணவாளன்
பத்தாகியதொண்டர்தொழுபாலாவியின்கரைமேற
செத்தாதொலும்பணிவான்றிருக்கேதீச்சரத்தானே.

கரையார்கடல்சூழ்நகர்கழிமாதோட்டந்நன்னகருட்
சிறையார்பொழில்வண்டியாழ்செயுங்கேதீச்சரத்தானே
மறையார்புகழ்ராவணனைடித்தொண்டனுமாசெய்த
குறையாத்தமிழ்பத்துஞ்சொலக்கூடாகொடுவினையே.

திருச்சிற்றம்பலம்.

பின் இராமீச்சரத்தை நீங்கித் திருச்சுழியலிலேபோய்ச் சுவாமி தரிசனம் செய்து, பதிகமபாடிக்கொண்டு, அங்கே இருக்க,

திருச்சுழியல்-பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஊனுயிர்ப்புகலாய்கலிடமாய்முகிலொழியும்
வானுய்வருமதியாய்விதிவருவானிடம்பொழிலின்
றேனுகரித்திசைவண்டினமிழற்றுந்திருச்சுழிய
னனிதகினேவார்தமைகலியாகமன்றமரே.

நீரூர்தருகிமலன்றிருமலியார்க்கயலருகே
தேரூர்தருமரக்கன்சிரமெரித்தான்றிருச்சுழியால்
பேரூரெனவுறைவானடிபெயாதாவலர்கோமா
னூரானதமிழ்மாலைபத்தறிவாதாயிலவே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமி அவருக்குச் சொப்பனத்திலே காளைவடிவங்கொண்டு கையிலே பொற்செண்டும் முடியின்மேல் சுழியமும் உடையவராகித் தோன்றி, நம்முடைய வாசஸ்தானம் காளப்பேர் என்று சொல்லி மறைந்தருளினர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் விழித்தெழுந்து திருவருளேயியந்து, தாம்கண்ட சொப்பனத்தைச் சேரமான் பெருமாணயனுருக்குத் தெரிவித்து திருச்சுழியலே நீங்கி, காளையாதமைக்கண்டு தொழப் பெறுவது என்று என்று திருப்பதிகத்தைப் பாடிக்கொண்டு திருக்காளப்பேருக்குப்போய் சுவாமி தரிசனஞ்செய்து திருப்பதிகம் பாடியருளினர்.

திருக்காளப்பேர் - பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

தொண்டரடித்தொழலுஞ்சோதியிளம்பிறையு
ஞுதனமென்முலையாள்பாகமாகிவரும்
புண்டரிகப்பரிசாமெனிபும்வானவர்கள்
பூசலிடக்கடலுஞ்சுண்டகருத்தமருங்
கொண்டலெனத்திகழுங்கண்டமுமெண்டோளுங்
கோலநறுஞ்சடைமேல்வண்ணமுங்கண்குளிரக்
கண்டுதொழப்பெறுவதென்றுகொலோவடியேன்
கார்வயல்சூழ்காளப்பருறைகாளையையே.

கன்னிலமின்னமுதைக்கார்வயல்சூழ்காளப்
பேருறைகாளையையொண்சிரிறைதண்டமிழா
லுன்னினமனத்தயராவுள்ளுருகிப்பரவமொண்
டொழினவலர்கோனகியவாரூரன்

பண்ணுமிசைக்கிளவிபத்திவைபாடவல்லார்
பத்தர்குணத்தினராயெத்திசையும்புகழ
மனவியிருப்பவர்கள்வானிலிழிதிடினு
மண்டலராயகராய்வாழவதுநிச்சயமே.

அங்கே சிலகாள் இருந்து, திருப்புனவாயில் என்னும் திருப்பதியை யடைந்து ஆலயத்துட்புகுந்து சித்தநீரினை என்றெடுத்துத் திருப்பதிகம் பாடி, சுவாமி தரிசனஞ்செய்து அங்கிருந்தார்.

திருப்புனவாயில்-பண்-பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

சித்தநீரினை யென்னெடுசூளறும்வைகலு
மத்தயானையினீருரிபோர்த்தமணாளனூர்
பத்தாதாம்பலபாடிநினருடும்பி மும்பதி
பொத்திலாவ்ல நகளாடமுபுனவாயிலே.

பொடியாடுமெனியனபொனபுனஞ்சூழுபுனவாயிலை
யடியாரடியன்ஞவலனூரனுரைத்தனை
மடியாதகற்றிவைவியதவல்லார்வினைமாய்ந்துபோய்க்
குடியாசபபாடினருட வல்லாகதில்லைகுறமே.

திருச்சிற்றம்பலம்.

பின் பாண்டி நாட்டைக் கடந்து, சோழமண்டலத்தை அடைந்து பா தாளீச்சரத்தை வணங்கி, திருவாரூரிலே சேர்ந்து, வன்மீகநாதரை வணங் கிப் பதிகம்பாடி, அரசரோடு பரவையார் வீட்டிற்குபோயிருந்து, பலநா ட்சென்றபின், சேரமான் பெருமாணையனூர் சுந்தரமூர்த்தியைவணங்கி, தம் முடைய ஊருக்குவரும்படி பிரார்த்திக்க, சுந்தரமூர்த்தி சுவாமிகள அதற் கு இசைந்து, சேரமான் பெருமாணையனூர்மே எழுந்தருளி, வனமீக நாதரை வணங்கிக்கொண்டு, ஆரூரை நீங்கி மேற்றிசையை நோக்கிக் காவேரி நதியின கொள்ளை வழியேசென்று, திருகண்டியூரை அடைந்து சுவாமி தரிசனஞ செய்துகொண்டு புறப்பட்டார்கள். அப்பொழுது வட கயாயிலிருக்கின்ற திருவையாறு எதிரேதோன்ற சேரமான் பெருமாணைய னூர் கண்டுவணங்கி சுந்தரமூர்த்தி சுவாமிகளைப்பார்த்து சுவாமீ என்மனம் திருவையாற்றை வணங்க விருமபுகினறதுகாம் இந்நதியைக் கடந்துபோய் வணங்குவோம் என்றா அதைக்கேட்ட சுந்தரமூர்த்திசுவாமிகள் அக்காவே ரிநதி இருகரையையும அழித்து ஓடங்கள்செல்லாதபடி பெருகுதலைக்கண் டு திருப்பதிகம் தொடங்கி திருபபாட்டினிறுதியிலே "ஐயாறுடையவடிக ளோ" என்றுசொல்லி அழைத்துப்பாடினார்.

திருவையாறு-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

பரவுமடியார்சொன்றறியேனுன்பண்டெயுமமைப்பயிலாதெ
னிரவும்பகலுநினைக்காலுமெய்தநினைபமாட்டேனுன்
கரவிலருவிகருணைத்தெங்கங்குலகிழக்கு நுபாலை
யரவந்திரைக்காவிரிக்கோட்டத்தையாலடைவழிகளே.

கூடியடியாரிருந்தாலுங்குணமொன்றில்லீர்குறிப்பிலீரீ
நாடியிருந்துவணர்கிலனும்மைநற்கொண்டனிரென்னை
தேடியெங்குங்காண்கிலன்நீருவாரூரிருந்திப்ப
னாகிநிரைக்காவிரிக்கோட்டதலையாலடைவழிகளே.

திருச்சிற்றம்பலம்.

அப்பொழுது கடவுள், கன்று அழுதுக்கலைக்கெய்டுக் கதறிக்கூனைக் கின்ற பசுப்போல சராசரங்களெல்லாம் கேட்கும்படி மூலம் என்று சொல்லியருளினர். உடனே காவேரி நதியிரிந்து வழிகாட்டியது. பெற்றதாயை யீர் பளிங்குமலைபோல நிற்க கிழக்கிலையிலிரு வடிக்க நடுவரி மணற்பரப்பாய் இருந்தது, அதனைக்கண்ட அடியார்கள் எல்லாரும் ஓரோமாஞ்சிதய் கொள்ள, ஆநந்தபாஷ்பஞ்சொரிய அஞ்சலிசெய்தார்கள். பிரமான்பெரு மாணையனூர்சுந்தரமூர்த்திசுவாமிகளுடையதிருவடி மலர்களைக்கரந்தரமூர்த்திசுவாமிகளும் அவரைவணங்கி,கடவுள் உமக்கருளியதன்றேயுள்ளதொல்லிக்கடவுளைத்துதித்துக்கொண்டுஅவரோடும்பரிசனங்களோடுங்கூடியிம்மத்தியிலிருக்கின்றமணலைவழியேபோய்,திருவையாற்றைஅடைந்துசுவாமிதரிசனஞ்செய்துகொண்டுதிரும்பிக்காவேரிநதியின்புறம் பெரும்படி நடுவழியேவந்து தென்கரையிலேறினர். உடனே பிரிந்த மலைபோலநின்ற நீர் தொடர்ந்து பாய்ந்தது. அதைக்கண்டு சுந்தரமூர்த்திசுவாமிகளும் சேரமான் பெருமாணையனூரும் அதிசயித்து பாதுவருளர்ந் துதித்துக்கொண்டுமேற் றிசையை நோக்கி வழிகொண்டு, கொங்குநாடை அடைந்து அதைக் கடந்து மலைநாட்டிற்சென்று கொடுங்கோளூரிலே போனார்கள். பின்பு சேரமான்பெருமாணையனூர் சுந்தரமூர்த்திசுவாமிகளைத் திருவஞ்சைக்களத்துக்கு அழைத்துக்கொண்டுபோனார். அங்கே சுந்தரமூர்த்திசுவாமிகள் சுவாமிதரிசனஞ்செய்து பதிகம்பாடிப் புறப்பட்டார்.

முடிப்பதுகங்கை - பண் - கொல்லிக்கௌவாணம்.

தீருச்சிற்றம்பலம்.

முடிப்பதுகங்கையுந்திங்களுஞ்செறறதுமூவெயில்
கொடிப்பதுமாத்திரைபோறெழுக்கணு றுறினர்
கடிப்பதுமேறுமென்றஞ்சுவன்றிருக்கைகளாற்
பிடிப்பதுபாம்பன்றியிலையோவெம்பிரானுக்கே.

காப்பினமால்விடைமாணிக்கத்தெங்கறைக்கண்டத்
தீச்சுடரனைட்டோடிரண்டுமவிரும்பிய
வாயினசிர்ப்பகைஞானியப்பனடித்தொண்டன்றன்
ஏசினபேசுமின்றொண்டர்காளெம்பிரானையே.

திருச்சிற்றம்பலம்.

பின் சேரமான் பெருமாணையனூர் யானையின்மேலே முன்னேஅவனை யேற்றி பின் தாமும் ஏறி வெண்சாமரம் வீசிக்கொண்டு சென்று தம்மு டைய மாளிகையின் வாயிலிலே புகுந்து யானையினின்றும் இறங்கி, அக்கா யனூரை இறக்கி மாளிகையிலுள்ளே கொண்டுபோய், சிங்காசனத்திலிருத் தி, அவருக்கு அருச்சனே பண்ணி, விருந்துசெய்தார். சுந்தரமூர்த்திசுவாமி கள் சேரமான்பெருமாணையனுமோடும் அந்தக் கொடுங்கோளூரிலே சிலகா ள்இருந்தார். ஒருநாள் திருவாரூரிலிருக்கின்ற வன்மீகநாதருடைய திருவ டிகளே நினைந்து, அவர்மேலே திருப்பதிகம் பாடியருளினர்.

திருவாரூர்-பண்-தக்கேசி.

தீருச்சிற்றம்பலம்.

பொன்னுமெய்ப்பொருளுந்தருவானேப்போகமுந்திருவும்புணர்ப்பானேப் பின்னேயென்பிழையைப்பொறுப்பானேபிழையெல்லாந்தவிரப்பணிப்பானே யின்னதன்மையனென்றறிவொண்ணுவெம்மானையெளிவந்தபிரானே யன்னம்வைகும்வயற்பழனத்தணியாரூரானேமறக்கலுமாமே.

ஓரூரொன்றுலகங்களுக்கெல்லாமுறைக்கலாம்பொருளாயுடன்கூடிக் காரூருங்கமழ்கொன்றைதான்மாலேமுடியன்காரிகைக்காரணமாக ஆரூரைமறத்தற்கரியானேயம்மான்றிருப்பேர்கொண்டொண்ட ஞரூரன்னடிகாயுரைவல்லாரமரலோகத்திருப்பவர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின் அந்தத் திருவாரூருக்குச் செல்லும்பொருட்டு அடியார் களோடு எழுந்து வழிக்கொண்டு சென்றார். செல்லும்பொழுது சேரமான் பெருமாணையனூர் பிரிவாற்றுதவராகி, எழுந்து அவரைப் பின்றொடர்ந

போகாதபடி தடுத்து, அதற்கு அவர் உடன்படாமைகண்டு, மந்திரிகளை அழைத்து, தம்முடைய கஜத்திலிருக்கின்ற களஞ்சியத்திலுள்ள பொன் இரத்தினம் ஆபரணம் வஸ்திரம் சுகந்தவர்க்கம் முதலிய திரவியங்களெல்லாம் பல ஆட்களின்மேலே சுமத்தி அனுப்புமபடி ஆஞ்ஞாபிக்க, அவர்கள் அப்படியேசெய்தாகள். சேரமான்பெருமாணுபனர் அநதச சுமையாடகளை ச் சுந்தரமூர்த்திசுவாமிகளுடைய பரிசனத்துக்கு முன் செல்லுமபடி அனுப்பி, அவரை விழுந்து நமஸ்கரிக்க, அவர அவரைத தடுவி விடைகொடுத்து மலைநாட்டைநீங்கி, சுரங்களையும், கானயாறுகளையும, வனங்களையும், கடந்து திருமுருகன்பூண்டி வழியே போனர். அதற்கு அப்பலிலேபோம் பொழுது பரமசிவன் தம்முடைய பூதகணங்களை நோக்கி, நீங்கள் வேடவடிவங்கொண்டுசென்று சுந்தரனுடைய பணடாரங்களைக் கவருங்கள் என்று ஆஞ்ஞாபிக்க, அவைகள் சுந்தரமூர்த்தியுடைய சுமையாடகள் வரும்வழியிலே வேடுவர்களாகிப்போய், வில்லுவளைத்து நாணபூட்டி அம்புகளைத் தொடுத்து நாங்கள் உங்களைக் கொன்றுபோடுவோம, இத்திரவியங்களெல்லாவற்றையும் போட்டுவிடப் போங்கள என்றுசொல்லி கோபத்தினாலே சுத்தி அந்தத் திரவியங்களெல்லாவற்றையுங் கவர்ந்துகொண்டன. அவர்கள் துன்பத்துடனே ஓடிப்போய் சுந்தரமூர்த்திசுவாமிகள் பக்கத்தில் சேர்ந்தார்கள். அவ்வேடுவர்களோ சிவாஞ்ஞையினாலே சுந்தரமூர்த்தி சுவாமிகள் பக்கத்திலே செல்லாமல் நீங்கிவிட சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருமுருகன்பூண்டியிலே சென்று கோயிலிலே பிரவேசித்து சுவாமியை வணங்கி வேடுவர்பறிக்கும் வெஞ்சுரத்தில் எத்துக்கு இங்கு இருந்தீரென்று "கொடுகு வெஞ்சிலை" என்னுந் திருப்பதிகம் பாடியருளினர.

திருமுருகன்பூண்டி - பணந - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

கொடுகுவெஞ்சிலைவடுகவேடுவர்வீரவலாமைசொல்லித்
திடுகுமொட்டெனக்குத்திக்கூறைகொண்டார்க்குமிடம்
முடுகுகாரியவடுகர்வாழமுருகன்பூண்டிமாநகர்வா
யிடுகுதுண்ணிடைமங்கைதன்னெடுமெத்தகுங்கிருந்தீரெம்பிரானீரே.

மூந்திவானவர்தாந்தொழுமுருகன்பூண்டி மாநகர்வாய்ப்
பந்தணைவிரற்பாவைதன்னையோர்பாகம்வைத்தவனைச்
சிந்தையிற்சிவதொண்டனூரனுரைத்தன்பதனுங்கொண்
டெந்தம்மடிகளீயெத்துவாரிடரொன்றுந்தாமிலரே.

திருச்சிற்றம்பலம்.

உடனே கடவுளுடைய திருவருளினால், அவ்வேடுவர்கள் தாங்கள்பறித்த நிலியங்களெல்லாவற்றையும் அருகக்கோயிற் வாயிலிலே கொண்டு போய்க் குவித்தார்கள். சுந்தரமூர்த்தி சுவாமிகள் அதனண்டு சுவாமியை வணங்கி அவைகளை எடுத்துகொண்டு முன்னேசெல்லும்படி சுமையாட்களை ஏவி அவ்விடதை நீங்கி கொங்குதேசத்தைக் கடந்துபோய், திருவாரூரை அடைந்து அங்கே சுவாமிதரிசனஞ செய்துகொண்டிருந்தார்.

சிலநாடசென்றபின் சுந்தரமூர்த்திசுவாமிகள் சேரமான் பெருமானை நினைந்து அவரிடத்திற்குப் போம்படி கருதி, சோழமண்டலத்தைக் கடந்து கொங்குதேசத்தை அடைந்து திருப்புகொளியூரிற் சென்றுஅங்கே ஒருவீதியிலே இரண்டு வீடுகளில் ஒன்றிலே மங்கலவொலியும்மற்றதிலே அழுகையொலியும எழுதலைக்கேட்டு, அங்கே இருந்த பிராமணர்களை நோக்கி இவ்விரண்டொலியும் ஒருங்கு நிகழ்வது என்னஎன்றார். அதற்குப் பிராமணர்கள், ஐந்துவயசுள்ள இரண்டு புதல்வர்கள குளத்திலே மூளித்த பொழுது, ஒருபுதல்வனை முதலை விழுங்கிற்று, மற்றப்புதல்வன் பிழைத்துக்கொண்டான் இந்த வீட்டில் ஒலிபிழைத்த புதல்வனுக்கு உபாயனம் செய்யும் ஒலி, இந்த வீட்டில ஒலி இறந்த புதல்வனைச்சூறுகின்ற அழும்ஒலி என்று சொன்னார்கள் அதைக்கேட்டுக் திருவுளமிரங்கி நினற சுந்தரமூர்த்திசுவாமிகளை புதல்வனை இழந்த பிராமணனும் மனைவியுங்கண்டு, ஒடிவந்து, முகமலாசசியோடு அவருடைய திருவடிகளை நமஸ்கரித்தார்கள. சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவர்களுடைய முகதைநோக்கி புதல்வனை இழந்தவர்கள் நீங்களா என்று சொல்லியருள அவர்கள் மனனும் வணங்கி, சுவாமீ அது முனனே நிகழ்ந்ததுபோயிறறு. அதனிறகுஅடியேங்கள தேவரீரை வணங்குதறகு நெடுங்காலமாக அவாவி இருந்தோம் அவனன்பு பழுதாகாமல் தேவரீர் இங்கே எழுந்தருளப பெறறோம் என்றார்கள, அதைக்கேட்ட நாயனர் இந்தப் பிராமணனும் 'மனைவியும் தங்களபுதல்வனையிழந்த துன்பத்தைமறந்து நான வந்தறகாக மனமகிழுகினறார்கள. ஆகையால் நான் இவர்கள புதலவனை அமமுதலிவாயினின்று அழைததுக கொடுதது, அவி நாசியில் வீற்றிருக்கின்ற நமது படையனை வணங்குவேன எனறு அருளிச செய்து, அந்தப்புதல்வனை முதலை விழுங்கிய வாவி எங்கே என்று வினவி, அதனகரையிலே எழுந்தருளி, அமமுகலிதான விழுங்கிய புதல்வனைக்கொண்டுவரும பொருட்டுத திருபபதிகம பாடியருளினார்.

திருப்புக்கொளியூர் அவிநாசி-பண்-குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்.

உரைப்பாருரையுகந்துள்கவல்லார்தங்களுச்சியா
யரைக்காடரவாதியுமந்தமுமாயினுய்
புரைக்காடுசோலைப்புக்கொளியூரவிநாசியே
கரைக்கான்முதலையைப்பிள்ளைதரச்சொல்லுகாலனையே.

நீரேறவேறுநிமிர்புன்சடைநின்மலமூர்த்தியைப்
போரேறமேறியைப்புக்கொளியூரவிநாசியைக்
காரேறுகண்டனைத்தொண்டனுரன்கருதிய
சீரேறுபாடல்கள்செப்பவல்லார்க்கில்லைதுன்பமே.

திருச்சிற்றம்பலம்.

"உரைப்பாருரை" என்னுந்திருப்பாட்டு முழுதும்ஓதி, இயமன் அந்தப் புதல்வனுடைய உயிரைக்கொண்டுவந்து அவ்வாயினுள்ள முதலை வயிற்றினுள்ளே முந்தினதேகத்தைச்சென்ற ஆண்டுகளின் வளர்ச்சியையும் உடையதாகத் தோற்றுவித்து, அதனுள்ளே புகுத்திவிட்டான். உடனே முதலை அந்தப்புதல்வனைக் காயிலேகொண்டுபோய் உமிழ்ந்தது. அப்பொழுது மாதாவானவள் ஓடிப்போய், அப்புதல்வனை எடுத்துக்கொண்டுவந்து, காயகனேடு சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய திருவடியிலே விழுந்து நமஸ்கரித்தாள். இவ்வற்புதத்தைக்கண்ட தேவர்கள ஆகாயத்தினின்று மானர்மேல் புஷ்பமாரி பொழிந்தார்கள். பிராமணர்களெல்லாரும்உத்தரீயங்களை ஆகாசத்திலே வீசி ஆரவாரித்தார்கள்.

சுந்தரமூர்த்திசுவாமிகள் அந்தப்புதல்வனையும் அழைத்துக்கொண்டு அவிநாசிக்குப்போய், சுவாமிதரிசனஞ்செய்து, திருப்பதிகம் பாடிக்கொண்டு திரும்பி, அப்புதல்வன் வீடடிறசென்று அவனுக்கு உபயோகம் செய்வித்து, கொங்குதேசத்தைக் கடந்து மலைநாட்டை அடைந்து, தம்மைவந்து எதிர்கொண்ட சேரமான்பெருமாணயனாரோடும் அவர் வீடடிற்சென்று இருந்தார் இருந்தகாடகளிலே அம்மலை நாடடிலிருக்கின்றசிவஸ்தலங்கள்பல வற்றிற்கும்போய்ச் சுவாமிதரிசனஞ செய்துகொண்டுமகோதைக்குத்திரும்பினர்.

இப்படிப் பலநாட்சென்றபின், ஓர்நாள் சேரமான்பெருமாணயனார் ஸ்நானம்பண்ணும்பொழுது சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவஞ்சைக்களத்துக்குப்போய், அங்கிருக்கின்ற சிவாலயத்தை பிரதட்சிணஞ்செய்து, உள்ளேபுகுந்து, சந்நிதானத்திலே விழுந்து நமஸ்கரித்து எழுந்தபின்று அக்கினியிற்பட்ட மெழுகுபோல மனம்கசிந்துருக இரண்டு கண்ணினின்றும்,

ஆனந்த அருவிசொரிய, சரீரத்திலே உரோமாஞ்சிதங்கொள்ள, இரண்டு கைகளும் சிரசின்மேல் ஏறிக்குவிய, அடியேனே இப்பிரபஞ்ச வாழ்க்கையி னின்றும்நீக்கித் தேவரீருடைய திருவடியிலே சேர்த்தருளவேண்டுமென்று திருப்பதிகம் பாடியருளினர்.

திரு அஞ்சைக்களம்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

தலைக்குத லைமாலையணிந தென்னே
சடைமேமு கங்கைவெளளந் தரித்தென்னே
யலைக்கும்புலித்தோல்கொண்டசைத்தென்னே
யதனமேமு கதீராகக்கசாததென்னே
மலைக்குநிகரொபபனவன்றிரைகள்வலித்
தெறிமுழங்கிவலம்புரிகொண்
டலைகருங்கடலங்கரைமேனமகோலதையணியூர
பொழிலஞ்சைக்களத்தப்பனே.

எந்தம்மடிகளிமையோர்பெருமானெனை
கெனறுமளிகுமணிமிடறற
னந்தண்கடலங்கரைமேன்மகோலதையணியா
பொழிலஞ்சைக்களதப்பனே
மகமமுழவுகுழலுமியம முமவள
காவலர்கோனமபிபூரஞ்சொனன
ரரபமிகுதணட மிழமாலைகள்கொணடடி
யிறவல் ராகடுமாறிலெ.

திருச்சிற்றம்பலம்.

அப்பொழுது கைலாசகிரியிலே பரமசிவன் பிரமன்முதலிய தேவர்களைநோக்கி, நீங்கள்போய நம்முடைய அடியானுகிய சுந்தரனே வெள்ளை யானையின்மேலேற்றிக்கொண்டு, வாருங்களென்று ஆஞ்ஞாபித்தார். அதைக்கேட்ட தேவர்கள சுவாமியை நமஸகரித்து அனுமதிபெற்று, வெள்ளையானையையுங் கொணடு, திருவஞ்சகளத்தை அடைந்து, கோயிலே வலஞ்செய்து, திருவாயிலிலேபோய் உள்ளேநின்று வந்த சுந்தரமூர்த்திசுவாமியை எதிர்கொண்டு, சுவாமியுடைய ஆஞ்ஞையைத் தெரிவித்தார்கள். அப்பொழுது சுந்தரமூர்த்திநாயனர சுவாமியை நினைந்து நமஸ்கரித்துஏழுந்து தேவர்களுக்கு எதிரேபோனர்.

தேவர்கள் அவரை பிரதட்சிணம்செய்து வெள்ளையானையின்மேலே ற்ற அவர் பஞ்சவாத்தியங்கள் ஆரவாரிக்கவும், தேவர்களெல்லாரும்ஸ்தோத்திரஞ்செய்து புஷ்பமாரிபொழியவும், தம்முடைய தோழராகிய சேரமான் பெருமாணயனாரைத் திருவுளத்திலே நினைத்துக்கொண்டு சென்றார். சேரமான் பெருமாணயனார் சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய செயலை அறிந்து, அந்தக்ஷணமே அருகில் நின்ற வோர் குதிரையின்மே லேறிக்கொண்டு, திருவஞசைக் களத்துக்குபபோய் வெள்ளையானையின்மே லேறிக்கொண்டு ஆகாயத்திற செல்லும் சுந்தரமூர்த்தி சுவாமிகளைக்கண்டு தாம்முன்ய குதிரையின் செவியிலே ஸ்ரீபஞசாக்ஷரத்தை ஓதியருளினார், உடனே அந்தக் குதிரையானது ஆகாயத்திலே பாய்ந்து, சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய வெளளை யானையை அடைந்து அதனை வலஞசெய்து, அதற்கு முனனே சென்றது. சேரமான் பெருமாணயனு நடையப்படைவீராகள்குதிரையிற் செல்லும் அந்நாயனாரைத் தங்கள கணணுக்குப் புலபடுமெல்லைவரைக்கும் ஆகாயத்திலேகண்டு பின்காணமையால் மிகுந்த திடபத்தியினாலே உருவிய உடைவாடகளினால தங்கள தங்கள தேகத்தைச் சேதித்து, வீரயாக்கையைப் பெறறுபடடாய், சேரமான பெருமாணயனாருக்கு முற்பட்டுஅவரைச் சேவித்துக்கொணடு சென்றார்கள். சேரமான பெருமாணயனார்முன் செல்லப் பின்சென்ற சுநதரமூர்த்திசுவாமிகள் "தானேனே முனபடைத்தான்" என்னுங் திருபபதிகததைப் பாடிக்கொண்டு கைலாசமலையின்தெற்கு வாயிலுககு முனபோனார்.

திருநொடித்தானமலை-பண்-பஞ்சமம

கிருச்சிற்றம்பலம்

தானெனேமுனபடைதகானகறிதுதன்பொனனடிகளே
கானெனபாடலகேதாகாயினேனபொருட்படுத்தி
வானெனேவந்தெதிர்கொள்ளமதகயானேயருளபுரிந்த
ஞானியர்வேறுசெ பதாளெடித்தான்மலையுதகமனே.

ஊழிதோறூழிமுற்றுமுயற்பொனனெடிததானமலையைச்
சூழிசையின்கரும்பின்சுவைகாவலவனூரனசொனன
வேழிசையின்றமிழ்மாலிசைகேதத்தியபத்தினேயு
மாழிகடலையாவனுசையப்பர்க்கறிவிபபதே.

திருசிற்றம்பலம்.

போன உடனே இருவரும் யானையினின்றும், குதிரையினின்றும் இறங்கி, பலபல வாயில்களையும் கடந்து, திருவணுக்கன் திருவாயிலை அ

டைந்தாகள. அங்கே சேரமான் பெருமாணையனூர் தடைப்பட்டுநிற்க சுந்தரமூர்த்தி சுவாமிகள் உள்ளேபோய், சுவாமி சன்னிதானத்திலே விழுந்து நமஸ்கரித்து, எழுந்து ஸ்தோத்திரம் செய்துகொண்டு நின்றார். சுவாமி அவரைநோக்கி, சுந்தரர் வந்தனையோ வென்றார், அதைக்கேட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள் சுவாமீ! அடியேன் செய்தபிழை பொறுத்து என்னை யடிமையாகக்கொண்டு பந்தத்தினின்று நீக்கி அடியேனுக்குத் திருவடி தந்தருளிய பெருங்கருணையை என்னற் சொலலுந்தரத்ததோ வென்றுசொல்லி, பலமுறை நமஸ்காரஞ்செய்து சிவானந்த வெளளத்தில் அமிழ்ந்தி நின்றார்.

பின்பு, சுவாமி தேவிருடைய திருவடிகளை அடையும்பொருட்டுச் சேரமானபெருமாள் திருவணுக்கன் திருவாயிலின் புறத்திலே வந்து நிற்கிறார் என்றுசொல்ல, சுவாமி அவரை உள்ளே அழைப்பித்து நீயும் ஆலாலசுந்தரனும் நம்முடைய கணங்களெலலாவற்றிற்குந் தலைவரா யிருங்கள் என்று அருளிச்செயதார், அதைக்கேட்டுச சுவாமியை நமஸ்கரித்து எழுந்து அவருடைய நிருவருளைத் தலைமேறகொண்டு, சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆலாலசுந்தரராகி முனனே தாம்செயத திருத்தொணடைச் செய்பவரும் சேரமான் பெருமாணையனூர கணநாதராகி, அபர் செயயும் தொழிலைச செய்பவருமாயினாகள. முனனே பூமியில் அவதரித்த பரவையாரும் சங்கிலியாரும் முறையே கமலினியாரும் அநிநதிதையாருமாகி பார்வதிதேவிக்குத தாங்கள் முன்செய்த திருதொண்டைச செயதுவந்தாகள், சுந்தரமூர்த்திசுவாமிகள தாம் வழியிலே அருளிசசெய்த திருப்பதிகத்தை இந்தத் தகஷிணபூமியிலெ ஏறறும்பொருட டெச சமுதாதிர ராஜனுகிய வருணனிடத்திலே கொடுக்க, அவன அதைத் திருவருளைகை களதலமேல உயத்துததெரிவித்தான்.


1877

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

முதலாவது,

தில்லைவாழந்தணர் சருக்கம்.

இரண்டாவது

தில்லைவாழந்தணர் புராணம்.

நல்லவானவர்போறறுக்கில்லைமன் னுயி ரெலாஞ்
செய்பெருமானுக்கணியார்நறைபொற்
றெரிலிலைவான்பணியெடுத்தற்குரிபார்விடு
நறக்கெனியார்கொண்டுக்தொகைபுனை பாடக்
திலைவாழந்தணரென்றெடுக தகாதன
செப்புமருளுடை யார்முத்தியார்பத்தி
கெல்லைகாணரியாபொபுலகிற்றிமை
யேந்துள்ளாரெமையாளவாய்ந்தாரோ.

சிவஸ்தலங்களெல்லாவற்றுளளும் மஹா முகியமுள்ளதாகிய சிதம்பர ஸ்தலத்திலே இருக்கின்ற எனகசபையிலே ஆநந்தத் தாண்டவஞ்செய்தருளும் சபாநாதருக்கு அருச்சனை செயகின்ற பிராமணர்கள் திலலைவாழந்தணரென்று சொல்லப்படுவர்கள. அவர்கள்மூவாயிரவர். அவர்கள் இருக்கு, யசுஸ, சாமம், அதர்வணம் என்கின்ற நானகு வேதங்களையும் அத்தியயனம் செய்தவர்கள். சந்தஸ, கறபம், வியாகரணம், சிகஷை, சோதிடம், நிருத்தம் என்கின்ற வேதாங்கங்கள் ஆறறையும் கறறவல்லவர்கள். ஆகவனீயம், காருகபத்தியம், தட்சிணாக்கினி என்னும மூன்றக்கினிகளையும் விதிப்படி வளர்க்கின்றவர்கள், குற்றமில்லாதவம்சத்தில் உதித்தவர்கள். கிருகஸ்தாச்சிரமத்தில் ஒழுகுகின்றவர்கள் ஓதல், ஓதுவித்தல, வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல், என்கின்ற அறுவகைத்தொழிலையும் செய்கின்றவர்கள். விபூதி உருத்திராட்சம் என்கின்ற சைவசாதனங்களை விதிப்படி தரிக்கின்றவாகள். காமிகமுதல் வாதுள மற்றுதியாகிய இருபத்தெட்டு சைவாகமங்களிலும் பிரதிபாதிக்கப்படுகின்ற சரியை, கிரியை, யோகம், ஞானம்என்கின்றநான்குபாதங்களையும் அறிந்தஅனுடடிக்கின்றவாகள். வெனிடத்தில் இடைவிடாது வைக்கப்படுமஅன் பிபதங்களுக்குச் செல்வமெனக் கொள்கின்றவர்கள். உயர்வொப்பில்லாத கடவுளாகிய தியாகேசரே முறகாலத்திலே சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் திருத்தொண்டத்தொகை பாடுமபடி அருளிச்செய்தபோது முதல் "ஏதிலிலைவாழந்தணர்த மடியார்க்கு மடியேன்" என்று அவர்களைத் தமது திருவாக்கினுல் எடுத்துச்சொன்ன வொன்னில் அவர்களுடைய அளவிறந்த மகிமையை நாமா சொல்லவல்லமம்.

சிவமயம.

மூன்றாவது

திருநீலகண்டநாயனார் புராணம்.

திங்களுங்கங்கையுஞ்சேர்வார்சடைத்தாழ்த்தித்
தீண்டிலெமைத்திருநீலகண்டமென்று
சொல்லுமனையாடனையேயன்றிமற்றுந்
துடியிடையாரிடையின்பந்துறக்துறந்தங்
கெல்லியிலோடிறைவைத்துமாற்றிநாங்க
ளெடுத்தில்லமென்றியம்புமெனவிடித்துபொய்கை
மெல்லியலாளுடன்மூழ்கியிளமையெய்தி
விளங்குபுலீச்சரத்தானேமேவினாரே.

சிதம்பரதலத்திலே குயவர் குலத்திலே, பொய்சொல்லல் சிறிதுமின்றித் தருமநெறியிலே வாழ்கின்றவரும், இல்லறத்திலே நிறைவருளும், சிவபத்தி அடியார் பத்திகளிலே சிறந்தவருமாகிய தொண்டர் ஒருவர் இருந்தார். அவர் தம்முடைய குலத்துக்கு ஏற்ற மட்கலங்களை வனைந்து விற்றுச் சிவனடியார்களுக்கு அமுது செய்தும் ஓடுகளைச் சிவனடியார்களுக்கு கொடுத்தும் வந்தார். அவர், ஆதிகாலத்திலே பரமசிவன் திருப்பாற்கடலில் நின்று எழுந்த ஆலகாலவிஷத்தை உலகம் உய்யுமபொருட்டு உண்டபொழுது அவருடையகண்டமானது அவர் தம்மை அடைந்தவர்களுக்குவரும் இடையூறுகளை நீக்கியருளுவார் என்பதை நாம் எல்லாரும் அறிந்து கொள்ளும்படி ஓர் அறிகுறியாய் விளங்கும்பொருட்டு அதனை உள்ளே புகவொட்டாமல் தடுத்துத்தானே தரித்துக்கொண்டது என்று நினைந்து, அக்கடவுளுடைய கண்டத்தைத் திருநீலகண்டம் என்று எப்பொழுதும் சிறப்பித்தல சொல்லுவார் அதனால் அவருக்குத் திருநீலகண்டநாயனார் என்னும் பெயர் உண்டாயிற்று ஒருநாள் அவர் அவ்வூரிலேஓர்வேசியினிடம் சென்றுவிட்டுக்குத்திரும்பகற் பிலேசிறந்த அவர்மனைவியார் அதை அறிந்து, அதைக்குறித்துத்தம்முடைய மனதிலேதோன்றியகோபத்தை அடக்கிக்கொண்டு இல்வாழ்க்கைக்குரியமற்றப்பணிகளெல்லாஞ் செய்தும், புணர்ச்சிக்குமாத்திரம் இசையாதவராஞ்சு நாயகர் தம்முடைய மனைவியார் கொண்ட ஊடலைத் தீர்க்கும் பொருட்டு அவர் சமீபத்திலேபோய் வேண்டிய இரப்புரைகளைச்சொல்லி, அவளைத்தி ண்டும்படி சென்றார், அப்பொழுது மனைவியார் நீர் நம்மைவிட்டுநீங்



மீல் திருநீலகண்டம் என்று ஆணையிட்டார், அதைக்கேட்ட நாயகர் பரமசிவனுடைய திருநீலகண்டத்திலே தாம் வைத்தபத்தி குன்றுவண்ணம் அம்மணியானைத் தொடாமல் நீங்கி, இவர் நம்மை என்று பன்மையாகச சொன்னதனால் இவையாத்திரம் அன்றி மற்றப்பெண்களையும் நான் மனதினால் நினைத்தலுஞ செய்யேன் என்று உறுதிகொண்டார். அவர்கள் இருவரும் தங்கள் வீட்டில் நின்று புறப்படாதொழித்து அவ்வீட்டிலேதானே இருந்து, இல்லறத்திற்குரிய பிறசெய்கைகளெல்லாம் செய்துகொண்டு,புனர்ச்சி இன்மையைப் பிறராயாதபடி வாழ்ந்தார்கள், இளமைப் பருவத்தை உடைய இருவரும் அவவாணையைப் பேணிகொண்டு உலவருவங்களில்செல்ல,யௌவனம்நீங்கி வயோதியர்களாகி வருத்தமுற்றார்கள்,உற்றும் சிவபத்தி சிறிதுமகுறையாதவர்களாகி இருந்தார்கள.

இப்படி இருக்கும் காலத்திலே காருண்ணிய வடிவுடையாகிய பரமசிவன் அவ்வடியாருடைய மகிமையை உலகத்தவர்கள் ஐயுற்றிபற அறிக்க அவருடைய தொண்டை அனுசரித்த உய்யும்பொருட்டு ஒரு சிவயோகி வடிவங்கொண்டு அவ்வடியார் வீட்டுக்குச்சென்றார். அவ்வடியார் அவனைக்கண்டு எதிர்கொண்டு வீடடினுள்ளே அழைத்துக்கொண்டுபோய் ஆசனத்தில் இருத்தி அவருக்குச் சாஸ்திர விதிப்படி அன்பினோடு பூசைசெப்து நமஸ்கரித்து எழுந்துஅஞ்சலிசெய்துநின்று சுவாமீ அடியேன் தேவரீருக்குச்செய்யவேண்டிய குற்றேவல் யாதுஎன்று வினவ சிவயோகியார், இந்த ஓட்டைவைத்திருந்து,நாம் கேட்கும்போது தா இந்த ஓடு தனக்கு வேறொப்பிலாதது, தனரிடத்திலே சேர்ந்த சகலவஸ்துக்களையும பரிசுத்தம்செய்வது, பொன்னிலும் இரத்தினத்திலும் பார்க்கக் காப்பாற்றப்படத்தக்கது, இப்படிப்பட்ட மேன்மையுள்ளதாகிய இந்த ஓடை நீ வாங்கிவைத்திரு என்று அருளிச் செய்தார், அதைக்கேட்ட அடியவர் அவனை வந்தனஞ் செய்து, அவ்வோட்டை வாங்கிகொண்டு வீடடிலே ஓரபக்கத்தில் சேமித்து வைத்துவிட்டு திரும்பிவந்துபோம்படி எழுந்த சிவயோகியாருக்குப்பின் சிறிது தூரம் சென்று அவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டுவீட்டுக்குத் திரும்பினார்.

வெகுநாட்கள் கழிந்தபின், ஒருநாள் பரமசிவன் தாம் வைக்கக்கொடுத்த ஓட்டைவைக்கப்பட்ட இடத்தில் இல்லாதொழியும்படி செய்து, அவ்வடியாருடைய உண்மை நிலையைப் பிறர்க்குப் புலப்படுத்தும் பொருட்டு முன்போலச் சிவயோகி வடிவங்கொண்டு அவர் வீடடுக்குப் போனார். அவர் சிவயோகியாரை முன்போல உபசரித்த சுவாமீ ! தேவரீர் இவ்வீட்டிற்கு எழுந்தருளிவந்தது அடியேங்கள் பூர்வசன்மத்திற் செய்த தவத்தினால் என்று சொல்லிநிற்க, சிவயோகியார் சம்மு

ன்னுளிலே உன்னிடத்திலே தந்த ஓட்டை இப்பொழுது தாஎன்றார். அடியவர் அதைக்கொண்டுவந்து கொடுக்கும்பொருட்டு உள்ளேபோய்ப் பரர்த்தக் காணமையாலே திகைத்து, அங்குநின்றவர்களிடத்திலே கேட்டும் பிற இடங்களிலே தேடியும் காணாதவராகி, சிவயோகியாருக்கு உத்தரம் சொல்வதற்கு ஒன்றுமின்றி அங்கே நின்றார். சிவயோகியார உளளே நின்ற அடியார் கேடகும்படி, கொடிப்பொழுதில் வருவேன் என்றுபோனீரே ன் இவ்வளவுகேரம் தாமதித்து நிற்கிறய் என்றுகேட்க அடியவர்வந்து சிவயோகியாரை வணங்கி சுவாமீ தேவரீர் தந்த ஓட்டைவைத்த இடத்திலும் பிற இடங்களிலும் தேடிக்காணேன் பழையதாகிய அந்த ஓட்டைப்பார்க்கிலும் புதிதாகிய வேறொரு ஓடுதருவேன். அதை அங்கீகாரம் செய்து அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருளவேண்டும் என்று சொல்விப்பிரார்த்தித்து நின்றார். உடனே சிவயோகியார் அவரைக் கோபித்துப்பார்த்து, நீ என்னசொன்னாய் நான் வைத்தமண்ணோடையே யன்றிப் பொன்னோட்டைத் தந்தாயாயினும் நான்வாங்கேன். நான் முன்னே உன்னிடத்தில் தந்த ஓட்டையே கொண்டுவா என்றுசொல்ல அடியவர், சுவாமீ தேவரீர்தந்த ஓட்டைதேடியுங் காணேன் வேறே நல்ல ஓடு தருகின்றேன் என்றுசொல்ல அதற்கு உடன்படாமல் என்னோட்டையே கொண்டுவா என்றுசொல்லுகிறீர். இந்தச்சொல்லு என்னறிவு முழுதையும் ஒழித்துவிட்டது எனறார். அதற்குச் சிவயோகியார், நான் உன்னிடத்திலே வைத்த அடைக்கலப்பொருளை நீ கவர்ந்துகொண்டு, பாவத்துக்குச் சிறிதும் அஞ்சாமல், பலபாகவங்கள் செய்கின்றாய் சகலரும் அறியும்படி உன்னைத் தப்பஒட்டாமல் மறித்து என்னோட்டை வாங்கிக்கொண்டேஅன்றி நான்போகேன் என்றுசொல்ல அடியவர், சுவாமீ தேவரீர் தந்த ஓட்டை நான்கவர்ந்தவனல்லன், என்னிடத்தே களவில்லாமையை எப்படித் தெரிவிப்பேன், சொல்லும் என்றார். சிவயோகியார் உன் புத்திரனைக்கையிலே பிடித்துக்கொண்டு குளத்திலே முழுகி நான் கவரவில்லை என்று சத்தியம் பண்ணித்தா என்றுசொல்ல, அடியவர் அப்படிச் செய்தற்கு எனக்குப் புத்திரன் இல்லையே,என்னசெய்வேன, சொல்லும் என்றார். சிவயோகியார் உன்மனைவியைக்கைப்பிடித்து முழுகிச் சத்தியம் பண்ணித்தா என்று சொல்ல, அடியவர், நானும் என்மனைவியும் எங்களிடத்துண்டாயிருக்கும் ஓர் சபதத்தினலே ஒருங்குமுழுகுதல்கூடாது. நான்மாத்திரம் குளத்திலே முழுகிச் சத்தியம் பண்ணித் தருகிறேன் வாரும் எனறார். அதற்குச சிவயோகியார் நான்முன்னே தந்த ஓட்டைத்தாமாலும் அதைக் கவர்ந்துகொள்ள வில்லையெனின் உன் மனைவியைக் கைப்பிடித்துச் சத்தியஞ்செய்து தராமலும் மனம் வலித்திருக்கின்றாய். நில்லாவாழ்த்தணர்கள் கூடியிருக்கும் பெரிய சபையிலே இவ்விஷயத்தைக் குறித்துப் பேசப்போகின்றேன் என்றுசொல்லி அந்தச் சபைக்குப்போக திருவுளக்கண்டகாயனரும் அவருக்குப் பின்னேபோனார். சிவயோகியார் அ

தப் பிராமணர்களைப்பார்த்து இந்தக்குயவன் தன்னிடத்திலே கான்வைத்திருக்கும்படி கொடுத்த ஓட்டைத் தருகின்றானில்லை அதனை இழந்தானுயின் தன்மனைவியைக் கைப்பிடித்துக் குளத்தில் முழுகிச் சத்தியம் பண்ணித் தருகின்றானுமில்லை என்றார். உடனே பிராமணர்கள் அடியவரை நோக்கி திருநீலகண்டரே நடந்த சமாசாரத்தை நீர் சொல்லும் என்று கேட்க அவர் சுவாமிகாள் இவர் தந்த ஓடு கான் வைத்த இடத்தில் நின்றும் மறைத்துபோய்விட்டது. நான் தேடிப்பார்த்துங் காணேன். இதுவே நடந்த சம்மாசாரம் என்றார். அதற்குப் பிராமணர்கள் இவர் ஓட்டை நீர்இழந்தீராகில் இவர் கேள்விபடி உம்முடைய மனைவியைக் கைப்பிடித்துச் குளத்திலே முழுகிச் சத்தியஞ் செய்துகொடுத்தலே நியாயம் என்றார்கள். அடியவர் அதைக்கேட்டு தாம் அம்மனைவியாரைத் தீண்டாதிருத்தலே குறித்துப்பேசக்கூடாதவராகி தருந்தபடி குளததிலே முழுகிச் சத்தியஞ்செய்து தருகிறேன் வாரும் என்று சொல்லி சிவயோகியாரோடு தம்முடைய வீட்டுக்குப்போய் மனைவியாரையும் அழைத்துமகொண்டு திருப்புலீச்சரத்துக்கு முன்னிருக்கின்ற வாவியிலே போய் ஒரு மூங்கிற்றண்டை ஒருபுறத்திலே மனைவியார்பிடிக்க மறுபுறத்திலே தாம்பிடித்துக்கொண்டு இறங்கினர் அதைக்கண்ட சிவயோகியார், உன்மனைவியைக் கைப்பிடித்துக்கொண்டுமூழ்கு என்றுசொல்ல திருநீலகண்டநாயனர் அப்படிச்செய்யக் கூடாமையை உலகத்தார் அறியும்படி முன்னளிலே தாம் செய்த வேசிகமனமும் அதனலுண்டாகிய சபதமும் அதற்குப் பிரகாரம் தவறுமல் நடந்துவருதலும சொல்லி முழுகினர், முழுகிக் கையிலேறிய திருநீலகண்டநாயனரும் மனைவியாரும் மூப்புப் பருவம் நீங்கி இளமைப்பருவம் உடையவர்களாய்ப்பிரகாசித்தார்கள். அவ்வதிசயத்தைக் கண்ட சமஸ்தரும் அங்குநின்ற சிவயோகியாரைக் காணதவர்களாய் மயங்கி நினறார்கள், சுவாமி பார்வதிதேவியோடும் இடபாரூடராய் ஆகாயத்திலே தோன்றியருளினர். அப்பொழுது திருநீலகண்டநாயனரும் மனைவியாரும் பூமியிலே விழுந்து அவரை நமஸ்கரித்து எழுந்து ஸ்தோத்திரஞ் செய்துகொண்டு நின்றார்கள், சுவாமி அவர்களைநோக்கி, ஐம்புலன்களை வென்றதனலே சிரேஷ்டமடைந்த அன்பர்களே எக்காலத்தும் இவ்விளமை நீங்காமல் நமமிட ததம் இருங்கள் என்று சொல்லிமறைந்தருளினர் பத்திவலிமையையுடைய திருநீலகண்டநாயனரும் மனைவியாரும் யாவராலும் செய்தற்கரிய பெருஞ செய்கையைச் செய்து சிவலோகத்தை அடைந்து பேரின்பத்தை அனுபவித்து வாழ்ந்திருந்தார்கள.

நான்காவது

இயற்பகைநாயனார் புராணம்.

எழிலாரங்காவிரிப்பூம்பட்டினத்துளியல்
வணிகரியற்பகையாரிருவாதேட
வழலாயபிரான்றூதத்தமனையோனுகியா
யிழையைத்தாவேண்டியீயவையன்
கழலாரப்பணிந்துமனைக்கற்பின்மேன்மைக்
காதலியைக்கொடுத்தமாசெய். கருத்தால்வந்த
பிழையாருஞ்சுற்றமெலாத்துணித்துமீளப்
பிஞ்ஞகனாரழைத்தருளப்பெற்றுளாரே.

சோழமண்டலத்திலே காவேரிநதி சமுத்திரத்தோடு கலத்தலால காவேரி சங்கமம் எனப்பெயர்கொண்ட விசிட தீர்த்தம் பொருந்திய காவிரிப்பூம் பட்டினத்திலே வைசியர் குலத்திலே குருலிங்க சங்கமபத்தியுளித் சிறந்தவரும் ஒளதாரியம் உள்ளவரும் ஆகிய இயற்பகையாரென்பவரொருவர் இருந்தார், அவர் இல்லறத்தில் இருந்துவிபூதி உருத்திராக்ஷம் தரித்த சிவபத்தர்களுக்கு அவர்கள் விரும்பிய எல்லாவற்றையும் மகிழ்ச்சியோடு கொடுத்துக்கொண்டு வருங்காலத்தில் ஒருநாள் பரமசிவனுடைய அன்பியற்பகையார் அடியார்கள் விரும்பியவை யாவையேனும் அவற்றைமறுத்து கொடுத்தல் சகலருக்கும் புலப்படுத்தும் பொருட்டு ஒரு பிராமணவடிவங்கொண்டு விபூதி ருத்திராக்ஷ மணியிலே பிரகாசிக்க விட புருஷவேடமுந் தோன்ற அவர் வீட்டுக்குச்சென்றார். இயற்பகையார் அன்பினாலே அவரை எதிர்கொண்டு நமஸ்கரித்து அழைத்துக்கொண்டுபோய் விதிப்படி அருச்சித்து சுவாமீ தேவரீர் இங்கே எழுந்தருளியது பூர்வசன்மத்தில் அடியேன் செய்த தவத்தினாற்போலும் என்றார், அதுகேட்ட ஐயர் இயற்பகையாரைநோக்கி சிவனடியார்கள் விரும்பிகேட்டபடி யாவையெனினும் நீர் அவைகளை மறுமல் மகிழ்ச்சியோடு கொடுத்தலை கான் கேள்வியுறறு உம்மிடத்திலுள்ள ஒரு பொருளை விரும்பி இன்றைக்கு இங்கே வந்தேன். நீர் தருதற்கு இசைவீராயில் அந்தப்பொருள் இன்னது என்றுசொல்லுவேன் என்றார். அதற்கு இயற்பகையார் எப்படிப்பட்ட பொருளாயினும் என்னிடத்தில் இருக்குமாயின் அந்தப்பொருள் நமது கடவுளாகிய பரமசிவனுடைய அடியார்களுக்கு உரியபொருளேயாம், இதைக்குறித்துத் தேவரீர் சந்தேகிக்க

கூ—து—இயற்பகை நாயனார்

வேண்டுவதில்லை, திருவுள்ளம் விரும்பியதை இன்ன என்றுசொல்லியரு ளும் என்று சொல்ல ஐயர் உம் முடைய மனைவியை விரும்பிவந்தேன் என் றார்.

அப்பொழுது இயற்பகையார் முன்னிலும் பார்க்கமிகமகிழ்ந்துவண ங்கிநின்று சுவாமீ! தேவரீர் அடியேனிடத்தில் உள்ள பொருளினிய விரும் பிக்கேட்டது அடியேனுடைய பாக்கியம் என்றுசொல்லி, சிக்கிரமாக உள் ளேபோய், கற்பிலே சிறந்த தம்முடைய மனைவியாரை நோக்கி, நான் இன் றைக்கு உன்னை இந்தச் சிவனடியாருக்கும் கொடுத்துவிட்டேன் என்றார், உடனே மனைவியார் மனங்கலங்கிப் பின்னே தெளிந்து பிராணநாயகரே! நீர் கட்டளையிட்டது எதுவோ அதையே நான்செய்வேன் அதையனுதிச் செய் தற்கு உரியகாரியம் எனக்கு வேறென்று உண்டோ இல்லை என்றுசொல்லி அவரை வணங்க அவர் தமது மனைவியாரை அந்தவந்த சிவனடியாருக்கு மனைவியாக பற்றி வணங்கினார். மனைவியார்போய் அவ்வடியாருடைய பாத ங்களிலேவீழ்ந்து நமஸ்கரித்து எழுந்து நின்றார். அதுகண்டு இயற்பகை நாயனார் மனமகிழ்ந்து அவ்வையம்மாவணங்கி, இன்னும் அடியேன் செய்ய வேண்டிய பணியாது என்று விளவ, ஐயர் இத்தர்மினைணை நான் எனியே கொண்டுபோகையால் ஒங்கின்மலை பற்றுள்ள பந்துக்களையும் ஊரவர்க ளையும் சடக்கும் வரைகரும் அவர்களால் எனக்கு ஓர் இடையூறும் உண் டாகாதிருக்கும்படி நீ துணையாக வரவேண்டும் என்றார். இயற்பகைநாயனர் அதைக்கேட்டு இவர் கட்டளையிடுமுன் நான் நினைந்துசெய்யவேண்டிய இக்குற்றேவலைச செய்யாமல் இவர் சொல்லும்வரைக்கும் தாம்த்தித்தின்ற து குற்றம் எனறு நினைந்துத தூக்கித்து ஆயுதசாலையிலேபோய், போர்க் கோலங்கொண்டு வாளும்பரிசையும் எடுத்துக்கொண்டு, ஐயரிடத்திறகுவந்து அவரை வணங்கி, அவரையும் மனைவியாரையும் முன்போம்படிசெய்து, தா ம் பின்னேபோனார். அப்பொழுது இயற்பகைநாயனருடைய சுற்றத்தவர் களும் அவர்மனைவியாருடைய சுற்றத்தவர்களும், இயற்பகை பைத்தியத் தினாலே தன்மனைவியைக கொடுத்தானையும் அவனே ஒருவன் கொண்டு போவது நியாயமா? எனறு தங்கள மரபுக்கு வரும் பெருமபழியை நீக்கி க்கொள்ளும்பொருட்டு அவாகளைத் தொடர்க்கருதி, வேல்-வில்-வாள்முத லிய ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு எண்டமாருதம்போலத் தீவிரமாய் நடந்து, நகருக்குப்புறத்திலேபோய், ஐயருக்கு இருபக்கத்திலும் நெருங்கி ஆரவாரித்து, ஓ துட்டனே! எங்களுக்குப் பழிவராதபடி எங்கள்குலப்பெ ண்ணை விடுப்போ என்றுசொல்லி, அவரை வளைத்துக் கொண்டாகள். ஐயர் அதைக்கண்டு அஞ்சினவர்போல் இயற்பகைநாயனருடைய மனைவி யாரைப்பார்க்க அம்மனைவியார், சுவாமீ நீர் பயப்படவேண்டாம், இயற்ப கைநாயனர் அவர்களை வெல்லுவார் என்றார். இயற்பகைநாயனர் அதைக்

கேட்டு, அடியேன் அவர்கள் எல்லாரையும் இப்போது கொன்றுபோடுகிறேன் தேவரீர் அஞ்சவேண்டாம் எனறுசொல்லி, அங்குவந்தசுற்றத்தவர்களைப்பார்த்து, நீங்கள் என்வார்த்தைக்கு இசையாவீர்கள். ஒருவரும் எனக்குஎதிர் நில்லாமல் ஓடிப்பிழையுங்கள் என்றுகூற அவர்கள்ஏடா இயற்பகை நீஎன்னகாரியஞசெய்தாய், ஊரவர்கள் பேசும பழிமொழிக்கும் எங்கள் சுற்றத்தாருக்கள் நகைக்கும் நகைப்புக்கும் நீ சற்றுயினும வெட்கப்படவில்லை மனைவியைப் பிராமணனுக்குக் கொடுத்தோ நீ சாமாத்தியம் பேசுவது. நாமெல்லாரும் ஒருங்கே மடிவதன்றி இத்தப் பெண்ணைப்பிராமணனுக்குக் கொடுக்கவிடோம் என்றார்கள். உடனே இயற்பகைநாயனர் அதிககோபங்கொண்டு, உங்கள் சரீரங்களைத் துண்டம் துண்டமாக்கி உங்களுயிரைச் சுவர்க்கத்துக்கேற்றி ஐயனைத் தடையின்றிப் போகவிடுவேன் என்றுசொல்லி எதிர்க்க அவர்கள் அந்நாயனரோடு யுகதம்செய்யத் தொடங்காமல், அவர்மனைவியாரைக்கொண்டு செல்கின்ற ஐயருக்கு முறபட்டு அதிகோபத்தோடும் அவனைத் தடுத்தார்கள் அதுகண்டநாயனர் கோபங்கொண்டு. வாளினுலே இடசாரி வலசாரியாக மாறிமாறிச் சுற்றிவந்து அவர்களுடையதோள்களையும் கால்களையும தலைகளையும துணித்து விழுத்தி பின் ஒவ்வொருவராய்வந்து எதிர்த்தவர்களையும் கொன்று, மேல் எதிர்ப்பவர் ஒருவருமினறி யுத்தகளத்திலே உலாவினார, பின் இந்தச் செயற்கரும் செய்கையைச் செய்தநாயனர் ஐயனை நோக்கி சுவாமீ ! தேவரீர அஞ்சாவண்ணம் இத்தக் காட்டைக்கடக்கும் வரைக்கும் வருகிறேன் என்றுசொல்லி அவரோடுபோனர், திருச்சாய்க்காடு என்னும சிவஸ்தலத்தைக்குச் சமீபத்திலேபோனபொழுது ஐயா இயற்பகை நாயனரை நோக்கி, இனி நீர் திருமபிபோகலாம் என்றுசொல்ல நாயனர், அவருடைய திருவடிகளை வணங்கி அஞ்சலிசெய்து ஸ்தோத்திரம் பண்ணிக்கொண்டு திரும்பினர். அப்பொழுது ஐயர், இயற்பகையே இங்கேவா எனறுசொல்லி ஒலமிட்டார். நாயனர அந்த ஓசையைக் கேட்டு, அடியேன வந்துவிட்டேன் வந்துவிட்டேன் இன்னும் இடையூறு செய்பவர்கள் உண்டாயில், கொன்றுபோடுவேன் என்றுசொல்லிக்கொண்டுவர, ஐயா மறைந்தருளினர். வந்தநாயனர் அவரையகாணாமல் மனைவியாரை மாத்திரங்கண்டார. பினபு ஆகாயத்திலே பார்வதி சமேதராகிஇடபவாகனத்தில் எழுந்தருளிவந்த கைலாசபதியைக் கண்டார். ஆரூமைபினுலே உடனே விழுநதார், எழுந்து ஸ்தோதரதிரம் பண்ணினர். சுவாமி அவரைநோக்கி நமமேலும நம்முடைய அடியார்கள் மேலும் நிஷ்களங்கமான அன்புவைத்த இயற்பகையே நீ உன்மனைவியோடும் நம்முடனே வாஎன்று சொல்லி அந்தர்த்தானமானர். இயற்பகைநாயனரும் மனைவியாரும் சிவலோகத்தை அடைந்த பேரின்பத்தை அனுபவித்தது வாழ்ந்திருந்தார்கள். யுததத்திலே இறந்த அவர்கள் பந்துக்களும் வானுலகத்தைஅடைந்துஇன்பமனுபவித்தார்கள்.

சிவமயம.

ஐந்தாவது,

இளையான்குடிமாறநாயனார் புராணம்.

மன்னியவேளாண்டொன்மையிளைமாறா
வறுமையாலுணவுமிகமறந்தலைவரி
யுண்னருளரிருண்மழையினுண்டிவேண்டியும்பர்
பிரானணையவயலுழுதுவித்ததனு
செந்நெண்முளையமுதமனையுங்காலாகிச்
சிறுபயிரின்கதியமுதுதிருந்தச்செய்து
பன்னலருமுணவருந்தற்கெழுந்ததோநிப
பரலோழுழுதாடைபான்மையாரே.

இளையான் குடி யென்னும ஊரிலே வேளாளர் குலத்திலே, எத்தொழிலினும் சிறந்த கிருஷிகர்மத்தால்வரும் குற்றமற்ற ளவிறந்த பாக்கியத்தையும் சிவனடியார்கள் மேலே முழுமையும் பதிந்த அன்புகொண்டசித்தையையும் உடையவராகிய மாறனார் என்பவர் ஒருவரிருந்தார். அவ்வர்தம் முடைய கிருகத்துக்குவரும் சிவபத்தர்கள் எந்தவருணத்தாராயினுமஉண்மையாகிய அன்போடு அவர்களை எதிர்கொண்டு அஞ்சலிசெய்து இன்சொற்களைச்சொல்லி வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோய், பாதப்பிரக்ஷாலனம்பண்ணி, ஆசனத்திலிருத்தி, சைவாகமவிதிப்படி அருச்சித்து, பின்பு கசபபு, புளிப்பு, இனிப்பு, துவாப்பு, கார்ப்பு, உவர்ப்பு எனகிற் அறுவகைச்சுவையை யுடையனவாய் நக்கல், பருகல், உண்டல், தின்னல் என்னும் நான்கிற்கும் விஷயமாயுள்ள உணவுகளை அவரவர் விரும்பிடப்படி அமுதுசெய்விப்பார். இப்படித் தினந்தோறும் மகேசுரபூசைபண்ணுதலாகிய சிவபுண்ணியத்தினாலே ஐசுவரியம் அபிவிருத்தியாக அவர் குபேரனை ஒத்துவாழ்ந்திருந்தார். அப்படி இருக்கும் காலத்திலே பரமசிவனுனவர அவ்விளையான்குடிமாறநாயனார் இந்தச்செய்கையைச் செல்வம்வந்தகாலத்திலுன்றி வருமைவந்த காலத்திலும் தளராது செய்யவல்லவர் என்பதையும், தாம் கல்லோர்களுக்கு வறுமையைக் கொடுத்தல் அவர்கள் நயத்தின் பொருட்டே என்பதையும், அந்நயம் இறுதியிலேயே பலிக்கும் என்பதையும், அக்கருத்தறியாது அதற்குள் புண்ணியஞ்செய்த நமக்குக் கடவுள் இடர்செய்தாரே என்று அவரை நோதல் பழுதாம் என்பதையும் பிறர்க்குத்தெரிவித்தருளுக்

கும்பொருட்டுத திருவுளங்கொண்டு அந்நாயனரிடத்தில் உள்ளசெல்வமெல்லாம் காடோறும் சுமந்கி வறுமையெய்தும்படி அருள்செய்தார். அப்படிச் செல்வம சுருங்கவும் நாயனர் மகேசுர பூசையிலே பதிந்த தம்முடைய மனம் சிறிதும் சுருங்குதலினறி, தம்மிடத்துள்ள நிலங்கள் முதலியவற்றை விற்றும் தம்மைக் கூடவிறறு இறக்கதகக அவவளவு கடன்களை வாங்கியும் முனபோலவே தாம்செய்யும திருப்பணியையவிடாது செய்து வந்தார்.

அவரமெழக்காலதிலே மழைபெயயும ஒருநாள நிரவில நெடுநேரம் எதிபார்த்திருந்தமை ஒருவருடைய உதவியு ம இல்லாமலபகலமுழுதும் போசனஞசெயயாமையால பசி அதிகபபடட வீட டுகதவைப பூடடியபின்பு, மைலாரபதியானவர் சைவவெங்கொண்டு எழுந்தருளிவந்துகதவைத்தடடி அழைக்க நாயனர் கதவைத்திறந்து அவரை உளளே அழைத்துக்கொண்டுபோய, மழையினால நனைந்த அவர நுடைய திருமேனியை வஸதிரங்கொண்டு துடைத்து, திருத்தநகு இடங்கொடுத்து, அவருக்குஅமுதூட்டல் வேணடும் எனனும் ஆரசையிருநதியால தம்முடைய மனைவியாரை நோக்கி இத்தசைவர மிகபபரிகொளவருகினறார் நமக்கு புனமே போசனத்தக்கு ஒனறுமில்லை, ஆயினும் இவருக்கு எப்படியும் அன்னங் கொகக்வேணடுமெ நதறகு எனனசெயவோம எனறார். அதறகு மனைவியார் வீடடிலே ஒரு பதார்தமுமில்லை. அயலவாகளும் இனி உதவமாட்டார்கள். நெடுநேரம் ஆயிறறு அரிசிக்கடன் கேட்கப்போவதறகு வேறிடமும இல்லை, பாவியாகிய நான இதறகு என்னசெயவேன் எனறுசொல்லி பின்பு, இனறு பகறகாலதிலே வயலில்விதைக்கப்படட ஈரத்தால் முன்னமே மூளைகொண்டிருக்கின்ற நெல்லைவாரிக்கொண்டுவந்தால், இயன்றபடி சோறுசமைக்கலாம, இதுவையனறி வேறொருவழியும அறியேன என்று சொல்லித் துக்கித்தார். இததவாதமதை செவிப்புலபபடுதறகுமுன, இளையான் குடிமாறநாயனார மிக மனமகிழ்ந்து, அதறகு உடன்படடு, மிகமழை பொழிகின்ற மகா அந்தகாரமயமாகிய அத்தராதநிரியிலே ஒரு பெருங்கூடையைத தலையிலே கவிழத்துககொண்டு காலினாலே தடவிக் குறிவழியே தமமுடைய வயலிறசென்று, அதிலே அதிகமழையினால் நீரமேலே மிதக்கின்ற நெனமூளைகளைக் கையினாலே கோலி வாரி, கூடை நிறைய இட்டு, தலையிலேவைத்துச சுமநதுகொண்டு சிகரித்திலே திருமபிவந்தார். அவரை எதிரபார்த்துக்கொண்டு வாயிலிலே நின்ற மனைவியார் மனமகிழசியோடு அந்த நெனமூளையை வாங்கி சேறுபோம்படி நீரினாலே கழுவியூற்றி, பின்பு தமமுடைய பிராணநாயகரை நோக்கி, அடுப்பிலே நெருப்பு மூட்டுதறகு விறகு இல்லையே என்று சொல்ல, அவரிலமழியிருக்கின்ற. வீட்டின்மேலும்



கூரையிலுள்ள வரிச்சுக்களை அறுத்து விழுத்தினர். மனைவியார் அவை களை முறித்து அடுப்பிலே மாட்டி, சென்முளையை ஈரம்போய்ப் பதமாகும் படி வறுத்துமின் அரிசியாக்கி, நீரவார்த்துக் காய்ந்திருக்கிற உலையில்அதை யிட்டு சோறாக்கி, தம்முடைய நாயகனுரைப்பார்த்து, இனிக் கறிக்கு ஏன் னசெய்வோம், என்றார். உடனே நாயனார் புறக்கடைத் கோட்டத்திற்குச் சென்று, குழியினின்றும் மேறபடாத சிறுபயிகளைக் கையினுலே தடவிப் பிடுங்கிக்கொண்டுவந்து கறிசமைக்கும்படி கொடுக்க, மனைவியார் அவைக ளைவாங்கி ஆய்ந்து, நீரினுலே கழுவி தமது சாமர்த்தியத்தினுல்வெவ்வேறு கறியமுதுகள் செய்து முடித்து, நாயகருக்கு அமுதும் கறியும் பாகம்பண் ணப்பட் டமையைத்தெரிவித்து சைவரை அமுதுசெய்விப்போம் என்று சொன்னர். நாயகர் நித்திரைசெய்பவர்போலக் காட்டிய ஐயருக்குச் சமீப த்திற்சென்று சுவாமீ ! அமுதுசெய்யஎழுந்தருளும் என்றுசொல்லி அழை க்க, அவர் ஒரு சோதிலவரூபமாய் எழுந்து தோன்றினர். அதைக்கண்ட இளையான்குடிமாற நாயனரும் மனைவியாரும் நிகைத்துநின்றார்கள். பின்பு பரமசிவன் பார்வதிதேவியோடும் இடபரூடராய்த் தோன்றி, இளையான்கு டிமாறநாயனரை நோக்கி, அன்பனே ! நம்முடைய அடியார்களை அமுது செய்வித்த நீஉன்மனைவியோடும் நம்முடைய பதத்தை அடைந்து பேரின் பத்தை அனுபவித்துக்கொண்டிரு என்று திருவாய்மலர்ந்தருளி அந்தர்த் தானமானர்.

உ

சிவமயம.

ஆ ரூ வ து

மெய்ப்பொருணாயனர் புராணம்.

சேதிபர்நற்கோவலூர்மலாடமன்னர்திரு
வேடமெய்ப்பொருளாத்தெளிக்தசிக்தை
நீதியினுடன்பொருதுதோற்றமாற்ரு
னெடுஞ்சினமுங்கொடும்படையுநிகழாவண்ண
மாதவர்போலொருமூறைகொண்டணுகிவாளால்
வன்மைபுரிந்திடமருண்டுவந்ததனை
காதலுறமார்த்தாவென்றுகோகிக்
கடிதகலவீழ்த்திறைவனடிகைக்கொண்டாரே.

சேதிகாட்டிலே திருக்கோவலூரிலே, மலையமானுடையாருக்கு அரசர் வேதாகமங்களின் உண்மையை அறிந்தவரும் சிவனடியார்களுடைய

திருவேடத்தையே மெய்ப்பொருளெனச் சிந்தைசெய்பவரும் ஆகியமெய்ப்பொருணயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் தம்முடைய இராச்சியத்தைத் தருமநெறி தவறாமல் நடத்தியும், தம்மை எதிர்த்தபகைவர்களை ஜயங்கொண்டும், சிவாலயங்களெங்கும் நித்தியநைமித்தியங்களைச் சிறப்பாகநடத்தியும், சிவபத்தர்கள்வந்தபொழுது மனமகிழ்ச்சியோடும் வேண்டியதிரவியங்களைப் பூர்த்தியாகக்கொடுத்தும் வந்தார். இப்படி நடக்கும்காலத்திலே, முத்தநாதன என்கின்ற ஓர் அரசனுவன் அவனை வெல்லுதற்குவிரும்பி, யுத்தசகத்தனுகி, அவரோடு பொருது, யானை-குதிரை-தேர்-காலாள் எனனும சேனைகளைப பலமுறை இழந்து தோறறு அவமானபபட்டுப் போனன. பின்பு அவன யுத்தத்தினுலே அவரை ஜயிகக்மாடடாதவ னுகி, அவரிடததிலே இருக்கின்ற அடியாரபதநிலைய அறிநது, விபூதிரக்கினைற அவ்வடியார் வேடங்கொணடு அவரைக் கபடத்தினுல்வெல்லநினைநது, சரீரமுழுதிலும் விபூதிரத்துசடைகளைச் சோதததுக்கட்டி, புதகக்கவளியிலோலத தோன்றுகினைற ஆயுதத்தை மறைததுவைதததிருக்கினைற ஓர் கவளியை எடுத்துக்கொண்டு திருக்கோவலூரிறசென்று மெய்ப்பொருணயனருடைய அரண்மனைவாயிலை அடைந்தான். அப்பொழுது வாயில் காவலாளர்அவனை அஞ்சலிசெய்து சுவாமீ உளளே எழுந்தருளும் என்றுசொல்ல, அப்முத்தநாதன் உள்ளேபோய் மற்ற வாயில்களையும் அப்படியே கடந்துசென்று, இறுதிவாயிலை அடைநதபொழுது அவ்வாயிற் காவலாளனுகிய தத்தனென்பவன் இப்பொழுது இராசா நித்திரைசெய்கின்றார். நீர் சமயமறிந்து போகவேண்டும் என்றன். அதைக்கேட்ட முதநாதன் நான் அவருக்குச் சாஸநிரோபதேசஞ செயயபோகினறபடியால நீ பனனைதடுக்கலாகாது என்றுசொல்லி உள்ளேபுகுந்து மெயப்பொருணயனர் கடடிலிலே நித்திரைசெய்ய அவர்மனைவியார் பக்கத்திலிருக்கக் கண்டும், சமீபத்திலே சென்றன். அபபொழுது மனைவியார் சிக்கிரமாக எழுந்து பெய்பபொருணயனாரை எழுப்ப, அவரிழிகதெழுந்து அவனை எதிர்கொணடு வணங்கிநின்று சுவாமீ தேவரீர் இங்கே எழுந்தருளுவதறகுக் காரணம் யாது என்று வினவினர் அதறகு முத்தநாதன உங்களகடவுளாகிய பரமசிவன ஆதிகாலத்திலே அருளிச்செய்த சைவாகமங்களுள் எவவிடத்தும் காணப்படாத ஓர் ஆகமததை உமகருப் போதிக்கும்படி கொண்டுவநதேன் என்றன். மெய்ப்பொருணயனர் அதைக்கேட்டு இதைபபார்க்கிலும் உயர்ந்த பேறு அடியேனுக்கு உணடோ அந்தச் சைவாகமத்தை வாஙகித்து அடியேனுக்கு அதன் பொருளை அருளிச்செய்யவேண்டும் என்று பிராத்திக்க முத்தநாதன் பட்டத்தரசி இல்லாமல் நீரும் நானும் வேறிடத்திருக்கவேண்டும் என்றன். உடனே மெய்ப்பொருணயனர் தம்முடைய மனைவியாரை அந்தம்புரத்துக்கு போமபடிசெய்து பொயவேடங்கொண்ட முத்தநாதனை ஆசனத்தின்

மேல் இருக்கி, தாம் கீழே இருந்துகொண்டு இனி அருளிச்செய்யும் என் ஊர். முத்தநாதன் தன்கையில் இருந்த வஞ்சக்கவளிகையை மடியின்மே லேவைத்து புத்தகம் அவிழ்ப்பவன்போல அவிழ்த்து மெய்ப்பொருளை ஞர் வணங்கும்போது அக்கவளியில் மறைத்துவைத்த உடைவாளை எடித் து அவனைக் குத்த அவர் சிவவேடமே மெய்ப்பொருளென்றுஅவனை வண ங்கினர், அம்முத்தநாதன் உள்ளே புகுந்தபொழுதே இராசாவுக்கு என்ன அபாயம் சம்பவிக்குமோ என்று மனசை அங்கேயே செலுத்திக்கொண்டி ருந்த தத்தனென்பவன் கொடியளவிலே உள்ளேபுகுந்தவனைவாளினால் அப்பகைவனை வெட்டப்போனன். அதற்கு முன் உடைவாளினாலே குத்த ப்பட்டு இரத்தம்சொரிய விழப்போகின்றமெய்ப்பொருளைர்விழும்பொ ழுது தத்தனே இவர் சிவனடியாராதலால் இவருக்கு ஒரு இடையூறும்செ ய்யாதே என்று கையினால் தடுத்து விழுந்தார். அப்பொழுது தத்தன்மெ ய்ப்பொருளையனைத் தலையினல் வணங்கி அவனைத் தாங்கி அடியேன் செய்யவேண்டியகுற்றேவல்யாது என்றுகேட்க மெய்ப்பொருளைர்வழி யிலே இவருக்கு யாவரொருவரும் இடையூறுசெய்யாதபடி இவரை யழை த்துகொண்டுபோய்விடு என்றுசொன்னர்.

அப்படியே தத்தன் முத்தநாதனை அழைத்துக்கொண்டு போம்பொ ழுது அம்முத்தநாதன் இராசாவைக் குத்தின சங்கதியை அறிந்தவர்களெ ல்லாரும் அவனைக்கொல்லும்படி வந்து சூழச்சூழ, அவர்களெல்லாரையும் இத்தச் சிவபத்தருக்கு ஒருவரும் இடையூறுசெய்யாதபடி இவரை அழை த்துக்கொண்டுபோய் விடும்பொருட்டு இராசாவே எனக்கு ஆஞ்ஞாபித்தா ர் என்று சொல்லித்தடுத்தான். அவர்களெல்லாரும் அதைக் கேட்டவு னே பயந்து நீங்கிவிட தத்தன் அவனை அழைத்துக்கொண்டு நகரத்தைக்க டந்துசென்று அவனுக்குரிய காட்டுவழியிலே அவனை விட்டு நகரத்துக்கு த்திரும்பி, சிவவேடங்கொண்ட முத்தநாதனை யாதொரு இடையூறுவராம ல் அழைத்துக்கொண்டுபோய்விட்ட சமாசாரத்தைக் கேட்பதற்கு விரு ம்பி முன்னேயே நீங்கிவிடக்கூடிய உயிரைத் தாங்கிக்கொண்டிருக்கும்மெ ய்ப்பொருளையனருக்கு முன்சென்று வணங்கிநின்று, சிவபத்தரை இடை யூறு ஒன்றும் வராதபடி கொண்டுபோய் விட்டேன் என்று சொன்னன். அ தைக்கேட்ட மெய்ப்பொருளையர். இன்றைக்கு நீ எனக்குச்செய்த உப காரத்தை வேறுர்செய்யவல்லவர் என்று சொல்லி பின்பு தமக்குப்பின் அர சாளுதற்குரிய குமாரர்களையும் மந்திரி முதலானவர்களையும் நோக்கி சை வாகமவிதிப்படி விபூதிமேல் வைத்தஅன்பைப் பாதுகாக்கும்படி போதித்து கனகசபையிலே ஆனந்தத்தாண்டம் செய்தருளுகின்ற சபாநாதரைத்தியா னம்பண்ணினர். அப்பொழுது சபாநாதர் மெய்ப்பொருளையருக்குத் தோன்றி, அவரைத் தம்முடைய திருவடியிலே சேர்த்தருளினர்.

ஏழாவது,

விறன்மிண்டநாயனார் புராணம்.

விளங்குதிருச்செங்குன்றூர்வேளாண்டொன்மை
விறன்மிண்டர்திருவாரூர்மேவுநாளில்
வளங்குலவுதொண்டரடிவணங்காதேகும்
வன்முரண்டன்புறகவனவலியவாண்ட
தளங்குசடைமுடியோனும்புறமென்றன்பாற்
சொல்லுதலுமவர்தொண்டத் தொகைமுன்பாட
வுளங்குளிரவுள தென்றாதலுலண்ண
லுவகைதரவுயர்கணத்துளோங்கினீர்.

மலையமானாட்டிலே செங்குன்றூரிலே வேளாளர் குலத்திலே, பரம சிவனுடைய திருவடிகளே மனசில் இருத்தி உட்பற்றுப் புறப்பற்றுக்களே அறுத்தவரும் அடியார் பத்தியிலே உயர்வொப்பில்லாதவரும் ஆகியவிறன் மிண்ட நாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சிவஸ்தலங்களுக்குப் போனபொழுதெல்லாம், முன் அடியார் திருக்கூட்டங்களுக்குஎதிரேபோய் அவர்களே வணங்கிக் கொண்டே, பின் சுவாமியை வணங்குகினறவர், அவர் தாம்வசிக்கின்ற மலைநாட்டை நீங்கி பலதலங்களிலும் சஞ்சரித்து, சிவனடியார்கள் ஒழுகும் ஒழுக்கத்தை அனுசரித்து. திருவாரூரை அடைந்து சுவாமி தரிசனஞ் செய்துகொண்டிருந்தார், ஒருநாள் சுந்தரமூர்த்தி சுவாமிகள் நேயநாரிய மண்டபத்தில் இருக்கின்ற சிவனடியாராகளே அடைந்து வணங்காமல் ஒரு பிரகாரம் ஒதுங்கிச்சென்றதை அவ்விறன்மிண்டநாயனர்கண்டு, அடியார்களே வணங்காதற் செல்கின்ற வன்முரண்டன் அவ்வடியார்களுக்குப் புறகு அவனை வலிய ஆட்கொண்ட பரமசிவனும் புறகு என்னூர். சுந்தரமூர்த்திசுவாமிகள், அவ்விறன்மிண்ட நாயனரிடத்திலுள்ள சங்கமபத்தி வலிமையைக் கண்டு, அவ்வடியார்கள்மேலே திருத்தொண்டத் தொகை என்னும் திருப்பதிகத்தைப்பாடியருளினர், அதைக்கேட்டவிறன் மிண்டநாயனர் மிகமகிழ்ந்து இவ்வன்முரண்டருடைய மனம் அடியாரிடத்திலே பதிந்திருக்கின்றது என்று அருளிச்செய்தார். இத்தச்சங்கமபத்திவலிமையைக்கண்ட பரமசிவனனவர் அவ்விறன்மிண்ட நாயனரைத் தம்மைச் சேவிக்கின்ற கணங்களுக்குத் தலைவராக்கியருளினர்.

ஈ-வது-விறன்மிண்ட நாயனார்



சிவமயம்.

எட்டாவது

அமர்நீதிநாயனார் புராணம்.

பழையாறைவணிகர்மர்நீதியார்பாற
பரவசிறமுநிவடிவாய்ப்பயிலுங்கல்லூர்ப்
குழைகாதர்வந்தொருகோவணத்தைவைத்துக்
கொடுத்ததனையெடுத்தொளித்துக்குளித்துவந்து
தொழிலாருமதுவேண்டிவெருண்டுநீரித்
துலையிலிடுங்கோவணமேர்தூக்குமென்ன
வெழிலாரும்பொன்மனைவியிளஞ்சேயேற்றி
யேறினார்வானுலகுதொழுவேறினாரே.

சோழநாட்டிலே பழையாறை என்னும் ஊரிலே வைசியர் குலத்திலே மகாஐசுவரியமுள்ளவரும்சிவனடியார்களேஅமுதுசெய்வித்துஅவரவர் குறிப்பறிந்து கந்தை, கீள், கோவணம் என்பவைகளைக் கொடுப்பவரும் ஆகிய அமர்நீதி நாயனர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் திருநல்லூர்என்னும் சிவஸ்தலத்திலே மகோற்சவதரிசனஞ் செய்யவரும் சிவனடியார்கள் அமுதுசெய்யும் பொருட்டு ஒரு திருமடம் கட்டுவித்துக்கொண்டு தம்முடைய சுற்றத்தார்களோடும் அவ்விடத்திற் போய்ச்சேர்ந்து, மகோற்சவதரிசனஞ்செய்து தம்முடைய மடத்திலே சிவனடியார்களே அமுதுசெய்வித்துக்கொண்டு, மனமகிழ்ச்சியோடும் இருந்தார். இருக்கும் நாட்களிலே ஒருநாள் பரமசிவனுடனேவர் பிரமணவருணத்துபிரமசாரிவடிவங்கொண்டு, இரண்டு கௌபீனங்களேயும் விபூதிப்பையையும் கட்டியிருக்கின்றமுருகண்டைக் கையிலேபிடித்துக்கொண்டு, அத்தத்திருமடத்திற்குவந்தார், அதுகண்ட அமர்நீதிநாயனர் மனமகிழ்ச்சியோடும் முகமலர்ச்சியோடும் அவரை எதிர்கொண்டு வணங்கி, சுவாமீ! தேவரீர் இங்கே எழுந்தருளிவருதற்கு அடியேன் பூர்வத்தில் என்னதவம் செய்தேனோ என்றுசொல்லிச் சம்மானம்பண்ண பிரமசாரியானவர் அவரைநோக்கி, நீர் அடியார்களே அமுதுசெய்வித்து அவர்களுக்கு வஸ்திரங்களும் கந்தைகளும் கீள் கௌபீனங்களும் கொடுக்கின்றீர் என்பதைக்கேள்வியுற்று, உம்மைக்காணுதற்கு விரும்பிவந்தோம் என்றார். அதுகேட்ட அமர்நீதிநாயனர், இத்தத் திருமடத்திலே பிரமணர்கள் போசனம்பண்ணும் பொருட்டுப் பிரமணர்கள்பாக

ம்பண்ணுவதும் உண்டு தேவரீரும் இங்கே அமுது செய்தருள வேண்டும் என்று பிரார்த்தித்தார். பிரமசாரியானவர் அதற்கு உடன்பட்டு, நாம்காவேரியிலே ஸ்நானம் பண்ணிக்கொண்டு வருவோம் ஒருபோது மழைவரினும் தரித்துக்கொள்ளும்பொருட்டு நீர் இந்த உலர்ந்த கௌபீனத்தை வைத்திருந்து தாரும் எனறுசொலலி, தண்டிலே கட்டப்பட்டிருக்கின்ற இரண்டு கௌபீனங்களில் ஒன்றை அவிழ்த்து இந்தக் கௌபீனத்தின் மகிமையை உமக்கு நான் சொல்லவேண்டுவதில்லை நான் ஸ்நானம் பண்ணிக்கொண்டு வரும்வரைக்கும் நீர் இதைவைத்திருந்து தாரும் என்று அவர்கையிலேகொடுத்துவிட்டு, காவேரியிலே ஸ்நானம் பண்ணுதற்குப்போக அமர்நீதிநாயனார் அந்தக் கௌபீனத்தை ஒரு தகுந்த இடத்திலே சேமித்துவைத்தார், ஸ்நானம் பண்ணப்போன பிரமசாரியானவர் அமர்நீதிநாயனார் சேமித்துவைத்த கௌபீனத்தை அது வைக்கப்பட்ட ஸ்தானத்திலின்றும் நீங்கும்படிசெய்து ஸ்நானம் செய்துகொண்டு மழைபொழிய நனைந்து திருமடத்தை அடைந்தார். அமர்நீதிநாயனர் அதுகண்டு எதிர்கொண்டு சமயலாயிறறு என்றுசொல்லி வணங்க பிரமசாரியார் இனி அக்நாயனருடைய அன்பாகிய ஜலத்திலே முழுகவேண்டி அவரைநோக்கி ஈரம் மாற்றவேண்டும் தண்டிலே கட்டப்பட்டிருக்கின்ற கௌபீனமோ ஈரமாயிருக்கின்றது, உம்மிடத்திலே தந்த கௌபீனத்தைக் கொண்டுவாரும் என்றார். அமர்நீதிநாயனர் சிக்கிரமாக உள்ளேபோய்ப்பார்த்து கௌபீனத்தைக்காணுதவராகி, திகைத்து மற்றை இடங்களிலுந் தேடிக்காணுமையால் மிகுந்ததுக்கங்கொண்டு வேறொரு கௌபீனத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டு, பிரமசாரியார் முன்சென்று சுவாமீ ! தேவரீர் தந்த கௌபீனத்தைவைத்த இடத்திலும் பிறவிடங்களிலுந் தேடிக்கண்டிலேன், அதுபோனவிதம் இன்னதென்று அறியேன், வேறொரு நல்ல கௌபீனம் கொண்டுவந்தேன். இது கிழிக்கப்பட்ட கோவணமன்று செய்யப்பட்ட கோவணமே தேவரீர் கேணந்த கௌபீனத்தைக் கவர்ந்து இந்தக்கௌபீனத்தைச் சாத்தி அடியேன் செய்த குற்றத்தைப் பொறுத்தருளும் என்று பிரார்த்தித்தார், அதைக்கேட்டபிரமசாரியார் மிகக்கோபித்து உம்முடைய நிலைமை நன்றுயிருக்கின்றது, நெடுநாள் செல்லவும் இல்லை இன்றைக்கே நான் உம்மிடத்தில் வைத்த கௌபீனத்தைக் கவர்ந்துகொண்டு அதற்குப்பிரதியாக வேறொரு கௌபீனத்தை ஏற்றுக்கொள்ளுமென்று நீர் சொல்வது என்ன, சிவனடியார்களுக்கு நல்ல கௌபீனம் கொடுப்பேன் என்று நீர் ஊரிலே பிரசித்தம் செய்தது என்னுடைய கௌபீனத்தைக் கவர்தற்கோ? நீர் செய்கின்ற இவ்வர்த்தகம் நன்றுயிருக்கின்றது என்றுசொல்ல அமர்நீதிநாயனர் பயந்து முகம்வாடிநீடு நடுங்கி சுவாமீ ! அடியேன் இக்குற்றத்தை அறிந்து செய்தேனல்லேன், இதைப்பொறுத்தருளும் தேவரீருக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளை

ல்லாம் செய்கின்றேன் இந்தக் கோவணமன்றி வெகுபொன்களையும் பட்டாடைகளையும் இரத்தினங்களையும் தருகிறேன் எற்றுக்கொள்ளும் என்றார், அதற்குப் பிரம்சாரியார் கோபக்கணிக்தவர்போலத் தோன்றி பொன்களும் பட்டாடைகளும் இரத்தினங்களும் எனக்கு ஏன் காண்தரிப்பதற்கு உபயோகமாகியகௌபீனத்துக்கு ஒத்த நிறையுள்ள கௌபீனம்தான் தாற்போதும் என்று சொல்ல அமர்நீதிநாயனார் மனமகிழ்ந்து, எதனுடைய நிறைக்குச் சரியாகிய கௌபீனத்தைத் தரல்வேண்டும் என்றுகேட்டார். பிரமசாரியார், நீர் இழந்தகௌபீனத்தின்நிறைக்கு ஒத்த நிறையையுடைய கௌபீனம் இது என்றுசொல்லி, தமது தண்டிலே கட்டப்பட்டிருந்த கௌபீனத்தை அவிழ்த்து இதற்கு ஒத்த நிறையுள்ளதாகக் கௌபீனத்தை நிறுத்துத்தாரும் என்றார். அமாநீதிநாயனர் மிகநன்று என்றுசொல்லி ஒரு தராசைக்கொண்டுவந்துகாட்ட, பிரமசாரியார், அத்தக்கௌபீனத்தை ஒருதட்டிலேவைத்தார். அமர்நீதிநாயனர் தம்முடைய கையிலிருந்தபெய்யப்பட்ட கௌபீனத்தை மற்றத் தட்டிலேவைத்தார். அது ஒத்த நிறையிலே நில்லாமல் மேலெழுந்தது. அதைக் கண்டு, அடியார்களுக்குக் கொடுக்கும்படி தாம்வைத்திருந்த கோவணங்களெல்லாவற்றையும் கொண்டுவந்து ஒவ்வொன்றாக இட இட, பின்னும் தூக்கிக்கொண்டு எழும்பியது, அதைப் பார்த்து, ஆச்சரியம் அடைந்து, பல வஸ்திரங்களையும் பட்டுக்களையுங்கொண்டுவந்து இட இட, பின்னும் உயர்ந்தது. அதுகண்டு அநேகம் வஸ்திரப் பொதிகளைக் கொண்டுவந்து இட்டார். இட்டும், அத்தடவுமேலே எழும்ப கௌபீனத்தட்டுக் கீழேதாழ்ந்தது. அமர்நீதிநாயனர் அதைக்கண்டு மிகஅஞ்சி, பிரமசாரியாரை வணங்கி எண்ணிறந்த வஸ்திரப்பொதிகளையும் நூற்கட்டுகளையும் குவிக்கவும் தட்டு உயர்கின்றது என்னுடைய மற்றத் திரவியங்களையும் இத்தட்டிலே ஏறுதற்கு அனுமதிதந்தருளும் என்றார். அதற்குப்பிரமசாரியார் இனி நாம் வேறென்ன சொல்லுவோம், மற்றத் திரவியங்களையும் இட்டுப்பாரும் எப்படியும் நம்முடைய கோவணத்திற்கு ஒத்த நிறையில் நிறகவேண்டும் என்றார். அமர்நீதிநாயனர், ரவரத்தினங்களையும் பொன், வெள்ளி முதலிய உலோகங்களையும் சுமை சுமையாக எடுத்துவந்து இட இட, தட்டு எழுந்தபடியே மேலே நின்றது, அமர்நீதிநாயனர் அதைக்கண்டு பிரமசாரியாரை வணங்கி, என்னுடைய திரவியங்களில் ஒன்றும் சேஷியாமல் இந்தத் தட்டிலே இட்டேன் நானும் என்மனைவியும் புத்திரனும் மாதந்தோறும் சேஷித்து நிற்கின்றோம்தேவரீருக்குப்பிரியமாகில், இனி நாங்களும் இத்தட்டில் ஏறுவதற்கு அனுமதி தந்தருளும் என்றார். பிரமசாரியாரும் அதற்கு உடன்பட்டார். அதனைண்டு அமர்நீதிநாயனர் மனமகிழ்ந்து, பிரமசாரியாரைவணங்கி, தம்முடைய மனைவியாரோடும் புத்திரரோடும் தாளிசவலஞ்செய்து, சிவனடியார்களுக்குச் செய்யும் திருத்தொண்டிலே நாம் தவறாமல் இருக்கதோமாகில் நாம் எறினமாத்திரத்தே இந்தத்த

ட்டு மற்றத்தட்டுக்கு ஒத்துநிற்கக்கடவது என்றுசொல்லி, திருக்கல்லாரில் வீற்றிருக்கின்ற பரமசிவனேவணங்கி ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஓதிக்கொண்டு, மகிழ்சசியோடு தட்டிலே ஏறினர். ஏறினவுடனே, பரமசிவனுடைய திருவாயிலே சாத்தப்படும் கௌபீனமும் பத்தியிலே சிறிதும் குறைவில்லாத அமர்நீதிநாயனருடைய அடிமைத்திறமும மகான்மியத்தில் ஒத்திருக்கபடியால் துலாக்கோலின் இரண்டு தட்டுக்களும் ஒத்துநின்றன. அவ்வற்புதத்தைக் கண்டவர்களெல்லாரும் அமர்நீதிநாயனரை வணங்கி ஸ்தோத்திரஞ்செய்தார்கள். தேவர்கள் ஆகாயத்தினின்றும் கற்பகவிருக்ஷங்களின் புஷ்பங்களை மழைபோலப் பொழிந்தார்கள். பரமசிவனனவர் தாம் கொண்டுவந்த பிரமசாரிவடிவத்தை ஒழித்து ஆகாயத்திலே பார்வதிதேவியோடு இடபாரூடராய்த் தோன்றி, தமமைத் தரிசித்து அத்தத்தராசுதட்டிலே தானே நின்றுகொண்டு ஸ்தோத்திரம் செய்கின்ற அமர்நீதிநாயனாயும் அவர்ம னைவியாரையும் புத்திரனையும் கடாட்சித்து, நீங்கள் மூவரும் கம்முடைய அருளைப்பெற்று கம்முடைய சந்நிதானத்திலே கம்மை வணங்கிக்கொண்டு இருங்கள் என்று அருளிச்செய்து மறைந்தருளினர். அமர்நீதிநாயனரும் அவர்மனைவியாரும் புத்திரனும் அக்கட வருடைய திருவருளினால் அத்தத் தராசுதானே தேவவிமானமாகி மேலேசெல்ல அவரோடு சிவலோகத்தை அடைந்தார்கள்.

சிவமயம

திருச்சிற்றம்பலம்

இரண்டாவது

இலைமலிந்தசருக்கம்

ஒன்பாவது,

எறிபத்தநாயனார் புராணம்.

திருமருவுகருவூரிலையாசரத்தருஞ்
சிவகாமியான்மலரைச்சித்தயானை
யரனெறியேமொழிபத்தர்பாகரோடு
மறவெறியதென்னுயிருமகற்றிமன்னு
புரவலனர்கொடித்தபடையன்பால்வாங்கிப்
புரிந்தரிவான்புகவெழுந்தபுனிதவாகாம
சரியினுடன்விழுந்தாருமெழுந்தார்தாழுங்
கணநாதரதுகாவல்கைக்கொண்டாரே.

சோழமண்டலத்திலே இராஜதானியாகிய கருவூரிலே, ஆநிலை என்னும் ஆலயத்தில் வீற்றிருக்கின்ற பரமசிவனை வழிபடுகின்றவரும், அவருடைய அடியார்களுக்குத் திருத்தொண்டு செய்கின்றவரும், அவ்வடியார்களுக்கு ஆபத்து வந்தகாலத்தில் வெளிப்பட்டு அவ்வாபத்துக்குக் காரணராயிருந்தவர்களை மழுவினுல் வெட்டுகின்றவரும் ஆகிய எறிபத்தநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார்.

அவர்காலத்திலே சிவகாமியாண்டார் என்கின்ற ஒரு பெரியவர் தினந்தோறும் புஷ்பங்கொய்து மாலைகட்டி அவ்வாலயத்தில் வீற்றிருக்கும் கடவுளுக்குச் சாத்திவந்தார். ஒருநாள் முன்போல வைகறையிலே எழுந்து போய், ஸ்நானஞ்செய்து வாயை வஸ்திரத்தினுலே கட்டிக்கொண்டவனத்துக்குப் போய் புஷ்பங்களை அலசுகையில் தண்டை ஏந்தி சுவாமிக்குத் திருப்பள்ளித் தாமங்கட்டிச் சாத்தும்பொருட்டு அத்தச்-சிவாலயத்தை நோக்கிச் சிக்கிரமாக நடந்தார்.

க்கும்பொழுது அங்கநிலிருக்கின்ற அரசராகிய புகழ்ச்சோழருடைய பட்டவர்த்தன யானையானது மகாகவபியினை முதல்காளசகிய அகாளிலே காவேரிநதியிலே முழுகி மிக அலங்கரிக்கப்பட்டு, குத்துக்கோற்காரர்முன்னே ஓடி தன்மேலேறிய பாகர்களோடும் ஓர் வீதியிலே விரைவாகச்சென்று தனக்கு முன்னே செல்லும் சிவகாமியாண்டாரைப் பின்றொடர்ந்தோடி, அவர்கையிலே தாங்கிய தண்டிலே தூங்குகின்ற பூங்கூடையைப் பறித்துச்சிதறியது. அந்த யானையின்மேல் இருக்கின்ற பாகர்கள் அதைக்கண்டு சிக்கிரமாக அதைச் செலுத்திக்கொண்டுபோக சிவகாமியாண்டார் பதைபதைத்துக் கோபித்து, அந்த யானையைத் தண்டினால் அடிக்கும்படி அதற்குப்பின்னேபோனார். யானை அவர் சமீபிக்கவொட்டாத மகாகதிகொண்டு சென்றது. சிவகாமியாண்டார் வயோதிகராதலாலும் அந்த யானைக்குப்பின்விரைந்து செல்லச் சக்தியில்லாதவராகி தவறி விழுந்து நிலத்திலே கைகளேமோதிஎழுந்து நின்று, அதிதுக்கங்கொண்டு தேவரீருக்குச் சாத்தும்படி கொண்டுவந்த பூவை யானையா சிந்துகின்றது சிவதா சிவதாஎன்றுசொல்லி ஓலமிட்டார். அதை எதிரேவந்த எறிபத்தநாயனார் கேட்டு மிகக்கோபித்து மழுவை எடுத்துக்கொண்டு ஓடிவந்து சிவகாமியாண்டாரைக் கண்டு வணங்கி உமக்கு இந்தத் துன்பத்தைச்செய்த யானை எங்கே போய்விட்டது என்று கேட்க அவர் சுவாமிக்குச் சாத்தும்படி நான்கொண்டுவந்த பூவைப் பறித்துச் சிந்திவிட்டு இத்தத் தெருவழியே தான்போகின்றது எனார். உடனே எறிபத்தநாயனர் அதிக கோபங்கொண்டு அதிசிக்கிரமாக ஓடிப்போய்யானையைச் சமீபித்து மழுவைவீசி அதன்மேலே பாய்ந்தார். பாயவும் யானை கோபித்து எறிபத்தநாயனர் மேலே திரும்ப, எறிபத்தநாயனர் சற்றும் அஞ்சாமல் அதைத் தடித்து அதினுடைய துதிக்கையைத் துணித்தார். அப்பொழுது யானை கதறிக் கீழே விழுந்து புரண்டது. பின்பு எறிபத்தநாயனர், அதற்கு முன்னேயும் குத்துகோற்காரர் மூவரும் அதன்மேல் எறியிருந்த பாகர்கள் இருவரும் ஆகிய ஐவரைக்கொன்று நின்றார்.

அந்த ஐவரை ஒழிந்த மற்றவர்கள் ஓடிப்போய் புகழ்ச்சோழருடையவாயிற்காவலாளரை நோக்கி பட்டவர்த்தன யானையையும் பாகர்கள் சிலரையும் சிலர்கொன்றுபோட்டார்கள். இதை ராஜாவுக்குத் தெரிவியுங்கள் என்று சொனனார்கள். உடனே வாயிற்காவலாளர்கள் அரசனிடத்திலே போய் அவரை வணங்கி அந்தச் சமாசாரத்தைத் தெரிவித்தார். அரசன் அதைக்கேட்டமாத்திரத்தே அளவிறந்த கோபங்கொண்டு புறப்பட்டு குதிரையில் ஏறி சதுரங்கசேனைகளோடும் விரைந்துசென்று யானையும் பாகரும் இறந்த போர்க்களத்தை அடைந்து அங்கேநின்ற சிவவேடந்தரித்த எறிபத்தநாயனரைமாத்திரம் கண்டு, யானையைக் கொன்றவர் அவர் என்பதை அறியாதவராகி யானையைக்கொன்றவர் யாவர் என்றுகேட்டார். பாகர்கள் சமீ

பத்திலேபோய் வணங்கிநின்று மழுவைத் தரித்துக்கொண்டு இவ்விடத்தில் நிற்கின்றவரே யானையைக்கொன்றவர் எனறார்கள். அப்பொழுது புகழ்ச் சோழர் இவரிவபத்தராகையால் அந்தயானைகுற்றஞசெய்தாலன்றி அதைக்கொல்லார் அது யாதோ குற்றஞ்செய்ததிபோலும் என்று நினைத்து, தம் முடைய சேனைகளை அவ்விடத்துக்கு வரவொட்டாமல் நிறுத்தி குதிரையி னின்றும் இறங்கி, இந்த அடியவரானைக்கு எதிர் போனபொழுது அ தினுலே இவருக்கு யாதொரு அபாயம் சம்பவியாமல் இருக்கும்படி பூர்வ சன்மத்திலே தவஞசெய்திருக்தேன் இந்தப் பெரியவர் இவ்வளவு கோபங் கொள்ளும்படி என்னபிழை உண்டாயிற்றோ என்று சொல்லிப்பயந்து எறி பத்தநாயனர் முன்னேசென்று அவரை வணங்கிநின்று, சுவாமீ ! தேவரீரே இந்த யானையைக் கொன்றீரென்பதை நான முன்னறிந்திலேன் அதுநிற்க இந்த யானைசெய்த குற்றத்தின்பொருட்டு இதனைப்பாகரோடு கொன்றது மாத்திரம் போதுமா சொல்லியருளும் என்றார். எறிபத்தநாயனர் புகழ்ச் சோழரை நோக்கி, சிவகாமியாண்டார் சுவாமிக்குச்சாத்தும்படி கொண்டு வந்த பூவை இந்தயானை பறித்துச் சிந்தினதினுல் நான் இதைக்கொன்றேன், யானை தீங்குசெய்தபொழுது குத்துக்கோற்காரரும் பாகர்களும் அதை வி லக்காதபடியால் அவர்களையுங்கொன்றேன். இதுவே இங்குகிடந்த சமா சாரம் என்றார். புகழ்ச்சோழர் அதைக்கேட்டுப் பயந்து எறிபத்த நாயனு ரை வணங்கி சிவனடியாருக்குச்செய்த அபராதத்துக்கு இந்த யானையை யும் பாகரையும் குத்துக்கோற்காரரையும் கொன்றதுமாத்திரம் போதாது அடியேனையும் கொல்லவேண்டும், பெரும்பாவியாகிய சிறியேனைத் தேவரீ ருடைய திருக்கரத்தினிருக்கின்ற மங்கலம்பொருந்திய மழுவாயுதத்தினுலே கொல்வது நியாயமன்று என்றுசொல்லி, உடைவாளை உறையினினறும்உ ருவி, இதினுலேகொன்றருளும் என்றுநீட்டினார். எறிபத்தநாயனர் அதை க்கணடு, அவருடைய அளவிறந்த அன்பைகருதி ஆச்சரியம் அடை ந்து அவர் நீட்டியவாளை வாங்காமல் சொற்பக்ஷணம் தாழுத்துநின்று பின்பு அவர் கையிலேவாள் இருந்தால தம்மைத்தாமே மாய்த்துக்கொள்ளுவார என்று நினைந்து அஞ்சி அதைவாங்கினார். வாங்கிய எறிபத்தநாயனரைப் பு கழ்ச்சோழர் வணங்கி நின்று இக்தசிவபத்தர் என்னை வாளினுலே கொன றுன் குற்றத்தைத் தீர்க்கும்படி பெற்றேன் என்றார். எறிபத்தநாயனர் அதைக்கேட்டு மிகவஞ்சிபட்டவர்தன யானையும் பாகரும் இறந்துபோக வும் அதைகருதித்துச் சிறிதும் துகையாமல் உடைவாளைத் தந்து தமமை யும்கொல்லும்படி கேடகின்ற புகழ்ச்சோழ ராசாவுக்குத் தீங்குநினைதேன் என்று எண்ணி முன்னே என்னுயிரைக்கொன்று முடிப்பதே தீர்ப்பு என்று நினைத்து, அந்த வாளைத் தம்முடைய கழுத்திலேபூட்டி அறுக்கத்தொடங்கி னர். அதுகண்ட புகழ்ச்சோழர் பயந்து நடுநடுங்கி சீக்கிரமாக எதிரேபோய் அவருடைய கையையும் வாளையும் பிடித்துக்கொள்ள அவர் தம்முடைய

எண்ணம் நிறைவேறுமையால் வருந்தினின்றார், அப்பொழுது அளவிறந்த் அன்பினாலே அவரிருவருக்கும் உணர்ச்சியை இதனுக்கத்தை நீக்கும்பொருட்டு பரமசிவனுடைய திருவருளினாலே அடியார்களுடைய தொண்டை உலகத்திலேவெளிப்படுத்தும் பொருட்டு இன்னைக்கு யானை புஷ்பத்தைச் சிதறும்படி பரமசிவன அருளசெய்தார் என்று ஓர் அசரீரிவாக்கு ஆகாயத்திலே எழுந்தது. உடனே யானையும் பூசாகளோடு எழுந்தது, அப்பொழுது எறிபத்தநாயனர் களுகதிற்பூட்டிய வாளோடிப் புகழ்ச்சோழருடையபாதத்திலே விழுந்து நமஸ்கரித்தார் புகழ்சோழரும் அதவாளை எறிந்துவிட்டு, எறிபத்தநாயனருடைய பாதத்திலேவிழுந்து நமஸ்கரித்தார், பின் இருவரும் எழுந்து அசரீரிவாக்கைத் துதித்தார்கள், பரமசிவனுடையதிருவருளினாலே பூங்கூடையில் முன்போலப் பூக்கள நிறைந்திருக்கசிவகாமியாண்டார் அதைக்கண்டு மகிழ்ச்சி அடைந்தார், பாகர்கள் படைவர்த்தன யானையை கடத்திக்கொண்டு புகழ்ச்சோழர் முன்வந்தார்கள், எறிபத்தநாயனர் புகழ்சோழரை அஞ்சலிசெய்து, அடியேன மகிழும்படி இத்தயானையின்மேல் ஏறிச்செல்லும் என்றுசொல்ல புகழ்சோழர் அவரை வணங்கியானையின்மே லேறிகொண்டு சேனைகளோடும அரண்மனையை அடைந்தார், சிவகாமியாண்டார் பூங்கூடையை எடுத்துக்கொண்டு சுவாமிக்கு மாலைகட்டிச் சாத்தும்படி போனர். எறிபத்தநாயனர் இப்படியே அடியாருகளுக்கு இடைறுவந்த காலங்களிலே முறபடடு, அவைகளைநீகி பத்திவலிமையிற் சிறந்தவராயிருந்து பின கைலாசகிரியில் இருக்கின்ற சிவகணங்களுக்குத் தலைவரானார்.



ஏ

சிவமயம

பத்தாவது

ஏனாதிநாதநாயனர் புராணம்.

சூழக்குலச்சானருயினனுவாழ்ஏனாதிநாதனிறைவனீறைத்
தாழத்தொழமாபாபடைகளாமுதல்மமபெருவிரூரனசமரிற்றிரும்பு
வாழத்திருநீறுரிசாதகண்டமருண்டாதெருண்டாரகைவாள்விடார்நேர்
வீழக்களிப்பாரோபோன்றபாக்கைவிடுவித்தாசிவனருளேமேவினரே.

சோழமண்டலத்திலே எயினனூரிலே சான்றார் குலத்திலே விபூதியில் மகாபத்தி யுடையவராகிய ஏனாதிநாதர் என்பவர ஒருவர் இருந்தார். அ



வர் அசுரர்களுக்கு வாள்வித்தையைப் பயிற்றி அதனால் வந்தவளங்கள்எல் லாவற்றையும் சிவனடியார்களுக்கு காணிக்கை கொடுத்துவந்தார். இப படி நிகழும் காலத்தில் வாள்வித்தை பயிற்றலிலே அவர்பேரில் தாயபாகம்பெ ற்ற அதிசூரன் வாள்வித்தை பயிற்றுதலிலும் வரும் ஊதியம் எஞ்சுகுதா ன்தனக்குக்குறைதலையும் ஏனாதநாயனருக்கு அதிகரித்தலையும் கண்டு பொருமையுற்று, அவசரமாக போர்செயயக்நதி வீரர்கூடத்திற்குவரும் போய் அவர் வீட்டுத்தலைக்கடையில் நின்றுபோர்செய்தற்கு வரும்படி. அ ழைக்க ஏனாதநாயனர் யுத்தசன்னத்தராகிப் புறப்பட்டார், இ பொழுது அவரிடத்திலே போர்த்தொழிற் பற்றும் மாணாக்கர்களும் யுத்தத்திலே சா மர்த்தியமுள்ள அவர் பக்தர்களும் அதைக்கேள்வியுற்று விரைந்துவந்து, அவருக்கு இரண்டுபக்கத்திலும் சூழ்ந்துகொள்ள. போருக்கு அழைத்த அதிசூரன் ஏனாதநாதனை நோக்கி, நாம இருவரும் இதற்குச் சமீபமாகிய வெளியிலே சேனைகளை அணிவகுத்து யுத்தஞ்செய்வோம யுத்தத்தில்வெற் றிகொள்பவர் எவரோ அவரே வாள்வித்தை பயிற்றும் உரிமையைப் பெற ல்வேண்டும் என்றுசொல்ல, ஏனாதநாதனரும் அதற்கு உடன்பட்டார். இருவரும் தங்கள் தங்கள் சேனைகளோடு அவ்வெளியிலேபோய் கலந்து யுத்தஞ்செய்தார்கள். யுத்தத்திலே அதிசூரன் ஏனாதநாதனருக்குத்தோ றறு, எஞ்சிய சிலசேனைகளோடும் புறங்காட்டி யோடினான். அன்றிரவுமு ழுதும் அவன் தன்னுடைய தௌர்ப்பலியத்தை நினைந்து நித்திரையின் றித்துக்கித்தகொண்டிருந்து ஏனாதநாதனரை வெல்லுதற்கேற்ற உ பாயத்தை ஆலோசித்து, வஞ்சனையினாலே ஜயிக்கும்படி துணிந்து, விடி யற்காலத்தில நமக்கு உதவியாக நம்முடைய ஊரவர்களை அழைத்துக் கொள்ளாமல் நாம் இருவரும் வேறிடத்திலே போர்செய்வோம் வாரும் என்று ஏனாதநாதனருக்குத் தெரிவிக்கும்படி ஓருவனை அனுப்பினான். ஏனாதநாதனர் அவனைக்கேட்டு, அதற்கு உடன்படாதம்முடையசுற் றத்தார்கள் ஓருவரும அறியாதபடி வாளியும் பரிசையையும் எடுத்துக கொண்டு, தனியே புறப்பட்டு, அவ்வதிசூரன சூளித்த யுத்தகளத்திலே சென் று அவ னுடைய வரவை எதிர்பார்த்து நின்றார். முன்னொருபொழுதும் விபூதிதரியாத அதிசூரன் விபூதிதரித்தவர் களுக்கு ஏனாதநாதனரை எவவி டத்திலும் தான்பணுசெய்யார் என்பதை அறிந்து, நெற்றியிலே விபூதியைப் பூசி வாளியும் பரிசையையும் எடுத்துக்கொண்டு, தான்குறித்த யுத்தகள த்திற்சென்று அங்குநின்ற ஏனாதநாதனரைக்கண்டு அவர்சமீபத்திலே போம்வரைக்கும் நெற்றியைபரிசையினால் மறைத்துக்கொண்டு. அவருக் குமுன்னே முடுகி ஓடினான். ஏனாதநாதனர் அவ்வதிசூரனைக் கொல்லு தற்குச் சமயந்தெரிந்துகொண்டு அடியெயாத்தார், அபொழுது அதிசூர ன் தன்மூகத்தை மறைத்துக்கொண்டிருந்த பரிசையைப் புறத்திலே எடு க்க, ஏனாதநாதனர் அவனுடைய நெற்றியிலே தரிக்கப்பட்ட விபூதி

யைக் கண்டார். கண்டபொழுதே ஆகெட்டேன் முன் ஒருபொழுதும்இவர் கெற்பிலே காணுத விபூதியை இன்றைக்குக் கண்டேன், இனி வேறென் னஆலோசனே இவர் பரமசிவனுக்கு அடியவராய் விட்டார். ஆதலால், இவ ருடைய உள்ளக்குறிப்பின் வழியே நிறபென் என்று மனதிலே நினைத்து, வாளையும் பரிசையையும் விடக்கருதி, பின்புநிராயுதமாக்கொன்றதோஷம் இவரை அடையாதிருக்க வேண்டுமென்று எண்ணி, அவைகளை, விடாமல் எதிர்ப்பவர்போல நேராக நிற்க பாதகனுகிய அதிசூரன், அவரைக்கொன்று ன். அப்பொழுது பரமசிவன் அவருக்குத்தோன்றி அவரைத் தம்முடைய திருவடியிலே சேர்த்தருளினர்.

உ

சிவமயம்.

பதினெண்ணுவது

கண்ணப்பநாயனுர் புராணம்.

வேடரதிபதியுடப்பூர் வேந்தனுகன்வினங்கிய
சேய்திண்ணனுர்கனனிவேடைடைக்
காடதில்வாய்மஞ்சனமுங்குஞ்சிதருமலருங்
காய்சினமென்றிடுதசையுங்காளத்தியார்க்குத்
தேடருமன்பினிலாறுதினதளவமனிப்பச்
சீறுசிவகோசரியுந்தெளியவிழிப்புண்ணீ
ரோடவொருகண்ணப்பியொருகண்ணப்ப
வொழிகவெனுமருள்கொடருகுறின்ருரே.

போத்தப்பி நாட்டிலே உடுப்பூரிலே, வேடர்களுக்கு அரசனுகியநாக ன்என்பவன் ஒருவன் இருந்தான், அவன் மஹாவிபெயர் தத்தை, அவ்விரு வரும் நெடுங்காலம் புத்திரபாக்கியம் இல்லாமையால் அதிதுக்கங்கொண்டு, சூழ்ஞ்சிலத்திற்குக் கடவுளாகிய சுப்பிரமண்ணிய சுவாமியுடைய சக்தி தானத்திலே சேவற்கோழிகளையும் மயில்களையும் விட்டு, அவைா வழிபட் டுவந்தார்கள். சுப்பிரமண்ணிய சுவாமியுடைய திருவருளினுலே தத்தையா னவள் கருப்பவதியாகி ஒருபுத்திரனைப் பெற்ருள், அப்பிள்ளையை நாகன்



கையிலே எடுத்தபொழுது திண்ணைவாயிருந்தபடியால், அதற்குத்திண்ணன் என்று பெயரிட்டான். அத்திண்ணனர் வளர்ந்து உரிய பருவத்திலே வில்வித்தை கற்கத்தொடங்கி, அதிலே மகா சாமர்த்தியம் உள்ளவானர், நாகன் வயோதிகனனபடியால் வேட்டை முயற்சியிலே இளைத்தவனுகி, தன் அதிகாரத்தைத் தன்புத்திரராகிய திண்ணனுருக்குக் கொடுத்தான், அத்தத் திண்ணனர் வேட்டைக் கோலங்கொண்டு வேடர்களோடும் வனத்திலே சென்று வேட்டையாடினர். வேட்டையாடும்பொழுது ஒரு பன்றியானது வேடரால் கட்டப்பட்ட வலையறும்படி எழுந்து, மிகுந்த வேசையுடனேஓடியது. அதைக்கண்ட திண்ணனர் அதைக்கொல்ல நினைந்து, அதைதொடர்ந்து பிடிக்கத்தக்கவேசையுடனே அது செல்லும் அடிவழியே சென்றர். நாணன் காடன் என்கின்ற இரண்டுவேடர்கள் மாத்திரம் அவருக்குப் பின் ஓடினர்கள். அந்தப் பன்றி நெடுந்தூரம் ஓடிப்போய், இளைப்பினாலே மலைச்சாரலிலே ஒரு மரத்தின் நிழலிலே நின்றது, திண்ணனர் அதைக்கண்டு அதனைச் சமீபித்து, உடைவாளையுருவி அதனை இருதுண்டாகும்படிகுத்தினர், நாணனுமகாடனும் இறந்துகிடந்த அந்தப்பன்றியைக்கண்டு திண்ணனரை வியந்து வணங்கி, நெடுந்தூரம் நடந்துவந்தபடியால் பசி நம்மை மிக வருத்துகின்றது, நாம் இந்தப்பன்றியை நெருப்பிலேகாய்ச்சித்தின்றுதண்ணீர் குடித்து வேட்டைக் காட்டுக்கு மெல்லப்போவோம் என்றர்கள். திண்ணனர் அவர்களைநோக்கி இவ்வனத்திலே தண்ணீர் எங்கே இருக்கின்றதுஎன்றுகேட்க, நாணன் அந்தத் தேக்கமரத்துக்கு அப்பாலே போனல் மலைப்பக்கத்திலே பொன்முகலியாறு ஓடுகின்றது என்றன். அதைக்கேட்ட திண்ணனர், இந்தப் பன்றியை எடுத்துக்கொண்டு வாருங்கள், நாம் அங்கேதானே போவோம் என்றுசொல்லி அதை நோக்கி நடந்து, அணைக்காதவழி தூரத்துக்கு அப்பால் இருக்கின்ற திருக்காளத்தி மலையைக்கண்டு, நாணனைநோக்கி, நமகரு முன்னதத் தோன்றுகின்ற மலைக்குப்போவோம் என்று சொல்ல, நாணன் இந்த மலையிலே குடுமித்தேவர் இருக்கிறர் நாம்போனுற்கும்பிடலாம் என்றன்.

திண்ணனர், இந்த மலையைக்கண்டு இதை அணுக அணுக என்மேல்ஏறப்பட்ட பெரியபாரம் குறைகின்றதுபோலும், இனி உண்டாவது யாதோ அறியேன் என்றுசொல்லி, "அந்தீவிரமாகிய விருப்பத்தோடும் விரைந்துசென்று, பொன்முகலியாற்றை அடைந்து, அதன் கரையிலிருக்கின்ற மாநிழலிலே கொண்டுவந்த பன்றியை இடுவித்து காடனைநோக்கி நீக் கடைகோல் செய்து நெருப்பை உண்டாக்கு, நாங்கள் இம்மலையிலே ஏறி சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு வந்துசேருவோம் என்றுசொல்லி, நாணனேடும் அந்தப் பொன்முகலிநதியைக் கடந்து மலைச்சாரலை அடைந்து மலையிலே நாணன் முன்னே ஏற, தாமும் ஏறிச்சென்று சிவலிங்கம் இருக்

தலைக்கண்டார். கண்ட மாத்திரத்திலே, பரமசிவனுடைய அருட்பார்வை யைப்பெற்று, இருமபானது தரிசனவேதியினாலே உருவம் மாறிப் பொன் மயமாஞறபோல, மூன்னுளள குணங்கள் மாறிச் சிவனிடத்தில் வைத்த அன்புருவமானார். கெடுங்காலம் பிரிந்திருந்த தன் குழந்தையைக்கண்டமா தாவைப்போலத் தாமால விஸாந்தோடி, தோளகள ஞெமுங்கும்படி அச் சடவுளைத் தழுவி மோந்து முத்தமிட்டார், கெடுகேரம் பெருமூச்சுவிட்டுக் கொணடு நினறு, சரீரம முழுதிலும உரோமாஞசிகம்கொள்ள இரண்டுக ணணில நினறும கணணீரசொரிய வெயிலிடைபபட்ட மெழுகுபோலமன நெகிழ்ந்திருநகு நிறகச் சுவாமி அடியேனுக்கு அகப்பட்டது என்ன ஆச்சரிய மெனறுசொலலி ஆனந்தம் கொணடார். ஐயையோ சிங்கம், யானை, புலி, கரடி முதலிய தொடடமிருகங்கள் சுறறிக்கினற காடடிலே நீர் யாதொரு துணையுமின்றி வேடர்போலத் தனியே இருப்பது ஏது என்றுசொலலித் தூக் கித்த கமுமுடைய கையில் நிருந்தவிலலு கீழே விழுநததையும் அயிராத வராகிப் பரவசமடைந்தார். பின ஒருவாறு தெளிந்து இவருடைய முடியி லே நீவா வார்த்துப் பச்சிலையையும் பூவையும் இட்டவர் யாரோ என்றார். அப்பொழுது சமீபத்திலே நினற ஞானன் ஞானமுற்காலத்திலேஉம்முடை யபிதாவுடனே வேடையாடிக்கொண்டு இம்மலையிலே வந்தபொழுதுஒரு பிராமணன் இவர் முடியிலே நீவாவார்த்து இலையையும் பூவையும் சூட்டி உணவை ஊடடி சில வார்தைகள் பேசினதைக கணடிருந்தேனை, இன் றைக்கும் அவனே இபபடிச்செய்தான்போலும் என்றான். அதைக்கேட்ட திண்ணனார் அந்தச் செய்கையே திருக்காளத்தியப்பருக்குப்பிரீதியாகியசெ ய்கைகளெனறு கடைப்பிடித்தார். பினபு ஐயா இவருக்கு அமுதுசெயத ற்கு இறைச்சி கொடுப்பார் ஒருவரும் இல்லை. இவர் இங்கே தனியே இரு க்கின்றார் இறைச்சிகொண்டு வரும்பொருட்டு இவனார் பிரியவோ மன மிலலை. இதறகு எனனசெயவேன எபபடி புன இறைசி கொண்டுவரவே ண்டும் என்று சொல்லிக்கொண்டு சுவாமியைப் பிரிநது அற்பதூரம் போ வார். கனறைவிட்டுப் பிரிகினற கயிறறறுபடாகபோல அவரிடத்திருநத் திரும்பிவருவார் சடடி அணைத்துகொளவார். மீளபபோவார் அற்பதூரம் போய் அததியந்த ஆசையோடு சுவாமியைத் திரும்பிப்பாரத்து நிற்பார். சுவாமீ ! நீர் உண்பதறகு மிருதுவாகிய கலல இறைச்சியை நானே குறற மறறத் தெரிநதுகொண்டு வருவேன் எனபார, நீர் யாதொரு துணையுமின்றி இங்கு தனிமை இருக்கிறபடியால், நான உம்மைபபிரியமாடடேன், உமக் குப் பசி மிகுந்தபடியால் இங்கே நிற்கவுமாட்டேன், ஐயையோ நான் என் னசெய்வேன எனறு சொல்லிக்கொண்டு கணணீர் இடைவிடாது பொழிய நிற்பார், பின்பு ஒருபிகாரம் போய்வரத் துணிநது, வில்லையெடுத்துக்கொ ண்டு கையினாலே கும்பிட்டு சுவாமி சந்நிதானத்தை அருகுபோக நீங்கின வினின்றும் இதங்கி நானன் பின்னேவர, பிறகுபக்கமலையிலே உண்டா

கும் ஆகை பரமாணுப்பிரமாணமாயினும் இன்றி அன்புமயமாகி முகலியா
த்தைக்கூட்டத்தகளை யறி அங்குள்ள சொலியிலை பருக்கார. அதுகண்டு
காடன் எதிரேபோய்க் கும்பிடடு, கொழுக்கு கனைத்து வைத்திருக்கின்
றேன், பன்றியின் அவயவங்களெல்லாவற்றையும் உமமுடைய அடையா
ளப்படி பாரத்துக்கொள்ளுங்க திருமலை பாகமது வெகுதூரம் சென்று
போயிற்று. நீர் இவ்வளவுதூரமும் தாழ்தது என்னவென்றான காணன் அ
தைக்கேட்டு இவர்மலையிலை சுவாமியைகாணடு அவளைத் தழுவிக்கொ
ண்டு மரப்பொதையை பார்றவிட்டாத உடுமையைபோல அவளை நீங்கமாட்
டாதவராய் நின்றார். இங்கேயும் அந்தசுவாமி உண்ணுதற்கு இறைசிகொ
ண்டுபோம்பொருட்டு வந்திருக்கிறார, கமது குலகதிலைமையை விட்டுவிட்
டார். அந்தச் சுவாமி வசமாய்விட்டார் எனறார். உனகாடன்நின்னதோ,
நீர் என்னசெய்தீர், என்னபைத்தியங்கொண்டீர். என்றுசொல்ல, நின்ன
னார அவன் முகத்தைப் பாராமல், பன்றியை கெழ்பிலை வதக்கி அதினு
டைய இனியதசைகளை அம்பினாலே வெவ்வேறுகக்கித்து அம்பிலைகோ
த்து கொறுப்பிலை காய்ச்சி, பகமாக வெக்கறுவினை சுவையார்க்கும்படி அ
வைகளைத் தம்முடையு வாயிலை இடடு பார்பினாலை மெல்லமெல்லப்பல
முறை அதுக்கிப் பாத்து, மிக இனியனவாகிய இறைச்சிகளெல்லாவற்
றையும் தேக்கிலையினாலை வைத்துப்பட்ட கல்லையிலைவைத்து, இனியனவ
ல்லாத இறைச்சிகள் எல்லாவற்றையும் புறக்கிலை உமிழ்தார். அதைக்
கண்ட காணன் காடன் இருவரும் இவர்மிகப்பரிசுத்தமும் கொண்டிருக்கின்
றார். பெறுதற்கரிய இறைச்சியைக் காய்ச்சிப் பக்குவனால் அதுக்கி வீணை
உமிழ்கின்றார. மறறை இறைசியைபபுறகலிலை எறிந்துவிடுகிறார், தாம்
மிகப்பசியுடையாராயிருததும், அதனை உண்கினறார் இல்லை எங்களுக்குத்
தருகின்றாரும் இல்லை, இவர் தெய்வாறகியம் கொண்டிருக்கிறார். இத
னைத் தீர்க்கத்தக்க வழி ஒன்றையும் அறியோம், தேவராட்டியையும் காக
னையும் அழைத்துக்கொண்டுவது இதைத் தீர்க்கவேண்டும, வேட்டைக்
காடடிலே நிற்கின்ற ஏவலாளரையும் கொண்டு காம்போவோம் என்று நி
னைததுக்கொண்டு போனார்கள்.

நின்னனார் அவரிருவரும பாலனைத் அறியாதவராகி, சிக்கிரமாகக்
கல்லையிலை மாமிசத்தை வைத்துக்கொனடு, திருமஞ்சன மாட்டுமபொ
ருட்டு ஆறறில் நீரை வாயினாலை முகந்து, பூசைசெய்கொய்ற கல்லையிலிலை
சொருகி, ஒருகையிலே வில்லையும் அமபையும் மறறக்கையிலை இறைசி
வைத்த தேக்கிலைக் கல்லையையும் எடுத்துக்கொண்டு, ஐயோ! எனனையிர்
த்தினையனைய சுவாமி மிகுந்தபசியினாலே இளைத்தாரோ என்றுகினைதது இர
ங்கிப் பதைபதைத்து ஏங்கி, தன்குஞசுக்கு இரை அருத்துதறகுத் தாழா
தோடுகின்ற பறவைபோல மனைகதியும் பின்னிட ஓடிப்போய்க் கடவினை

அடைந்தார். அடைந்து, அவருடைய திருமுடிமேல் இருந்த பூக்களைத்தம் முடைய காற செருப்பினல் மாறறி, தம்முடைய வாயில் இருக்கின்ற திரு மஞ்சனநீரைத் தம்முடைய மனசில் உளள அன்பை உமிழடாவர்போலத் திருமுடியினமேல் உமிழ்ந்து தம்முடைய கல்லியில் இருந்தபூக்களைத் திரு முடியினமேலே வணங்கி சாததி, தேககிலையிலே படைத்த இறைசசி யைத திருமுன்னே வைத்து கொழுமையாகிய இறைசசிக ளெல்லாவற் றையும் தெரிந்து அம்பினுலே கோதது நெருப்பிலே பதத்தோடு காய்ச்சி ப்பல்லினல் அதைக்கி ஈவினுலே சுவைபாராத்துப படைத்தென் இவவிறை ச்சி மிக நன்ருயிருக்கின்றது, சுவாமீ இதை அமுதுசெய்தருளும் என்று சொல்லி உண்பித்தார். பின்புசூரியன் அஸ்தமனமாயிறறு. திணணனுர் அவவிடவிலே துஷ்டமிருகங்கள சுவாமிக்குத் தனபமசெய்தல கூடுமென் றுஅஞ்சி, அம்புதொடுக்கப்பட்ட வில்லைக் கையிலேபிடித்துக்கொண்டுமற ந்தும் கண்ணிமையாமல் சுவாமிக்குப் பகைத்திலே ஜாகரூகமாக நின்ருர். நின்ற திண்ணனுர் வைகறையில சுவாமிகரு இறைசிகொணடு வரும் பொருட்டு வேட்டையாடுதற்கு மலைசசாரலுக்குப் போனர். அதுநிறக.

அறிவு, அருள், அடகக, தவம், சிவபததி முதலியவைகளெல்லாம் திரண்டொரு வடிவம் எடுத்தாற்போன்றவரும், நல்வினை தீவினைகளால்வ ரும் ஆக்கம் கேடுகளில் சமபுத்தி பண்ணுகின்றவரும், யாவரையும்மோகி பபிக்கவல்ல மகாசௌந்தரியமுள்ள ஸ்திரீகள் வலியவந்து தம்மைத்தழுவி னும் பரமாணும் பரிமாணமாயினும் சித்தம்திரியாமல் அவர்களைத் தாயெ னமதிக்கும் மகாமுனிவரும், திருக்காளத்தியப்பரைத் தினந்தோறும் சை வாகமப்படி அருச்சிப்பவரும் ஆகிய சிவகோசரியரர என்பவர் பிராமமுகூ ர்த்தத்திலே எழுந்துபோய் பொன்முகலியாற்றிலே ஸ்நானம்பண்ணி, சுவா மியை அருச்சிக்கும் பொருட்டுத் திருமஞ்சனமும் பத்திரபுஷ்பமும் எடுத் து, சிவகாமத்தை உச்சரித்துக்கொணடு சுவாமி சந்நிதானத்திலேபோனர். போம்பொழுது, அங்கே வெந்த இறைச்சியும் எலும்புமகிடக்கக்கண்டு கடு கடுங்கி குதித்துப பக்கத்திலே ஓடினர் ஓடிநின்று தேவாதி தேவனே ! தே வரீருடைய சந்நிதானதைத அடைதறகு அஞ்சாத துஷ்டராகிய வேட்டு வப்புலியர்களைடிந்தஅநுசிததைதச செயதாகளபோலும் அவர்கள் இப் படிச செய்துபோதறகுத் தேவரீர் திருவுளம் இசைந்தீரோ என்று சொல் லி, பதறி அழுதுவிழுந்து புரண்டார். பின்பு, சுவாமிக்கு அருச்சனை செய் யாமல் காழததலால் பயனயாது, எனறு நினைந்து அங்கே கிடந்தஇறைச்சி யையும் ஊமபையும் கல்லையையும் திருவலகினுலாறறி சம்புரோக்ஷண ம்செய்து, மீளப்பொனமுகலியாற்றிலே ஸ்நானமசெய்து திரும்பிவந்து வே தமந்திரதினுலே சுத்திசெய்து, ஊருநதிரசடகமகமகத்தினுல், சுவாமிக்கு அ பிஷேகம்பண்ணி பத்திரபுஷ்பங்களால் அருச்சனைசெய்தார். செய்து, திரு முனின்று, இரணடுகைகளையும் சிரசின்மேலே குவித்து, இரண்டு கண்க ளினின்றும ஆனநதபாஷ்பம் சொரிய திருமேனியெங்கும மயிர்பொடிப்ப

அக்கினியில் அகப்பட்டமெழுகுபோல மனம் மிக உருகி இளக காத்தமும்ப, தேகடையுள்ளதாகிய் சாமவேதம்பாடினர் பாடியபின், பலமுறைபிதகூணம்செய்து சாஷ்டாங்கமாக நமஸ்காரித்து அருமையாகவிக்கிப்போய்தபோவனத்தை அடைந்தார். அதுகிடக

முன்னே வேட்டையாடுதற்கு மலைச்சாரலிலே சென்ற திண்ணனார் பன்றி, மான், கலை, மரை, கடமைஎன்னு மிருகங்களைக்கொன்று அவைகளினிறைச்சியை முன்போலப் பக்குவப்படுத்தி, தேக்கிலையில வைத்து கோற்றேனைப்பிழிந்து அதனேடுகலந்து, முன்புபோலத் திருமஞ்சனமும் புஷ்பமும்கொண்டு, மலையிலே எழி சுவாமி சந்நிதானத்தை அடைந்து, முன்போலப் பூசைசெய்து, இறைச்சிக்கல்லையைத் திருமுன்னே வைத்து, இந்தஇறைச்சி முன் கொண்டுவந்ததுபோலன்று இவை பன்றி-மான்-கலை-மரை-சடமை என்கின்ற மிருகங்களுடைய இறைச்சி, இவைகளை அடியேனும் சுவைபார்த்திருக்கின்றேன் தேனும் கலந்திருக்கின்றது, தித்திக்கும் என்றுசொல்லி உண்பித்து அவருகுப்பக்கத்திலே பிரியாமல் நின்றார். அப்பொழுது முதனூட்போனகாணனும் காடனும் ஆகிய இருவராலும் தன்பித்திரராகிய திண்ணனாருடைய செய்கைகளை அறிந்த நாகன் ஊணும் உறக்கமுமின்றித் தேவராடடியையுங் கொண்டு வந்து, திண்ணனாைப் பற்பல திறத்தினாலே வசிகசவும், அவர வசமாகாமையைக்கண்டு, சிந்தைகொந்து இனி என்னசெய்வோம் என்று சொல்லிக்கொண்டு, அவனைவிட்டுத் திரும்பிப்போய்விட்டான்.

இருவினையொப்பும் மலபரிபாகமுமுடைய திண்ணனார் பதற்காலத்திலே மிருகங்களைக்கொன்று சுவாமிக்கு இறைச்சியை ஊட்டியும் இராக்காலத்திலே நித்திரைசெயயாமல சுவாமிக்கு அருகேகின்றும், இப்படித் தொண்டுசெய்து வருதார். சிவகோசரியாரும் தினக்கோறும் வந்து, சந்நிதானத்திலே இறைச்சி கிடத்தலைக்கண்டு, ரோக்கிச சுத்திசெய்து சைவாகமவிதிப்படி அருசனித்தம்கொண்டு இந்த அநுசிதம் நிகழாமல் அருளம்வேண்டுமென்று பிரார்த்தித்து வந்தார். திருநாளாத்தியபபர் அந்தச் சிவகோசரியாருடைய மனத்தியரத்தை நீக்கும்பொருட்டு ஐந்தாநாள் இராத்திரியில் அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி, அனபனே அவனேவேடுவன்என்று நீ நினையாதே அவனுடைய செய்கைகளைச சொல்லுவோம் கேள். அவனுடைய உருவமுழுவதும் கம்மேல்வைக்கப்பட்ட அன்புருவமே. அவனுடையஅறிவுமுழுதும் கம்மை அறியுமன்றிவே. அவனுடைய செய்கைகள்எல்லாம் கமக்கு இதமாகிய செய்கைகளே. கம்முடைய முடியின்மேல் உன்னுலே சாத்தப்பட்ட பூக்களை நீக்கும்படி அவன் வைக்கின்ற செருப்படிகளும் டையகுமாரனுகிய சுப்பிரமண்ணியனுடைய காலினும் பார்க்க கமக்குமிரு

க்த ஆனந்தத்தைத் தருகின்றது. அவன் தன்வாயினுல் என்மேல், உமிழுகின்ற ஜலமானது அன்புமயமாகிய அவனுடைய தேகமென்னும் கொள்கலத்தினின்றும் ஒழுகுகின்றபடியால், கங்கைமுதலாகிய புண்ணியதீர்த்தங்களைப் பார்க்கினும் நமக்குப் பரிசுத்தமுள்ளதாய் இருக்கின்றது. அவன்தன்னுடைய தலைமயிரிலே செருகிக்கொண்டு வந்து நமக்குச் சாத்துகின்ற புஷ்பங்கள், அவனுடைய மெய்யன்பானதுயிரித்து விழுதல்போல விழுதலால், பிரம விஷ்ணுமுதலாகிய தேவர்கள் நமக்குச் சாத்தும் புஷ்பங்களும் அவைகளுக்குச் சற்றேனும் சமானமாகாவாம் அவன் நமக்குப்படைக்கின்ற மாமிசம் பதமாக வெந்திருக்கின்றதோ என்று அன்பினுல் உருகி நிளகிய மனசினுலும் மென்மை சுவைபார்த்துப் படைக்கப்பட்டபடியால், வேதவிதிப்படியாகம் செய்கின்றவர்கள் தரும் அவியிலும்பார்க்க நமக்கு அதிக துரமாயிருக்கின்றது. அவன் நம்முடைய சுகந்தானத்திலிருந்துசொல்லும் சொற்கள் நிஷ்களங்கமாகிய அன்பினாலும் நம்மை அன்பிலுறைவோரையும் அறியாது வெளிப்படுதலால் வேகங்குறையும் மகாமுனிவர்கள் மகிழ்ந்து செய்கின்ற ஸ்தோத்திரங்களைவிட எல்லாவற்றிலும் பார்க்க நமக்கு மிக இனியனவாயிருக்கின்றன. அவனுடைய அன்பினுலாகிய செய்கைகளே உனக்குக் கரி டேவாம், நாளைக்கு நமக்குப் பிடிப்பக்கத்திலே ஒளித்திருந்து பார் என்று சொல்லி மலைக்கருளினர். சிவகோசரியார், சொற்பனவுக்கையை நீங்கி நாகசிராவுக்கையை யடைந்து பரமசிவன் தமக்கு அருளிச்செய்த வார்த்தைகளே நினைந்து நினைந்து அறியாமையில் நிறைந்துள்ள இழிவினாலாகிய வெடுவர் குலத்திலே பிறந்த அவருக்கு வேதாகமாதி சாஸ்திரங்களிலும் மகாபண்டித்தியமுடைய மகாமுனிவர்கள் தேவர்களினத்திலும் காணப்படாத சமாளுதிக நிதமாகிய இவ்வளவு பெரும்பாக்கியம், ஐயையோ எவ்வளவு அநுமையன்று நூர்சரிபமும், நிர்மலப்பட்ட பேரன்பாசெய்த அன்பின் செய்கைகளோ! புகுந்த காயிலும் கடையரைய பாவியேன் அதுநிதம் என்று நீஞ்சுதனை ஐயையோ இதுவன்னகொடுமை என்று அச்சமும் அடைந்து ஒடிக்காலத்திலேபோய்ப் பொன்முகலியாறதிலே ஸ்நானம்பண்ணி மலையில் பரிமுன்போலச் சுவாமியை அருச்சித்து அவருக்குப் பிடிப்பக்கத்திலே ஒளிக்கலுற்றார்.

சிவகோசரியார் வருகற்குமுன்னே வேட்டையாடுதற்குச்சென்ற நிண்ணனர் வேட்டையாடி நிறைச்சியும் நிநமஞ்சனமும் புஷ்பமும் முன்போல அமைத்துமொண்டு, அதிசிக்கிரமாகத் திரும்பினர். திரும்பிவரும்பொழுது, பல பல தரித்ரகுணங்களைக் கண்டு, இத்தரித்ரகுணங்களெல்லாம் உதிரங்காட்டுகின்றன, ஆ! கெட்டேன், என்கண்மணிபோனது சுவாமிக்கு என்ன அபாயம் சம்பவித்ததோ அறியேனே என்றுமனங்கலங்கி அதிசிக்கிரமாக நடந்தார். அடியார்களுடைய பத்திவலையில் அகப்படுகின்ற அருட்க

டலாகிய பரமசிவன் திண்ணனாருடைய அன்புமுழுதையும் சிவகோசரியா ருக்குக் காட்டும்பொருட்டுத் திருவுளங்கொண்டு தம்முடையவலக்கண்ணி னின்று இரத்தம் சொரியப் பண்ணினார். திண்ணனார் கூரத்தீலேகண்டு வி ரைந்தோடிவந்தார். வந்தவுடனே நிரத்தம்சொரிதலேக்கண்டார், காணலும் வாயிலுள்ள திருமஞ்சனம்சித்த கையில் நெருங்க நிறைச்சி நிதற அன்பும் வில்லும் விழ தலேமயிரிலே சொருகப்பட்ட புஷ்பங்கள் அலேந்துசோர ஆட் டுகின்ற கையிறு அற்றபொழுது வீழ்கின்ற காடகப்பாலவோலச் சிக்கிரமா கப் பதை பதைத்து நிலத்திலே விழுந்தார். விழுந்தவர் எழுந்துபோய் நி த்தத்தைப் பலமுறை கையினுலே துடைக்க அதுகாணுதலே தவிராமை யைக்கண்டு அதற்கு இன்னது செய்வோம் என்று அறியாதவராகி பெரு மூச்செறிந்து நிரும்பிப்போய் விழுந்தார். கெடும்பொழுது உள்ளநயிர்த்தல் இன்றி இறந்தவர்கள்போலக் கிடந்தார், பின் ஒருவாறு தெளிந்து இப்படி செய்தவர்கள் யாவர் என்று சொல்லிக்கொண்டு எழுந்தார், எங்கும்பார்த் தார், வில்லேயெடுத்து அம்புகளேத் தெரிந்துகொண்டு என்னுடைய சுவாமி க்கு இத்தீங்குவந்ததனத் துய்பகைவர்களாகிய வேடுவர்களாலோ, இந்த வனத்திற் சுஞ்சரிப்பின்ற துஷ்டமிருகங்களாலோ, யாதென்று தெரியவில் லேயே, என்றுசொல்லி மலேப்பக்கங்களிலே தெடுந்தூரமட்டுக் தேடிப்போ னார். வேடர்களேயேனும் விலங்குகளேயேனும் காணுதவராகி நிரும்பிவந்து குறைவில்லாத துன்பத்தினுலே மனம் விழுங்கப்பட்டு சுவாமியைக்கட்டிக் கொண்டு நிடியேறுண்ட சிங்கத்துபோல வாய்விட்டுக் கண்ணீர்சொரிய அ முதார், என்னுயிரிலும்சிறந்தவரும், அடைந்தவர்கள் அன்பிலேலே பிரிப மாடடாதவரும் ஆகிய சுவாமிக்கு எப்படி இத்தகை துன்பம் சம்பவித்த தோ நிதைத் தீர்ப்பதற்கு மருந்தொன்றை அறியேனே ஐயையோ, இதற் குஎன்னசெய்வேன் என்றார். இத்த ரெம் என்னசெய்தால் நிற்குமோ இத் தத் தீங்கைச் செய்தவர்களேக் காணேன் வேர்களை அம்பினுரலேயே புண் ணேத்தீர்க்கின்ற பச்சிலேமருந்துகளே மலேயடி வாரத்திலே நிடுங்கிக்கொண்டு வருவேன் என்று சொல்லிக்கொண்டுபோனர். தன்னினுந்தைப் பிரிந்துவ ந்த நிடம்போலவே சுவாமியைப் பிரிந்துவந்ததினுலே வெருட்கொண்டு வ னங்களெங்குந் திரிந்து பலவகையாகிய பச்சிலைகளேப்பிடுங்கிக்கொண்டு, சு வாமிமேல் வைத்த மனசினும் பார்க்க விரைந்துவந்து அம்மருந்துகளேப் பிழிந்து அவர் கண்ணிலே வார்த்தார், அதினுல் அக்கண்ணிலிரத்தம்தடை ப்படாமையைக் கண்டு ஆவிபோர்ந்து நெடு நானிதற்கு என்னசெய்வேன் என்று ஆலோசித்துக்கொண்டு நின்றார். நிறக ஊனுக்கு ஊனிடல்வேண் டும் என்னும் பழமொழி அவருடைய ஆத்தியானத்திலே வந்தது, உடனே இவர் என்னுடைய கண்ணே அம்பினுலே நிடந்து அப்பினுல் சுவாமியுடை யகண்ணினின்றும் பாயும் நிரத்தம் தடைப்படும் என்று சம்பிரதாரணைசெ ய்துகொண்டு மனமகிழ்ச்சியோடும் நிருமுன்னே நிருந்து, அம்பை யெடு

த்தைத் தமதுடைய கண்ணைத் தோண்டிச் சுவாமியுடைய கண்ணிலே அப்பி னர். அபினமாத்திரத்திலே இரத்தம் தடைப்பட்டதைக் கண்டார். உட னே அடங்குதற்கரிய சந்தோஷமாகிய கடலிலே அமிழ்ந்திக் குதித்துப்பா யிந்தார், மலைபோலப்பருத்த புயங்களிலே கைகளினாலேகொட்டி ஆரவாரி த்தார், கூத்தாடினார், நான்செய்த செய்கை நன்று நன்று என்றுசொல்லி விழுந்து, அதியதிக ஆனந்தத்தினாலே உன்மத்தர்போலாயினர், இப்படிச் சந்தோஷசாகரத்திலே உலாவுமபொழுது திருகாளதத்தியீசுவர் அத்தகண் ணனருடைய பெண்பைசிவகோசரியாருக்குப் பின்னுங்காட்டுதற்குத் தி ருவுளங்கொண்டு தம்முடைய மற்ற இடகண்ணிலும் இரத்தம் சொரிய ப்பண்ணினர். அது கண்ணனுடைய பிரமாணநிதமாகிய சந்தோஷசாக ரத்தை உலியுசிய ஆழ்கிணிரயத்துள்ளே விழுந்து நெடுங்காலம் துன்ப முறுதி அதனை நீங்கிச் சுவர்க்கலதை அடைந்து இன்பமுறுவேனெருவன் பின்னும் அநிரியதமிலே வீழ்ந்தாற்போல கண்ணனார் உலகைமாறி காளா யில்லாத துன்பக்கடலிலே அழுந்தி ஏங்கி பின்னர் ஒருவாறு தெளிந்துதித தருகான் அஞ்சேல, மருந்து கைகண்டுகொண்டேன் இன்னும் ஒரு கண் ணிருக்கின்றதே. அதையுந்தோண்டி அபிஷேகோயத் தீர்ப்பேன என்று துணிந்து தம்முடையு கண்ணைத் தோண்டியபொழுது சுவாமியுடையகண் இவ்விடத்திலிருகின்றது எனுமசெரியுமபொருட்டு ஒரு செருப்புக்காலே அவர் கண்ணின அநுலிலே உனறிக்கொணடு பினனே மனதிலே பூர்த்தியா கிய விருப்பத்தோடும் தம்முடைய கண்ணைத் தோண்டும்படி அம்பை வைதகார்.

தயாநிதியாகிய கடவுள் அதைச் சகிக்கலாற்றுதவராகி, வேதாகமங் கள் தேன்றிய தம்முடைய அருமைத் திருவாய் மலரைத்திறந்து, "கண் ணைப்பாதிறய" எனறு அருளிசெய்து, அவருடைய கலணைத்தோண்டும் கையைத் தம்முடைய நிருக்குத்தினாலே பிடித்துக்கொணடார், பிரமாதி தேவர்கள் ரிமலைகளும வெதகோஷதோடும் நிலம்புதையக் கற்பகப்பூமா ரிபெய்தார்கள். மகாஞானியாகிய சிவகோசரியார் இதச் சமாசாரம்முழு தையும் உணடு, அத்தியந்த ஆச்சரியமடைந்து சுவாமியை வணக்கினர். அற்றைநாள் முதலாகப் பெரியோர்கள் சுவாமிசொல்லியபடியே 'அவருக் குக் கண்ணப்பர் என்னும் பெயரையே வழங்குகிறார்கள். நெடுங்காலமா கஉஷ்ணமாகிய அக்கினிமத்தியில் நின்று ஐம்பூலன்வழியே செல்லாதபடி மனசைஒடுக்கி அருநதவஞசெய்கினறவாகளுக்கும் கிடைாத பாக்கியபொரு ளாகிய கடவுள். ஆறுநாளுக்குள்ளே பெருகிய அன்புமேலீட்டினுலே தம் மூடைய் திருகயனததில் இரத்தத்தைக்கண்டு அஞ்சித் தம்முடைய கண் ணை இடைந்து அதற்குருகயனதில் அப்பர் திணணனருடையகையைத் த மதுஅருமைத் திருகரத்தினுலே பிடித்துக்கொண்டு நிஷ்களங்க பத்தியை யுடைய கண்ணப்பா நீ நமக்குவலப்பக்கத்திலேகில்என்று திருவருள் புரிந் தார். இதைப்பார்க்கிலும பெறவேண்டிய பெரும்பேறு யாது?

சிவமயம்.

பனிரண்டாவது

குங்குலியக்கலயநாயனார் புராணம்.

சீலமலிதிருநகரஞ் ஞாகலயனாகுமமைப் பார்
பணிவருமைசிதையாமுனனே
காலியைகொறகொளவெனறுவரங்கிகொணடு
சங்கையிலகுங்குலீயதகாறசாகதெலவா
ஞாலநிகழதிருபபனநதாணைதாகேமோ
நகபதியுந்தொழக்கசானயந் துபோதப்.
பாலமுதமூணடாருமரசுமெடிப
பரிந்தமுதுசெயவருளசேபான்மையாமோ.

சோழமண்டலத்திலே திருக்கடவூரிலே பிராமணர் குலத்திலே சிவ பத்தியிற சிறநத கலயர் எனபவர் ஒருவர் இருந்தார். அவர் அந்தத் திருப் பதியில் வீரட டானமென்னுங் கோயிலில் வீற்றிருக்கின்ற பரமசிவனுக்கு த்தினந்தோறும் குங்குலியத்தூபம் இட்டுவந்தார். இட்டுவரும் காலத்திலே பரமசிவனுடைய திருவருளினாலே அவருக்கு வறுமை உண்டாயிற்று, உ ண்டாகியும் அவர் தாமசெய்யும் திருபபணியைத் தவறுமல் நடததிவந்தார் வறுமை மிகுதியினாலே நிலங்களையிற்றும் அடிமைகளை விற்றும் செலவ ழித்தார் இபபடி எல்லாம் செலவானமையால், அவருடைய மக்களும் சுற் றத்தார்களும் வருந்தினார்கள், ஒருநாள் ஆவா மனைவியார், அரிசிமுதலி யன வாங்குதறகு ஒன்றும இல்லாமைபால இரணடு காளாகப் பட்டினியி ருநது வருந்துகின்ற பதல்வரையும் சுறறதாரையும் பாரதது இரங்கி, தம் முடைய தாலியை அக்கணவர் கையிலெகொடுகது, இதறகு கெல்வாங்கி க்கொண்டு வாரும் எனறார். குங்குலியகலயநாயனர் அநதத் தாலியைவா ங்கிக்கொண்டு, நெல்லுக்கொள்ளும்படி போனார். போம்பொழுது, வழியி லே ஒருவாததகன குங்கியிய பொதிகொணடு தமக்கு எதிரே வரக்கண்டு, மனமகிழநது, சுவாமிக்குத் தூபம இடுமபடி குங்கியியத்தை பெறறுக் கொண்டேன். இதிலும்பார்க்க மேலாகிய பேறு உண்டோ, எனறுசொல்லி, தம்முடைய கையில இருந்த தாலியையகொடுதது அநதக் குங்குலியப் பொதியை வாங்கிக்கொண்டு ஆலயததுகது விரைநதுசெனறு அங்குள்ள புண்டாரத்திலே அகுங்குலியத்தை வைத்துவிட்டு, சுவாமியைத் தரிசித்

தக்கொண்டு அங்கே இருந்தார். அவர் அங்கே இருக்க, வீட்டிலே அவர் மனைவியாரும் மக்களும் பசியினாலே வாடி, அன்றாத்திரியிலே இளைப்பு நீங்கினை செய்யுமபொழுது கருணாகரராகிய கடவுள் அவ்வீடுமுழுதி லும் பொற்குவியலும் நெற்குவியலும் அரிசிக்குவியலும் பிறவளங்களும் நி றைத்து கிடக்கும்படி அருள்செய்து அம்மனைவியாருக்கு சொப்பனத்தி லேதோன்றி அனுக்கிரகம் செய்தார். உடனே அவர் விழித்தெழுந்து, அங் கேஇருக்கின்ற செல்வத்தைக்கண்டு, பரமசிவனுடைய திருவருளே வியந்து ஸ்தோத்திரம் செய்துகொண்டு, தம்முடைய நாயகராகிய குங்குலியக்கல யநாயனாருக்குத் திருவமுது பாகம்பண்ணப்பிரியதனனஞ்செய்தார். கிருபாநி தியாகிய பரமசிவன் குங்குலியக்கலயநாயனாருக்குத் தோன்றி, நீ மிகப் பசி கொண்டிருக்கின்றாய் உனவிட்டுக்குபோய்ப் பாலும அன்னமும் உண்டு துன்பத்தை ஒழி என்ற, திருவாய்மலர்ந்தருளினார். குங்குலியக்கலயநாய னர் அதைக்கேட்டு மகாகூப்பிவணங்கி அவருடைய ஆஞ்ஞையை மறு த்து இதுதறகு அஞ்சி அநேக பிரின்மேல் வந்தது நோயினினின் றும் நீங்கிபோயத தம்முடையவீட்டினுள்ளே புகுந்தார். புகுந்தநாயனர், அவவீடெங்கும் நிறைந்திருக்கின்ற நிதிக்குவைகளைக் கண்டு மனைவியாரை நோக்கி இதெச சம்பதத்துகள எல்லாம் எபபடி வந்தன என்றுகேட்க, அ வர், சுவாமியினுடையே அருளினால் வந்தன என்றார். அதுகேட்ட நாயனர் ஒன்றுக்கும்பறறுத சிறியேனையும் ஆ கொளளுமபொருட்டு எங்கள் கடவு ளுடையகருணை இருந்தபடி இபபடியோனைறுகட வினைவணங்கினர். மனைவி யாரினைவிலேகணவரையுமசிவனடியார்களையும் விதிப்படி தூபதீபங்களால் ஆராதனைசெய்து அமுதுசெய்வித்தார். குங்குலியக்கலயநாயனர் பரமசிவ னுடைய திருவருளினாலே மகாகருணையுடையவராகி சிவனடியார்களைத் தயிர, நெய், பாலோடு அமுது செய்வித்து வந்தார், அவர் இப்படி கடக்கு ங்காலத்திலே திருப்பனந்தாளென்னும திருப்பதியில் வீறறிருக்கின்ற சிவ லிங்கம் சாய்ந்திருகின்றமையால் அதனை நிமிர்பபண்ணிக் கும்பிடுதறகுவி ருமபி திராஜாவானவர் தம்முடைய யானைகளெல்லாவறறையும்பூட்டி இ ழுப்பித்தார். இழுப்பித்தும அது நிமிராமையால் அகோராக்கிரம் நீராதக வலியுமமிருந்தார். குங்குலியக்கலயநாயனார அதை சமாசாரதைதைக் கேள் வியுற்று சுவாமி தரிசனஞ செயயும்பொருட்டு திருப்பனந்தாளை அடைந் தார். அங்கே சிவலிங்கத்தை நிமிரப்பண்ணவேண்டுமென்கின்ற ஆசையா ல் இராஜாவருந்தமுறுதலையும் சேனைகள் யானைகளோடு சிவலிங்கத்தை இ ழுத்துத் தங்கள் கருத்து முற்றுமையால் பூமியின்மேலே வலிருறைத்துவி ழுந்து இளைதலையும கண்டு மனதிலே அன்பங்கொண்டு அடியேனும் இவ் பபைத்தருகின்ற இந்தத் திருப்பணியைச் செய்யவேண்டும் என்று விரும் பிலிவலிங்கத்திலே கடடப்பட்ட கயிற்றைத் தம்முடைய கழுத்திலே கட்

டிக்கொண்டு இழுத்தார, உடனேசிவலிங்கம் நிமிர்ந்தது. அப்படிநிமிர்ந்தது அவர் புறத்திலே கட்டி இழுத்த அக்கயிறறினாலோ அன்று, அகத்திலேகட டிமிழுத்த அன்புக்கயிற்றினாலேயாம். அதுகண்டு இராசாவும் சேனைகளும் மிகுந்த களிப்பையடைந்தார்கள். இராஜா குங்குலியக்கலயநாயனாரை கஸ்காரித்து வியந்து ஸ்தோத்திரம்பண்ணி சுவாமிக்கு வேண்டிய திருப்பணிகள்பலவற்றை நிறைவேற்றிக்கொண்டு, தம்முடைய நகரத்துக்குப் போய்விட்டார்.

குங்குலியக்கலயநாயனார் சிலகாள் சுவாமி தரிசனஞ்செய்துகொண்டுஅக்கேயிருந்து, பின் தமது வாசஸ்தானமாகிய திருகடவூருக்குப்போய் தாம்செய்யுந் திருப்பணியைச் செய்துகொண்டிருந்தார். இருக்கும் காளிலே அந்த ஸ்தலத்திற்கு எழுந்தருளி வந்த சைவசமயாசாரியர்களாகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரையும் திருநாவுக்கரசு நாயனாரையும் எதிர்கொண்டு தம்முடைய வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய், அமுதுசெய்வித்து அவர்களுடைய திருவருளையும், பரமசிவனுடைய திருவருளையும் பெற்றார். பின்னும் சிலகாலம அன்பு மென்மேலும் பெருகப் பல திருப்பணிகளையும் செய்துகொண்டிருந்து சிவபதப் பிராப்தியானார்.

உ

சிவமயம.

பதின்மூன்றாவது

மானக்கஞ்சாற நாயனார் புராணம்.

கஞ்சநகாமானக்கஞ்சாறனார்சீர்க்காதல்.
மகள்வதுவைமணங்காணநாதன்
வஞ்சமலிமாவிரதததலிவனுகிவந்து
புகுந்தவளகமகிழ்ந்துநோக்கிப்
பஞ்சவடிக்காமென்னாவரிந்துபீடும்
பத்தொதிர்மறந்திறைவன்பணிந்தவாக்கா
லெஞ்சலில்வண்குழல்பெற்றபேதை
மாதையேயர்பிரானருதவியருளெய்தினாரே.

கஞ்சாறூரிலே வேளாளர் குலத்திலே அரசர்களிடத்திற் பரம்பரையாகச் சேனாதிபதி உத்தியோகத்தில் இருக்கின்ற குடியிலே சிவபத்தி

யார் பத்திகளிற் சிறந்த மானக்கஞ்சாறர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர்சிலகாலம் பிள்ளைப்பேறு இன்மையால் அதிதுக்கங்கொண்டு, பிள்ளைப்பேற்றின் பொருட்டுப் பரமசிவனை உபாசனை பண்ணி அவருடைய திருவருளினால் ஒரு பெண் குழந்தையைப்பெற்றார். அந்தப்பெண் வளர்ந்து மணப்பருவம் அடைய கலிக்காமநாயனர் சிலமுறியோர்களை மானக்கஞ்சாறநாயனரிடத்தில் அனுப்பி அந்தப் பெண்ணைத் தமக்கு விவாகஞ்செய்து தருமபடி பேசுவித்து அவர் அதற்கு உடன்பாடமையை அறிந்து சோதிடர்களாலே நியமிக்கப்பட்ட சுபதினத்திலே மணக்கோலங் கொண்டு சுற்றத்தார்களோடும் கஞ்சாபுரத்துக்குச் செல்லும்படி புறப்பட்டார். அவர் கஞ்சாபுரத்துக்கு வருதற்கு முன்னே, கருணாநிதியாகிய பரமசிவன் ஒரு மகாவீரதி வடிவங்கொண்டு, மானக்கஞ்சாறநாயனர் வீட்டுக்குச்சென்றார். அந்நாயனர் அவரைக்கண்டு எதிர்கொண்டு, உபசாரவாக்கியங்களைச் சொல்லிவணங்கினர். மகாவீரதியார் அந்நாயனரைநோக்கி இங்கே என்ன மங்கலகிரியம் நடக்கப்போகின்றது என்று வினவ நாயனர் அடியவனுடைய புத்திரியின் விவாகம் நடக்கப்போகின்றது என்றார். மகாவீரதியார், உமக்குச்சோபனம் உண்டாகுக, என்று ஆசீர்வதித்துப் போக நாயனர் உள்ளேபோய், மணக்கோலங்கொண்டிருந்த தமது புத்திரியை அழைத்துவந்து மகாவீரதியாரை வணங்கும்படி செய்தார். மகாவீரதியார் தம்மை வணங்கியெழுந்த பெண்ணினுடைய கூந்தலிலே பூச்சூட்டி, மானக்கஞ்சாறநாயனரைநோக்கி இந்தப்பெண்ணினுடைய தலைமயிர் நமக்கு ஆறுசுவடி வைத்து உதவும்என்றார். உடனே நாயனர் அம்மடியை வாளை உருவி இவர் நிற்குங் கூடத்துச் சிறியபெண் பிள்ளையை வெட்டிக்கொடு எனறு, அந்தப் பெண்ணினுடைய கூந்தலை அரியில்லை அரிந்து, அம்மகாவீரதியார் கையிலே நீட்ட, கடவுள் தாம் கொண்டுவந்த மகாவீரதி வீரவுருவத்தை ஒழித்து, ஆகாயத்திலே உமாதேவியாரடி முடிகளுடனாய்த் தோன்றினார். அதுகண்டு மானக்கஞ்சாறநாயனர் பரவசமாகி அரியமாமலர்போல விழுந்து சமஸ்காரித்து, எழுந்துஅஞ்சலியஞ்சாரி நின்றார். சுவாமி அம்மானக்கஞ்சாறநாயனருக்குத் தம்முடைய சகிதானத்தில் தமதுடைய பெருங்கருணைத் திறத்தைப புகழ்ந்துகொண்டு நுக்கும் பெரும்பேறளித்து அருள்செய்தார். கலிக்காமநாயனர் கஞ்சாபுரிக்கு வருதுகேள்வுற்று, அங்கே நிகழ்ந்த சமாசாரத்தைக் கேளாயினும் மனமிரங்கி, நிருவருளோர் தந்தது, முண்டிதஸ்திரீயைவிவாகம்பண்ணுதல்சாஸ்திரவிரோதமன்றோ என்று மனக்தளர்ந்தார். அதற்குச் சுவாமி கலிக்காமா! நீ மனந்தளரவேண்டாம் இந்தப் பெண்ணுக்குக்கூந்தலில் நீளம்கொடுத்தருளுகின்றோம் என்ற அருளிச்செய்க திருவாக்கைக் கேட்டு மனந்தளர்ச்சி நீங்கி, முன்பொலக் கூந்தலைப்பெற்ற அப்பெண்ணை விவாகமசெய்துகொண்டு, தம்முடைய ஊருக்குப்போய்விட்டார்.

கூ-வது-அரிவாட்டாயநாயனார்

பதினெண்காவது

அரிவாட்டாயநாயனார் புராணம்

நாவிற்கணமங்கலத் தள்ளேவளாண்டொழில் மரபுக்
காயனாராயனர்தமக்கெங்கெங்கு
மாவிரிபெனவீளைவதனையெயாகர் நாறக்
கூவுவடுவரிதளங்குலை
யாவினினைக் கூடலைகொணர்வோர்கமரிற்
றெத்தவடிந்தரிவாள் கொண்டிட்டியரியாரழ்னை
மாவடுவினெனியுமானகரமுந்தொனமி
வாளவிலக்கியமாதொழுவத்தவன்றேற.

சோழமண்டலத்திலே கணமங்கலம் என்கின்ற ஊரிலே வேளாளர் குலத்திலே, சிவபத்தியிற் சிறந்தவரும் நிலவுலகத்தை ஒழுங்காக நடத்துகின்றவரும் மிகுந்த செல்வமுளளவருமாகிய தாயனர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் பரமசிவனுக்குச் செங்கெல் அரிசியும், செங்கீரையும், மாவடுவும் தினந்தோறும் கொண்டுபோய், அமுது செய்வித்துவருவார். இப்படி நிகழும்காலத்திலே, கடவுளுடைய திருவருளினால் அவருக்கு வறுமையுண்டாயிற்று. உண்டாகியும், அவர் சிவனுக்கு கெல் அறுப்பவராகி, தாம்சூலியாகப்பெற்ற செங்கெலெல்லாம் சுவாமிக்கு அமுது செய்வித்துகார் கெல்லைக்கொணர்ந்து தாம் சிவனை செதுவந்தார். செயமாகாலிலே, பரமசிவன் அவவூரிலிருக்கின்ற வயல்களிலுளள கெலெல்லாம் செங்கெல்லாகும்படி அருள்செய்ய நாயனர் மனமகிழ்ந்து, தினந்தோறும் வயல்களுக்குப் போய் கெல்லறுத்து, சூலிவாங்கி, இபபடிக் கிடைத்தது அடியேனசெயத புண்ணியத்தால் என்று சுவாமிக்கு மிக அமுது செய்வித்தாரானர். இப்படிநடக்கின்றபடியால் நாடோறும் உணவிலலாமைபற்றி மனைவியார் வீட்டின் பின்புறத்திலுள்ள தோட்டத்திற்குபோய் இலைக்கறிகொயது சமைத்துவைக்க, தாயனர் அதையுண்டு முன்போலத் தாம்செய்யும் திருப்பணியைச் செய்தார். செய்யும்காளிலே தோட்டத்திலுள்ள இலைக்கறியெல்லாம் அற்றுப்போக, மனைவியார் தண்ணீர்வார்க்க, அதனைப் பானம்பண்ணி, திருப்பணியைச் செய்துவந்தார். இப்படிச் செய்துவரும்காளிலே ஒருநாள் முன்போலச் சுவாமிக்கு அமுதுசெய்யும்பொருட்டுச் செங்கெல்லரிசியும்

பெரிய புராணம்

செங்கீரையும் மாவடுவும் கூடையில்வைத்துச் சுமந்துகொண்டுபோகமனை வியார் பஞ்சகவ்வியங்கொண்டு அவருகுப் பின்னுக டடந்தார். முன்செல் கின்ற தாயனுர் பசியினுலே கால் தள்ளாடித் தலைவீழ, மனைவியார் பஞ் சகவ்வியக் கலயத்தை மூடியிருந்த கையினுல் அவரை அணைத்தார். அணை த்தும் எல்லாம் கமரிலே சிந்திப்போகக்கண்டு தாயனுர், இனிகோயிலுக்குப் போவதினுற் பயன்யாது, என்று துக்கித்து, இங்கே சிந்திய செங்கெலரிசி லையும் செங்கீரையையும் மாவடுவையும் படவுள் அமுது செய்தருளும் பேற்றைப் பெற்றேலிலேயே, எனும் அறிவாளினுலே தம்முடைய ஊட் டியை அரியத்தொடங்கினுர, அப்பொழுது அவ்வடியார் தம்முடைய கழு த்தை அரிகின்ற கையைத நடுக்குமபொருடடுச் சித்தசித்துப் பிரபஞ்ச மெங்கும் வியாபித்திருகின்ற பரமசிவன உயர நீட்டிய திருக்கரமும், மா வடுவைக் கடித்தலால் உண்டாகுகின்ற விடடல் விடடல் என்னும் ஓசை யும, கமரினின்றும் ஒக்க எழுக்கன. தாயனுர். பரமசிவனுடைய திருக்கரம் வெளியில் வந்து அரிவாள பிடித்த கம்முடை யகையைபபிடித்தபொழுது பயங்கொண்டு, முகிய துன்பம்நீங்கி, மனம பிகமகிழ்ந்து, அவர் தமக்குச் செய்த திருவருளே வியகது அஞ்சலிசெயது ஸ்கேதத்திரம் பண்ணிக்கொ ண்டு நினறார், சுவாமி நிடபாரூட ராய்ந தொன்பி நீ மீமிட நதில் வைத்த அன்பினுலேசெய்த செய்கை கனருயிருகின்றது நீ உன் மனைவியோடு வந்து நமது சிவலோகத்தில வாழ்திரு எனறுசொல்லி, அவர்கள் உடன் செல்ல போயருளினுர். அந்தத் தாயா என்பவர் இங்கே சிந்தியவைகளை ப்பரமசிவன் அமுதுசெயயப் பெற்றனலேயே என்று துக்கித்து, அரிவா ளினுலே தம்முடையகழுதை அரிதலுற்றபடியாஸ் அவருடைய பெயர் அரிவாட டாயகாயனுர் எனபபிறது.

ஓ

சிவமயம்.

பதினைந்தாவது

ஆனாயநாயனர்புராணம்.

மங்கலமாமழைநாட்டுமங்கலம்மாகருண்மருவுபுகழானுயினாஞ்ளராமேயடபா
கொங்கலராபூந்திருகதொனறைமருவுசாரந்துழலிசையினேந்தெழுத்துங்குழையவை
தங்குசராசரங்களெல்லாமுருகாநிற்பதற்பிரானேந்தசெவிதாழ்ந்தவாழ்ந்து [த்தத்
பொங்கியவான்கருணைபுரிதனறுமூதப்போதகவென்றருளவுடன்போயினரே.

மழநாட்டிலே மங்கல நகரிலே ஆயர்குலத்திலே இயற்கையிலும் நிறைந்த ஆனையர் என்பவர் ஒருவர் இருந்தார், அவர் தம்முடைய வலலமை

ராகிய மற்றை இடைப்சனோடும் பசுநிரைகளைக் காட்டுக்குக் கொண்டுபோய் மேய்த்துக்கொணடும் காமதேனுவை வேதகதிலே சொல்லியபடி செய்யப்பட்ட வேய்ங்குழலினுலே ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை நித்தசுரம்பொருந்த வாசித்து ஆனமாக்களுக்குத் தம்முடைய இசைய புதகதைச் செவிக்துவாரத்தினுலே புகட்டிக்கொண்டும் வருவார். காலவத்திலே ஒருகாள் இடையர்கள் பசுநிரைகளைச் சூழ்ந்துகொண்டு செல்ல, அவ்வானயனர் கையிலே கோலும் வேய்ங்குழலுங்கொண்டு நிரைகாக்கும்படி காட்டுக்குச் சென்றபொழுது அவ்விடத்திலே மாலையைபோல் நீண்ட பூங்கொத்துக்களைத் தாங்கிக்கொண்டு புறத்திலே தாழ்கின்ற சடையினையுடைய பரமசிவனைப்போல நிற்கின்ற ஒரு கொன்றைமரத்தடிக்குச் சமீபத்திலேபோய் அதைப் பார்த்துக்கொண்டு நின்று, அன்பினுலே உருகி இளகிய மனசையுடையவராகி, வேய்ங்குழலினுலே இசை தூண்டிலே விதித்தபடி ஸ்ரீபஞ்சாக்ஷத்தை வாசித்தார். அவர் பஞ்சாக்ஷரத்தை அமைத்து வாசிக்கின்றது அதி மதுரமாகிய இசைவெள்ளமானது வெவகைப்பட்ட உயிர்களின் செவியிலும் தேவதருவின் பூங்தேனைத் தேவாமிர்தத்தோடு கலந்து வார்தல்போலப் புகுந்தது. புற்களேமேய்ந்த பசுக்கூட்டங்கள் அசைவிடாமல் அவரை அடைந்து உருக்கத்தினுலே மெய்ம்மறந்துநின்றன. பால் குடித்துக்கொண்டு நின்ற கன்றுகள் எல்லாம் குடித்த ஆமறந்துவிட்டு இசைகேட்டுக்கொண்டு நின்றன. எருதுகளும் மான்முதலாகிய காடடுமிருகங்களும் மயிர சிலிர்த்துக்கொண்டு அவர் சமீபத்தில்வந்தன. ஆடுகின்ற மயிறகூட்டங்கள் ஆடுதலொழிந்து அவர்பக்கத்தை அடைந்தன. மற்றப்பலவகைப் படிகளும் தங்கள் செவித்துவாரத்தினுலே புகுந்த கீதம் நிறைச அகத்தேறுமை அவரருகிலேவந்து உருகின்றன. மாடுமேய்த்துக்கொண்டு நின்ற இடையர்களெல்லாரும் தங்கள் தொழிலை மறந்து கானத்தைக் கேட்டுக்கொண்டு நின்றார்கள். விஞ்சையர்களும்சாரணர்களும் கின்னரர்களும் தேவர்களும் மெய்ம்மறந்து விமானங்களிலேறிக்கொண்டு வகதாகள், வருத்துங்னை உயிகளும் வருதத்படுகின்றஉயிர்களும் அவ்விசையைக்கேட்டு அதன் வசமானபடியால, பாம்புக்ள் மயங்கிப்பயமினறி மயில்களின்மேலே விழும், சிங்கமும யானையும் ஒருங்கே கூடிவரும், மானகள் புலிகளின் பக்கத்திலே செல்லும, மரக்கொம்புகள்தாமும் சலியாதிருந்தன. இப்படியே சரம் அசரம் என்னும் ஆன்மவர்க்கங்களெலாம் ஆனுபாயனுடைய வேய்ங்குழல் வாசினையைக்கேட்டு இசைமயமாயின அவவிசையைய பொய்யன்புக் ககப்படாதபரமசிவன்கேட்டு, பார்வதிதேவியோடும் இடபாரூடராய ஆகாயமார்க்கத்தில் எழுந்தருளி வகதநின்று, அவவானுயகாயனுராக வடாடசித்து மெய்யன்பனே நம்முடைய அடியார்கள் உனனுடைய வேய்ங்குழலிசையைக் கேட்கும் பொருடடு நீ, இப்பொழுது இவவிடத்தில் நினறபடியே நம்மிடத்துக்கு வருவாய என்று திருவாய்மலர்ந்தருளி அவ்வானுயகாயனர் வேய்ங்குழல்வாசித்துக்கொண்டு பக்கத்திலேசெல்லக கைலாசத்தை அடைந்தார்.

ஓ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

மூலமூலது

மும்மையாலுலகாண்ட சருக்கம்

பதினெழாவது

மூர்த்திநாயனார் புராணம்.

வழங்குபுகழ்த்துரைகார்மூர்த்தியாராம்
வணிகர்திருவாலவாயமன்னர்சார்ந்தத்
தழங்குதிரைமுழங்கைதரத்தேய்த்தரலூறுங்
தவிர்ந்தமணர்வஞ்சனையுந்தவிரமன்ன
னீழ்த்தவயினினைகளாகடகவெழில
வேணிமுடியாகவிலகுதேவ—
முழங்குபுகழணியாகவிரைநீருக
மும்மையுலசாண்டானின் மனனினோ

பாண்டிநாட்டிலே மதுராபுரியிலே வைசியாகுலத்திலே சிவபக்தியே ஓர் வடிவெடுத்ததாமப்போலும் மூர்த்தியார் எனபவர் ஒருவர் இருந்தார். அவர் அந்தஸ்தலத்திலே வீற்றருகின்ற சொக்கநாத சுவாமிக்குத் தரிக்கும்பொருட்டுத் தினந்தோறும் சந்தனக்காப்புக்கொடுத்து வருங்காலத்திலே, கருநாட தேசத்தரசன சதுரங்கசேனைகளோடும் அம்மதுரைக்கு வந்து, பாண்டியனோடு யுத்தம்செய்து அவனை ஜயித்து, அந்நகருக்கு அரசனுயினன். அவன் புறசமயிகளாகிய சமணர்களுடையபோதனைசத்தியினலே ஆருகதமதத்தில் பிரவேசித்து சிவனடியார்களுக்கு இடுக்கண்செய்வானுயினன், ஆயினும மூர்த்திநாயனர் தாமசெய்யுந் திருப்பணியைத் தவறாது செய்துவந்தார். அதுகண்டு, அரசன்அவரை ஆருகதமதத்திலே பிரவேசிப்பி



த்தற்கு உத்தேசித்த அவருக்குப் பல கொடுங்செய்கைகளைச் செய்தான், செய்தும் அவர் தம்முடைய திருப்பணியி னின்றும் சிறிதும் வழுவாதவரா யினார். அதுபற்றி அவ்வரசன், அவர் சந்தனக்கட்டை வாங்குமிடங்களி லெல்லாம் அவருக்குக்கொடுக்க வொட்டாமற் றடுத்தான், அதனால் அவர் மனங்கொதித்து, பியாண்டிநாடு தர்ச்சமயமாகிய ஆருகதசமயத்திலே பிர வேசித்துச் சிவபுண்ணியத்துக்கு இடையூறுசெய்கின்ற அதிபாதகனுகிய இவ்வரசன் இறக்கச்சமயமாகிய சைவசமயத்தைப் பரிபாலனம் செய்கி ன்ற அரசனைச்சாருங்காலம எக்காலம் என்று நினைந்து தூக்கித்து, பக்தி காலமுழுதும் சந்தனக்கட்டை தேடித்திரிந்து எங்கும் பெறுமையால் ஆல யத்துக்குவந்து சுவாமிக்குத் தரிப்பதற்குத் தேய்த்துக் கொடுக்கும்பொரு ட்டுச் சந்தனக்கட்டைக்கு இன்றைக்கு மூட்டுவேர்தாலும் அக்கட்டையை ப்போலத் தேய்க்கத்தக்ககைக்கு ஒருமுடமும் இல்லையென்று ஒரு சந்தனக்க ல்லிலே தம்முடைய முழங்கையைவைத்து தேகாலும், நம்பும்,எலும்புதே ய்ந்து குறையும்படி நேர்த்தார். தேய்க்கவும் உதிரம் ஒழுகி காற் புறத்திலும பெருகி எலும்பிலுள்ளே நிருத்தும் துவாரந்திறந்துமூளை வெளியிலே வந்தது. அப்பொழுது அன்பனே! நீபத்தியினது உறுதிப்பா ட்டினல் இப்படிப்பட்ட செய்கையைச் செய்யாதே. உனக்கு இடுக்கண்செ ய்த கொடுங்கோலரசன் பெற்ற இந்தநாடு முழுதையும் நீயே கைக்கொண் டிதற்குமுன் இவனிடத்திலே அவனுலுண்டாகிய கொடுமைகள் யாவற் றையும் நீக்கி, பரிபாலனஞ்செய்து உன்னுடைய பணியை நடப்பித்து, பி ன்பு சம்முடைய சிவபோகத்தை அடைகின்று ஓர அசரீரிவாக்கு எழுந் தது. மூர்த்திநாயனர் அக்கம்கேட்டு அருகிலையத்தேய்த்தலே ஒழிக்க எழுந்தார். உடனே அவர் கைபானது தேய்த்ததனுலாகிய ஊறுநீங்கி முன் போலாற்று. அவவிரவிலே அந்தக்கருநாடராஜன நிறைந்து, சிவனடியார்க ளுக்கு வருந்தம்செய்த பாவத்தினலே கொடுமையாகிய நரகத்திலே விழு ந்தான், மற்றநாள பிராதக்காலத்திலே மந்திரிமார்கள்கூடி தகனசம்ஸ்கார ம்செய்து, பினனர் தங்கள் அரசனுக்குப் புத்திரர் இல்லாமையால்வெறொ ருவனை அரசாகக் நியமிக்கநாடு சமயங்களை ஆலோசித்து, யானையைக் கண்கட்டி விடுவோம் அந்தயானை எவனை எடுத்துக்கொண்டு வருமோ அவ னே இந்நாட்டுக்கு அரசாவான் என்று சம்பிரதாயனே செய்துகொண்டு யானையை விடுப்படி அருகிலிருந்த நிறைவடை ஆளுகளுவல்ல ஒரு வனை எடுத்துக்கொண்டுவா என்றுசொல்லி, அதை வஸ்திரங்கொண்டுகண் ணைக்கட்டி விட்டார்கள். அந்தயானை அந்தப்பட்டனத்து வீதிகளிலே திரி ந்துசென்று சொகுகாத சுவாமியுடைய ஆலயத்தின கோபுரத்துக்குமுன் னேபோயிற்று. மூர்த்திநாயனர் இரவிலே தமக்குச் செவிப்புலப்பட்ட அச ரீரிவாக்கினல் மனத்துயரம் நீங்கி, எங்கள் கடவுளாகிய பரமசிவனுக்குத்

திருவுளமாகில் அடியேன் இந்தநாட்டை ஆளுதற்கு உடன்படுவேன்என்று நினைத்தகொண்டு கோயிற் புறத்திலே நின்றார். யானையானது அவர்முன் னேசென்று தாழ்ந்து, அவரை எடுத்து முதுகின்மேல் வைத்துக்கொண் டது. அதுகண்ட மந்திரிமார்கள் அவரை நமஸ்கரித்து, யானையின் முதுகி னின்றும் இறக்கி, மலாமாலைகள் தொங்காகின்ற முடிசூடும் ஒருசாலையினி டத்திலே கொண்டுபோய், ஒரு சிங்காசனத்தின்மேல் இருத்தி, முடிசூ டுக்கு வேண்டும் மங்கலவிர்த்தியங்களைச்செய்ய ஆரம்பித்தார்கள். மூர்த்தி நாயனார் அவர்களை நோக்கி, ஆருகதமதம் நீங்கிச் சைவசமயம் விருத்தியா யின், நான் திக்காட்டை ஆளுதற்கு உடன்படுவேன் என்றார். அதைக் கேட்ட மந்திரிமார்கள் நம சானதிபரிசயமுள்ள பிறரும் அவரை வணங்கி நின்று, சுவாமீ தேவரீருடைய ஆஞ்ஞையின்படியேயன்றி அதற்கு மாறுக யாவர் செய்வார்கள் என்று சொன்னார்கள். பின்பு மூர்த்திநாயனா, நான் அரசாள்வதிலில், எனக்கு விபூதிப்ய அபிஷேகமுமே, உருத்திராக்ஷ மே ஆபரணமும், சடாமுடியே கிரீடமும், ஆகும் என்றார். அவர்கள், தே வரீர அருளிச்செய்தபடியே ஆகுக என்றுசொல்லி, மகா அபிஷேகத்துக்கு வேண்டும் செய்கைகளை செயது நிறைவேற்றினார்கள். மூர்த்திநாயனர் சடைமுடி தரித்து ஆலயத்திற்சென்று, சுவாமியை வணங்கிக்கொண்டு யானையின்மேல் ஏறி, அரண்மனைக்குப்போய்ச் சேர்ந்தார். அங்கே அத்தா னிமண்டபத்திலே இரத்ன சிங்காசனத்தின்மேலே தவளசசத்திர நிழலிலே வீறமிருந்துகொண்டு, பொய்ச்சமயமாகிய ஆருகதம் நீங்கவும், மெய்ச்சம யமாகிய சைவசமயமே எங்கும் விளங்கவும், பெண்ணைச் சிறுமின்னி நெடுங்காலம் விபூதி உருத்திராக்ஷம் சடைமுடி எனகின்ற மூனறினாலும் அரசாண்டு பின் சிவபதப்பிராப்தியானார்.



சிவமயம்

பதினேழாவது

மூருகநாயனார்புராணம்

மன்னுதிருப்புகலூர்வாழ்முருகனாரமறையவாகோவாத்தமானீசசரததார் சென்னியினுக்கமகமருமலர்கள்கொய்துதிருமாலீபுகழ்மாலிதிகழச்சாத்திக் கன்னிமதிற்கழுமலநாடுடையாகாத்தன்காதன்மிகுமணங்காணுங்களிப்பினுலே யின்னல்கெடவுடனசேவித்தருளானமீளாதிலங்குபெருமணைததரனேயெனினுமே.

சோழமண்டலத்திலே திருப்புகலூரிலே பிராமணர்குலத்திலே, சிவப த்தியிற் சிறந்தவராகிய முருகர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் தினமு

கஜா-வது-முருகநாயனார்

தோழமும் சூரியோதயத்துக்கு முன் எழுந்து ஸ்நானம் பண்ணிக்கொண்டு போய், கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ என்னுற நால்வகைப் பூக்களில் உரியபூக்களைக் கொய்து, பூங்கூடைகளிலே பூட்டுகொண்டுவந்து, தனியிடத்திலிருந்து, பலவகைப்படட மாலைகள்செய்து அந்த ஸ்தலத்திலுள்ள வாத்தமானீசசரம என்னும் ஆலயத்தில் வீற்றிருக்கின்ற பரமசிவனுக்குச் சாத்தி அருசசனைசெய்தும், திவ்விய மந்திரமாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரத்தைச் செபித்தும் வருவார். இப்படிச செய்துவருங்காலத்திலே, திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுக்குச சிவலோகதராகிய பெருமையையும் பெற்றார், பெற்ற அம்முருகநாயனார் அந்தத திருஞானசமபந்தமூர்த்தி சுவாமிகளுடைய திருமணத்திலே தமமுடைய சிவபூசாபலத்தினாலே போய, பரமசிவனுடைய திருவடிநிழலை அடைந்தார்.

ஓ

சிவமயம்.

பதினெட்டாவது

உருத்திரபசுபதி நாயனார் புராணம்

பங்கமில்வணபுகழநிலவுதலையூர்வாழும
பசுபதியாரொனுமறையோரபணிந்துசெலவே
னங்கமலமடவினிடையலமெல்ல,
மகளாதேயாகளமாயமாகதினறு
திங்களவளர்சடை முடியானடிகளபோறறிக
, திருவெழ சதமுருகதிரமுதிகழ வோதி
மங்கையிடமுடையபிரானருளான்மேலே
வானவர்கடொழுமுலகினமனனிஞரோ.

சோழநாட்டிலே திருதததலையூரிலே பிராமண குலத்திலே,பரமசிவனுடைய திருவடிகளிலே பதிந்த அனபே ,தமகுக் செல்வமெனக்கொண்ட, பசுபதி எனபவர் ஒருவர இருநதார். அவர் தாமரைத் தடாகத்திலே அகோராத்திரம் சூழுத்தளவினதாகிய தண்ணீரிலே நின்றுகொணடு, இரணடுகை கூனியும் சிரசின்மேலேதக்குவித்து, பரமசிவனுடைய திருவடிகளே மறவா

த சிக்தனையோடு வேதத்தின் சாரமாகிய உருத்திரத்தை ஓதி, சிலகாட்செ ன்றபின் சிவபதத்தை அடைந்தார், அதனால் அவர் பெயர் உருத்திரபசுபதி நாயனார் என்றுயிற்று.

ஓ

சிவமயம்.

பத்தொன்பதாவது

திருநாவலூர்ப்போவார் நாயனார் புராணம்.

நனமைதிகழ்ம்மறகாகா டாதனூர்வாழ
ந்தனூர்புறத்தொண்டர்களோர்பாகம்
பொன்மலிதெனபுலியூர்க்கென்னுலாபபாபுன
கூர்ப்பொய்கையமைத்தடலேறுபிரியதொக்கி
வனமதில்சூழ்திலையிறையருளாய்வாய்ந்த
வண்டமிழினிடைமூழ்கிமறையோர்பாதம
மின்மலிசெஞ்சடைமுனியாயெழுந்துநாதன்
விளங்குதடுத்தாமன்றுண்மினினார்.

சோழமண்டலத்தில் மேற்காட்டிலே ஆதனூரிலுள்ளாகுலத்தி லே, சந்தனனென்பவர் ஒருவர் இருந்தார். அவர் பரமசிவனுடைய திருவடி களேயன்றி மறமுன்னையும் மறந்தும் நினையாதவர், அவனூரிலே தம க்கு வெ டிமைக்காக விட்டிப்பட டிருக்கின்ற மானியமாகிய நிலத்தின் விளை வினுல் சிவனருசெய்துகொண்டு, தாம் செய்யவேண்டும் தொழிலேகடத் துகின்றவர், சிவாலயங்கள் தோறும் பேரிகைமுதலாகிய ஒரு முகக் கருவி களுக்கும் மத்தள முதலாகிய இருமுகக்கருவிகளுக்கும் தோலும் வாரும், வீணைக்கும் யாழுக்கும் நரம்பும், அருச்சனைக்குத் தோரோசனையும் கொடு க்கின்றவர். ஆலயங்களின் திருவாயிறபுறத்தில் நின்றுகொண்டு அன்பின் மேலீட்டினுல் கூத்தாடிப் பாடுகின்றவர். அவர் ஒருநாள், திருப்புன்கூரிலே போய்ச் சுவாமிதரிசனம்பண்ணித் திருப்பணி செய்தற்கு விரும்பி, அங்கே சென்று கோயில்வாயிலிலே நின்றுகொண்டு சுவாமியை நேரே தரிசித்துக் கும்பிடவேண்டும் என்றுநினைத்தார். சுவாமி அவருடைய விருப்பத்தின்ப டியே தமக்குமுன்னிருக்கின்ற இடபதேவரை விலகுமாடி செய்து, அவரு

க்குக் காட்சிகொடுத்தருளினார். அந்தஸ்லத்திலே ஒரு பள்ளத்தைக்கண்டு, பெரிய குளமாகவெட்டித் தம்முடைய ஊருக்குத் திரும்பினர். அவர், இப்படியே பல ஸ்தலங்களுக்கும்போய் வணங்கித் திருப்பணி செய்துவந்தார். ஒருநாள், சிதம்பர ஸ்லத்திற்குப் போகவேண்டும் என்று ஆசைகொண்டு, அவவாசை மிகுதியினாலே அன்றிரவுமுழுதும் நித்திரை செய்யாதவராகி விடிந்தபின நான் சிதம்பரஸ்தலத்திற்குப் போனால் கோயிலினுள்ளே பிரவேசிக்கும் யோக்கியதை எனசாதிக்கு இல்லையே எனறு அக்கித்து, இதுவும் சுவாமியினுடைய அருளதான எனறுசொலலிப் போகாதொழிந்தார். பின்னும் ஆசை அதிகரித்தலால், நாளைக்குப் போவேன எனறார். இபபடியே நாளைக்குப்போவேன் நாளைக்குப்போவேன என்று அனேககாட்கள் கழித்தார். அதனால் அவருக்குத திருநாளைப்போவார் என்னும பெயர உண்டாயிற்று.

ஒருநாள் அவர் சிதம்பரதரிசனம் பணணவேண்டும எனனும் ஆசை பிடித்துத்துதலால், தம்முடைய ஊரினின்றும் புறபபட்டு, சிதம்பரத்தின் எல்லையை அடைந்து, அவருரைச்சுறறிய மதில்வாயிலிலே புகுந்து அங்குள்ள பிராமணர்களுடைய வீடுகளிலே ஒமஞுசெயயப படுதலைக்கண்டு, உள்ளேபோதற்கு அஞ்சி அங்கே நமஸ்கரித்து அவவெல்லையை வலஞசெய்துகொணடு போவார். இப்படி இராபபகல் வலஞசெய்து, உள்ளேபோகக் கூடாமையை நீஙகுந்துகினற திருநாளைபபோவார். சபாநாயகனை எப்படித் தரிசிக்கலாம், இந்த நிமித்தபிறப்பு இதறகுத் தடைசெய்கின்றதே என்று துகக்துதோடும நிறறினைசெயதார். சபாநாதர் அவருடைய வருத்தத்தை நீக்கி அவருக்கு அருள்பெய்ய திருவுளங்கொணடு, அவருக்குச் சொபானத்திலே தோனறி, நீ இந்தப்பிறபபு நீஙகும்படி நெருபபிலே மூழகி எழுநது பிராமணாகளோடும நமமுடைய சகநிகானத்தில் வருவாய் என்று அருளிசசெயது, தில்லைவாழ்தணர்கும சொபபனத்திலேதோன்றி, அந்தத் திருநாளைப்போவா பொருடடு நெருப்பை வளாகுமபடி ஆஞஞாபித்து மறைநதருளினர்.

தில்லைவாழ்தணர்கள் எல்லாரும் விழித்தெழுந்து, கோயில வாயிலிலே வந்து கூடி சபாநாயகர ஆஞஞாபித்தபடி செய்வோம் எனறுசொல்லி திருநாளைப்போவாரிட்டத்திலே சென்று, ஐயோ ! சபாநாயகருடைய ஆஞஞையினாலே இப்பொழுது உம்பொருட்டு நெருப்புவளர்க்கும்படி வதோம் என்றார்கள். அதைக்கேட்ட திருநாளைப்போவார் அடியேன உய்ந்தேன் என்றுசொல்லி வணங்கினார். பிராமணர்கள் தென்மதிறபுறத்தில் கோபுர வாயிலுக்கு முன்னே ஒருகுழியிலே நெருப்புவளாத்து அதைத திருநாளைப்போவாருக்குப்போய்த் தெரிவித்தார்கள். திருநாளைப்போவார் அந்தெ நெ

ப்புக்குழியை அடைந்து சடாகாயகருடைய திருவடிகளே மனசிலேயிரான ம்பண்ணி, அதனே வலஞ்செய்து கும்பிட்டுக்கொண்டு, அதினுள்ளேபுகுந் தார். புகுந்தகாயனர் அந்தத்தேகத்தை ஒழித்து புண்ணியமயமாகிய பிரா ணமுனி வடிவங்கொண்டு உபவீதத்தோடும் சடைமுடியோடும் எழுந் தார். அதுகண்டு தில்லேவாழந்தணர்களும் மற்றைச் சிவபத்தர்களும்அஞ் சலிசெய்து களிப்படைந்தாகள், திருநாளேப்போவார் அவர்கள் உடன் செல்லச்சென்று கோபுரத்தை அணுகி அதனே நமஸ்கரித்து எழுந்து, உள் ளேபோய்க்கனகசபையை அடைந்தார். பின் அவரை அங்குநின்ற பிராம ணர் முதலியோர் யாவரும் காணுமையால் ஆச்சரியங்கொண்டு ஸ்தோத்தி ரஞ்செய்தார்கள் சடாகாயகர் திருநாளேப் போவாருக்குத் தம்முடைய ஸ்ரீ பாதங்களேக் கொடுத்தருளினர்.

~ ~ ~

உ

சிவமயம்.

இருபதாவது

திருக்குறிப்புத்தொண்ட நாயனூர் புராணம்

கொகுதலாபூம்பொழிற்கச்சிககோளிக்
குலத்தலேவர்தவாகுறிப்புக்குறித்துளார்பால்
வர்ணறைவர்நமக்கின்றுதாரீராகின்
வநதுமுடலெனவாங்கிமாசுதீர்த்த
ரகுகைபுலராதிறியமழையுமாலேக்
கடும்பொழுதம்வரகணகெங்கிக்கணமேற
சிகமுழுபுடையபளவிறதிருவெம்பர்
திருக்கைகொடுபிடித்தியர்வான்சேர்த்தினரோ.

தொண்டை மண்டலத்திலே காஞ்சிபுரத்திலேஏகாலியர் குலத்திலே சிவனடியாருடைய திருக்குறிப்பையறிந்தஅவர்களுக்குத் தொண்டுசெ ய்கின்றமையால் திருக்குறிப்புத்தொண்டர் எனப் பெயர்பெற்ற ஒருபெரி யவர் இருந்தார். அவர் மிகுந்த விருப்பத்தோடு சிவபத்தர்களுக்கு வஸ்தி ரம் ஒலித்துக்கொடுத்து வருங்காலத்திலே ஏகாம்பரநாத சுவாமி ஞானிர்கா லத்திலே ஒரு சிவபத்தர் வேடங்கொண்டு, மெலிந்தசரீரத்தையுடையதாரு

வறியவர்போலாகி, அமுக்கடைக்த கர்தையுடன் அவரிடத்திற்சென்றார். திருக்குறிப்புத் தொண்டர் அவரைக்கண்டு எதிர்கொண்டுவணங்கி பல உபசாரவார்த்தைகளைச் சொல்லி, அவருடைய சூழ்ப்பையறிர்து, உமது கர்தையைத் தர்தருளும் ஓலித்துக் தருகின்றேன் என்றார். சிவபத்தர் வேடங்கொண்ட கடவுள் இத்தக்கர்தை அழுக்கு அதிகமாக ஏறப்பெறாத் தரிக்கப்படுதற்குத் தகுதியில்லாததா யிருர்தாலும் குளிர் மிகுதியினால் வருத்தமுறுகின்றபடியால் கையிடுதல் கூடாது அஸ்தமயனத்திற்கு முன் தருவீராயில் கொண்டுபோய்ச் சிக்கிரமாக ஓலித்துக்கொண்டுவாரும் என்றார். திருக்குறிப்புத்தொண்டர் அடிபேன் தாமாமல் ஓலித்து அஸ்தமயனத்திற்கு முன் கொண்டுவர்து தருகின்றேன் தர்தருளுமென்றுசொல்ல சுவாமிவிரைவிலே ஓலித்து உலர்த்தித் தராதொழிவீராயில் இர்தத் தேகத்துக்குத்தன பஞ்செய்தீர் என்றுசொல்லி அக்கர்தையை அவர் கையிறகொடுத்தார். திருக்குறிப்புத்தொண்டர் அதை வாங்கிக்கொணடு ஒரு சூளத்திறசென்று மூன்சிறிதழுக்குப்போக்கி வெள்ளாவியில் வைத்து பின் ஓலிக்கப்புகுர்தார் அப்பொழுது பரமசிவனுடைய திருவருளினாலே ணண்பகலொழிர்து பின் பகல்போலத் தோன்றும்படி மேகங்கள் திரண்டு ஆகாயவெளி எல்லாம்மறைத்து மழைபெய்தன. அதுகண்டு திருக்குறிப்புத்தொண்டர் சிவபத்தருக்குத் தாம் வாக்குச் செய்ததை நினைர்து இனி நான் யாதுசெய்வேன் என்று கவலையுற்று வீசைவிடே மழைவிடவுங் கூடுமென்று அங்கேதானே நின்றார். அதுவிடவில்லை, பின் நிராக்காலம் வர திருக்குறிப்புத் தொண்டர் குளிரினாலே திருமேனி நடுங்குகின்ற சிவபத்தருக்கு நான் செய்யவிரும்பிய பணிவிடை ஐயையோ தவறிப்போயிறதே என்று இழே ஙிமர்தார். மழைவிடாது சிவபத்தர் சுட்டிய காலமோ நீங்கிற்று, முன்னேய ஓலித்து வீட்டிலே காற்றினால் உலரும்படி கட்டிவிட்டேனுமில்லை சிவபத்தருடைய திருமேனி குளிரினால் வருந்துமபடி நீங்குசெய்த சிவியேனுக்கு இனி இதுவே செயல் என்று எழுந்தார் வஸதிரங்களைப் புடைக்கினற கற்பாறையிலே என்னுடைய தகிலையைச சிந்தாமபடி எற்றுவேன் என்றுபோய்க் கற்பாறையிலே தம்முடைய சிறசை ஏறற ரர்வஜியாபியாபியபரமசிவனுடைய திருக்கரம் அந்தக் கறபாறையின் பக்கத்திலே தோன்றி அவரைப் பிடித்துக்கொண்டது, ஆகாயத்தினின்று சொரிந்த நீர்மழை நீங்கிப் பூமழை பொழிந்தது. பரமசிவன் உமாதேவியோடும இடபாரூடராய்க் காடசிகொடுத்தார். திருக்குறிப்புத்தொண்டநாயனார் மிகுந்த அனபினோடு விழுந்து நமஸ்கரித்து எழுந்து அஞ்சலிசெய்துகொண்டு நின்றார். பரமசிவன் அவரைநோக்கி, உன்னுடைய பத்திவல்லிமையை மூவுலகத்தார்களுக்கும் தெரிவித்தோம், இனி நீ கம்முடைய உலகத்தையடைந்து பேரின்பம்பெற்று வாழ்ந்திரு என்று திருவாய்புரிந்து சென்றருளினார்.

சிவமயம்.

இருபத்தோராவது

சண்டேசுர நாயனார் புராணம்.

வேதமலிசேயஞ்ஞாசெஞ்சதத்தனவிளங்கிய
சேய்மலறபயிலும்விசாரசன்மர்
கோதனமேய்ப்பவன்கொடுமைபொறுதாமே
கொண்டு நிறமண்ணியின்றென்கரையினீழற்
றூதகியின்மணலில்லிங்கத்தான்பாளாட்டத்தரைத
பொறுதலையிடறுத்தாள்கண்மாளக்
காதிமலர்ததாமமுயாகாமமுண்டகலமகனும்
பாதமருளாற்கைக்கொண்டாரே.

சோழமண்டலத்திலே திருச்சேய்ஞலூரிலே பிராமணர்குலத்திலே காசிபகோத்திரத்திலே எச்சதத்தன்என்பவன் ஒருவன் இருந்தான். அவனுகு அவன் மனைவியாகிய பவித்திரைவயிற்றிலே, விசாரசருமர் என்பவர் ஒருவர் இளவதாரஞ் செய்தார். அவருக்கு ஐந்துவயதிலே வேதங்களையும் சைவாகமங்களையும் பூர்வசன்மத்து அறிவுதொடர்ச்சியினலே கற்பிப்பார் இன்றித்தாமே அறியுமறிவு உண்டாயிற்று. தகதைதாயாகள் அவருக்கு ஏழுவயதிலே உபயனச் சடங்குசெய்து தகுந்த ஆசாரியர்களைக்கொண்டு வேதாத்தியயனம் செய்விப்பிக்கத் தொடங்கினார்கள் அவ்வாசாரியர்களே தங்களையும், பிறகலைகளையும் ஒதுவித்ததற்கு முன்னமே அவ்விராசருமருக்குத் தாமே அறிந்துகொள்ளும்படி அமைந்திருகின்ற புத்தியின்றிறத்தைக் கண்டு ஆச்சரியம் அடைந்தார்கள். பாலியதசையிலே சான்றோர்க்குரிய குணத்தை அடைந்திருகினற அவ்விராசருமர், ஆன்மாக்களாகிய காமெல்லோரும் அனாதிமலபந்தர் எனபதும் அம்மலசத்தியைக்கெடுத்தஅதனலே விளங்காது தடைப்படடு-நின்ற சிவத்துவத்தைவிளங்கும்பொருட்டுச் சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம்என்கின்ற பஞ்சகிருத்தியங்களையும் செய்வாராகிய ஒருபதி உண்டு என்பதும், அப்பதிக்குமுற்றறிவுடைமை வரம்பிலின்ப முடைமை, இயற்கையுணர்வுடைமைதன்வயனுடைமைவரம்பிலாற்றலுடைமைகுறைவிலாற்றலுடைமைஎன்கின்றஆறுகுணங்களும் இன்றி அமையாதன என்பதும், அக்குணங்களெல்லாம்உடையபதி பரமசிவனே என்பதும் அவர் அத்தொழில் இயற்றுதல் தமது அபின்னபூ

உ0-வது - சண்டேசுரநாயனார்

தையாகிய சிவசத்தியாலாகும் என்பதும் அதுபற்றி அவ்விருவரே நமக்குப் பரமபிதா மாதாக்கள் என்பதும் அதனால் அவர்களிடத்தேயே நாம் அன்பு செய்யவேண்டும் என்பதும் அவ்வன்பை மற்றோர் பிறவியில் செய்குவமெனின், அதற்குக் காரணியாய்ச் சிறக்துள்ள நம்மானுடப்பிறவி பெறுதற்கரியது என்பதும், அப்படியாகில் இப்பிறவியிற்றானே இன்னுஞ் சிலகாட்சென்றபின்செய்குவமெனின் இப்பிறவிநீங்குமவதிஅரிதற்கரியதாயிருத்தலும், அங்ஙனமாகையால்அவ்வன்புசெய்தற்கேயனைமறமறைன்றிறகும்சமயமில்லை என்பதும், அதுசெய்யுமிடத்தும் நமக்கு ஓர் சாமர்த்தியமுள்ள தெனக்கருதி அதனை முன்னிடாது திருவருளையே முன்னிட்டுநின்று செய்யவேண்டுமெனபதுமே வேதாகமாதி சமஸ்தசாஸ்திரங்களாலும் துணியப்படும் மெய்ப்பொருள் என்று சற்றேகவிபரீகமறத் துணிந்து கொண்டார். அந்த யதார்த்தமாகிய துணிவுதோன்றவே அவருக்குச் சிவனிடத்திலே மெய்யன்பு கலிதோறும் வளர்வதாயிற்று.

ஒருநாள் அவர் தம்மோடு அத்தியயனம் செய்கின்ற பிள்ளைகளோ பிள்ளைகளோடும் அவ்வூரவர்களுடைய பசுநிரைகளுடனே கூடிச்சென்ற பொழுது ஓரிற்றுப் பசு ஒன்று மேய்ப்பானுகிய இடையனைக் குத்தப்போயிற்று. அவ்விடையன் சிறிதும் பாவத்துக்கு அஞ்சாமல் அப்பசுவைக்கோலினால் அடித்தான். சாஸ்திரஞானம் உள்ளபடி கைவந்த விசுவாசருமர்அதுகண்டு மிருந்தபதைபதைப்போடும் அவன் சமீபத்திற்சென்று தீமைபயத்தலின்றி நன்மையே பயத்தலால் விவேகிகளால் பாவமென்று சிறிதும் இகழப்படாது பெரும்புண்ணியமென நன்கு மதிக்கப்படுகின்ற மகாகோபங்கொண்டு பின்னும் அடியாதபடி அவனைத் தடுத்துநின்று, பசுக்களின் வரலாற்றையும், அவைதருகும் பஞ்சகவ்வியங்கள் சிவனுக்கு அபிஷேகஞ்செய்தற்கு உபயோகித்தலையும், சைவசாதனமாகிய விபூதிக்கு மூலம அவற்றின்சாணமாதலையும் சிந்தித்து, அந்தப் பசுக்களைத் தாமே மேய்க்கும்படி விரும்பி, அவனிடமினை நோக்கி, இப்பசு நிரைகளை இனி நீ மேய்க்கவேண்டியதில்லை, நானே மேய்ப்பேன் என்றார். இடையன் அதைக்கேட்டுப்பயந்து கும்பிடுக்கொண்டு போய்விட்டான். விசாரசருமர் பசுக்களை அவ்வவற்றிற்குரிய பிராமணர்களின் சம்மதிபெற்று தினந்தோறும் மண்ணியாற்றங்கரையில் இருகின்ற காடுகளிலும் வய்லோரங்களிலும், புல்லுநிறைந்திருக்கும் இடத்திற்கொண்டுபோய், வேண்டுமட்டும் மேயவிட்டும் தண்ணீருட்டியும் வெய்யிலெறிக்கும்பொழுது நிழலிருக்குமிடங்களிலே செலுத்தியும் நன்றாகக் காப்பாற்றி சமித்துக்கள் ஒடித்துகொண்டு அந்தமயனத்துக்கு முன் அந்தந்தப் பசுக்களை அவரவர்வீட்டுக்கு ஓட்டிக்கொண்டுபோய்விட்டு, தம்முடைய வீட்டுக்குப்போவார்.

இப்படிச் செய்யுங்காலத்திலே பசுநிரைகளெல்லாம் அழகோடுமிகப் பெருகி, போசனபானங்களிலே குறைவில்லாமையால் மகிழ்ச்சியடைந்து இராப்பகல் மடிசுரந்து பாலமிகப்பொழிந்தன. பிராமணர்கள் நித்தியஓமாகுதியின் பொருட்டு விட்டிருக்கின்ற தங்கள் பசுக்கள் விசாரசருமர் மேய்க்கத்தொடங்கிய பின் முன்னிலும் அதிகமாகக் கறக்கக்காண்கையால்மிகுந்த சந்தோஷத்தை அடைந்தார்கள். பசுக்கள் எல்லாவகை யுபசரிப்பினலும் அளவிறந்த களிப்பை அடைந்து வீட்டிலே கட்டப்பட்டிருக்கின்ற தங்கள் கன்றுகள் பிரிந்தாலும் சிறிதும் வருத்தமுறுதலையுளராகி, மிகுந்த அன்போடு தங்களே மேய்க்கின்ற விசாரசருமர் கற்றாயினும் பிரிவாராகில் அப்பிரிவாறுமுன் தாய்போல் உருகி, அவர் சமீபத்திலே சென்று கனைத்துமடி சுரந்து ஒருவர் கறக்காமல் தாமே பால்பொழியும். அதுகண்ட விசாரசருமர் அப்பால் பரமசிவனுக்குத் திருமஞ்சனமாந் தகுதியுடைமையை நினைந்தார், நினைவே அவருக்குச் சிவார்ச்சனையினிடத்தே அத்தியந்த அபிலாஷை நல்கப்பட்டது உடனே அவர் மண்ணியாற்றின் கரையிலிருக்கின்ற ஒருமணற்திட்டிலே ஆத்திமரத்தின்கீழே மணலினலே ஒரு சிவலிங்கங் குவித்து, கோயிலும் கோபுரமும் மதிலும் வகுத்து, ஆத்திப்பூமுதலியபுஷ்பங்களும்பத்திரங்களும் பறித்துப் பூங்கூடையிலிட்டுக் கொண்டுவந்துவைத்துவிட்டு, புதிய குடங்களைத்தேடி வாங்கிக்கொண்டுவந்து கறவைப்பசுக்கள் ஒவ்வொன்றிலிருந்தும் சென்று முலையைத் தீண்டினர் அவைகள் கனைத்துப் பாலைபொழிந்தன. பாலினலே நிறைவுற்ற அக்குடங்களைக் கொண்டுபோய் ஆலயத்திலே வைத்து, பத்திரபுஷ்பங்களால சுவாமியை அருச்சித்து பாலினல் அபிஷேகஞசெய்தார், பரமசிவன் அவயிலிங்கத்தினின்று அவ்விசாரசருமர் அன்போடுசெய்யும் அருசசனையை அங்கீகாரம்செய்தருளினர், விசாரசருமர் சிவபூசைக்கு அங்கமாகிய திருமஞசனக்குழலிய பொருள்களுள், கிடைத்தவைகளை மானசமாகக் கிடைத்தனவாகக்கொண்டு நிறைவுசெய்து விதிப்படி அருச்சித்துவணங்கிவந்தார், பசுக்கள் அபிஷேகத்தின்பொருட்டுஅவ்விசாரசருமர்கொணர்வரும் குடங்கள்நிறையபாலைப்பொழிந்தும், பிராமணர்க்கும் முன்போலக் குறைவுறாமற் பாலைக் கொடுத்துவந்தன. இப்படி நெடுங்காலம் பரார்ச்சனைபண்ணுபவர்களுக்கு விளைபாட்டுப்போலத்தோன்றுகின்ற சிவார்ச்சனையைச் செய்துவரும்பொழுது, அதைக்கண்ட ஒருவன் அதின் உண்மையை அறியாதவனுகி, அதை அவனூர்ப்பிராமணர்களுக்குருக் தெரிவித்தனலை, அவர்கள் அதைச சபையாருக்குத்தெரிவிக்க, சபையார் எசசதத்தனை அழைத்து, பிராமணர்கள் ஓமாகுதியின் பொருட்டுப் பால் கறக்கும் பசுக்களை எல்லாம் உம்முடைய புத்திரனிய விசாரசருமன் அன்புடனே மேய்ப்பவன்போலக் கொண்டுபோய்ப் பாலைக் கறந்து விருதாவாக மணலிலே சொரிந்து விளையாடுகின்றன் எனறார்கள்.

எச்சதத்தன்அதைக்கேட்டுப் பயந்து, சிறுபிள்ளையாகியவிசாரசருமன்செய்கின்ற இந்தச் செய்கையை, இதற்குமுன் நான் சிறிதாயினும் அறிந்திலேன், அன்குற்றத்தை நீங்கள் பொறுத்துக் கொள்ளவேண்டும் என்று குறையிரந்து வணங்கி இனி அவன் அப்படிச் செய்வானையின அக்குற்றம் என்மேலுந்தாகும் என்றுசொல்லி அச்சமையாரிடத்திலே அனுமதிபெற்றுக்கொண்டு வீட்டுக்குப் போய்விட்டான்.

மற்றநாட்காலையில் அந்தச சமாசாரத்தைச் சோதித்தறிய விரும்பி, விசாரசருமர் பசுமேய்க்கப் போனபின்பு, அவர் அறியாதபடி அவர்பின்னே சென்றார். விசாரசருமர் பசுக்களை ஓட்டி மண்ணியாற்றின் மணற்திட்டியிலே கொண்டுபோனதைக் கண்டு, எச்சதத்தன் அருகில் நிருத்தஜாதிமரத்தில் ஏறி, அங்கே நிகழ்வதை அறியும்படி ஒளிந்திருந்தான், விசாரசருமர் ஸ்நானம்பண்ணி முன்போல மணலினால் கோயிலும் சிவலிங்கமும்செய்து, பத்திரபுஷ்பங்கள் பறித்துக்கொண்டுவந்து வைத்து, பின்பு பாற்குடங்களைக் கொண்டுவந்து தாபித்து அருச்சனைக்கு வேண்டியபிறவற்றையும் அமைத்து, மிருத்த அன்பினோடு பூசைசெய்து நமஸ்கரித்து சிவலிங்கத்துக்குப் பத்திரபுஷ்பங்களைச் சாத்தி, பாற்குடங்களை எடுத்து அபிஷேகம் பண்ணினார். குரமரத்தில் ஏறியிருந்த எச்சதத்தன் அதைக்கண்டுமிருந்தகோபங்கொண்டு, சீக்கிரமாக இறங்கிப்போய்த் தன்கையிலிருக்கின்ற தண்டினால் அவ்விசாரசருமருடைய முதுகிலே அடித்துக் கொடுஞ்சொற்களைச்சொல்ல அவருடைய மனம் பூசையிலேயே முழுவதும் பதிந்திருக்கையால், அது அவருக்குப்புலப்படவில்லை, பின்னும் எச்சதத்தன் கோபங்கொண்டு பலமுறையடிக்க, விசாரசருமர் அவ்வடியாலாகிய வருத்தந்தோன்றப் பெருதவராகி, அபிஷேகந் திருத்தொண்டினின்றுந் தவருதிருந்தார்.

அவருடைய உள்ளன்பை அறியாத எச்சதத்தன் மிகக்கோபித்து திருமஞ்சனப் பாற்குடத்தைக் காலினாலே இடறிச்சிந்தினான் உடனேவிசாரசருமர் அதைக்கண்டு, அதுசெய்தவன பிதாவும் பிராமணனும் குருவுமாகிய எச்சதித்தனென்பதை அறிந்தும் அவன செய்தது அதிபாதகமாகிய சிவாபராதமாதலால் அவன காலைத்துணிக்கக் கருதித் தமக்குமுன் கிடந்த ஒரு கோலை எடுக்க அதுமழுவாயிற்று அதினால அவன் கால்களைவெட்டினார். சிவபூசைக்குவந்த அவனிடை நீக்கினவராகிய விசாரசருமா முனபோல அருச்சனைசெய்ய பரமசிவன் உமாதேவியாரோடும் இடபாரூடராய்த் தோன்றியருளினார். விசாரசருமர் அதுகண்டு மனங்களித்து விழுந்துநமஸ்கரித்தார். பரமசிவன் அவரைத் தம்முடைய திருக்கரங்களினால எடுத்து, நீ கம்பொருட்டு உன்னைப்பெற்ற பிதாவை வெட்டினாய் இனி உனக்கு நாமே பிதாஎன்று அருளிச்செய்து அவனை அணைத்து அவருடைய சரீரத்

தைத் தடவி உச்சிமோந்தருளினார். சிவனுடைய திருக்கரத்தினாலே தீண்டப்பட்ட அவ்விசாரசருமருடைய திருமேனி சிவமயமாகித் திவ்வியப்பிரகாசத்தோடு விளங்கிற்று. பரமசிவன் அவரை நோக்கி நாம் நம்முடைய தொண்டர்களுக்கெல்லாம் உன்னைத் தலைவனுக்கி, நாம் ஏற்றுக்கொண்ட அமுதும் பரிவட்டமும் புஷ்பமும் உனக்கே கிடைக்கும்படி சண்டேசுரபதத்தைத் தந்தோம் என்று திருவாய்மலர்ந்து, தம்முடைய சடையிலே தரித்திருக்கின்ற கொன்றைமாலையை எடுத்து அவருக்குச் சூட்டியருளினார். அவ்விசாரசருமர் சமஸ்தரும் ஆரவாரிக்கவும் எவ்விடத்தும் புஷ்பமழை பொழியவும் சிவகணங்கள் பாடியாடிக் களிகூரவும் வேதங்கள் கோஷிக்கவும் நானுபேத வாத்தியங்கள் முழங்கவும் சற்சமயமாகிய சைவசமயம் நிலைபெறும்படி பரமசிவனைக் கும்பிட்டு அவராலே தரப்பட்ட சண்டேசுரபதத்தை அடைந்தார். எச்சதத்தர் சிவத்துரோகம்செய்தும் சண்டேசுரநாயனாலே தண்டிக்கப்பட்டு அக்குற்றம் நீங்கிச் சுற்றத்துடன் சிவலோகத்தை அடைந்தார்.

உ க-வது -திருநாவுக்கரசுசுவாமிகள்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

நான்காவது

திருநின்றசருக்கம்

இருபத்திரண்டாவது

திருநாவுக்கரசுசுவாமிகள் புராணம்

போற்றுதிருவாமூரிலுவேளாண்டொன்மைப்
பொருவில்கொறுக்கையரதிப்புகழனார்பான்,
மாற்றருமன்பினிற்றிலதவதியாமாது
வாய்த்துதித்தபின்புமருணீக்கியாருந்
தோற்றியமண்சமயமுறுதுயரநீங்கத்
தூணவருடாவர்தருலோயாற்
பாற்றருநீளிடரெய்திபபாடலிபுத்திரதற்
பாழியொழித்தரனதிகைப்பதியிலவர்தார்.

வாகுதமக்கையருளானீறுசாதகி
வண்டமிழானேய்தீர்ந்துவாக்கின்மனனுய
வெற்தபொடிவிடம்வேழம்வேலைநீத்தி
யியன்சூலங்கொடியிடபமெளிளங்கசசாதகி
யற்தமிலப்பூதிமகனரவுமாற்றி
யருடகாசுபெறறுமறையடைப்புநீக்கிப்
புற்திமகிழ்கதைபாற்றிக்கயிலைகண்டு
பூம்புகலூரான்பாதம்பொருந்தினரோ.

திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூரிலே வேளாளர் குலத்திலே கொறுக்கையர் குடியிலே புகழனர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர்மனை வியார்பெயர் மாதினியார் அம்மாதினியார் வயிற்றிலே திலகவதியார் என்னி

ன்ற புத்திரியாபிறக்கார். அவர்பிறக்து சிலவருஷம் சென்றபின், சைவசமயம் அபிவிர்த்தியாகும்படி மருணீக்கியார் எழ்கின்ற புத்திரரீ அவதரித்தார். அவருக்குத்தக்தையார் உரியபருவத்திலே வித்தியாரம்பம் செய்வித்தார் மருணீக்கியார் தகதையாருக்குப் பெருமகிழ்ச்சியுண்டாகும்படி பலகலைகளையும் கிரமமாகக்கற்று வல்லராயினர் நிலகவரி பாருகருப் பன்னிரண்டு வயசு ஆனபொழுது அப்புகழனார மரபிற்கு ஒதத மரபினே உடையவரும் சிவபத்தியிலே சிறதவருமத, ராஜாவிடதத்திலேசெனறியுத்தியோகம் செய்பவரும் ஆகிய கலிப்பகையார் என்பவரா அப்புகழனரிடத்திலே சில முதியோர்களை அனுப்பி திலகவதியாருக்குஞ்சமக்கும் மனம் பேசுவித்தார் புகழனர் அதற்கு இசைந்தமைகண்டு அம் முதியோர்கள் மீண்டுசென்று கலிப்பகையாருக்குத் தெரிவித்தார்கள். கலிப்பகையார் தாம் விவாகம்செய்தற்குமுன் தம்முடைய அரசனது ஆஞ்ஞையினுலே சேனைகளோடும் சிலகாளிலே அவன்பகைஞராகிய வடதேசத்தரசரிருக்குமிடத்தைச் சேர்ந்து அவர்களோடு நெடுநாள் யுத்தம்செய்தார். அங்ஙக அப்படி நிகழுங்காலத்திலே இங்ஙகபுகழனர் தேகவியோகம் அடைந்தார். அப்பொழுது அவர் மனைவியாரான மாதினியார் சகமரணம்செய்தார் அவர்கள் பிள்ளைகளாகிய திலகவதியாரும் மருணீக்கியாரும், சுற்றத்தார்களோடு விகமணக்கவலையுற்று சுற்றத்தாரள் அறிவால் அமைதபெரியோர்கள் ஒருவாறுதற்ற, தேறி தந்தைதாயாருக்குச செயயவேண்டிய அந்தியகிரியைகளை முடித்தார்கள். இங்ஙனம் இப்படி நிகழ, அங்ஙக கலிப்பகையார யுத்தகளத்திலேதமமுடைய பூதவுடலைவிட்டுப் புகழடம்பைப் பெற்றுக்கொண்டார். அந்தச் சமாசாரம் திலகவதியார நடைய சுமீபாருதியோரிபதரகருப் புலபட அவர எனனுடைய பிதாமாதாக்கள் எனனை அவருக்கு மனைவிசெய்துகொடுக்க உடனடி புருதகலமாக நிவையிலி அவ நகமே உரிய ஆதலால், இவ்வுயிரை அவரியிடரி படரவிடலென்னது எனறு சாவதறுணிதார். அதுகண்ட மருணீக்கியார் அதகலகவதியாருடைய இரண்டுபாதங்களிலும் விழுந்து அழுது, அடி உனகளுக்கு பிதாமாதாக்கள் பிறதபின்னும் உம்மையே அவபளாகவா பாவிதது பூசிகவரம எனறனரே உயிர்வைதது கொணடிருக்கினறேன அடியேன்தத தனியே கைவிடிபடப்பிராகில் அடியேன் உமக்கு முனனமே பிறதுவிடுவேன எனறார். திலகவதியார் அதைக்கேட்டு, கமபியார உயிர்வாடுதி நக்கிவேணடும எனனும ஆசைபால்தமது கருத்தைதத தடுத்து உயிர்தாங்கி வேறொருவரையும விவாகஞசெய்துகொள்ளாமல் சிவகாருண்ணியம் உள்ளவராகி வீடடிலே தவஞசெய்துகொண்டு இருக்தார்

மருணீக்கியார யாக்கைநிலையாமையையும், செல்வநிலையாமையையும் நினைந்து தருமஞசெய்ய விரும்பி, அன்படனே திரவியங்களைச் சேல

வழித்து, அறச்சாலைகளையும், தண்ணீர்ப்பந்தர்களையும் அமைத்தார், சோலைகளை வைப்பித்தார், குளங்களைத் தோண்டுவித்தார், விருந்தினரை உபசரித்தார், புலவாகஞ்சுக்குத் தனகமாரிபொழிந்தார், பிரபஞ்ச வாழ்வினதுஅநித்தியத்துவத்தை அறிந்து இவ்வாழ்க்கையிலே புகாமற் எல்லாவற்றையுந் துறந்தார். சமஸ்த சமயங்களுள்ளும் சற்பரமபதம் நிதானமானது அறியுமதிலே அவருக்குத்தீவிரப்படவில்லை. அவர் பாடலிபுத்திரம் என்னும் நகரத்திற்சென்று சாணார்களுடைய பள்ளியையடைந்து அங்குள்ள சமணர் நடைய போதனை சகியினாலே அவர்களை அனுசரிக்கின்ற ஆருகத சமயமெய்த்தியை அடைதற்குத் தகுந்த நெறியென்று துணிந்து, அந்தச் சமயத்திலேபிரவேசித்தார். பிரவேசித்தபின்னர் அவர்கள் அதற்குரிய நூல்களெல்லாவற்றையும் கற்று அவைகளிலேமகா பாண்டித்தியம் உடையவராயினர் அதனைக்கண்டசமணர்கள் அவருக்குத் தருமசேனர் என்று பெயரிட்டு அவரைத் தங்கள்மதாசாரியராகக்கொண்டுவழிபட்டார்கள். அவர்தமது சிஷ்யாசாரியர்களிலே பௌத்தர்களை வாதிலே வென்று புகழைப்பெற்று ஆருகத சமயாசாரியர்களுக்குள்ளே சிரேஷ்டராய் இருந்தார், அதுநிற்க.

திருவாரூரிலே பிறந்த திலகவதியார் சிவபத்தியிலும் பத்தி மிகுந்த சிவபுண்ணியங்களை செயவிரும்பி கெடிலநதிக்கு வடகரையில் இருக்கின்ற திருவதிகை வீரட்டானம் என்னும் திருப்பதியிற்சென்று பரமசிவனை வணங்கி, சிவனின்னங்களைத் தரித்துத் தினந்தோறும் குரியோதயத்துக்கு முன் கோயிலின் உளளும் புறமும் திருவலகிடுதல் கோமயத்தினாலேமெழுகுதல் நந்தவனங்களிற்சென்று புஷ்பங்களைப் பறித்துக்கொண்டுவந்து, மாலைதொடுத்துச் சுவாமிக்குச் சாத்தம்பொருத்தல்முதலாகிய சிவபுண்ணியங்களைச் செய்துவந்தார். செயகவரும்காளிலே தம்முடையதம்பியாராகியமருணீக்கியார் கபடமார்க்கமாகிய ஆருகதமுதக்கிலேபிரவேசித்தநமையை நினைந்து தமக்காகாரத்தில் அமிழ்ந்தி வீரட்டானேசுரரை வணங்கி, சர்வாபீஷ்டவரதா ! தேவரீர் அடியேனை ஆட்கொளளவா எனப் பிரார்த்தியமாயில் தவமென்னுசொல்லைப் பாயை இடுக்கிச் தலைமயிராப் பறித்தெறிந்துவிட்டு நினைவுகொண்டே உணர்வுற்றசமணர்களாகிய கபடமார்க்கமாகிய படுகுழியிலேவிழுந்துள்ளுடைய தமபியையறிவினாலும் தூக்கிக்காப்பாற்றியருள வேண்டுமென்று பலமுறைவிண்ணப்பஞ்செய்கார். பரமசிவனிலகவதியாருக்குச் சொப்பனத்திலேதோன்றி தியோதனே ! நீ உன மனக்கவலையைஒழி, உன்னுடைய தம்பி துறவிபாகிய காமை அடையுமபொருட்டு பூவாசென்மத்திலே தவஞ்செய்திருக்கின்றனை. அந்தத் தவத்தின் அற்பக்குறைத்தினாலேஅக்கியமதத்திலே பிரவேசித்தான். இனி அவனைச் சூலகோயிலுக்குத்தி ஆட்கொள்வோம என்று சொலலிமறைந்தருளினர்.

பரமசிவன் சொல்லியருளியபடியே அவருடைய திருவருளினாலே, தருமசேனருடைய வயிற்றிலே கொடிய சூலகோய் உண்டாகிக் குடலிலக்

குடைதலுற்றது. அசனல் அவர் வருந்தி நடுக்கமுற்று சமண்பாழியறையி ல்வீழ்ந்தார். தமக்குக் கைவந்த சமணசமைய மந்திரோச்சாரணத்தால் தடு க்கவும் அச்சூலநோய் தடைப்படாமல் மேற்கொண்டது, மேற்கொள்ள யேசர்ப்பவிஷக் தலைக்கொண்டாற்போல மயங்கி மூர்ச்சை அடைந்தார். அதுகண்ட சமணர் பலர் வருதுகூடி இத்தச் சூலநோய்போலக் கொடிய நோய் முன்னெருபோதும் கண்டதியோம இதற்கு யாதுசெய்லோம்என்று தாக்கமுற்று பின் கமண்டலத்தில் இருக்கின்ற ஜலத்தை அபிமந்திரித்துக் குடிப்பித்தார்கள். அதனலே தணியாமையால், மயிர்பீலிகொண்டு கால ளவுந் தடவினர்கள். அதினலுந் தணியாமல் சூலநோய் முன்னிலும் அதிகப்பட தருமசேனர் அதைச்சகிக்கலாற்றுதவராய்த் துன்பப்பட்டார். ச மணர்கள் அதுகண்டு ஐயோ, இதற்கு நாம்யாதுசெய்வோம் என்று மனங் கலங்கி, இந்த நோயை நீக்குதற்கு நாம் வல்லமல்லேம் என்று சொல்லிக் கொண்டு அவரைக் கைவிட்டுப் போயினர்கள். பின் தருமசேனர் தம்மு டைய சகோதரியாராகிய திலகவதியாரை நினைந்து, அவரே தமக்கு உதவி செய்ய வல்லர் எனத்துணிந்து தம்முடைய சமாசாரத்தை அவருக்கு உ ணர்த்தும்பொருட்டு தம்முடைய பாருகனை அவரிடத்திற்கு அனுப்பினர். அப்பாருகன் திருவதிகையிற் சென்று அத்திலகவதியாரை ஒரு நந்தவனத் துக்குச் சமீபத்திலே கண்டுவணங்கி, நான் உம்முடைய தம்பியார் ஏவலினா ல்இவ்விடந்துக்கு வந்தேன் என்று சொல்ல திலகவதியார், தம்பியாருக்கு யாதாயினும் தீங்கு உண்டா என்றார். அதற்கு அவன்ஆம். அவர் கொடிய சூலநோயினல் மிகவருந்துகின்றார். சமணர்கள் எல்லாரும் அந்நோயைத் தீர்த்தற்கு வன்மையின்மையால், அவரைக்கைவிட்டார்கள். அவர் அதுக ண்டு என்னைநோக்கி அத்தச் சமாசாரத்தைச் சகோதரியாராகிய உமக்குத் தெரிவித்து தாம் உய்யும்நெறியைக் கேட்டுக்கொண்டு இரவிலே தமமிடத் துக்கு வரும்பொருட்டு என்னை ஏவினர் என்றான். திலகவதியார் பதிதராகி யசமணர்களுடையபள்ளிக்கு சென்வாரோன் இதைத் தம்பிக்குச் சொல்லு என்றார். அதுகேட்ட பாருகன் மீண்டு தருமசேனரிடத்திற் சென்று, அ தைத்தெரிவிக்க தருமசேனர் இனி இதற்கு யாது செய்வேன் என்று சோகித்தார்.

அப்பொழுது சிவனுடைய திருவருள் கூடுதலால் திருநாவுக்கரசு சு வாமிகள் இந்தத் தர்ச்சமயமாகிய ஆருகதமாக்கப் பிரவேசத்தால் என் னைவருத்தும் இச்சூலநோய் நீங்கும்படி சற்சமயமாகிய சைவசமயத்தை அனு சரிக்கின்ற திலகவதியாருடைய திருவடிகளைஅடைவேன் என்று கருதினர். அக்கருத்துப் பிடித்தெழுப்ப எழுந்து சமணர்களுடைய ஸ்தானத்தைக் கடந்து உடுத்த பாவையும் உரியில் உறற கமண்டலத்தையும் மயிற்பீலி யையும் நீக்கி வஸ்திரந்தரித்து, தமக்குப் பற்றுக்கோடாகக் கைதந்து வரு

இன்றவர்களைப் பற்றிக்கொண்டு, ஒருவரும் காணுதபடி இரவிலே ஆருகத மார்க்கப் பிரவேசத்தால் தமக்குக் கிடைத்தவைகளில் சூலநோய் ஒன்று மாத்திரம் உடன்றொடர திருவதிகையிற்சென்று திலகவதியாருடைய திருமடத்தை அடைந்து அவருடைய திருவடிகளை நமஸ்கரித்து எங்கள் சூலத்தார் செய்த தவபலனெல்லாம் திரண்டு ஒரு வடிவெடுத்தாற்போலும் அம்மே அடியேன் கொடிய சூலநோயைச் சகிக்கலாற்றுமையால், உமையையே கதியென்று அடைந்தேன். இனி நான் உய்ந்து கடைத்தேறும்வழியை அருளிச்செய்யும் என்றுசொல்லி, பாதத்திலேவிழுந்து அயர்ந்தார். திலகவதியார் தம்பியாரைநோக்கி தமக்குச் சொற்பனத்திலே பரமசிவன் அருளிச்செய்தபடி முடித்ததை நினைந்து, மனங்கசிந்துருகி அவரை அஞ்சலிசெய்துகொண்டு, அறியாமையினாலே பரசமயப் படுகுழியில் விழுந்து கொடுந்துயரத்தை அனுபவிக்கின்ற தம்பியாரே எழுந்திரும் என்றார். தம்பியார் சூலநோயுடனே நடுக்கமுற்று எழுந்து, அஞ்சலிசெய்தார். திலகவதியார் இது பரமசிவனுடைய திருவருளே தமதுடைய திருவடிநீழலையடைந்தமெய்யன்பர்களுக்கு இன்னருள்புரியும் அக்கடவுளையேவணங்கி அவருக்கே திருத்தொண்டுசெய்யும் என உபதேசித்தார். உடனே மருணீக்கியார் அவ்வுபதேசத்தை ஏறுக்கொண்டு வணங்கிநிற்க, திலகவதியார் திருவருளை நினைந்து அவருக்கு விபூதியைப் பஞ்சாக்ஷரத்தை ஓதிக்கொடுத்தார். மருணீக்கியார் மிகுந்த ஆசையோடு வணங்கி, அவ்விபூதியைவாங்கி சரீரமுழுதிலும் அணிந்துகொண்டார்.

திலகவதியார் திருப்பள்ளியெழுச்சியிலே திருவலகும், திருமெழுக்குத் தோண்டியும் எடுத்துக்கொண்டு, கோயிலுக்குத் தம்பியாரை அழைத்துக்கொண்டுபோனார். மருணீக்கியார் திருவதிகை வீரட்டானேசுவரரைப் பிரதக்ஷிணஞ்செய்து சந்நிதானத்திலே விழுந்து நமஸ்கரித்துருகுன்று அவருடைய திருவருளினாலே தமிழ்செய்யுள் பாடும் சக்தி உண்டாகப்பெற்று தம்முடைய சூலநோய் நீங்கும்பொருட்டும் பிற்காலத்திலேஅன்போடு ஓதுகின்ற யாவருடைய துன்பமும் நீங்கும்பொருட்டும், பரமசிவன் மேல் "சூற்றுயினவாறு விலக்கிலீர்" எனனும் வாக்கியத்தை முதலிலுடைய திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

திருவதிகை வீரட்டானம்-பண்-கொல்லி.

தீருச்சிற்றம்பலம்.

சூற்றுயினவாறுவிலக்கிலீர்கொடும்பலசெய்தனகானறியே
ஏற்றுயடிக்கேயிரவும்பகலும்பிரியாதுவணங்குவனெப்பொழுதுந்
தோற்றுமதென்வயிற்றினகம்படியேதுடரோடிதொடக்கிமுடக்கியிட
வாற்றேனடியேனதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே.

போர்த்தாயங்கோராணையினீருரிதோல்புறங்காடரங்காகமாடவல்லார்
யார்த்தானரக்கன்றனைமால்வரைக்கீழடர்த்திட்டருள்செய்தவதூங்குதாய்
வேர்த்தும்புரண்டும்விழுந்தும்மெழுந்தாலெனவேதனையான்விலக்கிவிடா
யார்த்தார்புனல்சூழ்திகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே.

திருச்சிற்றம்பலம்.

உடனே சூலைநோய் நீங்கிற்று. அப்பொழுது மருணீக்கியார் தமக்கு உயிரையுந் தந்து முத்தி நெறியையும் தந்த பரமசிவனுடைய திருவருளாசிய கடலில் அமிழ்ந்தி, திருமேனி முழுதிலும் உரோமாஞ்சிதங்கொள்ள, இரண்டு கண்ணில்நின்றும் ஆனந்தபாஷ்பஞ்சொரிய நிலத்திலே விழுந்து புரண்டு சமணசமயப் படுகுழியிலேவிழுந்து எழுமாறு அறியாது மயங்கியபாவியேன் பரமசிவனுடைய திருவடியை அடைதலாகிய நித்தர்பேரின்பவாழ்வைப் பெறும்படிசெய்த சூலைநோய்க்கு என்னபிரதியுபகாரம்செய்வேன் என்றார். இப்படி நிகழும்பொழுது வீரட்டானேசுரருடையதிருவருளினாலும் அற்புத சினமய மதுரமாகிய தேவாரப்பதிகத்தைப் பாடினபடியால், உனக்கு நாவுக்கரசு என்னும் பெயர் சதகோடிசாசங்களினும் வழங்குக என்று சுமஸ்தருகும் ஒரு வியப்புத் தோன்றும்படி ஒரு அசரீரிவாக்கு ஆகாயத்திலே தோன்றிற்று. அதைக்கேட்டதிருநாவுக்கரசுசுவாமிகள் பரமசிவன் இத்தனை நெடுங்காலமாகத் தம்மை நிருத்த சிறியேனுக்கு நித்தர்பேருவாழ்வைத் தந்த ருளினதோ எனறு மனங்கூர்ந்து, அத்தன்மையனுகிய பிரானுடைய அருளிய கருணையின் மெய்த்தன்மையை அறிந்துதெரிப்பதையே மேற்கொண்டு வணங்கினர். திருநாவுக்கரசுசுவாமிகள் சமணசமயம் பொய்மார்க்கம் என்பது யாவருக்கும் புலப்படும்படி சைவசமயநிதியிலே பிரவேசித்து அருள்பெற்றபடியால் உலகம் உய்ந்தது என்றுசொல்லி, திருவதிகையிலுள்ள சமணர்தலைவர்களும் களிப்புற்றவர்கள் திருநாவுக்கரசுசுவாமிகள் மனம் வாக்குக்காயம் என்னும் திரிகரணங்களாலும் திருத்தொண்டு செய்யவேண்டும் எனனும் ஆசை மிகுதலால், சிவசின்னங்களோடு தரித்துக்கொண்டு நியானமருவுணர்வும் தடையின்றி யெழுகின்ற ஸ்துதிரூபமாகிய வாசகமும் உறைவாரப் பணிவினை யும் உடையவராயினர். திலகவதியார் தம்முடைய வெண்டுகோளின்படி பரமசிவன்தமமுடைய நம்பியாரைஆட்கொண்ட பெருங்கருணைத் திறத்தை 'சிந்தைகூர்ந்து' மகிழ்ந்து வணங்கினர்.

இந்தச சமாசாரத்தைப் பாடலிபுத்திரத்திலிருக்கின்ற சமணர்கள்கேள்வியுறறு பொறாமைகொண்டு மாறுபட்ட பலசமயங்களோடும் வாதில்வென்று எங்கள்சமயத்தை ஸ்தாபித்த தருமசேனர் தமக்கு வந்த சூலைநோய் இங்கே ஒருவராலும் நீங்காமையால் உய்யும்நெறியை நாடித் திருவதிகை யிற்சென்று முன்போலச் சைவத்திலே பிரவேசித்து அச்சோய் நீங்கியுய்ந்

தவிட்டார். இனி எங்கள் சமயம் அழிந்துபோயிற்று என்று துக்கித்து, தலையும் பீலியுந்தாழ ஓரிடத்திலே ஒருங்கு கூடினார்கள். கூடிய சமணர்கள் தருமசேனருக்கு வந்த சூலைநோய் எங்கள் ஒருவராலும் நீங்காமல் சைவ மதப்பிரவேசத்தால் நீங்கிவிட்ட உண்மையை எங்கள் அரசன அறிந்தாலுகில், எங்கள்மேற் கோபங்கொண்டு தானும் சைவனுகி எங்கள் விருத்தியையும் தவிர்ப்பான், இனி இதற்கு யாதுசெய்வோம் என்று சொலலித்தங்களுக்குள்ளே ஆலோசித்து, ஒரு சம்பிரதாரணை செய்துகொண்டு, பல்லவராஜனுடைய நகரத்திற்சென்று அரண்மனையிலுள்ளே புகுந்து, அவ்வரசனைநோக்கி எங்களெல்லாருக்கும் தலைவராயிருந்த தருமசேனர், தம்முடைய சகோதரியாராகிய திலகவதியார சைவசமயத்தில் நிற்கிறபடியால், தாமும் அவாபோலாக விரும்பி, தமக்குச் சூலைநோய்வந்ததாகக்காட்டி, அது நம்மாலே தீர்ந்திலது என்று அவரிடத்திற்சென்று முன்போலச் சைவசமயத்திலே பிரவேசித்து, நம்முடைய கடவுளே நிந்தைசெய்தனர் என்றுசொன்னார்கள். உடனே பல்லவராஜன் கோபங்கொண்டு, இதற்கு யாது செய்யலாம் என்றான். அதுகேட்ட சமணர்கள், உத்தமமாகிய தங்கள் சமயமகிமையைக்கெடுத்த உம்முடைய ஆஞ்ஞையையும கடந்த அந்தத் தருமசேனனை நீர் அழைப்பித்துத் தண்டிக்கவேண்டும் என்றார்கள். அப்பொழுது அரசன் மந்திரிமாரை நோக்கி, நிம்முனிவர்களாற் சுடப்பட்ட தீயோனைப் பிடித்துக்கொண்டு வாருங்கள் எனறு ஆஞ்ஞாபித்தான்.

உடனே மந்திரிமார் சேனைகளோடும் புறப்படடு திருவதிகையை அடைந்து, திருநாவுக்கரசு சுவாமிகளிடத்திற்சென்று, எங்கள் அரசன் இன்றைக்கு உம்மை அழைத்துக்கொண்டு வரும்படி எங்களை அனுபபினன் வாரும் என்றார்கள். அதுகேட்ட திருநாவுக்கரசு சுவாமிகள் பரமசிவன் மேலே "காமார்க்குங்குடியல்லோம்" என்னும வாக்கியததைமுதலிலுடையதிருத்தாண்டகத்தைப் பாடியருளினர்.

மறுமாற்றத்திருத்தாண்டகந்தேவாரம்.

திருச்சிற்றம்பலம்

நாமாக்குங்குடியலலோமமனையஞ்சோறததிலிடாபபடோடலேயில்லோம
ஏமாப்போமபிணியதியோம்பணிவோமலலோமினபமேயெநாளுதனடமில்லோம்
தாமாகுங்குடியல்லாத்தன்மையான சங்கரனற்சங்கவெண்குழையோர்காதிற்
கோமாற்கேநமென்றுமீளாவாளாயகொய்மலாச்சேவடியிணையேகுறுகினோமே.

நாவாரநம்பனையேபாடப்பெற்றேநாணமுரோளாமேவினளடபெருமை
ஆவாவென்றெமையாள்வானமராதனையஞ்மொறகறிவரியவனலாயநீண்ட
தேவாதிதேவன்சிலனென்சிந்தைசோந்திருதானதென நிசைகோன்முனேவந்து(மே
கோவாடிக்குற்றேவலசெய்கென்முலுங்குணமாகக்கொள்ளோமெண்குணதளரோ

திருச்சிற்றம்பலம்.

நாம் நீங்கள் அழைத்தபடியே வரக்கூடவோமல்லோம் என்றார். அது கேட்ட மந்திரிமார்கள் அவரை வணங்கிப் பிரார்த்தித்து அழைக்க, அவர் அடியேனுக்குவரும் அபாயங்களுக்கெல்லாம் பரமசிவன் இருக்கிறார் என்று போதத்துக் உடன்பட்டார், அவர்கள் அழைத்துக்கொண்டுபோய் அரசன் சமுகத்திற்சென்று அறிவித்தார்கள். அரசன் அதைக்கேட்டு, பக்கத்திலிருந்த சமணர்களைநோக்கி, இனி அவனுக்கு யாதுசெய்வோம்என்றுகேட்க, சமணர்கள் நீற்றறையில் விடவேண்டும்என்றார்கள். அரசன் சபீபத்தில்நின்ற பணிவிடைக்காரர்களை நோக்கி, அவனை இவர்கள் சொல்லியபடியே செய்யுங்கள் என்று ஆஞ்ஞாபிக்க, அவர்கள் அந்நாயனாரைச் சூடிடினையுடைய நீற்றறையினுள்ளே விட்டுக் கதவைப் பூட்டினார்கள். திருநாவுக்கரசுசுவாமிகள் பரமசிவனுடைய திருவடிநிழலைத் தலைக்கொண்டு சிவனடியார்களுக்கு இவ்வுலகத்திலே துன்பம் வருவதுண்டோ என்று அக்கடவுளின்தியானித்துத் தொழுதுகொண்டு அந்தநீற்றறையிலுள்ளே இருந்தார்.

தனிக்குறுந்தொகைத்தேவாரம்.

திருச்சிற்றம்பலம்

மாசில்வீணையுமாலைமதியமும், வீசுதென்றலும்வீங்கிளவேனிலு
மூசுவண்டரைபொய்கையும்போன்றதே, யீசனெனதை யிணையடிநீழலே.

விறன்மிண்மியினனபாலிற்படுகையபோன, மறையநின்றளனமாமணிச்சோதியான்
உறவுகோணட்டியர்வுகயிற்றினை, முறுகவாங்கிக்கடையமுன்னிற்குமே.

திருச்சிற்றம்பலம்.

அந்நாயனார் பரமசிவனுடைய திருவடிநீழலாகப பாவித்த அந்நீற்றறைவீணைகானமும சந்திரனும் தென்றலும் இளவேனிலும் பொய்கையும் போலக்குளிர்ந்தது. எழுநாட் சென்றபின் பல்லவராஜன் சமணர்களை அழைத்து நீற்றறையைத்திறந்து பாருங்கள் என்று சொல்ல அவர்கள் நீற்றறையைத்திறந்து நாயனார் யாதொரு ஊனமும் இன்றிக் களிப்புற்றிருத்தலைக்கண்டு ஆச்சரியமடைந்து அரசனிடத்திற்சென்று இவன் முன்னே நம்முடைய சமயத்தில் இருந்துசெய்த மந்திரசாதகத்தினலே வேவாமற்பிழைத்துக்கொண்டான். இனி இவனுக்கு நஞ்சு ஊட்டுவதே தகும் என்றார்கள். அரசன் அப்படியே செய்யுங்கள் என்றுசொல்ல அவர்கள் நாயனருக்கு நஞ்சுகலந்த பாற்சோற்றை உண்ணக்கொடுத்தார்கள். நாயனர் அவர்களுடைய வஞ்சனையை அறிந்து நஞ்சை அமுதாகக்கொண்டு கடவுளுடைய அடியார்களுக்கு நஞ்சும் அமுதாம் என்று நஞ்சுகலந்த அந்தப்பாற்சோற்றை உண்டு இருந்தார். சமணாகள் அதைக்கண்டு இவனுக்கு நஞ்

சும் அமுதமாயிற்று இவ்விடத்திலே இவன் பிழைப்பானுயில் சமக்கெல்லாம் நாசமுண்டாகும் என்று பயந்து அரசனிடத்திற்சென்று நாம்ஞானசை ச் சோற்றிலே கலந்து உண்பித்தும் நம்முடைய சமய நூல்களிலே கற்றுக் கொண்ட மந்திரவலியினுலே பிழைத்துவிடான். அவன் இறவாதிருப்பானுகில் எங்கள் உயிரும் உம்முடைய அரசாட்சியும் நீங்குவது நிடம் என்ஞர்கள். அரசன் அதைக்கேட்டு இனி அவனைக் கொல்லுதற்கு உபாயம் யாது என்று கேட்க சமணர்கள் உம்முடைய யானையை அவனுக்கு எதிரே விடுவதே உபாயம் என்ஞர்கள். அரசனும் அப்படியே செய்யும்பொருட்டு ஆஞ்ஞாபிக்க, துஷ்டர்களாகிய சேனர்கள நாயனருக்கு எதிரேயானையை க்கொண்டுவந்து விட்டார்கள். நாயனர் சிறிதும்பயமின்றி, பரமசிவனுடைய திருவடிகளைச் சிந்தித்து அவ்வானையை நோக்கி "சுண்ணவெண் சந்தனச்சாந்து" என்னும்வாக்கியத்தை முதலிலுடைய திருப்பதிகத்தை எடுத்து ஒவ்வொரு செய்யுளின் இறுதியிலும் "கெடிலப்புனலு முடையாரொருவர் தமர்நா, மஞசுவ தியாதொன்றுமில்லீ யஞசவருவதுமில்லீ" என்பதை அமைத்துப்பாடினர்.

திருக்கெடிலவீரட்டானத்தேவாரம் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்

சுண்ணவெணசந்தனச் சாதஞ்சுடர்த்திங்கடகுளாமணியும
வண்ணவுரிவையுடையும்வளரும்பவளநிறமு
மண்ணலரணமுரணேறுமகலமவளாயவரவுக்
கிணணெண்கெடிலப்புனலுமுடையாரொருவாதமர்நா
மஞசுவதியாதொன்றுமில்லீயஞசவருவதுமில்லீ.

நரமபெழுகைகள்பிடித்துநங்கைகடுங்கமலீயை
யுரங்களெல்லாங்கொணடெடுத்தாணென்பதுமொன்றுமலற
வரங்கள்கொடுத்தருள்செய்வானவளர்பொழில்வீரட்டஞ்சூழ்ந்து
நிரம்புகெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லீயஞசவருவதுமில்லீ.

திருச்சிற்றம்பலம்.

யானையானது அந்நாயனரைவலஞ்செய்து எதிராக நிலத்திலேகாழ்ந்து இறைஞ்சி எழுந்து அப்புறம்போக அதன்மேலிருக்கின்ற பாகர்கள் அதனை அங்குசத்தினலேத்திருத்திருப்பி அவரைக் கொல்லவேண்டும் என்கின்ற குறிப்பையுக் காட்டினர்கள். அது அப்படிசசெய்யாமல துதிக்கையி

னால் அவர்களை ஏறித்துவீசிக் கொன்றுவிட்டு வெவ்வேறிடங்களிலுள்ளசம ணர்களைத் தேடித்தேடி ஓடி அவர்களைத் தள்ளிமிதித்துக் கிழித்தெறிந்து கொன்று அங்கரத்தில் உள்ளவர்கள் எல்லாரும் கலங்கும்படி அரசனுக்கு ஆகுலத்தை விளைவித்தது. அவ்வானைக்குத் தப்பிய சமணர்கள் எல்லாரும் மானமழிந்து மயங்கி மனம்வருந்தி அரசனையடைந்து தருமசேனன் எங்கள் சமயதூல்களிலே கற்றுகொண்ட மந்திரத்தின் பலத்தினாலே காங்கள்விட்ட யானையைக்கொண்டே எங்கள் வலிமையைச் சிதைத்தான் என்றுசொல்லிப் புலம்பினார்கள், அரசன் கோபங்கொண்டு இனி அவனுகருயாதுசெய்யவேண்டும் எனறுகேட்ட சமணர்கள் அவனைக் கல்லோடு சேர்த்துக் கயிற்றினாலேகட்டிக் கடலிலே தள்ளவேண்டும் என்றார்கள் அரசன்கொலைத்தொழில் செய்வோரை நோக்கி தருமசேனனைக் காவலோடு கொண்டுபோய் ஒரு கல்லோடுசேர்த்துக் கயிற்றினாலேகட்டி ஒருபடகில் ஏற்றிசமுத்திரத்திலே விழும்படி தள்ளிவிடுங்கள் என்று ஆஞ்ஞாபித்தான். கொலைத்தொழில் செய்வோர் அதைக்கேட்டு, சமணர்களும் உடன்செல்ல, அச்சம் சிறிதுமில்லாத திருநாவுக்கரசு சுவாமிகளைக் கொண்டுபோய், அரசன்சொல்லியபடியே கடலிலே தள்ளிவிட்டுத் திரும்பினார்கள்.

சமுத்திரத்திலே தள்ளிவிடப்பட்ட திருநாவுக்கரசுசுவாமிகள் அடியேனுக்கு யாது நிகழினும் நிகழுக, அடியேன் சுவாமியை ஸ்தோத்திரம் பண்ணுவேன் எனறு நினைந்து, "பொறாமணி வெதியன்" எனபதை முதலிலுடைய சமச்சிவாயப் பதிகத்தைப் பாடியருளினார்.

நமச்சிவாயத்திருப்பதிகம் பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பொறாமணி வெதிபன்சோதிவானவன
பொற்றுணை திருந்தடிபொருந்தக்கைகொழுங்
கற்றுணைப்பூட்டியேர்கடலிற்பாய்ச்சினும
நற்றுணையாவதுநமச்சிவாயமே.

நாப்பினைதழுவியமாதொர்பாகத்தன்
பூப்பினைதிருந்தடிபொருந்தக்கைகொழு
நாப்பினைதழுவியநமச்சிவாயப்பத்
தேத்தவல்லார்தமக்கிடுக்கணில்லையே.

திருச்சிற்றம்பலம்.

பின் சமுத்திரத்திலே கல்வானது நாயனுர்மேற பக்கத்திலிருக்கத்தெப்பமாய் மிதந்தது. கடடிய கயிறே ஆறுதுபாயிறறு, வருணபகவான் கல்லெசிவிகையாக அந்நாயனாைத் தாங்கிக்கொண்டு திருப்பாதிரிப்புலியூர் என்னும சிவஸ்தலத்திலே சேர்த்தான். நாயனுர் அந்தத் திருபபதியினின்றும் அரசரென்னுமோசையுடன தம்மை எதிரகொண்ட சிவனடியார்களோடு ஆலயத்திறசென்று, சுவாமியைவணங்கித் திருப்பதிகங்கள் பாடிக்கொண்டு, அங்கே சிலகாள திருந்தார்.

திருப்பாதிரிப்புலியூர் திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

நன்றுளுமாயெனக்கெடுதையமாயுட னேமருள்வினராய்
மூனறுயுலகம்படைதுகாத்தன்மனதுளசிருக்க
வேனறுமிமையவாகனபனமிநடபாதிரிபபுலியூர்த்
தோன்றுதுணையாயிருநதனனன்னடிபோங்குநாளுக்கே.

திருந்தாவமணர்தந்தீகெறிப்பட்டுத்திகைத்துமுத்தி
தருநதாளிணைக்கேசரணம்புருந்தென்வையெடுதத
பொருந்தாவாரக்கனுடல்நெரித்தாய்பாதிரிப்புலியூ
ரி நந்தாயடி யேனிவிப்பிறவாமைவந்தேன்றுதொளே.

திருச்சிற்றம்பலம்.

பின திருவதிகை வீரடடானேசுரரைத் தரிசிக்கவேண்டும் என்கின்ற ஆசையினுல் அவவிடத்தினின்றும் புறப்பட்டு, திருமாணிக்குழியையும் திருத்தினை நகரையும வணங்கிகொண்டு திருக்கெடிலநதியைக் கடந்துசென்ருர். அந்நாயனர் சமணர்கள்செய்த இடர்கள் அனைத்தையும் ஜயித்துவருதலைக் கேளவியுற்ற திருவதிகை வாசிகள் சமஸ்தரும் அவ்வூரை மிக அலங்கரித்து, மங்கலவாத்தியங்கள் முழங்க அவரை எதிர்கொண்டு சமலங்கரித்தார்கள் விபூதியை உத்தூளனம்செய்த திருமேனியையும் தாழவடத்தையும் சிவனுடைய திருவடிகளே மறவாத சிந்தையையும் ஆனந்தபாஷ்பம் பொழிகின்ற கண்களையும் திருப்பதிகங்கள் தோன்றுகின்ற திருவாயையுமுடைய நாயனர் தம்மை எதிர்கொண்ட சனங்களோடு ஆலயத்திற்சென்று சுவாமியை வணங்கித் திருத்தாண்டகம் பாடியருளினுர்.

திருவீரட்டானம் - ஏழைத்திருத்தாண்டகம்.

நிருச்சிற்றம்பலம்.

வெறிவிரவுகூவிளாகத்திறைங்கலானே
வீரட்டத்தானெவெள்ளேறறிஞனைப்
பொறியரவினோடப்புள்ளூர்தியானைப்
பொன்னிறத்தினோடப்புகழ்த்தக்காரனே
யறிதற்கரியசிர்மான்றன்னை
மதியையமங்கையமர்ந்தான்றன்னை
எறிகெடிலத்தானியிறவன்றன்னை
யேழையனபண்டிழந்தவாறே.

தொல்லைவானோர்முழுவினைகள்சூழப்போதது
தூறறநீயெனறறியேன்சுடாய்நின்று
வல்லையெயிர்த்திங்கடிமைக்கொண்ட
வானவர்க்குந்தானவராக்கும்பெருமான்றனனைக்
கொல்லைவாய்கருரூதொசித்துக்குழலூதுங்
கோவலனுகான்முகனுங்கூடியெங்கும
எல்லைகாணபரியானையெம்மான்றனனை
யேழையனபண்டிகழந்தவாறே.

திருச்சிற்றம்பலம்.

நாயனார் வீரட்டானேசுரர்மேல திருப்பதிகங்களைப்பாடிப் பணிசெய்துகொண்டிருக்கும் காலிலே சமணர்களுடைய தூர்ப்போதனைக்கு இசைந்து தீங்குசெய்துகொண்டிருந்த பல்லவராஜன் அத்திருவதிகையிலேவந்து நாயனாரைவணங்கி சைவசமயத்திலே பிரவேசித்தான் சமணசமயம் பொய்யென்றும் சைவசமயமேமெயென்றும் அறிந்துகொண்ட காடவனென் பவனும் பாடலிபுரத்திலிருந்த சமணருடைய பளளிகளையும்பாழிகளையும் இடித்து, அவைகளின் கறகளைத் திருவதிகையிலே கொண்டுவந்து, பரமசிவனுக்குக் குணதர வீசசரம் என்னும் கோயிலைக்கட்டினன். அந்காடவனிலே திருநாவுக்கரசுசுவாமிகள் சிவஸ்தலங்கள் பலவற்றிற்குசென்றுசுவாமி தரிசனம்செய்து திருப்பதிகம்பாடவிரும்பி, அவ்விடத்தினின்றும் நீங்கி, திருவெண்ணெய்நல்லூர் திருவாமாத்தூர் திருக்கோவலூர் முதலியதிருப்பதிகளை வணங்கிப் பதிகமபாடிக்கொண்டு, பெண்ணாடகத்திற்சென்று திருத்தூங்காணை மாடமென்னும் ஆலயத்திற் பிரவேசித்து, சுவாமியை வணங்கி, சுவாமீ ! அடியேன் இழிவினையுடைய சமணசமயத் தொடக்குண்டு வருந்திய இத்தேகத்துடனே உயிர்வாழ்தற்குத் தரியேன் தரிக்கும்பொருட்

டித் தேவரீருடைய இலச்சினையாகிய சூலத்தையும் இடபத்தையும், என் மேற் பொறித்தருளவேண்டும் என்னுமகருத்தால் ஒருதிருப்பதிகம் பாடியருளினர்.

திருத்தூங்கானைமாடம்-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பொன்னார்திருவடிக்கொண்றுண்டுவிண்ணப்பம்போற்றிசெய்யு
மென்னைவிகாப்பதற்கிச்சையுண்டேவிருங்கூற்றகல
மின்னாருமூவிலைச்சூலமென்மேற்பொறிமேவுகொண்டற்
றுன்னார்கடந்தையுட்டூங்கானைமாடச்சுடர்க்கொழுந்தே.

கடவுட்திகிரிகடவாதொழியக்கயிலையுற்ருன்
படவுத்திருவிரலொன்றுவைத்தாம்பனிமால்வரைபோ
லிடம்பொறித்தென்னையேன்றுகொள்ளாயிருஞ்சோலைதிங்கள்
தடவுங்கடந்தையுட்டூங்கானைமாடத்தெந்தத்துவனே.

திருச்சிற்றம்பலம்

உடனே பரமசிவனுடைய திருவருளினால் ஒருசிவபூதம் மற்றொருவரிருக்கும் தெரியாதபடி அவ்வாகீசருடைய தோளிலே சூலக்குறியையும் இடபக்குறியையும் பொறித்தது. நாயனர் தமமுடைய தோளிலேபொறிக்கப்பட்ட இலச்சினைகளைக்கண்டு மனமகிழ்ந்து, திருவருளைநினைந்து கண்ணீர் சொரியவிழுந்து நமஸ்கரித்து எழுந்தார் அவர் அந்தஸ்தலத்தில் இருக்கின்ற நாளிலே திருவரத்துறைக்கும் திருமுதுகுன்றுக்கும்போய் சுவாமிதரிசனம்செய்து பதிகம்பாடி, நிவாவெண்ணம் நதிக்கரையின் வழியாகவடந்து சிதம்பரத்திலே சென்று, கனகசபையிலே ஆனந்தத்தாண்டவஞ்செய்தருளுகின்ற சபாநாயகரைத் தரிசித்து விழுந்து நமஸ்கரித்து எழுந்து இரண்டுகைகளும் சிரசின்மேலேதிக்குயிரண்டு கண்ணில் நின்றும்ஆனந்தபாஷ்பஞ்சொரிய அக்கினியிற்பட்ட வெண்ணெய்போல மனங்கசிந்து ருக என்று வந்தாய் என்னுந் திருக்குறிப்போடு நிருத்தஞ்செய்கின்ற சுவாமியுடைய திருநயனத்தினின்றும் பொழிகின்ற திருவருளாலாகிய ஆனந்த மேலீட்டினலே திருப்பதிகங்கள் பாடினர், அவர் சுவாமி தரிசனம்பண்ணி உழவாரப்பணி செய்துகொண்டு சிலநாள் அங்கே இருந்தார்.

கோயிற்றிருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

பத்தனாய்ப்பாடமாட்டேன்பரமனேபரமயோகி
யெத்திறத்தும்பத்திசெய்கேனென்னேயிழவேண்டா
முத்தனேமுதல்வாதில்லையம்பலத்தாடுகின்ற
வத்தாவின்னுடல்காண்பானடியனேன்வந்தவாறே

மண்ணினிண்டமாலவனும்மலர்மிசைமன்னினனும்
விண்ணுளண்டத்திருவுருவம்விரும்பினுங்காணமாட்டார்
திண்ணனுண்டதிருவேமிக்கதில்லைச்சிற்றம்பலத்தே
பண்ணனுண்டபாட லாடும்பரமனீயாடுமாறே.

திருச்சிற்றம்பலம்.

இத் திருப்பதிகத்தைப்பாடி மாணிக்கங்களினை சோதிநிறைந்த முன்றிலிடத்தும் உயர்ந்த கொடிகளாடுகின்ற அழகியதோள் நிறைதலீதியினிடத்தும் தன்னைக்கூடுமான நிருப்பணிகளைச செய்கினறவராகி திருப்பதிகங்களையும் பாடுந்தொழிலுடையவராகிய திருநாவுக்கரசு சுவாமிகள் மிகுத்த மகிழ்ச்சிகொண்டு "அனனம்பாலிக்கு" மென்னு முதலியுடைய திருக்குறுந்தொகை பாடியருளினர்

கோயிற்றிருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

அனனம்பாலிப்பதற்கில்லைசிற்றம்பலம்
பொன்னம்பாலிக்குமென்னுமிப்பூமிதை
பெனனம்பாலிக்குமாறுகொணடின்பாற
வினனம்பாலிக்குமாவினியனவே

மதுரவாய்ப்பொழிலங்கையொருபங்கினன
சதுரனிற்றம்பலவன்திருமலை
யதிரவார்த்தெடுத்தான்முடிபத்திற
மிதிகொளசேவடிசென்றணைதுமினே.

திருச்சிற்றம்பலம்.

பினபு அங்ஙனம் பொருந்திய பணிவிடைகளைச் செய்துவாழுகாளில் திருவேட்களத்துக்குச் சென்று விடைக்கொடியையுடைய பரமசிவத்தைப் பாடிவணங்கி நீலோற்பலம் போன்ற கண்டத்தையுடைய கடவுள்வாழுகின்ற திருக்கழிப்பாலை யென்னுந் திருப்பதியையடைந்துசுவாமிதரிசனஞ் செய்து வணங்கி "வனபவள வாய்திறந்து வானவர்க்குந் தானவனே யென்கின்ரு" னென்றெடுத்துத் திருப்பதிகம் பாடியருளினர்.

திருக்கழிப்பாலை - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வனபவளவாய்திறந்துவான்வர்க்குந்தானவனேயென்கின்றுளாற்
சினபவளத்திரடோண்மேற்சேர்ந்திலங்குவெண்ணீற்றனென்கின்றுளா
லன்பவளமேகலியோடப்பாலிக்கப்பாலானென்கின்றுளாற
கண்பவளஞ்சிந்துங்கழிப்பாலிச்சேர்வானைக்கண்டாள்கொலோ.

அடர்ப்பரியவிராவணனையருவரைக்கீழடாத்தவனேயென்கின்றுளாற்
சுடர்ப்பெரியதிருமேனிச்சுண்ணவெண்ணீற்றவனேயென்கின்றுளான்
மடர்ப்பெரியவாலின்கீழறால்வர்க்கன்றுரைத்தானென்கின்றுளாற்
கடற்கருவிசூழ்ந்தகழிப்பாலிச்சேர்வானைக்கண்டாள்கொலோ.

திருச்சிற்றம்பலம்.

பின் திருக்கழிப்பாலையென்னும் திருப்பதியைவிட்டு மீண்டு வழிக்கொண்டு வரும்போது நினைப்பவர்களது மனத்தைக்கோயிலாகக்கொண்டருளும்அம்பலத்தின்கண் ணெழுந்தருளிய நிருத்தனுடை தினைத்தனையாம் பொழுதுமறந்துய்வனேவெனப்பாடிக்கொண்டு சிதம்பரத்தை யடைந்தார்

கோயிற்றிருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பனைக்கையும்மதவேழமுரித்தவ, னினைப்பவர்மனங்கோயிலாக்கொண்டவ
னினைத்தும்வேடமாமம்பலக்கூத்தனை, தினைத்தனைப்பொழுதுமறந்துய்வனே.

சங்குமால்வரைவேத்தலறுமுன்சிரம, மீங்குவிமழுவாலுன்றியதாளினை
தேங்குநீர்வயல்சூழ்திலைக்கூத்தனைப், பாங்கிலாததொண்டனேன்மறந்துய்வனே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு அடியவருக் கெளியவனும் தன்னுள்ளத்தைவிட்டு நீங்காதவனுமாகிய சபாபதியை அரியானேயென்றெடுத்து திருத்தாண்டகச் செந்தமிழ்பாடி அவனைப்பணிந்து அங்கு சிலகாலிருந்தார்.

கோயிற்பெரிய திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

அரியானேயந்தணாதஞ்சிந்தையானேயருமறையினகத்தானேயுணர்வுமாகுந்
தெரியாததத்துவனேதேனேய்பாலைத்திகழொளியைத்தேவர்கடங்கோனேமற்றை
யரியானேநான்முகனேக்கன்றுலகாற்றைக்கனகடலேக்குலவுமலையைக்கலந்துநின்ற
பெரியானேப்பெரும்புற்றப்புலியூரானேப்பேசாதகாலெல்லாமபிறவாநாளே.

காரொளியதிருமேனிச்செங்கண்மாலுங்கடிகமலத்திருத்தயனுக்காணுவண்ணஞ்
சீரொளியதழற்பிழம்பாயநின்றதொல்லைத்திகழொளியையகன்றிசைத்தானேயகற்றீர்க்கும்
ஏரொளியையிருநிலனுமலீசுமபும்வீண்ணுமேழுலகுங்கடந்தண்டத்தப்பாலுன்ற
பேரொளியைப்பெரும்பற்றப்புலியூரானேப்பேசாதநாளெலாம்பிறவாநாளே.

திருச்சிற்றம்பலம்.

அதன்பின் செஞ்சடை க்கறைமறை முறைதத் திளகிலா வெறிக்குமென் னுரு சிறந்த வளையைபொருந்திய தமிழ்மாலையை யாவருக்கும் அதிசயமுண்டாகும்படி பாடி அன்புடனே மனமுருகக் கண்களினின்றும் ஆனந்த நீர் பொழிய நிலைத்த திருப்பணிவிளைசெய்து இருக்குநாளில்.

கோயிற்றிரு நேரிசை.

திருச்சிற்றம்பலம்.

செஞ்சடைக்கறைமறைத்தளகிலாவெறிக்குஞென்னி
ருஞ்சடைக்கண்ணனைக்காணலாநறவமர்பூ
மஞ்சடைச்சோலைத்தில்லைமல்குசிற்றம்பலந்தே
னுஞ்சடையிருள்கிழியதனுள்ளெரியாடுமாறே.

மதியிலாவமுகுனிமாமலையெடுகரங்கள்
கொதியன்மறுணெரியதூன்றிநீடிரும்பொழில்களசூழ்க
மதியன்தாயதிலைதன்னுண்மல்குசிற்றம்பலத்தே
யதிசயம்பாலகன்றையனலெரியாடுமாறே.

திருச்சிற்றம்பலம்.

ஒருநாள் திருநாவுக்கரசு சுவாமிகள், சீர்காழியிலே பரமசிவனதுதிருவருளினால் உமாதேவி ஞானப்பாலை ஊட்ட உண்டு வேதாரண்யத்தினைத் தமிழிலே தேவாரமாகப் பாடியருளுகின்ற திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளுடைய மகிமையை அடியாகளுசொல்ல, கேள்வியுறுறு, அவருடைய திருவடிகளே வணங்கல்வேண்டும் என்னும்ஆசை மிகுதியினால் சபாநாயகரைத்தொழுது அனுமதி பெற்றுக்கொண்டு புறப்பட்டு திருவீதியிலே அங்கப் பிரதக்ஷிணஞ்செய்து அத் திருப்பதியின் எல்லையைக்கடந்து, திருநாமாயூரைப் பணிந்து பாடி சீர்காழிக்குச் சமீபித்தார். திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் சீர்காழிக்குத் திருநாவுக்கரசு சுவாமிகள் வருதலைக்கேள்வியுற்று, அதிமிகுந்த ஆசையோடு அடியாகள் பக்கத்திலேசூழ அவரை எதிரெகொண்டார். திருநாவுக்கரசு சுவாமிகள் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுடைய திருவடிகளிலே விழுந்தநமஸ்காரிக்க, அவர் தம்முடைய திருக்கரங்களினால் இவருடைய திருக்கரங்களைப் பிடித்து எடுத்து தரமும் அஞ்ச

லிசெய்து, அப்பரே என்றூர் அதற்குத் திருநாவுக்கரசுசுவாமிகள் அடியேன் என்றூர் அவ்விருவரும் தாங்கள் ஒருவரை ஒருவர் காணப்பெற்றதனால் மிக மனமகிழ்ந்து, ஆலயத்திற்சென்று சுவாமியை வலங்கொண்டு நமஸ்கரித்து எழுந்தார்கள், திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அப்பமூர்த்தியைநோக்கி அப்பரே உம்முடைய சுவாமியைப் பாடுஎன்றுசொல்ல, இவர்பதிகம்பாடி திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுடையதிருமடத்திற்சென்று அவரோடு அளவளாவிப் பலகாள் இருந்தார்.

திருக்கழுமலம்-திருவிருத்தம்.

கிருச்சிற்றம்பலம்.

பார்கொண்டுமூடிக்கடல்கொண்டஞான்றுநின்பாதமெல்லா
நீலத்தாள்ளினமேத்தினஎன்பாகளிர்மியம்
கார்கொண்டவண்கைச்சடைவிரித்தாடுங்கழுமலவர்க்
காளன்றிமற்றுமுண்டோவெந்தணூழியகலிடமே.

கரையார்கடல்சூழிலங்கையாகோன்றண்முடிசிதறத்
தலையாமலராடூனதுமுள்ளம்விதிர்த்ததத்
தலையாப்கிடந்தயர்தானறன்கழுமலங்காண்பதறகே
மலையாப்பரிசிவைகாடோறுந்தமையாள்வனவே.

திருச்சிற்றம்பலம்.

ஒருநாள இவர் சோழ மண்டலத்திலுள்ள சிவஸ்தலங்கள் எல்லாவற்றையும் வணங்கவேண்டும் எனறு தம்முடைய திருவுள்ளத்தேதோன்றிய ஆசையைத் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுக்குத் தெரிவித்து அவரோடும் திருக்கோலக்காவிறருச சென்றி சுவாமிதரிசனம் புண்ணினர். திருஞானசம்பநத சுவாமிகள் அவரிடத்திலின்றும மீண்டருளினார, அப்பமூர்த்தி கருப்பறியலூர்-புன்கூர்-நீடூர்-சூலுக்கை-நின்றையூர - கனிபள்ளி முதலிய ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு காவேரியாற்றின் இருகரைவழியாகவும் சென்று செம்பொன் பள்ளி-மயிலாடுதுறை - குருத்திவேள்விக்குடி-எதிர்கொள்பாடி-திருவாவடுதுறை இத்தலங்களை யடைந்து யானுய்ச் சேனென்று அளவறற திருத்தாண்டக மருளிசெய்து பின்னுந் திருக்குறுக் தொகையும் கேரிசையும் சகதலிருத்தங்களும் ஆகிய வெவ்வேறு பதிகங்கள்பாடி மிகுந்த அனபினோடு பூமியிலுள்ளார் பரவ அவ்விடத்தும் பல நாட்டங்கி கைத்தொண்டு செய்து இருந்தார்.

திருவாவடுதுறை திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நம்பனேநான்மறைதங்களைகண்டாணை
ஞானப்பெருங்கடலேகன்மைதன்னை
கூடினேக்கல்லாலிருந்தான்றன்னைக்
கற்பகமாயடியார்கட்கருள்செய்வானைச்
செம்பொன்னேபவளத்தைத்திருமுத்தைத்
தெங்கினஞாயிறைதீயைநீரை
யம்பொன்னேயாவடுதண்டுறையண்மேய
வரனடியேயடைந்தாரையல்லற்படாரே.

தரித்தானேத்தண்கமனஞ்சுண்டான்றன்னேத்தக்கன்றன்
பெருவேள்விதகர்த்தான்றன்னேபு
பிரித்தானேப்பிறைதவழுபெருஞடையினானே
பெருவலியால்மலையெடுத்தவரக்கன்றன்னே
கொரித்தானேகிரிழைபாள்பாகத்தானே
கீசனேனுடலுறுநோயாதைதீர
வரித்தானேயாவடுதண்டுறையண்மேய
வானடியேயடிநாயேனடைந்துய்ந்தேனே.

திருச்சிற்றம்பலம்.

பின் திருவிடைமருதூர் தி நாதேச்சரம் பரமாசாரிய சுவாமிகளை வணங்கிப் போற்றி பாடி தி நர்சாதிபுராதனத்தை அடைந்தார் அங்கே "கோவாய்முடுகியடிதடற்கூற்றங் குமைப்பதன்முன்,, பூவாரடிச்சுவடென்மேற் பொறித்தவை" எனும் பதிகம் பாடவும், பாமலிவன லலூருக்குவா என்று அருளிச்செய்தார்.

திருச்சத்திமுற்றம் திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

கோவாய்முடுகியடிதடற்கூற்றங்குமைப்பதன்முன்
பூவாரடிச்சுவடென்மேற்பொறித்தவைபோகவிடில்
மூவாமுழுப்பழிமூடுங்கண்டாய்முழங்குகுழறைகைத்
தேவாதிருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே.

பொறித்தேரரக்கன்பொருப்பெடுப்புற்றவன்பொன்முடிதோ
ளிறத்தாளொருவிரலூன்றிட்டலறவியங்கியெள்ளாள்
குறித்தேகொடுத்தாய்கொடியேன்செய்குற்றக்கொடுவினைநோய்
செறுத்தாய்திருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே.

திருச்சிற்றம்பலம்.

அப்பமூர்த்தி திருநல்லூரிலே சென்று சுவாமியை வணங்கி எழுந்தார். எழும்பொழுது சுவாமி உன்னுடைய நினைப்பை முடிக்கின்றேம்என்றுசொல்லி, தம்முடைய திருவடிகளை அவரிருசென்னிமேலே சூட்டினார். அப்பமூர்த்தி "நீனைகதனைய திருவடி யென்றலெல் வைத்தார கல்லாரெம்பெருமானார் கல்லவாறே" என்னும் திருத்தாண்டகம் பாடிய நளினர். இன்னும் திருப்பதிகங்கள் பாடிக்கொண்டு, சிலகாள் அங்கு நடந்தா இருக்கும் நாட்களிலே கருகாவூர் திருவாரூர் திருபபாலித்துறை முதலாகிய ஸ்தலங்களுக்குப்போய் சுவாமி தரிசனஞ செயதுகொண்டுதிருநலலூருகுத்திரும்பிவிடுவார்.

திருநல்லூர்த்திருத்தாண்டகம்

கிருச்சிற்றம்பலம்

நினைத்தருகுமடியாரையலைவதகரா
நிலயமேநீவினகணீங்கவைத்தார்
சினத்தருகுரனிற்றரிவைப்பரிவைவைத்தார்
செழுமதியினறளிவைதகாசிறத்துவாரே
சினத்துறுமிமணிமருடதடதடதற
வினமலர்பள்ளபொரவிழதுமகுவாய்ப்பில்கி
ரனைத்தனையமருவியெம றல்மேல்வைதகார்
நல்லூரெம்பெருமானார்கல்லவாறே.

புலங்கிளருமவருதிரைகளேழும்வைத்தார
குருமணிசாமலைவைத்தாரமலையக்கையர
துளங்கிளரவெடிதவனதிருண்முடியுகோவ
வொருவிரலாலுறவைசதாரிறுவரென்னு
பலம்புகழுமருளாடிபேர்வாரும்வைதகார்
புகழவைதகாபுரிந்தாளாகொள்ளவைத்தார்
நலங்கிளர்திருவடியென்றலேமல்வைத்தார்
நல்லூரெம்பெருமானார்கல்லவாறே.

திருச்சிற்றம்பலம்.

சிலகாட சென்றபின், அப்பமூர்த்தி திருநல்லூரினின்றும் நீங்கி,திருப்பழனததை வணங்கிக்கொணடு, திங்களூரின் வழியாகச்சென்றார். செல்லும்பொழுது, அவ்வூரிலே அபபுதிகாளர் என்பவர் தம்முடையபுத்திரர்களுக்குத் திருநாவுக்கரசு என்னும் பெயரைத்தரிததும், தம்முடைய அன்னசத்திரம் ஜைனரு குளம் தண்ணீர்ப்பந்தல் முதலியவற்றினும் தனித்தனியே இது திருநாவுக்கரசு சுவாமிகளுடைய என்றுதீட்டியும், இருத்தலே

க்கேள்வியுற்று, அவருடைய வீட்டுக்குச்சென்றார். அப்பூதிநாயனார் அப்ப மூர்த்தியைத் தம்முடைய மனைவியார் புத்திரர் முதலாயினரோடும் அவ னாவணங்கி, அங்கே திருவமுது செய்யும்படி பிரார்த்தித்து, அதற்கு இவ ர்உடன்பட்டதுகண்டு, அமுது சமைபித்து திருநாவுக்கரசு என்னும் பெ யர்பெற்ற தம்முடைய புதல்வரைநோக்கி தோட்டத்திற்சென்று வாழைக் குருத்து அரிந்துகொண்டுவா எனறு சொல்லியனுப்பினார். அவர்அரிந்து வாழைக்குருத்து அரியப்புகுந்தபொழுது, ஒருபாம்பு அவரைத் தீண்டிற் று. அதை அவர் பேணமல் அப்பமூர்த்தி திருவமுதுசெயயும்படி குருத் தைஅரிந்துகொண்டு,வீரைவிரைல திரும்பிவந்துவிஷந தலைகொள்கையால் மயக்கமடைந்து, வாழைகுருத்தைத் தமமுடைய தாயாகையில கொடுத்துவிட்டு தம்மைச சர்ப்பந்தீண்டினதைச சொல்லிக்கொண்டு, கீ ழேவிழந்து இறந்தார். அதுகண்டு அப்பூதிநாயனாரும் அவர்மனைவியாரும ஐயோ நினை நாயனர் அமுதுசெயயுமே என்று துக்கித்து, சவத்தைமறை த்துவைத்து சிறிதும் தடுமாற்றம் இன்றி அப்பமூர்த்தியிடத்திற்சென்று, சுவாமீ எழுந்தவந்து அமுதுசெய்தருளவேண்டும் என்று பிரார்த்தித்தார் கள். அப்பமூர்த்தி அங்குநிகழ்ந்த உண்மையைத் திருவருளினால் அறிந் துகொண்டு அவர்களுடைய அன்பைநினைந்து அருள்சுரந்து, சவத்தைச் சிவாலயத்தின்முன கொணர்வித்து "ஒன்றுகொலாம்,, எனகினற திருப்ப திகத்தை பாடியருளினர்.

விழந்தீர்த்தத்திருப்பதிகம்-பண்-இந்தளம்

திருச்சிற்றம்பலம்.

ஒனறுகொலாமவர்நிலையுபாவமா
யொனறுகொலாமுய நம்மதிருடிவ
மொன்றுகொலாமிடுவெண்டலையது
வொனறுகொலாமவரூவருதானே.

பதகுகொலாமவாபாம்பினகண்பாம்பினபல்
பத்துக்கொலாமெயிறுமெனிநதுக்கன
பதகுகொலாமவர்காயபபடடானறலை
பத்துக்கொலாமடியரர்செயலைகதானே.

திருச்சிற்றம்பலம்.

உடனே அப்புத்திரர் உணர்வுபெற்று, எழுந்தார். அப்பூதிநாயனர், தம்முடைய புத்திரர் பிழைத்ததைக்கண்டும், அதைக்குறித்துச் சந்தோஷி யாமல் அப்பமூர்த்தி அமுதுசெய்யாதிருந்தமையைக் குறித்துத் துக்கித்து

வருந்தினர். அவ்வருத்தத்தை நீக்கும்பொருட்டு, அப்பமூர்த்திஅவருடைய வீட்டிற்சென்று அமுதுசெய்து அங்கே இருந்தார். சிலகாடசென்றபின் திங்களூரினின்றும் நீங்கி, திருப்பழனத்திற்குப்போய் சுவாமிதரிசனஞ்செய்து அப்பூதிநாயனாரைச் சிறப்பித்துத் திருப்பதிகம் பாடியருளினர்.

திருப்பழனம்-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

செஞ்ஞாலமேபயில்கின்றகுயிலினங்காள்சொல்லீரோ
பண்மாலைவிரிவண்டுபண்முரலும்பழனத்தான்
முன்மாலைதருதிங்கள்முகிழ்விளங்குமுடிச்சென்னிப்
பொன்மாலைமார்பனென்புதுகலமுண்டிகழ்வானே.

வஞ்சித்தென்வளைகவர்ந்தான்வாரானேயாயிடினும்
பஞ்சிக்காறுசிறகன்னம்பாத்தார்க்குமழபழனத்தா
னஞ்சிப்போய்க்கலிமெலியவழலோம்புமபபூதி
குஞ்சிப்பூவர்கின்றசேவடியாயதோடியையே.

திருச்சிற்றம்பலம்.

அங்கே இருக்கும்காளிலே, திருசசோற்றுத் துறைமுதலாகிய ஸ்தலங்களுகுகும்போய் வருவா வெகுகாடசெனறபின், திருகல்லூருக்குச்சென்று சிலகாள் அங்கேவசித்து, பின் திருவாரூருக்குப் போகக்கருதி, அதனை நீங்கி பழையாறை வலஞசுழி திருக்குடமூக்கு கும்பகோணம்கல்லூர்திருச்சேறைருடவாயில் நறையூர் திருவாஞசியம பெருவேளூர் என்கின்றஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, திருவாரூரை அடைந்தபோது திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாரூரில் வந்ததைக் கேளவியுறற அவ்வூரிலுள்ள அடியார்கள் விதிகளையும் மாடமாளிகைகளையும் அலங்கரித்து சமணர்களுடைய மாயையைக்கடந்து கடலில் கல்லே மிதப்பாகவந்தவர் வந்தாரென்னுங் களிப்பால ஆளவற்ற தொண்டர்கள் மதிறபுறத்திறசென் றெதிர்கொண்டு திருநாவுக்கரசு சுவாமிகளை வணங்கிதிருப்பதியினுள் அழைத்துவந்தபோது திருபபதிகம் பாடியருளினர்.

திருவாரூர்த் திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

குலம்பலம்பாவருகுண்டர்முன்னேகமக்குண்டுகொலோ
வலம்பலம்பாவருதண்புனலாரூரவிர்சடையான்
சிலம்பலம்பாவருசெவ்வடியான்றிருமூலட்டானம்
புலம்பலம்பாவருதொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே.

நற்றமுடையவமணர்நிறமதுகையகன்றிட்
டுற்றகருமஞ்செய்தையப்பாற்தேனுக்குமுண்டுகொலோ
மற்பொலிதாளாளியாவணன்றன்வலிவாட்டுவித்த
பொற்கழலானடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே.

திருச்சிறுதம்பலம்.

அதன்பின்பு தன்னைச்சூழ்ந்து வருகின்ற திருத்தொண்டர்களோடு தோரணவாயிலையடைந்து தேவாசிரியன் முன்வந்து வணங்கி, ஆலயத்துட் புகுந்து புற்றிடங்கொண்ட கடவுளைத் தரிசித்து வணங்கி தேகம் புளகாங்கிதமாகக் கண்களில் ஆனந்தபாஷ்பம் பொழிய திருமூலட்டானனைத்துதித்துத் திருத்தாண்டகம் பாடியருளினர்.

திருவாரூர்ப்பொற்றிருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

கற்றவர்களுண்ணுங்களியேபோற்றிகாழலைடக்கார்செல்லுங்கதியேபோற்றி
யற்றவர்சுட்காரமுதமானாய்போற்றியிலையுமழுவேந்தியாண்டாய்போற்றி
மற்றொருவரொப்பிலாதசீர்போற்றிவானவர்களுற்றமருந்தேபோற்றி
செற்றவர்தம்புரமெரித்தசெல்வனேபோற்றிதிருமூலட்டானனேபோற்றிபோற்றி

பிரமன்றன்சிரமரிந்தபெரியோய்போற்றிபெண்ணுருவோடாணுருவாய்நின்றாய்போற்
கரநான்குமுக்கண்ணுமுடையாய்போற்றிகாதலிப்பார்க்காற்றவெளியாய்போற்றி [றி
யருமந்தேவர்க்கரசேபோற்றியன்றரக்கனெஞ்ஞான்றுதோளுந்தாளுஞ்
சிரமெரித்தசேவடிகள்போற்றிபோற்றிதிருமூலட்டானனேபோற்றிபோற்றி.

திருச்சிற்றம்பலம்

பின்பு தாண்டகலில்லா விளக்கையொத்த சோதிஸ்வரூபனுகிய கடவுண்முன்னின்று "காண்டலே கருத்தாயினா" வென்னுந் திருப்பதிகத்தைப் பாடி மனமுருகி ஆலயத்தை வலம்வந்து வணங்கி அன்புபொருந்திய மனத்தோடு திருவாயிலின் புறத்து வந்தார்.

திருவாரூர்-பண்-சிகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

காண்டலேகருத்தர்ய்நினைந்திருந்தெம்மைகமழ்குருத்தாய்கழற்
பூண்டுகொண்டொழிந்தேன்புறம்போயிலையம்மையா
வீண்மொடங்கணீண்டமாளிகைமெழுகொழ்வாளிமதி
தீண்டிவந்துலவுந்திருவாரூரம்மானே.

நாடினர்கமலம்மலரயனூழ் பலியாஞரலங்கிண்டவ
னுடிக்காணமாட்ட பதகழலாயம்பரனோர்
பாடுவார்பணிவார்பல்லாண்டிசை கூடியாத்தார்கள்சித்தத்துள்புக்குத்
தேடிக்கண்டுகொண்டேன்திருவாரூரம்மானே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு சிவத்த மாணிக்கமலைகள் ஒளி சூழ்ந்த திருவாயிலின் முன்வந்து "கொய்யுலாமலர்ச்சோலைக் குயில்கூவ மயிலாலுமாரூரனைக், கையினுற்முழாதே முன் வனியிருக்கக் காய்கவர்ந்த களவினனென்னு" திருப்பதிகமருள்செய்து அங்கிருந்தனர்.

திருவாரூப்பழமொழிபத்து-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மெய்யெலாம்வெண்ணீறுசண்ணித்தமையன்முடொழாதே
யய்யலாமென்றெனாணியுமிதுத்தித்தாளன்னம்விடுக்
கொய்யுலாமலர்ச்சோலைக்குயில்கூவமயிலாலுமாரூரைக்
கையினுற்முழாதொழிந்துகனியிருக்காய்கவர்ந்தகள்வனனே.

மறுத்தானேர்வல்லரக்கனீளைத்துடியினுடோளுந்தாளு [ன்னை
மிறுத்தானேயெழின்முளரித்தவிசின்பிரமனி நந்தானறன்மேலயிலொ
யறுத்தானையாரூரிலம்மானேயாலாலமுண்டுண்டகண்டம்
கறுத்தானேக்குருதாதெருமபிருக்கவி றம்பகடிக்கெய்த்தவாறே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு மழுவேபாலும் மார்பினர்வண் கொன்றை வண்ணரும், தமது மனோவாயினுல்பாடுகின்ற வெளிய தமிழ்மாலைகளும் கேளினர்து திருவடியிலே பற்பியமனமும் உழவாரம்மையும் தாமுமாகி திருவீதிப்பணிசெய்து வணங்கி புற்றிடங்கொண்டாரைத், தரிசிக்கவும் திருவுளங்கொண்டு "பாடளம்பூதத்தினனை" என்னும் பதிகமுதலான பலபதிகங்களைப்பாடி அன்பினலுருகிச மிசல்வாராயினர்.

திருவாரூர்-பண்-காந்தாரம்

தியாகேசர் பஞ்சபுராணம்

பாடிளமபூதத்தினும்பவளசெவவாய்வண்ணகதானும்
கோடிளமென்முலையாளைக்கூடியகோலகதினும
மோடிளவெணபிறையானுமொளிதிகழ்சூலகதினும
மாடிளம்பாமபரைகதானுமாரூரமர்ந்தவமமானே

வடியஞசுடாவிடுகாபளளிகொளவானுளளகதானும்
சயஞசுகானகுடையானகாலவிரலாலிகதானும்
பொயயஞசிவாமைகளபெரிபாகழ்நிகதாகருளசெயயு
மையஞசினபாழ்நகதானுமாரூரமாந்தவமமானே

திருசசிறறமபலம்

கொண்டலனவளர்கொலமிழலையும், நெய்தலிற்புகழுமெருமிழலைக்குறும்பனாடு, ரண்டாயிரவரடியவர்நடுவாயபடி மாதவமாலனுக்கவன் றொண்டர்க்காளாய், மண்டலமுழுமண்டு நிதிவாயத்தளராதாம் வன் றொண்டர்வடகயிலைம நவுநாண்முழ, னெண்டிசையுமலைமுழுகெறிபூடெகி யி லங்கொளிசேர்வடகயிலையெய்தினரே.

பழமையான பெருமழலையென்னும் ஊரிலேசிவபத்தியடியாரபத்தினிற்றிருத்த பெருமிழலைக்குறும்பநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சுந்தரமூர்த்திசுவாமிகளுடைய பெருமையை அறிந்து அவருடைய திருவடிகளே மனம்வாக்குக் காயங்களினாலே சிந்தித்துத்துதித்து வணங் குதலே பரமசிவனுடைய திருவடிகளே அடைதற்கு உரியதெதியென்று அ

ப்படிச் செய்துவந்தார் அதனால் அவர் அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் எனகின்ற அஷ்டமகாசித்திகளையும் அடைந்தார். • அமைந்து, ஸ்ரீ பஞ்சாட்சரத்தை ஜபித்துவந்தார். இப்படி நிகழுங்காலத்திலே திருவஞ்சைக்களத்திற்சென்று திருப்பதிகம் பாடும் சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தரிசனம் பண்ணுவதற்கு நவரத்தினங்களிலே உத்தமமான ரத்தினத்தை அடையும் வாழ்வு கிடைப்பதைத் தம்முடைய ஊரிலிருந்துகொண்டே யோகப்பிரத்தியட்சத்தால் அறிந்து சுந்தரமூர்த்தி சுவாமிகள் உத்தமகைலாசத்தை நாளைக்கு அடையத் தான் பிரிந்து இங்கே வாழ மாட்டேன் என்றுநினைந்து தன்னைத் தியாகத்தினாலே சிவனுடைய திருவடியை அடைவேன் என்று துணிந்து யோகமார்க்கத்தினால் உடலினின்றும் பிரிந்து, திருக்கைலாசத்தில் வீற்றிருக்கின்ற சிவனுடைய திருவடியை அடைந்தார்.

சிவமயம்.

இருபத்தைந்தாவது

காரைக்காலம்மையார் புராணம்.

தங்குபுகழ்காரைக்காலம்மைதன்மெய்க்கதலகத்தன்ன நாமுதிதவருமாமையின் செங்கனிகழ்நெருவருளாலையழிப்பகண்டுமுமைகணவனதிசயித்துத்திசசீங்க வங்கவடலிழுத்துழுமடையாலெரியம்மையெனகாதனப்பாவென்று பொங்குவடசயிலைபணிந்தாலங்காட்டுப் பிரிதுமேகுவதம்மொழிந்தனரே.

காரைக்காலிலே வைசியர்குலத்திலே தனதத்தன் என்பவன் ஒருவன் இருந்தான். அவனுக்குப் புனிதவதியாரென்கின்ற ஒருபுத்திரியார் பிறந்தார். அத்தனதத்தன் அப்புத்திரியாரை நாகபட்டணத்தில் இருக்கின்ற நிதிபதி என்பவனுடையபுத்திரனுகிய பரமதத்தனுக்கு விவாகஞ் செய்துகொடுத்து, தனக்கு வேறுபிள்ளை இன்மையால் அவரை நாகபட்டணத்திற்குப் போகவிடாமல் தன்னுடைய வீட்டுக்கு அருகிலே ஒருவீடுகட்டிவித்து அளவிறந்த திரவியங்களையுங் கொடுத்து, கணவனோடும் அதிலிருத்தினன். பரமதத்தன் அந்தச் செல்வத்தை விருத்திசெய்து, இல்லறத்தை ஒழுங்கு பெற நடத்திவந்தான் அவன் மனைவியாராகிய புனிதவதியார் பரமசிவனுடைய திருவடிகளிலே அன்பு மேன்மேலும்பெருக இல்லறத்திற்கு வேண்டிய

னவற்றை வழுவாது செய்வாராயினர் தம்முடைய வீட்டுக்குச் சிவனடியாராள் வரின் அவர்களுக்கு அமுது ஊட்டி, அவரவர் வேண்டியபடி பொன்-இரத்தினம்-வஸ்திரம் முதலாயின உதவுவார். இப்படி நிகழுங்காலத்தில் ஒருநாள் பரமதத்தனிடத்தில் கரிபரூலமாக வந்தவர்கள் சிலர் அவனுக்கு இரண்டு மாம்பழங்கொடுக்க அவன் அவைகளை வாங்கிக்கொண்டு அவர்கள் கருத்தை முடித்து அவைகளை மனைவியாரிடத்திற்கு அனுப்பிவிட்டான், மனைவியார் அவைகளை வாங்கிவைத்தபின்பு சிவனடியார் ஒருவர் பசியினால் வருந்தி, அவர் வீட்டிற்கு வந்தார். மனைவியார் அவ்வடியருடைய நிலையைக்கண்டு கையிலுள்ள மாம்பழத்தை அன்போடுங்கூட அவருக்கு ஈந்து பாகம்பண்ணிப்படைக்கையால் சிவனடியர் பெறுதற்கு அரிய விருந்தினராய் வந்தபடியினாலே அவர்பார்க்கும்பொழுதே பெறவேண்டியபேறு நமக்கு ஒன்றும் இல்லை எனறு தனக்குத் தம்முடைய கணவன் அனுப்பிய மாம்பழங்கள் இரண்டினுள் ஒன்றை எடுத்துக்கொணடுவந்து படைத்தது அவ்வடியவரை அமுதுசெய்வித்தார். அடியவர்சாதாரண மாங்கனியோடு உண்டு, புனிதவதியார் நடையைச் செய்கையை வந்தனையினர். தாயினபின் பரமதத்தன் கடைப்பாலை வீதியிருந்தவர், பிரசனம்பண்ணும்பொழுது, மனைவியார் எஞ்சியிருந்த மாங்கனியைக்கொணடுவர, கலந்திலைவைத்தார். பரமதத்தன் மிகவும் சுவையுள்ளதாக்கனியை உணடு. அதன் இனிய சுவையினலே திருவாளன் பாலும் மனைவியாரைக்கண்டு, மற்றக்கனியையும் கொண்டுவர்யவன் என்ன. மனைவியார் என்ன செய்வாரென்று பொய் சொல்லுகின்றான் சொல்லுகின்ற மெய்யன்பர்களுக்கு உண்மை பிரகாசமாய் விளங்கும் நியாயத்தால் அவர் அவ்வாறு சொல்லுகின்றார். உடனே அவ்வடியார் பரமதத்தனுக்கு, அம்மைகுரமாகிய ஒருமாங்கனி அவர் கையில் வந்து சேர்ந்தது, அவர் அதைக்கொண்டுவந்து, கணவனுடைய சமுகத்திலே வைத்து அதனை உணடு அதன சுவை தெவாமிர்தத்தைப் பார்க்கிலும் சிறந்தனீயாய், இது முன்னான் தந்த மாங்கனியின் ஜாதிகளிலும் வேறுபடாது அரிதாய், இதனை நீங்கே பெற்றாய் என்றான். மனைவியார் அவர்கள் உமக்குத்திருவருள் உதவிய திறத்தை வெளிப்படுத்துவது தகாது அன்று என்று கினைத்தமையால் நிகழ்ந்ததைக் சொல்லமாட்டாதவராய் நம கணவனுக்கு உண்மையை மறைத்துக்கூறுதலும் ஆகுமென்று கினைகையினால், அதனைச் சொல்லாது விடமாட்டாகவு நமாய் வருந்தினாள், பின்பு கிழங்குபடி சொல்லவிருக்கடன் என்று தானிருந்து. நீர் தந்தகனிகளில் ஒன்றைஓர் அடியாருக்குக் கொடுத்துவிட்டமையால் அதற்குதான் யாதுசெய்வேனா என்றுகவன்று பரமசிவனைத் தியானித்துக்கொண்டு நின்றார். அவருடைய திருவருளினால் இத்தக்கனி என்கையில் வந்தே திருக்கது என்றார், பரமதத்தன அதை நம்பாதவனாகி, மனைவியாரைநோக்கி, இதற்கனி சிவனுடைய திருவருளினாலே கிடைத்

தத்தாயின், இன்னும் ஒருகனி அவருடைய திருவாளினுலே ஆழைத்
துத்தா என்ருன், புனிதவதியார அவ்விடத்தை விட்டுப்போய் பரமசிவனை
த்துதித்து, 'இன்னும் ஒருகனி தந்தருளீரோகில் அடியேனுடைய வார்த்தை
பொய்யாய்விடும் யென்றுசொல்ல, சுவாமியுடைய திருவாளினுலே ஒரு
மாங்கனி அவர்கையில்வந்து இருந்தது, அவர் அதைக்கொண்டுவந்து கண
வன்கையிற்கொடுக்க அவன் அச்சரியமடைந்து வாங்கினன் வாங்கியபழ
த்தைப் பின் காணுதவனுகி மிருந்த பயங்கொண்டு மனந்தடுமாறி, அப்பு
னிதவதியாரைத் தெய்வமெனநினைந்து அவரைப்பிரிந்து வாழவெண்டும்
என்று துணிந்து, தன்கருத்தைப் பிற நகருவெளிபடுத்தாமல், அவ்ராடு
தொடர்பின்றி ஒழுகினன் ஒழுகும்காளில், ஓருமரக்கலம்செய்வித்து, தா
ன் செல்லவிரும்பிய தேசத்தில் விரும்பப்படுகின்ற அநம்பண்டங்களோ அ
தனிடத்து நிறையவேற்றி, சுபதினத்திலே சமுத்திர ராஜனுகிய வருணனை
தொழுதுகொண்டு, மாலுமிமுதலியாரோடும் ஏறி, அக்கேசத்தை அடை
ந்துவர்த்தகம்செய்து சிலகாளாயின பின்மீண்டும அம்மரக்கலத்தில் ஏறிபா
ண்டிநாட்டிலுள்ள ஓர்நகரத்தை அடைந்து அங்குள்ள ஒருவைசியனுடை
யமகளோ விவாகம்செய்துகொண்டு மகா ஐசுவரியத் தோடும்வாழ்ந்து திரு
ந்தான், அவனுக்கு அம்மனேவி வயிற்றிலே ஒரு பெண்குழந்தை பிறந்தது,
அவன்தன் கூடிவாழ்தற்கு அஞ்சி நீக்கியமனேவியாரைத் தான்தொழும்தெ
யிவமாகக்கொண்டு அவருடைய புனிதவதியார் என்னும் பெயரையே அந்த
ப் பெண்ணிற்கு இடடான். பரமதத்தன இப்படியே இக்கே இருக்க புனித
வதியார் காரைக்காலிலே கற்பினேடு இல்லறத்தை வழுவாதுநடத்திக்கொ
ண்டு வந்தார். அவருடைய ஞாதிகள் வர்த்தகத்தின் பொருட்டுச் சென்றப
ரமதத்தன பாண்டிநாட்டிலே ஓர்நகரத்திலே செல்வத்தை விருத்திசெய்து
கொண்டுவாசஞசெயகினரன்என்றுகேள்வியுற்று, அவனிடத்திற்கு சிலரை அ
னுப்பி, அவனுடையநிலையை உணர்ந்து, கவலைகூர்ந்து புனிதவதியாரைத்தா
மே அவனிடத்தற்குக்கொண்டுபோயவிடவேண்டுமென்று தினைந்து, சிவிகை
யில் ஏற்றிக்கொண்டுசென்று, அவனிருக்கிறநகரத்திற்குச்சமீபித்துதாம், பு
னிதவதியாராக கொண்டுவந்தமையை அவனுக்கு ஆள் அனுப்பித் தெரிவி
த்தார்கள், அவன் அதனை அறிந்து அச்சங் கொண்டு, தன்னுடைய இரண்
டாம்மனேவியோடும் மகளோடும் புனிதவதியாரிடத்திற்கு வந்து அடியேன்
உம்முடைய கருணையினுலே வாழுகின்றேன் இத்தப்பெண்ணுக்கு உமமு
டைய பெயரையே இடவேண் என்று சொல்லிக்கொண்டு, அவருடையபா
தங்களிலே விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான், உடனே புனிதவதி
யார் தம்முடைய ஞாதிகளிடத்திலே அச்சத்தோடும் ஒதுங்கிநிற்க அவர்க
ள் வெள்கி, பரமதத்தனே நோக்கி, நீ உன்னுடைய மனேவியை வணங்குவ
து ஏன் என்றார்கள், அதற்குப் பரமதத்தன், நான் இவரிடத்திலே ஒருபெ
ரிய அறபுதத்தைக் கண்டபடியால் இவர்தெய்வப் பெண்ணேயன்றி மானி
டப்பெண் அன்றுஎன்று தினைந்து இவரைப் பிரிந்தேன் இவரை நான்தொ

மூமி தெய்வம் என்றுகொண்டமையால், நான்பெற்ற இத்தக் குழந்தைக்கு இவர் பெயரைத் தரித்தேன் அதுபற்றியே இவருடைய திருவடியையும் வணங்கினேன் நீங்களும் இவரை வணங்குங்கள் என்றான், அதுகேட்ட ஞர்திகள், இதுஎன்ன ஆச்சரியம் என்று திகைத்து நின்றார்கள். புலிதவதியார் கணவர் சொல்லிய வார்த்தையைக் கேட்டு, பரமசிவனுடைய திருவடிகளைச் சிந்தித்து, சுவாமி! இவனுடையகொள்கை இது இனி இவன்பொருட்டுத் தாங்கிய அழகுதங்கிய தசைப்பொதியை நீக்கி தேவரீரைச் சூழ்ந்து நின்று தரிசிக்கின்ற பேய்வடிவை அடியேனுக்குத் தந்தருளவேண்டும் என்று பிரார்த்தித்தார், அந்தக்கணத்திலே, அப்பொழுது அவருடைய திருவருளினாலே மாமிசம் முழுவதும் உதிர எலும்புமாத்திரம் மனவுலகமும் விண்ணுலகமும் வணங்கும் பேய்வடிவமாயினார், அதுகண்டவுறவினர்களெல்லாரும் அஞ்சி அவரை ஈமவனஞ்சேர்த்துக்கொண்டு போயவிட்டார்கள், புலிதவதியார், தமது உள்ளத்திலே சிவசக்தியால் விளக்கப்பட்ட சிற்பரத்தொன்றி, அற்புதத்திருவந்தாதியும், திருவிரட்டை மணிமாலையும் பாடியருளினார்.

அற்புதத் திருவந்தாதி

திருச்சிற்றம்பலம்

பிறந்துமிறப்பதின்றியின்னெல்லாங்கூடிச்
சிறந்ததுநின்செவடியேசேர்ந்தேன்-மறந்திகழு
மைஞ்ஞான்றகண்டத்துவாணேர்பொருமானை
யெஞ்ஞான்றுகாம்பதி யார்.

உமையினிம்மாலையர்தாதிவெண்பா
கமையினுகாரைக்காற்பேய்கொற்-பரவுவார்
ஆதவனபினுடன்னைலத்தெளிந்துவர்
மோதகதல்பிறந்து.

திருச்சிற்றம்பலம்.

திரு-இரட்டைமணிமாலை.

திருச்சிற்றம்பலம்.

கட்டளைக்கலித்துறை.

கிளர்ந்தெழுந்துவெற்றியர்வந்தடும்போதஞ்சிடுகுஞ்சமென்பாய்
தளர்ந்திங்கிருத்தறவிர்நிகண்டராய்தளராதுவந்தி
வளர்ந்தெழுந்துதுகங்கையும்வானத்திடைவளர்கோட்டுவெள்ளோ
மிளர்ந்திலங்குமெருக்குஞ்மிருக்குஞ்சென்னியீசனுக்கே.

வெண்பா.

உத்தமராய்வாழ்வாருலகத்தக்காரூறுரூர்கள்
செத்தமரமடிக்கித்தியாமுன்-உக்கமனப்
நிளாழிருஞ்சுண்டகெய்டிதன்றிமே
கேளாழிநெஞ்சேகினாக்கு.

திருச்சிறம்பலம்.

ஸ்ரீமத் கைலாயகிரிக்கர்ப் போகவி நம்பி, புறப்பட்டு, மனசிலும்பர்க்க நிருந்த வேகத்தோடு சென்று அந்தக் கைலாசகிரியின் பக்கத்தை அடைந்து அங்கே காலினல் நடந்தல் சகுதி அனறென்று ஒதிக்கு. கலையினலே நடந்துபோய்மலையிலேறினர். எறுமபொழுது உமாதேவியார் அதைக்கண்டு எம்போலிகள் புனிதவதியாருடைய நிடத்தியைக் குறித்து உலகமாதாவாகிய உமாதேவியாரே அச்சரியும் அடைந்தாராயின் நாம் எவ்வளவு ஆச்சரியம் அடைகல்வேண்டும் என்றநிக்கசெய்யும் பொருட்டுத்தாம ஆச்சரியமடை யவராகி அவரது பத்திமிமையை உயர்வொப்பில்லாத பரமசிவனுடைய திருவாக்கினலேயே நமக்கு உணர்த்துவித்து நம்மை யயிரகத் திருவாங்கொண்டு அக்கடவுளை வணங்கி நின்று, சுவாமீ இங்கே சலையினல் கடந்து வருகின்ற எறபுடம்பை உடையவரது அன்பிமிமை திருவாய் என்ன சொல்ல, பரமசிவன் இங்கேவருகின்றவள் நம்மைச் துதிகின்ற அம்மை எனறறிந்தப் பொருமைபொருந்தியவடிவதையும் வேண்டிப்பெற்றுள் என்றார். பின் புனிதவதியார் ஊடுத்தில் வருதவடனே உலகமெல்லாம் உய்யும்பொருட்டு அவளாநோக்கி அம்மையே எனறு அழைத்தார். அதுகேட்ட புனிதவதியார்அப்பாவன்றுசொலலிக்கொண்டுஅவரு லயுதி நவடிகளிலே வீழ்ந்து நமஸ்கரித்து எழுந்தார். சுவாமிஅவளைநோக்கி உனக்குவேண்டுமவரமயாதுஎனறு வினவபுனிதவதியார் வணங்கி நின்று சுவாமீ, அடியேனுக்கு நிலைப்பிறவாமையிவேண்டும் பிறகாலும் நேவரீரை ஒருகாலமும் மறவாமை வேண்டும். இன்னும்தேவரீர் நிருத்தஞ்செய்யும்பொழுது தேவரீருடைய திருவடியின் கீழே சிவானந்தத்தை உடையேனாகி தேவரீரைப் பாடிக்கொண்டு நிருத்தல்வேண்டும் என்றார். சுவாமீ அவரைநோக்கி நீ தென்றிசையிலுள்ள ஆலங்காட்டிலே நம்முடைய நடனத்தை தரிசித்து பேரானந்தத்தோடு நம்மைப் பாடிக்கொண்டு இரு என்று அருளிச்செய்தார். அதுகேட்ட காரைக்காலம்மையார் சுவாமியை நமஸ்கரித்து அதமதிபெற்றுக்கொண்டுநடவாங்காட்டுக்குத் தலையினல் நடந்துசென்று சுவாமியுடைய திருநடனத்தைத் தரிசித்து, "கொங்கைதிரங்கி" என்பதை முதலிலுடைய மூத்தநிப்பதிகத்தையும் "எட்டியிலவமிகை" என்பதை முதலிலுடைய திருப்பதிகத்தையும் பாடியருளினர்.

அம்மைமூத்ததிருப்பதிகம் - பண் - நட்டபாஷை.

திருச்சிற்றம்பலம்.

கொங்கைகதிரங்கிநரம்பொழுகுண்டதண்வெண்பற்குழிவயிற்றுப்
பங்கிசிவன்திருப்பற்கணீண்டுபரடியர்நீள்கணிக்காலோர்பெண்பேய்
தங்கியலறியுலகாடிற்றுழ்சடையெட்டுத்திசையும்வீசி
யங்கங்குளிர்த்தனலாடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே. (க)

கள்ளிக்கவட்டிடைக்காலிலீட்டிக்கடைக்கொள்ளிவாங்கிமசித்துமையை
விள்ளவெழுசிவெடுவெடென்னநக்குவெருண்டுலிலங்குகாட்டிப்
பூளளித்துடித்துசுடுபிணத்தீச்சுடாடிமுற்றுஞ்சுழற்றுபூழ்தி
யள்ளியவிக்கநின்றுடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே. (உ)

வாகையிரத்துவெண்ணெற்றெலிப்பமயங்கிருள்கூர்ந்துநாளையாங்கே
கூகையோடாண்டலைபாடவாருதிகோடதனிமறுகித்தாடிவீசி
யீகைபடர்தொடர்களளிழலீமமிடுசுடுகாட்டகதே
யாகங்குளிர்த்தனலாடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே. (ங)

சூன்டுலோமிக்குழிசோற்றைவாங்கிக்குறுநரிதின்னவதனேமுன்னே
கண்டிலோமென்றுகரன்றுபேய்கள்கையடித்தாடிங்காடரங்கா
மணடிலநின்றங்குளாளமிடவாதித்துவீசியெடுதத்தாத
மண்டமுறநிமிராதாடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே. (ச)

விழுநிணத்தைவிழுக்கியிடுவெண்டலைமாலைவிரனிப்பூட்டிக்
கழுதுதனபிள்ளையைக்காளியென்றுபேரிட்டுச்சீருடைத்தாய்வளர்த்துப்
புழுகுதடைத்துமுலைகொடுத்துப்பேயினதாயைவரவுகாணு
மழுதுறங்கும்புறங்காட்டிலாடுமப்பனிடந்திருவாலங்காடே. (ஞ)

படடடி நெட்டுகிர்ப்பபுகாறுபேய்பருந்தொடுகூகைபாண்டையார்த்தை
குடடியிட்முடைகூகைபேய்கள்குறுநரிதின்றிணங்காடுகாடடிற்
பிடடடித்துப்புறங்காட்டிலிட்டபிணத்தினேப்போகுபுரட்டியங்கே
யடடகாசமாயநின்றாடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே. (ட)

சுழலுமழல்விழிக்கொள்ளிவாய்ப்பேய்சூழந்துதுணங்கையிடோடியாடித்
தழலுளெரியும்பிணத்தைவாங்கித்தாமறடிதின்றினங்காடுகாடிற்
கழலொலியோசைச்சிலம்பொலிப்பக்காலுயர்வட்டணையிட்டுநட்ட
மழலிமிழ்ந்தோரிகதிக்கவாடுமப்பனிடந்திருவாலங்காடே. (ண)

நாடுநகருந்திரிந்துசென்றுநன்மைநாடிநயந்தவரை
மூடிடுதுபிணத்திட்டமாடேமுன்னியபேய்க்கணஞ்சூழச்சூழக்
காடுங்கடலுமலையுமண்ணும்விண்ணுஞ்சுழலவனல்கையேந்தி
யாடுமமரர்புயங்களெங்களப்பனிடந்திருவாலங்காடே. (அ)

துத்தங்கைக்கிளைவிளரிதாரமுழையிளியோசைபண்கொழுமப்பாடிச்
சச்சரிகொக்கரைதக்கைபியாடுதருணிசசுருதிதுமிதாளமவீணை
மத்தளங்கரடிகைமுனைக்கிணைமொந்தைவாசித்
தத்தனமைவினோடுமெங்களபபனிடருவாலங்காடே (கங்)

புத்திகலங்கிமதிமயங்கியிறந்தவரைபபுறங்காடிலிடுசெ
சந்தியில்வைத்துகடமைசெய்துகுகவரிடை செநீவிளகா
முந்தியமரர்முழுவினைசிதைசகதலசிலமபாடகவாக்க
வந்தியின்மாடமாடுமெங்களப்பனிடருவாலங்காடே (கo)

ஒப்பிணையில்லவனபேயகளகூடி யொனவளையொனறடி தொகலித்துப்
படபிணையிடுபபரணடை பாடபபாடி நுகுகரியாமுடைபப
வப்பனியணிதிருவாலங்காட டுளடி களைசெடிதலைக்காரைக்காறமபய
செபபியசெந்தமிழ்கதும்வலராசிவக்கதிசோதின்பமெயதுவாரே.

திருசசிறறம்பலம்.

தேவாரம-பண்-இத்தளம.

திருச்சிறறம்பலம்

எடியிலவமீகைசூரைகாரைபடாரதெங்குஞ்
சுடடசுடலீசூழந்தகளளிசோரநதகுடர்கவவப
படட பிணஙகள்பறந்தகாடடிறபபைபோல்விழிகழிகடபேய
கொடடமுழவங்கூளிபாடகுழகணுடுமே. (க)

நிணநதானுருகிநிலநதானனபபகெடுமபறகுழிகடபேய
சுணங்கையெறிதுசூழசோகசுடூவிகதெங்கமை
கணங்களகூடிப்பிணங்கணமாடிங்களிசுகமனதகவா
யணங்குகாடடிலனல்கையேநடியழகணுடுமே ( )

புடகள்பொதுதபுலாலவெணட லெயபபுமேகரிகவவ
வட்டென்றழைப்பவாகதைவீசவ நடசிறுகூகை
யுடகவிழிக்கவுமனவெருடடவோரிகதிதெங்கும்
பிடகுக்கம்பேணுமிறைவன்பெயருடபெருங்காடே. (சு)

செதபிணதைதத்தெளியாதொ நுபெயசென்றுவிரல்சுடடிக
கத்தியுமமிக்கனல்விட டெறிந்துகடகபபாயதுபோயப
பித்தல்வயிறறைபபதைகமோதிபபலபெயிருதோடப
பித்தலேடங்கொண்டுசூட்டம்பெரூமானுடுமே. (ச)

முள்ளிதீர்த்துமுளரிகருகிமூனைசொரிந்துக்குக்
கள்ளிவதறிவெள்ளில்பிறங்குகடுவெங்கா ட்டுள்ளே
புள்ளியுழைமான்றேரொன்றுடுதகப்புலித்தோல்பியறகிடுப்
பள்ளியிடமுமதுதையாகப்பரமனுமே. (நி)

வாளைக்கிளரவலோவாலெயிறறுவண்ணசிறுகூகை
மூளைததலையுமபிணமும்விருங்கிமுரலுமுதுகாடடிற்
ருளிப்பனையினிலேபொனமயிக்கடழல்வாயழல்கடபோய்
கூளிக்கணங்களகுழலோடியம்பக்குழகனுமே. (சு)

நொகதிக்கிடகதசுடலைதவிறுகரும்புழுக்கினறிச
சிந்தித் திருதகங்குறங்குஞிறுபேய்கிமபடுசாடின்
முக்கிமுழவம்விழிஞையமறைமவழுவாதி
யகநிருத்தமனல்கையேகதியழகனுமே. (எ)

வேபகளாங்கிவெண்முத்துநிரவெடி ரொளசுடலையுள்
ஓயுமுருவிலுலறுகூகதலலபகுவாயப
பேய்களகூடிபபிணங்கண்மாந்தியணக்குபெரங்காடின
மாடனுடமலியானமகளும நணடுகோகருமே. (அ)

கடுவனுகளுங்கழைசூழபொதுமபிறகழகுமபெயுமா
யிடுவெண்டலையுமீமபபுகையுமெழுநதபெருங்காடிற
கொடுவெண்மழுவும்பிறையுநதுமபக்கொளளெனறிசைபாடப
படுவெண்டிடியுமபறையுங்கறங்கபபரமனுமே. (கூ)

சூணடைவயிறறுகருமியிறியகெடியபிறங்கறபேய
இணடுபடாகதவிருளசூழமயானத்தெரிவாயெயிறறுபபேய்
கொண்டுகுழவிததடவிவெருடிககொளளெனறிசைபாட
மிணடி மினிராநசடைகடாழவிமலனுமே. (கo)

சூடிமதியஞசடைமெலுடையாசுழல்வர்திருடட
மாடிமரவமமையிலார்த்தவடி களருளாலே
காடுமலிருதகனல்வாயெயிறறுகாளீகாறபயதன
ாடலபத்தும்பாடியாடபாவநாசமே

திருநசிறறமபலம்.

அகா சுவாமியுடைய தூக்கிய திருவடியின்கீழே சிவானந்தததை அனுபவித்துக்கொண்டு எகாலமும் இருகினறார்.

சிவமயம.

இருபத்தாறுவது

அப்பூதிநாயனார் புராணம்

அந்திமினகதிங்களுநாகரும்பூதியருமறையோதிருநாவுக்கரசினுமம
பந்தரிடையெழுதகண்டரசுமெய்தபடணிநதபரிகலநேடிப்படப்பதீசோந
மைந்தனுயிருபர்கதலியிலேமேற்றுஞசுமவாளரவுகவரவுடனமறைதலகேட்டுச
சிந்தைமகிழ்ந்துயர்பதிகமருநதாற்றீாதுதிருவமுதுசெயவருளச்சோந்தனாரே

சோழமண்டலத்திலே திங்களூரிலே பிராமணர்குலத்திலே, பாவங்கள் என்று சொல்லப்படட்டவைகள் எல்லாவற்றையும் நீங்கினவரும புண்ணியங்களென்று சொல்லப்பட்டவைகள் எல்லாவற்றையும் தாங்கினவரும், திருகண்தாசசிரடத்தையுடையரும் சிவபத்தி அடியார் பத்திகளிற்சிறந்தவரும், ஆகிய அப்பூதிநாயனா எனபவர் ஒருவர் இருநதார். அவர் சிவாலயூபூதிமானுகிய திருநாவுக்கரசு சுவாமிகளுடைய மகிமையைக் கேள்வியுற்று அவாமேமேலு மிக அன்புகூர்ந்து தம்முடைய வீட்டினுள்ள அளவைகள்-பிள்ளேகள-பசுக்கள்-பருமைகள் முதலிய எல்லாவறறிறும அந்நாயனருடைய பெயரையே சொல்லிவருவார் இன்னும அவர்மேலாசையினுலே திருமடங்கள தண்ணீர்ப்பந்தர்கள்-குளங்கள-நந்தவனங்கள்முதலிய வறறை அந்நாயனா பெயரினுற செயதுகொண்டு இருநதார். இருக்தும்காலிலே, அத்திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பழனமபலனும ஸ்தலத்தை வணங்கிக்கொண்டு. பிறதலங்களே புமவணங்தும்பொருட்டு, அக்கத திங்களூருக்குச் சமீபமாகியவழியே செல்லும்பொழுது, ஒரு தணணிர்ப்பந்தரை அடைந்து, திருநாவுக்கரசு சுவாமிகள எனனும் பெயர எஙகும எழுதப்பட்டிருத்தலக்கண்டு, அருகு நின்றவர்கள நிலைமைநோக்கி, இந்தத்தணணீர்ப்பந்தரை இப்பெயரிட்டுச செய்தவர்யாவர் என்று வினவ, அவர்கள், இப்பந்தரை மாத்திரமன்று இவவிடததெஙகும் உள்ள அறச்சாலைகள்குளங்கள் நந்தவனங்கள் எல்லாவற்றையும அப்பூதிநாயனென்பவர் திருநாவுக்கரசு சுவாமிகள் என்னும் பெயராலேயே செய்தனர் என்றார்கள். அதைத் திருநாவுக்கரசு சுவாமிகள்கேட்டு இஙஙனம செயதறகுக் காரணம் யாதோ ? என்று நினைந்து அவாகளை நோகி அவர்எவ்விடத்தில்இருக்கின்றவர், என்றுவினவஅவர்கள் இவ்வூரனோ இப்பொழுதுதான் வீட்டுக்குப் போனுர் அவரிடம் நாமன்று சமீபமிடி என்றார்கள், உடனே திரு

நாவுக்கரசு சுவாமிகள் அப்பூதிநாயனாருடைய வீட்டுத்தலைவாயிலி
ற்செல்ல, உள்ளிருந்த அப்பூதிநாயனார் சிவனடியார் ஒருவர்வாயிலில் வ
ந்திருக்கிறார் என்று கேள்வியுற்று விரைந்துசென்று அவருடைய திருவ
டிகளிலே நமஸ்கரிக்க அவரும் வணங்கினார். அப்பூதிநாயனார, சுவாமீ!
தேவரீர் இவ்விடத்திற்கு எதுபற்றி எழுந்தருளினீர என்றவினவ, திருநா
வுக்கரசு சுவாமிகள்நாம் திருப்பழனத்தை வணங்கிக்கொண்டு வரும்பொ
ழுது,வழியிலே நீர்வைத்தநண்ணீர்ப்பந்தரைகண்டும்அப்பரமேதீர்செய்
திருக்கின்றபிறதருமங்களைக்கேட்டும உம்மேலே சந்தோஷங்கொண்டு இ
ங்கேவந்தோம் எனறுரைத்தலி பினபு சிவனடியாகள் பொறுபடு நீர் வைத்
ததண்ணீர்ப்பந்தரிலே உமமுடையபெயரை எழுதாதுவேறொருபெயரை
எழுதியதற்குக காரணம யாதுஎனறு வினவ, அபபூதிநாயனார நீர நலவார்த்
தையருளிச்செய்திலீர பாதகர்களாகிய சமணர்களோடுகூடிப பலலவராஜ
ன்செயத விக்கினங்களைச் சிவபகதி வலிமையினாலே ஜயித்த பெருந்தொ
ண்டரது திருநாபெயரோ வேறொருபேயா எனறு கோபித்து பின்னும்,பர
மசிவனுக்குத திருகதொண்டு செய்தலாலே இமமையினும பிழைக்கலாம்
என்பதை எனபோலும அறிவிகளும் தெளியும்பொருட்டு அருள்புரிந்த
திருநாவுக்கரசு சுவாமிகளுடைய திருநாபெயரை நான்எழுத நீர்இத்தக்கொ
ளுச்சொல்லுகானாலே குமபடி சொனனீர் கறகிறுணியைக் கொணடு கட
ல்கடந்த அநதகரபனுருடைய மகிமையை இவவுலகத்திலே அறியு
தா யாருளர நீர் சிவபதைதபடி நினறு இவவார்தை பேசினீர நீர்
எங்கே இருகிறவர, சொலலும எனறார. திருநாவுக காசுவாமிக
ள அவவபபுகியடி கு ளை யு அனைவ அறிர கு, ஆருகதசமயப் படிருழி
யிலே நினறும ஏறுமமாபாரு நிபப சிவனை சூலிபபகையை வாதுவிகத ஆட
கொள்ளபபெறறவனாகிலுமாச கிபபமமபெயரானஎனறு சொன்னர்.உ
மனை அபபுதகாயனார, பணிவுடைய நாம சிரசினமேலே குவிய, மணணீர
சொரிய, உளமதர பாவ பெருஞசினாபப பரியிலே விழுந்து திருநாவுக்
கரசு சுவாமிகளை பறறிக்காரவிரகங்களைப பூணடார, திருநாவுக்கரசு சு
வாமிகள் அபபூதியடிகளை எதிரவணங்கி எடுகதருள அப்பூதியடிகள மிகக்க
ளிப்படைகது கூதகாடினார, பாடினாகளதெலலம மீடடிலை செயவது இ
ன்னது எனறு அறியாமல வீடடினுளளே சென்று மனனியாருகளும பிள
ளைகளுகும்பிறபாதனுகளுருமதிருநகூபபபடுகவாமிகளைஎழுதருளிவந்த
சந்தோஷமாசாரதனதச சொலலிஅவரவே ஆழைததுகொணடுவநதார
யனைவணஙகுமபடிசெயது அவரை உளளே எழுநதருளிவிதது பாதப்
பிரகஷாளனஞ செயதார. அபயனம செயத தீரத்தனதை அவாகள எலலா
ரும தங்கள்மேலே தெளிதது உளளும பூரிததாகள், நாயனார ஆசனத்
தில் இருத்தி விதிப்படி அரசசனைசெய்து சுவாமீ தேவரீர் இங்கேஇருவமு
துசெய்தருள வேண்டும என்று பிரார்த்திக்க அவரும் அதற்கு உடன்பட்
டார் அப்பூதிநாயனார் திருவமுது சமைப்பித்து தங்கள் புதல்வராகிய மூத்

தத திருநாவுக்கரசை வாழைக்குறுத்து அரிந்துகொண்டு வரும்பொருட்டு அ னுப்ப அவர் விரைந்து தோட்டத்திற்சென்று வாழைக்குறுத்து அரியும் பொழுது, ஒருபாம்பு அவருடைய கையிலே தீண்டி அதனைச் சுற்றிக்கொ ண்டது அவர அதை உதறி வீழ்தது பதைப்புடனே அதுபறிய வேஷத் தினுலே வீழுமுன் கொய்தகுறுத்தை வேகத்தோடு கொண்டோடிவந்துவி ஷம்முறையே ஏறித்தலைக்கொண்ட ஏழாம்வேகத்தினுலே பல்லும் கண்ணு ம்சரீரமும் கருகித் தீய்ந்து உரைகுழறி மயங்கி குறுத்தைத் தாயார் கையி ல்நீட்டி கீழேவிழுந்து இறந்தார், அதுகண்டு தந்தையாரும் தாயாரும் ஐ யோ இதுதெரிந்தால் இனிதாயனர் அழுதுசெய்யாரே, என்று துக்கித்து ச வத்தை வீட்டுப்புறத்து முற்றத்தின் ஓர்பக்கத்திலே பரியினல் மறைத்து வைத்து விட்டு அப்பமூர்தியிடதிற் சென்று சுவாமி எழுந்துவுக்கு அமு துசெய்தருளவேண்டும் என்றுபிரார்த் தித்தாகள். அப்பமூர்த்தி எழுந்து கைகால் சுததிசெய்து கொண்டு வேஷூர் ஆசனத்தில் இருந்து விபூதிதரி த்து அப்பூதிநாயனருக்கும் அவர மனைவியாருகும் விபூதி கொடுத்து புத ல்வர்களுக்கும் கொடுக்குமபோது அப்பூதிநாயனரை நோக்கி நாம்இவாகளு க்கு முனனே விபூதிசாத்தும்படி உம்முடைய சேட்டபுத்திரரை வருவியும் என்றார். அப்பூதிநாயனர் இபபோது அவன் இங்கே உதவான் என்றார், அ ப்பமூர்த்தி அதைக் கேட்டவுட னே சிவனுடைய திருவருளினுலே தம்மு டைய திருவுள்ளத்திலே ஒரு தடுமாறறத்தோன்ற அப்பூதிநாயனரைநோக் கி அவன் என் செய்தான் உண்மை சொல்லும் என்றார். அப்பூதிநாயனர்அ ஞசி நடுக்குற்று வணங்கினறு நிகழ்ந்த சமாசாரத்தைச் சொனனர், அப் பமூர்த்தி அதைக்கேட்டு நீசெய்தது நனறுயிருக்கிறது இப்படிவெதியார் செய்தார், என்றுசொல்லிக் கொண்டு எழுந்து சிவாலயத்துக்கு முன்சென் றுசவத்தை அங்கேகொணாவித்து விஷத்தை நீக்கியருளும் பொருட்டுபர மசிவன்மேமலே திருப்பதிகம்பாடினர், உடனே அப்புத்திரர் உயிர்பெற்று எ ழுந்து அப்பமூர்த்தியுடைய திருவடிகளிலே வீழுந்து நமஸகரிக்க அப்பமூர் தி விபூதி கொடுத்தருளினர். அப்பூதிநாயனரும மனைவியாரும் தங்கள்பு த்திரர் பிழைததமை யைக்கண்டும் அதைகுறித்துச சதேதஷிபாமல்நா யனர் அழுதுசெய்யா திருந்தமையைக் குறித்துச் சிந்தை நொந்தார்கள், அ ப்பமூர்த்தி அதனை அறிந்து அவாகளோடும் வீட்டிறசென்று அப்பூதிநாய னரோடும அவர் புத்திரரோடும ஒருங்கிருந்து அழுதுசெய்தருளினர் அப படியே சிலகாள் அங்கிருந்து பின திருப்பழனத்திற்குப் போயினர். அப்பூ திஅடிகள் சைவசமய சாரியராகிய திருநாவுக் கரசுசுவாமிகளுடைய திருவ டிகளேத்தித்தலே தமக்குப் பெருஞ்செல்வமெனக் கொண்டு வாழ்திரு ந்து சிலகாலம் சென்றபின், பரமசிவனுடைய திருவடிகளே அடைந்தார்.

உ

சிவமயம்.

இருபத்தேழாவது

திருநீலநக்கநாயனார் புராணம்.

நீதிதருமறையோர்வாழ்சாத்தமங்கைநிலநக்கரைவந்திறைஞ்சுமலர்மேனி
யூதிவிழுஞ்சிலம்பிகடிந்தவளே நீக்தார்க்குமியாதவிடரானதுமோய்கூட்டக்
காதன்மிகுமனைவியையுமழிந்துமேவிகடர்ழியர்கோனமுதுசெயகளிததுவாழ்ந்து
வேதிகையிறபாணனர்க்கிடமு கல்கிவிளங்குவி, நமணத்தானேமேவினரே.

சோழமண்டலத்திலே, சாத்தமங்கையிலே பிராமணா குலத்திலே,நி
ருநீலகக்கநாயனர் என்பவர்ஒருவர் இருந்தார். அவரேவதத்தின் உள்ளுறை
யாவது பரமசிவனேயும் அவருடைய அடியார்களையும் அன்பினுெடு அருச்
சித்து வணக்குதலே என்றுதுணிந்து, தினந்தோறும் ஸவாகமவிதிப்படி சி
வார்ச்சனே பண்ணி,சிவபத்தர்களுக்குச் திருவமுது செய்வித்தல் முதலாரி
யபலவகைப்பட்ட பணிகளையும் செய்வார். அப்படிச் செய்யும் காளிலே ஒ
ருதிருவழிரை மட்சத்திரத்திலே சிவபூசையை முடித்துக்கொண்டு அத்தல்
தலத்திலுள்ள ஐவர்ந்தென்னும் ஆலயத்தில் விற்றிருக்கின்ற சுவாமியையு
மருச்சிக்கவிரும்பி தம்முடைய மனைவியார் பூசைக்குவேண்டும் உபகர
ணங்களைக் குறைவறக் கொண்டுவர அவ்வாலயத்திற் சென்று, பூசைபண்
ணிப் பிரதக்ஷிணஞ்செய்து சந்திதானத்திலே நமஸ்கரித்து திருந்து கொண்
டுவேதாகமாதி சமஸ்த சாஸ்திரங்களின் உண்மைப்பொருளாகிய ஸ்ரீபஞ்
சாக்ஷரத்தை ஜபித்தார். ஜபிக்கும்பொழுது ஒருசிலம்பிமேலே நின்றவழு
வி சிவலிங்கத்தின்மேல் விழுந்தது. அதைச்சமீபத்திலேநின்ற மனைவியாரக
ண்டு அச்சமடைந்து விரைந்து குழந்தைமேல் விழுஞ்சிலம்பி நீங்கும்படி
ஊதித்தமிபவர்போல அன்புமிகுதியினாலே அந்தச் சிலம்பி நீங்கும்படி ஊ
தித்துமிதார். திருநீலகக்காயனர் அதைக்கண்டு தம்முடைய கண்ணோட்பு
தைத்து அறிவில்லாதவளே நீ இப்படிச்செய்தகுனம் என்றுசொல்ல மனை
வியார் சிலம்பிவிழுந்தபடியால் ஊதித்து மிந்தேன் என்றார். நாயனர்மனைவி
யாருடைய அன்பின் செய்கையை நன்குமதியாமல் அது அநுசிதம் என்
றுநினைத்து அவரை நோக்கி நீ சிவலிங்கத்தின மேலேவிழுந்த சிலம்பியை
வேறொருபரிசினாலே நீக்காமல் முறபட்டுவந்து ஊதித்தமித்தாய். இந்த அ
நுசிதத்தைச்செய்த உன்னைநான் நீனைத்துறந்தேன் நீங்கிடு என்றார்.



ப்பொழுது சூரியாஸ்தமானமாயிற்று மணவியர் நாயகருடையவலியிலே ஒருவழிநீங்க நாயகர் பூசையை முடித்துக்கொண்டு வீட்டிற்குத் திருமபி விடடார். மணவியார் அஞ்சுகின்ற உள்ளத்தோடும் அவரிடத்திறசெல்லமாட்டாதவராகி ஆலயத்தில் இருந்தார். நாயனார் நித்திரை செயயும்பொழுது பாமசிவன் அவருக்குச சொப்பனத்திலே தோன்றி தம்முடைய திருமேனியைக் காட்டி உன்மணவி மனமவைத்து வந்தித்துமிக்க இடமொழியும் இப்புறம் சிலம்பியின் கொப்புளம என்றுசொல்லியருளினர், நாயனர் அச்சத்துடனே அஞ்சலிசெய்துகொண்டு விழித்துஎழுந்து கூத்தாடினர் பாடினர் சிவனுடைய திருவருளை வியந்துநின்று அழுதார். விடிந்தபின் ஆலயத்துக்குப்போய் சுவாமியை ரமலகரித்து லிதோத்திரஞ்செய்து மணவியாரையும் அழைத்துகொணடு வீடடுக்குச் திருமபினர், அதற்குப்பின்முன்னிலுமபாக்க மிகுதமகிழ்சியோடு சிவார்ச்சனையையும் மகேசுர பூசையையும செயதுகொணடு இருநதார்.,

அபபடி இருக்கும்காலில் பாமசாரியராகிய திருஞானசமபந்தமூர்த்திசுவாமிகளுடைய மகிமையைக் கேள்வியுறறு இவருடைய ஸ்ரீபாதாரவிந்தங்களைத தரிசிகவேணடும் என்னும் அத்தியந்த ஆசையையுடையராயினர் அபபடி இருக்குமபொழுது, திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் ஐவகதிறாதரை வணஙகும் பொருட்டுத் திருக்கூட்டத்தோடும சாத்தமங்கைக்குவர திருநீலகக்காயனர் கேள்வியுற்று மிகுந்த மகிழச்சியோடும எதிரபபர்த்து வரவழைனையும் கழகுகளையும் நாட்டிதோரணங்கள் கட்டி நிறை குடங்களும் தூபதீபங்களும் வைத்து தமமுடைய ஞாதிகள் சமஸ்தரோடும அவரை எதிர்கொணடு நமஸ்கரித்து தமமுடைய வீட்டிறகு அழைத்துக் கொணடுபோய் திருவமுது செய்வித்தார். திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் அன்றிரவிலும அங்கேதானே திருவமுதுசெய்து திருநீலகக்காயனரை அழைத்து திருநீலகண்ட பபெரும்பாணருக்கும்விறலியாருக்கும இன்று நங்குதறகு ஓரிடங் கொடும எனறு சொல்லியருள திருநீலகக்காயனர் வீடடுகளு நடுவிலிருகின்ற வேதிகையின் பக்கத்திலே அவர்களுக்கு இடம்கொடுத்தா திருநீலகண்டயாழ்ப் பாணா அவ்விடத்திலே வேதிகையிலுள்ள நித்தியாக்கினி வலஞசுழித்து ஒங்கி முன்னியிலும சிறந்து பிரகாசித்துவருணமன்று பத்தியேமகிமைதருவது என்பதைவிளக்கவும் அதுகண்ட திருநீலகக்காயனர் மகிழசசியுடையவும விறலியாரோடு நித்திரைசெய்தார் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள விடிந்தபின் ஐவர்தியிற்சென்று சுவாமிமேலே திருநீலகக காயனரைச சிறப்பித்துத் திருப்பதிகம்பாடி சிலகாள் அங்கிருந்துபின் திருநீலகக்க நாயனருக்கு விடைகொடுத்து அந்தத்திருப்பதியினின்றும் நீங்கியருளினர் திருநீலகககாயனர்திருஞானசம்பந்த மூர்த்திமேலே பதிந்த அன்பும் அவருடைய கேண்மையும்

அவ்ருக்குப்பின் சொல்லும்படி தம்மை வலித்தன வாயினும் தாம் அவ்ருடைய ஆஞ்ஞையை வலியமாட்டாமையால் அத்தத் திருப்பதியிலே அவ்ருடைய திருவடிகளைத் தியானித்துக் கொண்டிருந்தார். திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் செல்லுந் தலங்களிலே இடைநாட் களிறசென்று, அவரோடிருந்து பின்திரும்பிவிடுவார். இப்படிநெடுநாட் சென்றபின் திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகளுடைய திருமணத்தைச் சேவித்துசிவபதமடைந்தார்.



உ

சிவமயம்.

இருபத்தெட்டாவது

நமிநந்தியடிகளுர் புராணம்.

நண்ணுபுகழமறையோர்வாழேமப்பெணூர்நமிநந்தியடிகடருவிளக்குகல்க,
வெண்ணெயமணர்கள்விலக்கநீரால்ரூரிலங்குமரெரியாருக்கேற்றுநாளிற
கண்ணமணர்கெடக்கண்பெற்றடிகள்வாழக்காவலனுமிநந்தங்கட்டுவித்தே
யண்ணல்ருள்கண்டாரூரமர்ந்துதொண்டாகாணியெனுமரசினருளடைந்தனரே.

சோழமண்டலத்திலே எம்பப்பேரூரிலே பிராமணர்குலத்திலே பரமசிவனுடைய திருவடிகளே மிகுந்த அன்போடும் ஒழியாத அகோராத்திரம் வழிபடுதலே இன்பமெனக்கொண்ட நமிநந்தியடிகள் என்பவர் ஒருவர்இருந்தார், அவர் பலகாலும் திருவாரூருக்குப்போய் வன்மீகநாதரை வணங்கினர் ஒருநாள் வணங்கிக்கொண்டு புறப்பட்டுத் திருமூனலிலே அடைந்து பக்தர்கள் இருக்கின்ற அரநெறி என்னும் ஆலயத்தை புகுந்து சுவாமியை நமஸ்கரித்து அங்கே செய்யவேண்டிய பலதொண்டுகளைச் செய்து இரவிலேஅங்கே எண்ணில்லாலதீபமேறறுத்றகு விரும்பி எழுந்தார் எழுந்தபொழுது மாலைக்காலமாதலைக் கண்டு அப்பாற்செல்லிறபொழுது செலலும் என்று தினைனேந்து சமீபத்திலே ஓர்வீட்டில் அதுசமணர் வீடென்று அறியாமையினுலே புகுந்து சிவாலயத்தில் விளக்கேற்றுதற்கு நெய் தாருங்கள் என்று கேட்டார் அதற்கு அவர்கள் கையிலே சுவாலிக்கின்ற அக்கினியையுடையு பரமசிவனுக்கு விளக்குமிகையன்றே இங்கே நெய் இல்லை விளக்கெரிப்பீராயில் நீரூமுகத்து எரியும் என்றார்கள் நமிநந்தியடிகள் அந்த

சொல்லிப் பொருதவராகி அப்பொழுத்த மிகுந்த மனவருத்தத்தோடும் திரும்பிப்போய் சுவாமி சந்நிதானத்தில் விழுந்து நமஸ்கரித்தார்அப்பெ ழுது ஆகாயத்திலே நமிநந்தியே நீ உன் னுடைய கவலையைவிடு இதற் குச் சமீபத்தில் இருக்கின்ற குளத்தில் நீரைமுகந்து கொண்டுவந்து வி ளக்கேற்று என்று ஒருஅசரீரி வாக்குத் தோன்றிற்று நமிநந்தியடிகள் அ தைக்கேட்டு மனமகிழ்ந்து தி நவருளே வியந்துகொண்டு எழுந்துபோய் கு ளத்தில் இறங்கி சிவாகமத்தை உச்சரித்து நீரை முகந்துகொண்டு கோயி லிலே வந்து அகலிலே முறுக்கிய திரிபின்மேலே அந்நீரை வார்த்து விளக் கேற்றினார் அது சுடர்விட் டெரிந்தது அதுகண்டு அவ்வாலயம் முழுதிலு ம்சமணர்கள் எதிரே மிகுந்த களிப்பு னே காடமிய நீரினுலே விளக்கெரி த்தார் திருவிளக்கு விடியுமளவும் நின்று எரியப்படி குறைவினறு தகளிக ளுக்கெலாம் நீர்வார்த்து நிரவிலேதா னே தமதுபட்டை ஊருக்குப்போய்சி வார்ச்சனை பண்ணி அபூதிசெய்து நித்தலுரைகொள்வார் உதயகாலத்திலே பூசையை முடித்துக்கொண்டு திருவாரூரை அடைந்து அபிஷேகி என்னும் ஆலயத்திற் சென்று சுவாமி தரிசனம் பண்ணி, பகன்முழுதிலும் திருத் தொண்டுகள் செய்து இரவிலே எங்கும் விளக்கேற்றுவார் இப்படி நிகழும் காலத்திலே தண்டியடிகளாலே சமணர்கள் கலக்கம் விளைத்து நாசமடைய, திருவாரூர் பெருமை யடைந்து விளங்கியது சோழமகாராஜா, நமிநந்திய டிகளே அத்தியட்சராக. வன்மீக நாதருக்குவேண்டும் நிமித்தங்கள் பலவ ற்றையும் வேதாகமவிதிவிளங்க அமைத்தான் நமிநந்தியடிகள் வீதிவிடங் கப் பெருமானுக்குப் பங்குனி மாதத்திலே மகோற்சவம் நடத்துவித்தார் நடத்துவிக்கும பொழுது, சுவாமி ஒருநாள் திருமணலிக்கு எழுந்தருள ச கல சாதியார்களும் ஒருங்குசேவித்துப் போனார்கள் நமிநந்தியடிகளும்சே வித்துப்போய் அங்கே சுவாமியுடைய திருவிளையாடலைத்தைக்கண்டு களிப்ப டைந்தார். பொழுதுபட சுவாமி திரும்பித் தோயிலிலேபுக, நமிநந்தியடிகள் வணங்கிக்கொண்டு, தம்முடைய ஊரைஅண்டைந்து, வீட்டினுள்ளே புகாம ல்புறக்கடையிலே படுக்க, மனைவியார்வந்து உள்ளே எழுந்தருளிச சிவார் ச்சனையையும் அக்கினி காரியத்தையும் முடிந்துகொண்டு, பள்ளிகொள் ளுமென்றார், நமிநந்திபடிகள், இன்னமுங்கூச சுவாமி திருமணலிக்கு எழு ந்தருளியம்பாது நானும் சேவித்துப்போனால் சகலசாதியும் கலக்துவந்த படியால், ஆசௌசமுண்டு ஆதலால், லாகாமபண்ணிய் பிராயசித்தம்செ ய்துகொண்டே உள்ளேபுகுது சிவார்ச்சனையைத் தொடங்கல் வேண்டும் அதற்கு நீ ஜலம் முதலாயினகொண்டுவு என்று சொல்ல மனைவியாரும் கொண்டு வரும்பொருட்டு விரைந்துசென்றார். அப்பொழுது நமிநந்தியடிக ள் சிறிதுரக்கம்வர, நித்திரை செய்தார். சொய்யும்பொழுது, வீதிவிடங்கப் பெருமாள் அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி திருவாரூரிலே பிறந்த

வர்கள் எல்லாரும் நம்முடைய கணங்கள் அதை நீ காண்பாய்என்று சொல்லி மறைந்தருளினார் நமிநந்தியடிகள் விழித்தெழுந்து தாம் நினைத்ததற்றமென்றுகருதி, எழுந்தபடியே சிவார்ச்சனையை முடித்து மனைவியாருக்குகழுந்ததைச்சொல்லி, விடிந்தபின் திருவாரூருக்குப்போனார். போனபொழுது அந்தத்திருப்பதியிலே பிறந்தவர்கள் எல்லாரும் சிவசாரூப முள்ளவர்களாய்ப் பிரகாசிக்கக்கண்டு, பூமியிலே விழுந்து நமஸ்கரித்து அவர்கள்அவ்வுருவம் நீங்கி முன்போலாயின மையையுங்கண்டு, அடியேன் செய்தகுற்றத்தைப் பொருக்கருளும் என்று சுவாமியைப் பிரார்த்தித்தார். பின்பு திருவாரூரிலேதானே குடிபுகுந்து தமமுடைய நிருத்தொண்டுகளைச் செய்துகொண்டுருந்தார். நெடுங்காலம் சிவனடியாருக்கு நியதியாக வேண்டுவன எல்லாவற்றையும் செய்துகொண்டு திருந்தமையால், தொண்டர்களுக்கு ஆணிப்பொன் என்று நிருநாவுக்கரசு சுவாமிகளாலே தேவாரப்பதிகதாலே சிறப்பித்துப் பாடப்பட்டார். இவர் இந்தப்பிரகாரம் சமஸ்தலோகங்களும் தொழுமபடி திருப்பணிகளைச் செய்துகொண்டிருந்து சிவபதத்தை அடைந்தார்.



சிவமயம.

திருச்சிற்றம்பலம்

ஐந்தாவது,

வம்பராவிவண்டிச்சருக்கம்.

இருபத்தொன்பதாவது

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள்புராணம்

காழிநகர்ச்சிவபாதவிதயர்தந்தகவுணியர்கோனழுதுமையாள்கருதியீட்டு
மேதினைபினமு நண்டுதாளம்வாங்கியிலங்கியரித்திலச்சிவிகையிசையவேறி
வாழுமுயலகனகற்றிப்பந்தொப்பத் துவளர்கிழிபெற்றரனிடமருகற்போற்றி
வீழிநகர்க்காசெய்திமறைக்கதவம்மிணித்தமினவனமேனியின்வெட்புவிவித்தாரே.

ஆரொளியிட்டெடுத்தவேடைவைமுனைநேற்றியாற்றிலிடுமேடெதிர்போயணையவேற்றி
யோரமணரொழியாமேகழுவிலேற்றியோதிருட்டதிகதாலோடமேறிக
காருகவுமிடிபுத்தன்றலையிலேற்றிக்காயாதடனையில்முதுகனிகளேற்றி
யீரமிலாவங்கமுமியெய்தவேற்றியிலங்குடெருமணதரனையெய்திஞரே.

சோழமண்டலத்திலே பிரமபுரம், வேணுபுரம், புகலிவெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்ணபுர, சீர்காழி, கொச்சை. வயம் கமுமலம்என்கின்றபன்னிரண்டு திருப்பெயரையுடைய சிவஸ்தலத்திலே, பிராமணர்குலத்திலே, வேதங்களிலே மகாபாண்டித்தியமுடைய கௌணியர்கோத்திரத்திலே, சிவபாதவிருதயர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் மனைவியார் கற்பிலே சமக்கு உயர் வொப்பிலாத பகவதியாரென்பவர். அவ விருவருடைய தாய்மரபு தந்தைமரபு என்னும் இருமரபும் சைவதெறிவழிவந்தனவேயாம். அவர்கள் அநாதிமலபுத்தபோதியாகிய பரமசிவனேபென்றி, அவிவேகிகளாலே பதிகளெனத்தரித்துணரப்பட்ட பசுக்களைத் தெய்வமென்று கருதாத மெய்யறிவினையும், உண்மாசை நீக்கும் பெருமையையுடைய தென்று வேதத்தின் உடபொருளாகிய உபநிடதங்களிலே துணிந்து அமைதியிடப்பட்ட அருமருந்தாகிய விபூதிமேல்வைத்த போனகப் பரிபூரணத்தையும், உடையவர்களாகி, இல்லறத்திலே சிறந்து வாழ்ந்திருந்தார்கள். அக்காலமிருக்கும்பொழுது, சிவகாருண்ணியமேதிரண்டிருந்து

வடிவு எடுத்தாற்போல விளங்குகின்ற சிவபாதவிருதயர் தமிழ்நாடெங்கு
ம்சமணரும் பௌத்தருமாகிய இல்வி நவகைப்பதிதர்கள் போதிக்கும் அ
சத்திய போதனை சக்தியினல அவர்கள் ஆசரிக்கின்ற கபட மார்க்கமாகி
ய்ஆருகதமும் பௌத்தமுமே பெரு, பரமாப்தராகிய அருகமலமுக்தபதி
வசுக்காயுள்ள வெளமைபோல சற்சமயமாகிய சைவசமயம் அருகி, விபூதி
சாதனவிளக்கம் குன்றுதல்லக்கண்டு பலவுங்கொண்டு கிழ்காலத்தும் வரி
காலத்தும் உள்ள சர்வாணமாகத நம் ஈப்தல் வேண்டு மென்பதைத் திருவு
ளத்தடைத்து, ருத்தியபுத்திரலாய் பிறவல்வண்டுமென்னும்ஆணையினு
லே, இல்லறத்தினிருந்துகொண்டே சிவாபரிஷ்டவைதராகியக்தாணியப்பரை
யுமகராக்கி, பெரியநாயகியாரையும் பரமபவநிராகரணம்பணலை சைவசமய
வாதாடலும் செய்யவல்லபராகுக்கி, தாங்கியஒருதவியாபுத்தரைப்பெறும்
படி, பிரார்த்தனைபுரிவமையதாகஅங்ஙனம்செய்த்தபோலமாறு
தோணியப்பருடைய பெருங்கருணையினுலே, உலகமெல்லாம் உய்யுமபடி
பகவதியாருடைய அநுமைதிருவயிற்றில் கால்பொம்பத்தியாகிய பெரு
ம்பேறு உளதாயிற்று. சிவபாதவிருதயர் ஆனை உணர்ந்து திருவருளைத்
தித்து மூளுகின்ற மகிழ்ச்சியோடுதங்கள் வதவதிப்படி செய்யவேண்டும்
சடங்குகளைப் பத்திரமாகங்ங நடவும ஒராங்களாடு சிறப்பகசெய்து பெரி
ன்பத்தை நுகரும்காலையில் சூரிய ரூகிய கரகங்கள அவ்வத்தும உச்சந்
களில்ல மிகவுவியுட நிகிழ்க தவியைப்கினம் எழு, திருவாதவரை நக்ஷத்திர
த்தில்ல பரசமயதருகூருகிய வுமை வதிகமாகவும் சைவமாகவும் த
ழைக்கவும் பிராமணரா ரய ருகுள் பெருகவும் மழைமொழிக
ளினும சமழ்மொழி ( ) ( ) ( ) யவும, பலவிருவ ( ) ( ) ம பூமிலா
கரும் அ( ) ( ) ( )

ணமுன்செய்து அகமருவுஷண ஸநாகம்பண்ணினார். பண்ணும்பொழுதுபிள்ளையார் அவரைக்காணுது இறையளவாயினும தரியார் என்னும்நிலைமைத லேஉதோக, பரமசிவனுடைய திருவடிகளே வழிப்படட முன்னவர்ச்சிவுள கையினின்று கணகளைக் கண்ணீர்த்தும் பும்படி கைகளிரண்டில பிசைந்து அதரம் துடிக்க எவ்வுலகங்களும் குதுகுலிக்க பொருமி அழுதார் தம் முடைய மூற்சார்பை அறிந்தோ பிள்ளை மையாரினை சுவாமியுடைய திருத்தோணிச் சிவரத்தைப் பார்த்து அம்மை அப்பா எனறு அழைத் தலைழுத் தறஅழுதார்.

அப்பொழுது, சுத்தசாடகுண்ணிய பரிபூரணராகிய தோணியப்பர், அவருடைய முற்பிறந்தக்கொண்டை நினைந்து, அவருக்கு அருள்செய்தற் குத் திருவுளங்கொண்டு, பார்வதிதேவியாரும் உடனாகு மாய எழுந்தருளி, தீர்த்தக்கரையை அடைந்து, உலகமாதாவாகிய உமாதேவியாரை நோ கி உனனுடைய முகிப்பாலிப் பொன்வள்ளத்திலே கறந்து இவனுக்குஊ ட்டுஎன்று அருளிச்செய்தார், ஞானமாகளிடத்தில சகசமாயுள்ள மலத் தைநிக்கி முன்றடைப் படடிருந்த பெறறவு பெருகுகாதலாகிய சிவத்துவ த்தை அருளுகின்ற பராசத்தியாகிய உமாதேவியார் சொனனவணைந்து நம்மு டைய திருமுலைப்பாலும் பொன்வள்ளத்திலே கறந்து, சிவஞானத்தைத்தரு ழைத்து, பிள்ளையாருடைய கண்ணீரைத்துடைத்து கையிலே தொடுத்து ஊட்ட, சுவாமி அழுகைதீர்ந்து அமுக்கிபகம் செய்தருளினர். அப்பிள்ளை யார்சர்வான்மாக்களுக்குமபரமபிதாமாதாக்களாகிய சிவன்சத்தி இருவராலு ம் ஊளப்பாடடமையால், ஆருடைய பிள்ளையார் என்னும் பெயரும், அரி பிரமேந்திராதி தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் எடடாத சத்தியநிர்மல சிவஞானத்தோடு சமபந்தஞ்செயதலால் ஞானசமபந்தமூர்த்தி என்னு ம்பெயரும் உடையராயினர். சிவபாதவிருதயராகிறபொழுதிலே தம்முடைய நியமங்களை முடித்துக்கொணடு கோயிலில், பரஞானக்கண்ணினுலே சிவ த்தைத்தரிசித்து அதில் அதீதபாடடுகின்ற ஆருடையபிள்ளையாரைநோக் கினீயார் தக்தபாலை உண்டாய எனறுமோபிதது, எச்சில்மயங்க உனக்கு இ தனைத் தந்தவரைக்காட்டு எனறுசொலலி, வலகையில் எடுத்த ஓரு சிறியபாலை கொண்டு ஓச்ச, பிள்ளையார் ஆனந்தபாஷ்பம் சொரிய உசசியின்மேல் எடு த்தருளிய ஒருதிருக்கை விரலினுலேகாடடி, ஆகாயத்திலே இடபாரூடராகி உமாதேவியோடு நினறருளிய பரமசிவனைக் காடடி, உள்ளே நிலைபெறுது எ ழுந்த சதசயஞானத்தினாலே, எலலையில்லாத வேதாந்தினுட்சி றந்த தாறபரியங்கள் எல்லாவறறையும் ஞானாக்கள் உய்யும் பொருட்டுத் தமிழினுலே திருவாய்மலர்ந்தருளுதற்குத் திருவுளங்கொண்டு அவ்வேதத் தினிறகு ஆதியாகிய அக்ஷரமணை மையொடுபுணர்த்தி தமமுடைய பாடி ல்பரமசிவனுடைய திருச்செவியில் ஏறும் பொருட்டு முனனர் அத்திருச் செவியையே சிறப்பித்து "தோடுடைய செவியின் விடையேறியோர் தூவெ ண்மதிசூடி." எனறெடுத்துப் பாடத்தொடங்கியருளினர்.

திருப்பிரமபுரம் - பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்.

தோடுடையசெவியன்விடையேறியோர்தூவெண்மதிசூடிக்
காடுடையசுடலைப்பொடிப்பூசியென்னுள்ளங்கவர்கள்வ
னேடுடையமலரான்புன்னாள்பணிந்தித்தவநாள்செய்த
பீடுடையபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே.

1 நெடியமாலவன்முடியுமடியுங்காண்பரியவனாகி
பெடிபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே
பொடிகொடியமனமவைவைத்துணர்ஞானசம்பந்தன்னுரைசெய்த
நெடியநற்றமிழ்வல்லவர்தொல்வினைதீர்தலெளிதாமே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு பரமசிவன் தமக்குபயிழைசெய்த ஆன்மாக்களுக்கும் பின் தம்மைவக்கடையிற் அவர்களுக்கு அநுக்கிரகம் செய்வரென்பதை விளக்கும்பொருட்டு, தமமைமதியாமல் தாம்வீற்றிருக்கின்ற கைலாசத்தை எடுத்தசத்தன்வலிபிழைத்த பிராவணன்பிழைதமமீள் இசைபாட அவனுக்கு அருள்புரிந்த நிறத்தை எட்டாந்திருப்பாடலும், எவ்வகைப்பட்டசிறப்பினும் பரமசிவனே அன்பாலிபடிவனென்றி அவனை அடையார்கள் என்பதை விளக்குமபொருட்டு, பரமசிவனை தமமை வணங்குகின்றவர்களுக்கே அருள்செயவர் எனினும்து அவனை வணங்காது வழுவாகியமானத்தை மேற்கொண்டமையினிய பிரமனிடமிருந்துள் நிதிவாகிய பன்றியும் அன்னமுமாய்த்தேடியும அடையாதவர்களாகிப பின் ஓர்தெழுத்தைத்துதித்தே உய்ந்தநிறத்தை ஒன்பதாந்திருப்பாடலும், வேதகாரணராகிய கடவுளை அடையுமெறியை அமிர்து உய்யாத சமணரும் புத்தருமாகியவகையருடைய சமயங்கள் கபடமார்க்கமேயள் என்னுந் திறத்தைப் பதகாந்திருப்பாட்டிலும, அமைத்தபபாடியருளினர். இங்ஙனம் திருப்பதிகதத்தை நிறைவித்து நிருக்கடைக்காப்பு சாத்தித்தொழுதுகொண்டு நின்றார் பரமசிவனுடைய பொருந்தருணையமணடி ஆகாயத்திலே தேவர்கள எல்லாரும் புஷ்பமழை பொழிதார்கள். பரமசிவனை தேவஸ்துதிகள் முழங்க கந்தருவர்களும கின்னரர்களும கீதவாலிசெய்ய அரிபிரமேந்திராதிதேவர்கள் எல்லாரும் ஸ்தோத்தரமபண்ண சிவகணநாதர்கள் ஹரஹர எனறுசொல்லும் ஓசைதழைக்க, முனிவர்கள் வேதகோஷத்தோடு பக்கத்திலேசூழ, பார்வதியாரோடு நிருத்தரணிக்கு எழுந்தருளினர். திருஞானசமபநதமூர்த்திசுவாமிகள் அவைத்தகண்டு அவனாத்தொடர்ந்து எழுகின்ற அன்புமேலீட்டினாலே தமபுடைய கண்வழியே சென்றகருத்து நீங்காமற் கலந்துசெல்ல் சுவாமி எழுந்தருளிய கோயிலினுள்ளேபிரவேசித்தார், அனந்தகோடி சிவபூ

ண்ணியங்களைச்செய்து அப்பிள்ளையாருக்குப்பிதாவாயிருக்கப்பெற்றுக்கொண்ட சிவபாதவிருதயர் ஈகுவித்து ஆனந்தக்கூத்தாடி வெருட்டியும் வீயப்பும்விருப்பும் அடைந்து அவர் திருவாயமர்ந்தாளிய நிராகரித்தமிழின் பொருளை உணர்ந்தார் பரமசிவனைத் தரியேகண்டு தொடர்ந்த பிள்ளையாரைப்போலக் காணப்பெற்றிலராயினும் அந்நிகழ்ந்த அற்புதத்தைக்கண்டு, அதுதோணியப்பருடைய திருவருளெனத் துணிந்து மகா சந்தோஷத்தோடும் முனைசென்ற பிள்ளையாருக்குப் பின்சென்னார் அப்பொழுது அங்கே நிகழ்ந்ததைக் கேள்வியுற்ற பிராமணர் சமஸ்தரும் உரோமப்புளகங் கொண்டு இதற்கு ஒப்பாகிய அற்புதம் எங்கே நிகழ்ந்தது என்று பொல்லாக்கொண்டு கோயில் வாயிற்புறத்திலவர்கள் சூழ்ந்தார்கள். பிள்ளையார்திருதோணியில் வீற்றிருந்த சுவாமியை அடைந்து திருப்பதிகம்பாடி கோயினின்றும் புறப்பட்டார், அதுகண்ட பிராமணர்களும் மற்றையோர்களும் எதிர்கொண்டு வந்து நின்று ஸ்தோத்திரம்பண்ணி பூமியிலே விழுந்து அவருடைய திருவடிகளை நமஸ்கரித்து எழுந்தார்கள். சிவபாத விருதயர் பிள்ளையாரை எடுத்து தோளின்மேலே வைத்துக்கொண்டு மங்கலவாத்தியங்கள்ஒலிக்க பிராமணர்கள் வேதகோஷம் செய்ய சிவனடியாரெல்லாரும் ஸ்தோத்திரம்பண்ண சிக்காழியை வலஞ்செய்துகொண்டு தம்முடையகிருகினியை அடைந்தார். திருஞானசம்பந்தப்பிள்ளையார் மற்றநாள்பிராதக்காலத்திலே ஆலயத்திற்சென்று தம்முடையபிதாமாதாவாகிய பரமசிவனையும் பாவநியாயையும் வணங்கித்துதித்து அருளைபெற்று திருக்கோலக்காவனும் திருப்பதியை அடைந்து கோயிலே வலஞ்செய்து முன்னின்று கையினாலே ஒற்றறுத்துத் திருப்பதிகம் பாடத்தொடங்கினர்.

திருக்கோலக்கா - பண - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்

மடையில்வாளைபாயமாதரார், குடையமபொய்கைசூழ்கோலக்காவுளான்
சடையும்பிறையுஞ்சாம்பற்பூச்சுங்கீ, முடையுங்கொண்டைவருவமெனகொலோ.

நிலங்கொள்காழிஞானசம்பந்தன், குலங்கொள்கோலக்காவுளானையே
வலங்கொள்பாடல்வல்லவாய்மையா, ருளாருகொள்வினைபோயோக்கிவாழ்வரே.

திருச்சிற்றம்பலம்.

பாடும்பொழுது பரமசிவனுடைய திருவருளினாலே ஸ்ரீ பஞ்சாக்ஷரம் எழுதப்பட்டிருக்கின்ற பொற்றாளம் உலகமெல்லாம் உபயோகப்படி பிள்ளையாருடைய திருக்கரத்தே வந்திருந்தது பிள்ளையார் அதைக் கண்டு திருவருளே வியந்து களிகூர்ந்து ஏழிசையும் தழைத்தோங்கத் திருப்பதிகத்தை தாளத்தோடுபாடிமுடித்து திருக்கடைக்காப்புச் சாத்தி நின்றார். அவர் பாடும்போ

மூது விண்ணுலகமும் அதிசயிக்கும்படி ஓங்கிய அதிமதுர நாதத்தைநோக்கி, தம்புரு நாரதர் முதலாகிய சங்கீதவித்துவான்கள் ஸ்தோத்திரம்செய்து புஷ்பமாரி பொழிந்தார்கள். வேதாகமங்கள வாழும்படி திருவவதாரஞ் செய்த பிள்ளையார் மீண்டுஞ் சிர்காழித்துப் போகமபடி கடக்கார், கடக்கும்பொழுது சிவபாதவிருதயர் தரித்தலாற்றமையால் தோளின்மேலே தரித்துக்கொள்ளப்பிள்ளையார் அத்தோளின்மேல் எழுந்தருளிச் சிர்காழியிலிருக்கின்ற கோயிலை அடைந்து வலஞசெய்து சந்நிதானத்திலே நின்றுதிருப்பதிகம் பாடியருளினர்.

சிகாழி - பண் - தக்காகம்.

திருச்சிற்றம்பலம்

பூவாகொனறைப்புரிபுன்சடை மீது காவையெனகின்ற தத்துங்காழியார்
மேவார்புரமூன்றட்டாரவாபோலாம, பாவாரினசொற்பயிலுமபாமமே.

காராரவல்சூழ்காழிக்கோன்றன்னைக், கிராஞ்ஞாலசம்பந்தனசொன்ன
பாராருகழ்ப்பாவல்லவ, நாராவனதகிலிதாகிருப்பாமே.

திருச்சிறறம்பலம்.

திருக்கழுமலம்-திருத்தாளச்சத்தி - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பந்தத்தால்வக்செப்பால்பயின றுறின்றவுப்பிப் பாலேசேர்வாயேனை
ர்கான்பயில்கணமுனிவர்களநு, சிந்தித்தேவக்ப்பாசிலம்பின்மங்கைதன்
னெடுஞ் சேர்வார்காணுணீள்கயி லத்திகழ்தருபரிதெலாரு, சாந்தித்தெயி
ந்தப்பார்சனங்கணின்முதங்கணுற ரூமேகாணுவாழ்வாரத்தாவுசெய்வனதி—
ங், கதத்தாலெண்டிக்குங்பழிலங்குசத்தனக் காடார்பூவார்சிர்மேவுங்க
ழுமலவளகரே.

கஞசத்தேனுட்டிட் டேகளித்துவண்டுசெண்பகக் காணேதேனேபோ
ருங்கழுமலகரிறையைத், தஞ்சச்சார்சண்பைக்கோன்சமைத்தகற்கலித்
துறைதாமேபோல்வார்தேனோர்தமிழ்விரகன்மொழிக, ளெஞ்சத்தெய்வி
ன்றிக்கேகிமைத்திசைத்தமைத்தகொண் டேழேயேழாகலூணுரியலி
ரிச்சியில்வா, வஞ்சத்தெய்வின்றிக்கேமனங்கொளப்பயிற்றுவோர் மார்பே
சேவாள்வானேர்சிர்மதிதன்மடவரலே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு கடவுளே வணங்கிக்கொண்டு, தம்முடைய திருமாளிகையை அடைந்து, அந்தச் சிர்காழியில் வாழுகினறவர்கள் சமஸ்தார்களும் வாழும்

பொருட்டு தம்முடைய இளங்கிருகுகோலக காட்சியைக் கொடுத்து விற்றி ருக்க நினைந். அப்படி இருக்கும்பொழுது அவருடைய தாயாராகிய பக வதியார் பிறந்த திருநனிபள்ளியில் இருக்கின்ற பிராமணர்கள் எல்லாரும் பெருமகிழ்ச்சியோடு அவரிடத்திற்கு வந்துசேர்ந்து அவரை வணங்கப் பெற்று இருந்தார்கள். பிள்ளையார் உலகமெல்லாம் உய்யும்படி சிவஞான ம்பெற்ற பெருவார்த்தைகளைக கேளவியுற்று, சமீபத்திலிருக்கின் றபிராமணர்களும் திருத்தொண்டர்களும் மற்றை அனைவரும் அதியிசயித்து நிரண்டுவந்து பிள்ளையாரை வணங்கி உபசரித்தார்கள். இங்ஙனம் நிகழும் கா லையிலே திருநனிபள்ளியிற பிராமணர்கள பிள்ளையாரை வணங்கி அழையங்க ள்எல்லாரும் உயயுமபடி திருவவதாரஞ செயதருளிய பாலகிபாரூவாகிய சுவாமீ, அடியேங்களுடைய வாசஸ்தானமாகிய திருநனிபள்ளியில் விற்றி ருக்குஞ சுவாமியை வணங்குகும பொருட்டு அவரிடத்திற்கு எழுந்தருளல் வேண்டும் எனறு பிராரத்திதார்கள திருஞானசம்பந்தரான பெருவாழவாகிய பிள் ளையார் அதறகு இசைந்து தோணியப்பரை வணங்கி, அருள்பெறறு பிற தலங்களையும் வணங்கச சென்றார். செந்தமிழ் மாலையும் சிறந்த அரு மைத திருவடிகள தாயினமேற செலவதையும பிறரொருவர் தாங்குவ தையும பொறுத்த அன்பினையுடைய சிவபாதவிருதயர் வந்து எடுத்துத்தர னினமேலே வைத்துக்கொண்டு சென்றார். திருஞானபிள்ளைகுரு சமீபித்த பொழுது பிள்ளையார், அந்தச சோலை தோனறாம பாடியது எனறுவினவிய ருள, தலவாசியார் திருஞானப்பிள்ளையெனறார் அதுகேட்டு திருப்பதிகம பாடி ககொணடு கோயிலை அடைந்து சுவாமியை வணங்கிக்கொண்டு ஆதலால தத்தில் இருந்தார்

திருநனிபள்ளி பண் - பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

காரைகளகூகைமுல்லைகளவாசைமிகைபடர்ந்தொடரிகளபகவிஞ்சிச
சூரைகளபமமிவிமமுசுடுகாடமாகசிவனமேவுசிரமலைகத்தினை
தேரைகளதாசைசாயமிதிகொளளவளவேருபிகொளளவளவேதுவள
நாரைகளாலவாரவயலநேதிலைகுலாபிளளிபாலுகமாகாள.

சடையிடைகொடுங்கியிடைநிருவெளளமவளர்திங்கள தனனிபயலை
யிடையிடைவைததகொகுமலருஞ தருமலியினைவனனிடநகொளடிதான
மடையில வாளை பழுகிபாயபொரிகருமபாடுநீலநற
நடையுடையன்னமவைகுபுலம பணைகனிபளளிமபாலுகமாகாள

கடலவனையோதமலருகுழிகானற்பனமகமழசாழியெனறுகருப
படுபொருளாதுளதாகவைத்தாபோனஞான முனவ
னிடுபறையொன்றவத்தர்பியனமேனிருகுநினையாலுரைகதபனுவ
னடுவிருளாடுமெகதைகனிபளளியுளகவிணகெடுதலாண கமத்த.

திருசசிற்றம்பலம்.

பின்பு அவ்விடத்தினின்றும்நீங்கி, தலைச்செங்காடு, வலம்புரம், பல்லவனீச்சரம், சாய்க்காடு,திருவெண்காடு, திருமுல்லைவாயில், என்னும் ஸ்தலங்களுக்குப்போய்ச் சுவாமிதரிசனஞ்செய்து, பதிகம்பாடிக்கொண்டு மீண்டும் சீர்காழியை அடைந்து, சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு இருந்தார்.

திருவலம்புரம் - பண் - பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்.

கோடியுடை மும்மதிலூடுருவக்குனிவெஞ்சிலைவாங்கி
யிடபவெய்தவமரர்பிரானடியாரிலைசக்தித்தத்
தூடியிடையாளையொராபாகமாகத்துதைந்தாரிடம்போலும்
வாடவடை மேதிவயல்படியும்வலம்புரன்னகரே.

நல்லியனுன்மறையோர்புகழ்த்தமிழ்ஞானசமபந்தன்
வல்லியந்தாதுடை யாடையினுள்வலம்புரன்னகரைச
சொல்லியபாடல்கள்பத்துஞ்சொல்லவல்லவர்தொல்வினைபோய்ச்
செல்வன்சேவடி சென்றணுகிச்சிவலோகமுமேர்வாரே.

திருசசிற்றம்பலம்.

திருச்சாய்க்காடு - பண் - சிகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

மண்புகார்வான்புகுவர்மனமிலையார்பசியாலுங்
கண்புகார்பிணியதியாகதற்குருங்கேட்டாரும
விண்புகாரெனவேண்டார்வெண்மாடகெடுவீதித்
தண்புகார்சசாய்க்காட்டெந்தலைவன்முள்சார்ந்தாரே.

நெருமபைத்துபுடைத்தொல்குரூபுரஞ்சேர்மெல்லடியார்
அம்பத்தும்வரிக்கழலுமரவுசெய்பூங்காழிச்
சம்பந்தன்தமிழ்பகர்ந்தசாய்க்காட்டுபபத்தனையு
மெம்பந்தமெனக்கருதியேத்துவார்க்கிடர்கெடுமே.

திருசசிற்றம்பலம்.

திருச்சாய்க்காடு - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நித்தலுங்கியமஞ்செய்துநீர்மலராதூவிச்
சித்தமொன்றவல்லார்க்கருளுஞ்சிவன்கோயின்
மத்தயானையின்கோடும்வண்பீலியும்வாரித்
தத்துநீர்ப்பொன்னிசாகரமேவுசாய்க்காடே

வினையோர்புகழ்ந்தேத்தியவெற்சாய்க்காட்டை
ஞானசம்பந்தன்காழியர்கோனவில்பத்து
மூனமின்றியுரைசெயவல்லவாதாம்போய்
வானகாடினிதாள்வரிம்மானிலத்தேதாரே.

திருச்சிற்றம்பலம்.

திருவெண்காடு - பண் - சிகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

கண்காட்டுநுதலானுங்கனல்காடுங்கையானும்
பெண்காடுமுழுநீறாடுபிறைகாடுஞ்சடையானும்
பண்காட்டுமிசையானுமபயிர்காடும்புயலானும்
வெண்காட்டிலுறைவானும்மிடைகாடங்கொடியானே.

பேயடையாபிரிவெய்துந்பிள்ளையினோடுள்ளதினே
வாயினவெலாம்பெறுவரையுறவேண்டாவொன்றும்
வேயனதோளுமைபங்கனவெண்காட்டுமுக்குளநீர்
தோய்வினையீரவர்தம்மைத்தோயாவாந்தீவினையே.

தண்பொழிலசூழ்சண்பையர்கோனறமிழுஞானசம்பந்தன்
விண்பொலிவெண்பிறைசூடனவிகிர்தனுறைவெண்காட்டைப்
பண்பொலிசெந்தமிழ்மாலைபாடியபத்திவைவல்லார்
மண்பொலியவம்முகவாபோய்வான்பொலியப்புகுவாரே.

திருச்சிற்றம்பலம்.

திருமுல்லைவாயில் - பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்

துளிமண்டியுண்டுநிறம்வந்தகண்டமுண்டுதுன்னுசுடலோ
ளெளிமண்டியும்பரிலகங்கடந்தவுடம்பனெங்களரனூர்
களிமண்டுசோலைகழனிக்கலந்தகமலங்கடங்குமதியின்
றெளிமண்டியுண்டுசிறைவண்டுபாடுதிருமுல்லைவாயிலிதுவே.

அணிகொண்டகோதையவணன்றிமத்தவநள்செய்தவெங்கைமருவார்
திணிகொண்டமூன்றுபுரமெய்தவின்றிருமுல்லைவாயிலதன்மேற்
றணிகொண்டசிந்தையவர்காழிஞானமிகுபந்தனெண்டமிழ்களி
னணிகொண்டபத்துமிசைபாடுபத்தரகல்வானமாள்வர்மிகவே.

திருச்சிற்றம்பலம்.

அப்படி யிருக்கும் காளிமேல மையக்கிராப்பள்ளி, குருகாவூர் முதலாகி
ய ஸ்தலங்களை வணங்கிச் சி நாபதிகம் பாடியருளினார்.

திருமலைராயர்ப்பள்ளி - பண் - கொல்லி.

கிருதசிற்சபாபலம்.

நிலாத ருவுள மருளிசெயும்வயி ராமு
கலைக ளமகிழ்வொடுகனவீணு முகந்தும்
வரைவில்பர வெயிலெயக்கமழ்மலர்ப்பள்ளியுள்
ளாவலையாழ்முரல்வயற் பினாவணிமி னே.

வம்புலாம்பொழிலணிமலையர்ராப்பள்ளியு
ளம்பனுர்கழல் பரவுஞானசம்பந்தன்சொ
லெம்பரம்பிதுவெனவாளினீஞ்சுவி பவ
ருமபாதர்பிவினைபயப்பதியி லாவரே.

இ நசிற்றம்பலம்.

இப்படி நிகழுங்காலத்தில் திருநீலகண்ட பெரும்பாணர் ஆருடை யபிள்ளையாருக்கு தரிசனமாகி விரும்பியபோதி யாழிசெய்துகொண்டு திரு காழியிலவர் சந்நிதானத்தார். பிள்ளையார் அவருடைய வரவை அறிந்து அவரை எதிர்கொள்ள, அவர் பிள்ளையாருடைய பாதாரவிந்தங்களை வணங்கித்து, ஸந்தோசத்தோடுசெய்தார். பிள்ளையார் அவரை அழைத்துக்கொண்டு கோயிற்புறமுள்ளிலேயனுப்ப, தாமதிவிக்கு அவரை விரும்பி நீராடும்படி சுவாமிக்கு பாடியாவாசகம் பிள்ளையார் அதிபரசியமாக பாடினார். திருநீலகண்டப் பெரும்பாணர் பாடுவாசகமாக பிள்ளையார் அவருடைய அருகாமையிலிருந்து உலகத்தை மெய்மறந்து தாளமிட்டார். திருநீலகண்டப் பெரும்பாணர் சுவாமி பிள்ளையார் பாடிய நாபதிகங்களைக் கேட்டு பெரும கிழ்ச்சிகொண்டு, அவைகளின் இசைகளோடு யாழியில் இடுவாசித்தார். பின் பிள்ளையாரை நோக்கிசுவாமி இன்னும் தேவரீர் அருளிச்செய்யும் திருப்பதிகங்களை அடியேன் யாழிலிட்டு தேவரீரைப் பிரிவின்றிச் சேவிக்கும் பெறவேண்டுமென்று மாலையிட்டு தொழுதார். பிள்ளையார் நீலகண்டரை நோக்கி யருளினார். திருநீலகண்டப் பெரும்பாணர் அற்றைநாடோறும் இங்கு பிள்ளையார்பாடிய திருப்பதிகத் தினிசைகளை யாழிலேயிட்டு வாசித்துக்கொண்டுவந்தும்மகலாத கண்புடனிருந்தார். திருஞானசம்பந்தப்பிள்ளையார் பூமிக்குச் சுமுழுஞாடியாகிய திலேயில் விளக்கு கின்ற திருச்சிற்றம்பலத்திலே நிருத்தஞ்செய்தருளும் சபாநாயகரைத்த

ரிசனஞ்செய்தற்கு விரும்பி, தந்தையாரோடும் திருநீலகண்டப் பெரும்பாணரோடும் அடியார்கள் பக்கத்திலேசூழ சிற்காழியைக் கடந்துசென்று, சிதம்பரத்தினது திருவெல்லையை அடைந்து நமஸ்கரித்துக்கொண்டு, அந்தத்திருப்பதியைச்சூழ்ந்த மதிலினது தெற்துவாயிலை அடைந்து தில்லைவழந்தணர்களையும் மற்றையடியார்களையும் மகா அலங்காரத்தோடும் எதிர்கொள்ளப்போய் திருவீதியைத்தொழுது ஸ்தூலலிங்கமாகிய கோபுரத்தை நமஸ்கரித்து எழுந்து உள்ளே புகுந்து திருமாளிகையை வலஞ்செய்து பேரம்பலத்தை வணங்கிக்கொண்டு கனகசபையை அடைந்தார். ஆயிரம் ஆதித்தப்பிரகாசம்கூடிய மண்டலம்போலக் குறைவறநிறைந்த ஞானசபையிலே சத்திகாரியமாகிய திருமேனியைக்கொண்டு ஆனந்ததாண்டவஞ் செய்தருளுகின்ற சபாநாயகரைத் தரிசனமபண்ணினார் உடனே அவ்வுவத்திலே யாதொரு சேட்டையுமினறி, வாசனையினலே திருக்கரங்கள் சிரசின்மேலேறிக்குவிய உரோமாஞ்சிதங்கொள்ள நாத்தழும்ப விழி நீர்த்தாரைகொள்ள சிவானந்தசாகரத்தில் அமிழ்ந்தினின்று "கற்றுங்கெரி" என்னும் திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

கோயில் - பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கற்றுங்கெரியோம்பிகலியையவாராமே, செற்றுவாழ்தில்லைச்சிற்றம்பலமேய
முற்றுவெண்டிங்கண்முதல்வன்பதமே, பற்றுகின்றுரைப்பற்றுபாயமே.

பறப்பைப்படுதலெங்கும்பகவேட்டெரியோம்புஞ்சிறப்பாவாழ்தில்லைச்சிற்றம்பலமேய
பிறப்பிலபெருமானேப்பின்றுள்சடையானே, மறப்பிலார்கண்டீமையதீர்வாரே.

ஞாலத்தயர்வாழிஞானசம்பந்தன், நிலத்தார்கொள்கைச்சிற்றம்பலமேய
சூலப்படையானைச்சொன்னதமிழ்மாலை, கோலத்தாற்பாடவல்லாரெல்லாரே

திருச்சிற்றம்பலம்.

பின்பு திருமாளிகையை வலஞ்செய்து புறப்பட்டு திருமுன்றிலிலே நமஸ்கரித்து எழுந்து கோபுரவாயிலைக்கடந்து பணிந்து நான்கு திருவீதிகளையும் தொழுது அங்கே இருந்தற்கு அஞ்சி திருவேட்களத்தை அடைந்து சுகவாமிதரிசனஞ்செய்து திருப்பதிகம் பாடியருளினார்.

திருவேட்களம் - பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

அந்தமுமாதியுமாகியவண்ணலாரமலங்கையமர்ந்திலங்க
மந்தமுழவமியம்பமகள்காணநின்றுடிச்
சந்தமிலங்குதருகுகைகண்டமர்மையிலகதும்பி
வெந்தவெண்ணீறுமெய்பூசம்வேட்களுண்ணாரோ.

விண்ணியன்மாமதிளாஞ்சொளிவீசிவெண்கொடியெங்குமின்றிலங்க
நண்ணியசீருவர்காதற்றமிழ்ஞானசம்பந்தன்
பெண்ணினல்லாளொருபாகமமர்ந்துபிணியவேட்களமேன்மொழிந்த
பண்ணியல்பாடல்வல்லாகள்பரிவொடுபாவலியாரே.

திருச்சிற்றம்பலம்.

அவ்விடத்தில் விருத்தகொளுரீ திகம்பரத்தருள்வந்து சாமாயகரைத் தரிசிப்பார். அப்படியிருக்கும்காளிலில், திருக்கழிப்பாலைக்குப்போய் சுவாமி தரிசனஞ்செய்து திருப்பதிகம் பாடியருளினர்.

திருக்கழிப்பாலை - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

புனலாடியபுன்சடையாயரண, மனலாகளிழித்தவனேயழகார்
கனலிட்டினுய்கழிப்பாலையுளாய, புனலார்கமழ்கைதொழுதுள்குதுமே.

கழியாரதிகாவலனேப்புகலிப், பழியாமறைஞானசம்பந்தன்சொல்
வழிபாடிவைகொண்டடிவாழ்தலையலா, தெழியாரிமையோரொடுகேடிலரே.

திருச்சிற்றம்பலம்.

அவர் பாடும் பதிகவிசேஷமான யாழ்ப்பாணரும் யாழிலிருவரிப்பாயினர். ஒருநாள் பிள்ளையார் திருவேட்களத்தைக்கும்பிட்டு திகம்பரத்தை அடைந்தபொழுது சாமாயகருடைய திருவருளினுல் திலலைவாழந்தணர்முலமாயிரநம் மிகணகரதராய்த் தோன்றக்கண்டு, அத்தன்மையைப் பெரும்பாணருக்குங்காட்டினர். திலலைவாழந்தணர் பிள்ளையாரைக் கண்டவுடனே வணங்கி, பிள்ளையார் அவர்கள் வணங்குமுன் தாமும் வணங்கி, கோயிலிற் பிரவேசித்து சாமாயகரை வணங்கி "மடிநுழைபுறு நெய்யொடுபாறியிர" என்னும் திருப்பதிகத்தைபபாடினர். அந்தத்திருப்பதிகத்தின்முன் திருப்பாட்டிலே திலலைவாழந்தணர்தாம்கண்டபடி கூறி, அவர்கள் தொழுதேத்தும் சிற்றம்பலம் என்று அருளிச்செயதார்.

கோயில் - பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்

மையிலாமபொழிலசூழந்தமாமறைக்காடமாநதாைக்
கையினறறெழுதெழுவான்காழியுணஞானசமபநதன
செய்தசெந்தமிழ்பத்துஞசிக்தையுடசேர்ததனவல்லார
பொயயில்வானவரோமெபகவலர்கொளவலர்புகழே.

திருசசிறறமபலம்.

அதுநிறக. பாண்டிநாடடிலே பாண்டியராஜன்தான் பூவஜன்மத்திலே செய்த தீவினையினல் உலக மெலலாம இப்படியே நித்யமாய இருக்கும் அருகேசுரன் குருத்துவமாத்திரத்தில் கருத்தாவாய் இருப்பன் எனப் பிதற்றுகின்ற கபடிகளாகிய சமணர்களுடைய தூர்ப்போதனையை மெயயென்று துணிந்து சத்தியமார்க்கமாகிய சைவத்தைவிட்டு அவைகளுடைய அசத்திய மார்க்கமாகிய ஆருகதமதத்திலே பிரவேசித்தான் அரசன் அவ்

வா ருயினமையால் 'மன்னனெப்படி மன்றுயிப்படி என்னும் பழமொ ழிப்படி சூடிகளும் அவவூருயின மயிர் பரிக்கப்பட்ட தலையையும் ஊ க்தை வாயையுட உறிபொதிகலனும் மயிற்பீலியும் பொருத்தியகை யையும் பாயுடையையும் மனம்போல மாசுண்ட சரீரத்தையும் நின் முண்டீலையும் வெற்றரையையும் உடைய சமணப்பாதிரிகளெங்கும் பரக் தார்கள். இங்ஙனம் பாண்டிநாடெங்கும் வைதிகமார்க்கமும் சைவமார்க்க மும் ஆகிய இரண்டும் குன்றி சமணசமயமே விருத்தியாகியும் அப்பாண்டி யனுடைய மனைவியாரும் சோழமகாராஜாவுடைய புதல்வியாரும் ஆகியம் ங்கையர்க் கரசியார் அவ்வரசனுடைய புதன் மந்திரியராகிய குலச்சிறை நாயனாரென்கின்ற இருவரும் தாங்களும் அப்பாண்டியனும் பாண்டிநாட் டாரும் மற்றயாவரும் செய்தபுண்ணியத்தினாலே சைவர்களாயே இருந்தா ர்கள். அவர்கள் அப்பாண்டி நாட்டுள்ளார் பொருட்டுக் கவலிகொண்டு தாங்கள் சைவழுக்கத்தில் நிற்குந்தன்மை அரசனுக்கு விளம்பாவண்ண ம் ஒருகினாங்கள். இங்ஙனம் வழுகுங்காலத்தில் உலகம் எல்லாம் உய்யும்படி திருவவதாரம் செய்தருளிய உயர் வொப்பில்லாத சைவசமயாசாரியராகி ய திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் நடைய அளவிறந்த மகிமைகளே யும் அவர் வேதாரணியத்திற் சென்று திருக்கதவம் பாண்டிநாடு செய்த பெருந்தவத்தினாலே கேளவியுற்றார்கள் கேள்வியுற்றபொழுத்த அளவிறந் த மகிழ்ச்சிகொண்டு சிலசிசனங்களோ திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமி களிடத்திற்குச் செல்லும்பொருட்டு எவினுள்ளவர்களோ அவ்வாறு அமணசிசன ங்கள் பாண்டிநாட்டைக் கடந்துசென்று வேதாரணியத்தலத்தை அடைந்து தி ருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருக்கருகுங்கின்ற மடத்தைக் க அடைந்து தங்கள் கருத்தையாயிற் காலவாயுருகுத்த தெரிவித்த அவர்கள் உ ள்ளேபோய் நாயனாரை வணங்கிநின்று சுவாமி பாண்டிமாதேவியாரையும் ம ங்கையர்க்கரசியாரும் மந்திரியாராகிய குலச்சிறை நாயனாரும் எவ்வகலால் தேவரீருடைய பூதிபாதாரவிந்தங்களே வணங்குகையாகுச் சிலபழுத்துவந்து கிடக்கின்றனர் என்று விண்ணப்பஞ்செய்தார்கள் பிள்ளையார் தி நவஞ்சு ரர்த்து அவர்களே இங்கே அழையுங்கள் எனறு அருளிசெய்ய வாயிற் காவ லாளர்கள் அவர்களைக் கூவஅவர்கள் உள்ளேபுகுந்து பிள்ளையாரை விழுந் து நமஸ்கரித்து எழுந்து அஞ்சலிபண்ணிக்கொண்டு நின்றார்கள் பிள்ளையார் அவர்களே நோக்கி மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் சுகமாயிருக்கிறார்களா என்று வினவிய நாள அவர்கள் ஆம் என்று சொல்லி பின் ஏழுலகமும் உய்யுமபடி தி நவஞ்சாருசெய்தருளிய பரமகிருபாநிதியே சை வசமயாசாரிய மூர்த்தியே பாண்டிநாட்டாரும் சமணர்களு டைய தூர்ப்போதனையினாலே விதிநிஷ்டைகளைவிட்டு ஆநந்தமதத்திலே பிரவேசித்தமையால் மங்கையர்க்கரசியாரும் குலச்சிறைநாயனாரும் மிக்க கவலைகொண்டிருந்தார்கள், பினபு தேவரீருடைய மகிமையைக் கேள்வியு

ற்று அந்தச் சமாசாரத்தைத் தேவீருக்குத் தெரிவிக்கும்பொருட்டு அடியேங்களே அனுப்பினார என்று பிரார்த்தித்தார்கள். அதுகேட்ட சிவனடியார்கள் சமஸ்தரும் பிள்ளையாரை நமஸ்கரித்து எழுந்துநின்று சுவாமீ தேவரீர் பாண்டிநாட்டுக்கு எழுந்தருளி எங்கள் கடவுளாகிய பரமசிவனுடைய திருவடிசேர அடையாத அதிபாதகர்களாகிய சமணர்களே வாதிலே வென்று பலவிதகரமாக்கத்மாகிய சைவசமயத்தை ஸ்தாபனம்பண்ணி பாண்டிய னையும் விபூதியிடுவித்து உய்விக்கும்பொருட்டுத் திருவுளங்கொண்டருள வேண்டும என்றார்கள். பிள்ளையார அவர்களுக்கு அநுக்ரஹம்புரிந்து அப்பமூர்த்தியோடு திருவாயிலிற்சென்று சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு திருக்கோபுரத்தை நமஸ்கரித்து பாண்டிமாதேவியாரும் குலச்சிறையாரும் சொல்லிய வுபயபிரவார்த்தையை அவருக்குச் சொல்லி பாண்டிநாட்டுக்கு எழுந்தருளுகத்தக்க துணிந்தார். அப்பொழுது அபயமூர்த்தி தேவரீர் சிறுபிள்ளையாயிருக்கிறீர். அச்சமணர்களுடைய வஞ்சனைக்கோ ஓர் எல்லையில்லை. தேவரீருக்கு இப்பொழுது கோள்கள வலியில ஆதலால் தேவரீர் அவ்விடத்திற்கு எழுந்தருளுதற்கு உன்படுவது ஒண்ணாது என்றுசொல்ல பிள்ளையார் பரமசிவன் நம்முடைய பிதையே கோயில்கொண்டு வீற்றிருத்தலினால் நமக்குத் தீங்குவராது என்றுசொல்லி பரமசிவனுடைய திருவடிகளைதுதித்தது 'வேயுறுதோளி' என்னும் திருப்பதிகத்தைப் பாடியருளினார.

வேயுறுதோளி - பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வேயுறுதோளிபங்கன்விடமுண்டகண்டன்மிகுகல்லவிணைதடவி
மாசமுதிங்கள்கங்கைமுடிமேலணிந்தெழுளமேபுரந்தவனனை
யிறுதிங்கள்செவவாய்புதனியாழமுமெள்ளிசனிபாம்பிரண்டுமுடனே
யாசறுகல்லகல்லவைகல்லகல்லவழியாவ நமிகவே.

தேனமர்பொழில்கொளாலிவீளைசெய்தெண்ணிலவளர்செம்பொனெங்கு நிக
ரான்முகனதியாயபிரமாபுரத்துமறைஞானஞானமுனிவன் [மு
ருனுமகோதாகுமடியாலவத்துமியாதவுண்ணமுரைசெ
யானசொல்மாலியோதுமடியார்கள்வானிலரசாள்வரிணமதே.

திருச்சிற்றம்பலம்.

அந்தத் தேவாரபதிகத்தைக் கேட்டதன்பின், அப்பமூர்த்தியும் அதற்குஉன்படாதகாரணம் அவர முன்னே எழுந்தருள அமைந்தபொழுது பிள்ளையார் அப்பரே நீர் இந்தச்சொழமண்டலத்திலே தானே எழுந்தருளியிருக்கும் என்று சொல்லி கைகுவித்து வணங்கி தடுக்க அப்பமூர்த்தியும்வணங்

கிஅதற்கு ஒருவாறு அருமையாக உடன்பட்டார் பிள்ளையார் வேதத்தை வளர்த்தற்கும் சைவத்தை விளக்குதற்கும் எழுந்து வேதாரணியேசுரரை மீண்டும்போய் நமஸ்கரித்துப் பாடித்துதித்து அனுஞ்ஞைபெற்றுக்கொண்டுபுறப்பட்டு அப்பமூர்த்தி மறுதவண்ணம் அவரவணங்கி விடைகொடுத்துநீங்கி முத்துச்சிவிகையில் ஏறி ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஓதி சுவாமியுடையவியூதியணிந்த திருமேனியைச் சிந்தித்துக்கொண்டு சென்றார். அகத்தியான்பள்ளி கோடிக்குழகர்கோயில் கடிக்குளம் இடும்பாவனம், உசாத்தனமுதலிய ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு திருப்பதிகங்கள் பாடியருளினார்.

திருஅகத்தியான்பள்ளி - பண் - தாந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வாடியவெண்டலைமாலைசூடியங்கை
ணீடியர்கொள்ளிவிளக்குமாகநிவந்தெரி
யாடியவெம்பெருமானகத்தியான்பள்ளியைப்
பாடியசிந்தையினர்கடல்லையாம்பாவமே.

ஞாலமல்குந்தமிழ்ஞானசம்பந்தன்மாமயிலாலுஞ்
சோலைசூழ்குழகத்தியான்பள்ளியுட்
சூலநல்லபடையானடிதொழுதேத்திய
மாலைவல்லரவர்தங்கள்மேல்வினைமாயுமே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கடிக்குளம் - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பொடிகொண்டமேனிவெண்ணூலினார்தோலினார்புலியுரியதளாடை
கொடிகொள்நன்மணிகிளரினனைவருகுழைமழலைமடமாதர்
கடிகொள்பூம்பொழில்சூழ்தருகடிக்குளத்துறையுங்கறைகத்தைத்தம்
முடிகள்சாய்த்தடிவீழ்தருமடியரைமுன்வினைமுடாவே.

தனமலிபுகழ்தயங்குபூந்தராயவர்மன்னனற்சம்பந்தன்
மனமலிபுகழ்வண்டமிழ்மாலைகணமாலதாய்மகிழ்வோடுங்
கனமலிகடலோதம்வந்துலவியகடிக்குளத்தமர்வானை
யினமலிந்திசைபாடவல்லார்களேபோயிறைவனேடுறைவாரே.

திருச்சிற்றம்பலம்.

திருஇடும்பாவனம் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

மனமார்த்த மாடவா யொடுகிழ்மலர்க்கண் மலர்த்தூய்த்
தனமார்த்த தடங்கடலவங்கத்தி னருந்திச்
சினமார்த்த நிருபர்வா யெயிற்றாற் றின்றிருகுன்றி
னினமார்த்த வினவாகிடம்பாவனமே.

தொடியார்த்தெடுமாடக்குன்றனரிகரைக்கொல
விடியார்கடலடி விழ்த்தநிடும்பாவனத்திறையை
யடியார்தமுணர்த்தாரிளஞாயிறனசம்பந்தன்
பாடியார்சொன்னபாடல்பத்தும்பாடுவினைதானே.

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர் - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

நீரிடைதயினறவன்றமீன்காப்ப, வான்பொருடைச்சுக்ரீவனதமன்மூழக்
காருடைகுரகுண்டெருளுரோயதவெல், சிருடைச்சேடாவாழ்திருவசாததானமே.

வானிரிந்திழியுநீ ரவ்வயற்புகலிமன்,றிரைதிரிந்தெறிகடற்றிருவுசாத்தானனை[ரோ
யனைகரிக்கணருச்சம்பக்குணர்ண்டமிழ்வல்லார்களைதினையின்றியேகன்நெறிசேர்வ

திருச்சிற்றம்பலம்.

பின்பு சோழநாட்டைக் கடந்து பாண்டிநாட்டை அடைந்து கொடுங்குன்றத்திற்சென்று சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு திருப்பாடிகம்பாடிமதனைக்குச் சமீபித்தார்.

திருக்கொடுங்குன்றம் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

மானிற்பொலிவெய்துமம்மழைமேகங்கிழித்தோடிக்
கானற்பிறைதம்பருங்குளிர்சாரறகொடுங்குன்றம்
அனற்பொலிவங்குமமர்ந்தாடியுள்மேசுத்தத்
தினற்பொலிமொழியாளொடுமையான்திருங்கோ.

கூனற்பிறைசடைமேன்மிகவுடையான்கொடுங்குன்றை
கானறகழுமலமாகாத்தலிவண்ணலகவுணி
ஞானத்தயர்சம்படகனலங்கொள்தமிழ்வல்லா
ரூனத்தொடுதுயர்தீர்ந்துலகேத்துமெழிலாரே.

திருச்சிற்றம்பலம்.

அதுகிற்க எட்டுமலைகளிலும் எரிக்கின்ற சமணர்கள் எல்லாரும் தீர்க்கமித்தங்களுந் தூர்ச்சொற்பனங்களும் மதுவாயிலை ஒருங்குவக்து கூடி தாம் தாம்கண்ட சொப்பனங்களை ஒருவருக்கொருவர் சொல்லி பாண்டிய னுக்குந் தெரிவித்து தங்களுக்குக் கீழ்படு விளைவது நிடமெனக் கருதி, உணவின்றி கவலைகொண்டு இருந்தார்கள். சைவர்களாகிய பாண்டிமா தேவியாரும் குலச்சிறை நாயனாரும் அளவில்லாத மகிழ்ச்சியைக் காட்டுகின்ற கன்னிமித்தங்களைக் கண்டு சமணசமயம் குன்றிச்சைவசமயம் விரைத்தியா,கல் நிடமெனக் கருதிமகிழ்ந்து இருந்தார்கள். இருக்கும்பொழுது சர்வலோகங்களும் உய்யும்பா. திருவவதாரம் செய்தருளிய ஞானசாரியராகிய திருஞானசம்பந்த மூர்த்திசுவாமிகள் எழுந்தருளிவருகின்றார் என்று சிலர் அவர்களுக்குப் போயச்சொன்னார்கள். மங்கையர்க்கரசியார் அதைகேட்டு அவ்வார்த்தையைச் சொல்லி யவர்களுக்கு அளவிறந்த நிரவியங்களைக்கொடுத்து எல்லையில்லாத மகிழ்ச்சி யுடையோராகி தம்மை வணங்கிகின்ற குலச்சிறையாரை நோக்கி எங்கள தம்பிரானுகிய திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகளை எதிர்கொள்ளும் என்றார் குலச்சிறையார் பாண்டிமாதேவியாரை வணங்கிப் போந்து அரசனுக்கும் உறுதியையென்று விளைது மதுரைக்குப் புறத்திலேபோய், பிள்ளையாரை எதிர்கொள்ளுதற்குச் செல்ல பாண்டிமா தேவியாரும் தம்முடைய பரிசனங்கள் சூழ, ஆலயத்திற் சென்று சொக்கநாத சுவாமியை நமஸ்கரித்து பிள்ளையாருடைய நல்வரவை எற்றுகின்றார். ஆருகதம் பௌத்தமுதலிய பரசமய இருளை நீக்குகின்ற ஞானஒளி தராகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தோற்கருவி, தூளிகருவி, நாரமபுக்கருவி, கஞ்சக்கருவி எனும நால்வகை வாத்தியங்களும் ஒலிக்க எண்ணிறந்த பிராமணர்கள் உதாத்த அநுதாத்த ஸவரிதப் பிரசயங்களோடு வேதகோஷஞ்செய்ய அடியார்கள் ஹர ஹர என்று சொல்லும் ஓசையினுலே திக்குகள் எல்லாஞ் செவிடுபட செந்தமிழ் மாருதமாகிய தென்றல் எதிர்கொண்டு எமமருங்கும் சேவிக்க வியூகியைத் தரித்த திருமேனியையுடைய திருக்கூட்டம் சாவலோகத்தாரும் செய்த சிவபுண்ணியங்களின் படையெழுச்சி போலப் பொலிந்து விளங்க சமணசமயம் பாழ்பட ஸ்வசமயம தழைத்தோங்க தம்முடைய திருநாமங்கள் பலவற்றையும் ஊருகின்ற முதலிய சின்னங்கள் எல்லாம் "பரசமயகோளரி வந்தார்" "பரசமய கோளரிவந்தார்" என்று பணிமாற அடியார்கள் பலர உரோமோத்தர்ஷணங்கொள்ள ஆனந்தபாஷ்பம சொரிந்து எங்கும் பெருகி அலப்ப தம்முடையமகிமைகள் எல்லாவற்றையும் பாடி ஆட இவற்றைக்கண்ட கேட்ட சமணப்புல்லர்கள எல்லாரும் ஓட்டம்பிடிக்க அற்புத சின்மயத் திருவடிவாகிய முத்துச் சிவிகையின் மேலே முத்துக்குடை நிழற்ற எழுந்தருளிவந்தார்.

சத்தியநிர்மல சிவஞானனந்த வடிவாகிய பிள்ளையார் இப்படி எழுந் தருளி வரும்பொழுது ஒப்பில்லாத முத்துச்சின்னம் உலகமெல்லாம் உய் யும்படி ஊதுகின்ற அதிமாதுரியமாகிய பேரொலியானது குலச்சிறைநாய னருடைய திருச்செவிகளிலே திவ்வியாமிர்தம் போலப் புகுந்து சுவைக்கஉ டனே அந்நாயனர் பூமியிலே விழுந்து நமஸ்கரித்து அளத்தற்கரிய பெரு ங் களிப்பினையுடையராகி எழுந்து இரண்டுகைகளும் சிரசின்மேல் ஏறிக்கு வியி உரோமாஞ்சிதங்கொள்ள எதிரே கடுகி நடந்தார் பிள்ளையாரோடு கூடி வருகின்ற அடியார்கள் திருக்கூட்டத்தை நெடுந்தூரத்திலே கண்டு வணங் கிஎழுந்து விரைந்து சமீபத்திற்சென்று ஆனந்தபரவசராகிய அடியற்ற மர ம்போல நிலத்திலே விழுந்துகிடந்தார். அக்குலச்சிறை நாயனரே எதிரேவ ந்த அடியார்கள் பலர் வணங்கி அவர் பூமியினின்று எழாமையைக்கண்டு திருமபித் திருஞானசமபந்த மூர்த்தி சுவாமிகளை அடைந்து வணங்கி வாய் பொத்தி நின்று சுவாமீ பாண்டியனுடைய மந்திரியாகிய குலச்சிறையார்தி ருமுன்னேவந்து அடியற்ற மரம்போல விழுந்து கிடக்கின்றனர் என்று வி ண்ணப்பஞ்செய்தார்கள் சர்வசீவதயாநிதியாகிய பிள்ளையார் அதுகேட்டதி ருமுகத்தாமரை மலர்ந்து முத்துச்சிவிகையினின்றும் இறங்கி விரைந்து சென்று அவரை அணைந்து தமமுடைய அருமைத் திருக்கரங்களினால பற் றி எடுக்க அத்திருக்கரங்கள் தீண்டுதற்குப் பூர்வஜன்மங்களிலே அனந்த கோடி சிவபுண்ணியங்களைச் செய்திருந்த குலச்சிறைநாயனர் அப்பிள்ளை யாருடைய திருமுகமண்டலம் பொழியாநின்ற பெருங்கருணை வெள்ளத் நிலும் தம்முடைய கண்களில் நின்று பொழியாநின்ற ஆனந்தவெள்ளத்தி லும் முழுகி உரைதடுமாற உரோமஞ சிலிர்ப்ப சரீரம்நடுங்க எழுந்தகை களைச் சிரமேற் குவித்து நின்றார பிள்ளையார் அவரைக்கூடாட்சித்து அன்ப ரே பாண்டிமா தேவியாருக்குமஉமக்கும்நமதுகுடவுளாகிய பரமசிவனது தி ருவருள் பெருகும் நன்மைதான் வாலிதே என்றுசொல்லியருள, அமம கர வாசகத்தைத் கேட்ட குலச்சிறைநாயனர் வணங்கிநின்று அடியேங்கள்செ ய்த தவப்பயனே அருட்கூன்ற, சிவஞானதீபமே, அடியேங்களுக்குப் பூத காலத்திலே பழுதடையாத் நிறமும் பௌதிய காலத்திலே தேவரீர் நிரத காட்டில் எழுந்தருளுதலினாலே பெற்ற பேறுகும அதனால் அடியேங்கள் எக்காலத்துக் திருவருளுடையேம்அஃதன்றியும்பொய்ச்சமயமாகிய சமண சமயத்தில் அமிழ்ந்தி நிக்காடும் அரசனும்வெற்றி பொருந்திய விபூதிப்பிர காசத்தாலேவிளங்கும்மன்மையையும்பெற்றோம் பாண்டிமாதேவிபார்தே வீர் இங்கெழுந்தருளுதலைக் கேட்டு பெருமகிழ்ச்சிகொண்டு எங்கள் பெரு வாழ்வு எழுந்தருளியது நீர்போய் எதிர்கொண்டு திருவடிபணிவீர் என்றுஅ டியேனே ஏவினர்என்று விண்ணப்பஞ்செய்து மிகக்களிப்பினாலே மீளவும் பணிந்து ஸ்தோத்திரம் பண்ணினர்.

பிள்ளையார் அங்ஙனம்பணிந்து துதித்த குலச்சிறைநாயனாருக்கு அருண்மொழிகூறியருளும்பொழுது மதுராபுரி நோன்றதலும் அடியாரை நோக்கி எங்கள் பரமசிவனுடைய திருவாலவாய் எமமாநங்கினது என்று விளம்பியருள அவ்வடியவர் பிள்ளையாருடைய திருவடிகளே வணங்கித் திருமுன்னே நின்று சையினுலே காட்டி இங்கிகோபுரந் தோன்றுகின்றது திருவாலவாய இதுவென்ரூர். அதுகண்டு பிள்ளையார் கைகுவித்து பிருந்த அன்போடு பூமியின்மேலே விழுந்து நமஸ்கரித்து "மங்கையர்க்கரசி" என்று எடுத்து மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் ஆகிய இருவருடைய திருத்தொண்டுகளைக் கொண்டமையைச் சிறப்பித்துசெய்யுள்தோறும் இறுதியிலே "ஆலவாயாவதுமிதுவே" என்பதை அமைத்து திருப்பதிகம் பாடிக்கொண்டு இருந்தார்.

திருஆலவாய் - பின் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

மங்கையர்க்கரசிவளவர்கோள்பாவைவரிவளைக்கைமடமானி
ங்கயச்செல்விபாண்டிமாதேவிபணிசெய்துகாடொறும்பரவப்
பாங்கமுனிருவன்பூதனியகனுல்வேதமும்பொருள்களுமருளி
ங்கயற்கண்ணிதன்னெடுமமாத்தவாலவாயாவதுமிதுவே.

வெற்றவேயடியாரடிமிசைவீழும்விருப்பினன்வெள்ளநீறணியுச்
சொற்றவன்றனக்குமந்திரியாயகுலச்சிறைருளாவினின்றேத்து
மொற்றைவெள்விடையனும்பரார்த்தலவனுலகினிலியற்கையையொ
டற்றவாகறறசிவனுறைகின்றவாலவாயாவதுமிதுவே. [ழிக்கிட்

பன்னலமபுனரும்பாண்டிமாதேவிகுலச்சிறையெனுமிவர்பணியு
மன்னலம்பெறுசீராலவாயீசன்றிருவடியாங்கவைபோற்றிக்
கன்னலம்பெரியகாழியுள்ஞாசம்பந்தன்செந்தமிழிவைகொண்
டுன்னலம்பாடவல்லவரிமையோர்தஞ்சீர்திருப்பவரினிதே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு அடியார்களோடும் திருவாலவாயை அணைந்து கோபுரத்தை வணங்கி உள்ளேபுகுந்து வலஞ்செய்து மந்திரியாரோடு சந்நிதானத்தைஅடைந்தார் சொக்கநாத சுவாமியைத் தரிசித்து அட்டாங்கபஞ்சாங்கமாகப் பலமுறை நமஸ்கரித்து உரோமாஞ்சிதங் கொள்ளஆனந்த அருவிசொரியகின்று திருப்பதிகங்கள் பாடியருளினர்.

திருஆலவாய் - திருவிருக்குக்குறள் - பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நீலமாமிடற், றரலவாயிலான், பாலதாயினுஞ் ஞாலமாள்வரோ.
அடிகளாலவாய், படிகொள்சம்பந்தன், முதலின்றமிழ், செடிகணீக்குமே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு திருபுன்கில அடைந்தார் முன்னே சுவாமிதரிசனம் செய்யும்பொருடப் பிள்ளையார் உள்ளணையும்போது எதிர்செல்லாமல் ஒருபக்கத்திலே ஒதுங்கிநின்ற பாண்டிமாதேவியார் முன்னேவர சூலச்சிறையார்பிள்ளையானை வணக்கி நின்று சுவாமி இங்ஙன எழுந்தருளிவந்தமேற் கைகுவித்துக்கொண்டு வருகின்றவரோ பாண்டிமாதேவியார் என்று சொல்ல பிள்ளைபார் பெருங் கொளிப்பொடு விரைந்து சென்று, பாண்டிமாதேவியாரிப்பிள்ளையாருடைய திருவடிகளை விழுந்து நமஸ்கரிக்கார் பிள்ளையார் திருவருள் சுரந்து அவரைத் திருக்கரத்தினால் எடுத்தருளினார். பாண்டிமாதேவியார் தம்முடைய மனக்கருத்து முற்றியது என்று நினைந்து கண்ணீர்சொரிய வாயுரோமுறி அடியேனும் அடியேனுடையபதியும் செய்ததவம் என் என்று சொல்லி வணங்கினர். பிள்ளையார் பரசமயத்தார்களுளிருந்தும் சைவநெறியிலேவாழும் அன்பரே உமமைக்காணுதறகுவந்தோம் என்றுசொல்லி அவரை விடைகொடுத்து அனுப்பிக்கொண்டு அடியார்கள்சூழ எழுந்தருளினர் எழுந்தருளுமபொழுது திருவாலவாயிலை திருத்தொண்டு செய்துகொணடிருக்கின்ற அடியாகள்எல்லாரும்வந்து பிள்ளையாரைநமஸ்கரித்து ஞானதித்தராகிய சுவாமி ! நமமை நள் நிங்குமபடி தேவரீர் இங்கே எழுந்தருளிவந்ததற்கு அடியேங்கள் அளவிறந்த தவங்களைச் செய்திருந்தோம் என்றார்கள். பாலருவாயர் அவர்களுக்கு அருளசெய்து புறததனைந்து குலச்சிறையார் திருமடங்காட்ட பரிசனங்களோடும அதில்வீறறிருந்தருளினார், பாண்டிமாதேவியாருடைய ஆணையின்படி குலச்சிறையார் பிள்ளையாருக்கும் பரிசனங்களுக்கும விருந்தளித்தார. பகலிலே பிள்ளையார் அடியார்களோடு எழுந்தருளிவரப்பண்ட சமணர்கள் எல்லாரும் மனங்கலங்கி சூரியன் அஸ்தமயமானபின ஒருங்குகூடினர்கள பிள்ளைபார் வீற்றிருக்கின்ற திருமடத்திலை நிருந்தொண்டர்கள் ஒதுகின்ற திருப்பதிகவிசையின் பேரொலி செவிப்புலப்பட சமணாகள் அது பொருரர்கிய பாண்டியராஜனிடத்திற் சென்று சொல்லுவோம் என்று துணிந்து அப்பாண்டியராஜனை அடைந்தார்கள் பாண்டியன் அவர்களுடைய மனத்துயரத்தைக்கண்டு நீங்கள் இங்ஙனங் திரண்டுவருதறகுக் காரணம் யாது என்று பரிந்து பரிந்து வினவ சமணாகள் மஹாராஜனே உன்னுடைய மதுரையிலை சைவப்பிரா மணர்கள் வருதலால் இன்றைக்கு நாங்கள்கண்டு முட்டு என்றார்கள் உட

னே அரசன் காணும்கேட்டு முட்டு என்று சொல்லி கோபித்து அத்தச்சிவன டியார்கள் இன்றைக்கு இக்ஷகாத்திற்கு வருதற்குக் காரணம்யாது அவர்க ள்யாவர் என்றருள் அதற்குச் சமணர்கள் சோழநாட்டிலே சீர்காழியிலிருக் கின்ற ஓர்பிரமணப்பாலன் சிவனிடத்தே ஞானம்பெற்றவனென்று முத் துச்சிவிகை மேற்கொண்டு, எங்களேவாதிலே வெல்லும்பொருட்டு அடியர் ர்களோடு வந்திருக்கின்றனென்றார்கள். பாண்டியன மிகக்கோபித்து இதற் கு நாம யாதுசெய்வோம் என்றுசொல்ல உபஜாபதாரிய சமணர்கள் நாங் கள் அத்தப்பிராமணப்பிள்ளை இருக்கின்ற மடத்திலே மந்திரவித்தையின் லே அக்கினிபற்றச் செய்வோமாயில் அவன இக்ஷகாத்திலே இராமல் போய்விடுவான் என்றார்கள் பாண்டியன அதைக்கேட்டு விகாரித்து சென்று அங்ஙனம் செய்யுங்கள் என்றுசொல்லி அவர்களைப்போக்கி யாதொரு பே ச்சுமின்றி மனக்கவலையோடு சயனத்திற் புக்காள் பாண்டிமாதேவியாரும் புகுந்தார். பாண்டியன்ஒன்றும் பேசாதிருக்க மாதேவியார் என் பிராணந ாயகரே! நீர் முன்உள்ளமகிழ்ச்சியின் மிமுகம்புலர்ந்து இருக்கின்றீர், உம்மு டைய மனசிலே வந்தகவலையாது சொல்லியருளும் எனறார். பாண்டியன தேவியாஞா நேக்கி என் அதிபிரிய முள்ள பிராணநாயகியே! சோழநாட்டி லே சீர்காழியிலிருக்கின்ற ஒரு பிராமணப்பாலியன சிவனுடைய அருளைப் பெற்று எங்கள் ஆசாரியர்களை வாதிலே வெல்லும்பொருட்டு அடியார்க ளோடு இங்கேவந்திருக்கினறனென் ஆசாரியர்கள் அவர்களைக்கண்டு முட்டு க ான்கேட்டு இதுவே என்கவலைக்குக்காரணம் என்றனர். மங்கையர்க்கரசியார் என் பிராணநாயகரே! நீர் கோபிக்கவேண்டுவதில்லை இருபக்ஷத்தாருடை வா துசெய்தால் வென்றவர்பக்கஞ்சேர்ந்து அவர் அனுசரிக்குஞ மயதத்தையே அனுசரித்தல் உறுதியாகும் என்றுசொல்லி பெருமகிழ்ச்சியோடு தம்மு டைய மாடத்திற்சென்று இருந்தார். குலச்சிறையார் அங்கே எய்த பாண டிமாதேவியார் இத்தச் சமாசாரத்தை அவருக்குச் சொல்லினார். குலச்சி றையார் கைகுவித்து நின்று இன்னமுந்தீ திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் இங்கே எழுந்தருளிவரப்பெற்றுக் கொண்டோம் இனிச சமணர் கள்செய்யும வஞ்சனையை அறியேன் என்றார். பாண்டிமாதேவியாரும் அ ஞ்சிவஞ்சகப்புலையராகியசமணர்கள்தீத்தொழில்செய்யவல்லவர்கள்என்செ ய்வோம் என்று நினைந்து திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகளுக்கு யாதாயி னும் ஓருறுவருமாயின் நாம்ம உயிர்துறுதலிடியாமென்றார் அறிவித்தார்.

தவமறைந்து அல்லனசெய்யுஞ சமணர்கள் பிள்ளையார் இருக்கின் றதிருமடத்திலே அக்கினி பற்றும்படி கந்திரம் செபித்தார்கள். உயர்வொ ப்பில்லாத ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஓதும் மகான்கள் பார்க்குந்திசையிலும் ம ற்றைமந்திரங்கள் ஜீவிக்குமோ பலியா அடியாருடைய திருமடத்திலே தீ கள் மந்திரசாதனைகள் பலியாமையைகண்ட சமணர்கள் மனந்தளர்ந்து

அரசன் இதனை அறியின் நம்மைச் சிறிதும் நன்குமதியான் நம்மிடையி
ருத்தியையும் ஒழித்துவிடுவான் என்று நினைந்து பயந்து அக்கினியைக்கொ
ண்டுபோய் திருமடபுறச்சுற்றிலே கொளுத்தினார்கள் அத்தொழில் வெளி
ப்படுதலும் பரிசனத்தவர்கள் மறுகிப் பதைப்பா னே சிதைத்தாதீக்கி அது
செய்தவர்கள் பாதகர்களாகிய சமணரென்பதை உணர்ந்துசென்று, பிள்
ளையாரை நமஸ்கரித்து நின்று சமணர்கள்செய்த தீங்கை விண்ணப்பஞ்செ
ய்தார்கள். உடனே பிள்ளையார் சிவனடியார்கள் துயில்கின்ற இச்சத் திரும
டத்திலே பாவிகள் பாழுதுசெய்யலாமோ என்று பரிந்தருளி அவர்கள் என்
பொருட்டுச்செய்த தீங்காயினும் சிவனடியார்களுக்கு இப்படியுவருமோஎன்
றுபின்னும் அச்சுற்று மடா கோபங்கொண்டு இத்தீங்கு அரசனுல் வந்தது
எனத் திருவுளங்கொண்டு, "செய்யனேதிருவாலவாய்" என்னும் திருப்பதி
கத்தை "அமணர்கொளுவுஞ் சுடர்பையவே சென்று பாண்டியற்காகவே"
என்று திருப்பதிகம் பாடியருளினீர்

திருவாலவாய் - பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

செய்யனேதிருவாலவாய்மேவிய, வையனேயஞ்சலென்றருள்செய்யெனைப்
பொய்யராமமணர்கொளுவுஞ்சுடர், பையவேசென்றுபாண்டியற்காகவே.

அப்பனுலவாயாதியருளினுல், வெப்பர்தென்னவன்மேலுறமெதினிக்
கொப்புஞானசம்பந்தனுரைபத்திஞ், செப்பவல்லவர்தீதிலாச்செல்வரே.

திருச்சிற்றம்பலம்

பின்பு சிவபத்தியிற் சிறந்த பாண்டிமா தேவியாருடைய திருமங்கி
லியத்தைப் பாதுகாத்தல் வேண்டினமையாலும், மந்திரியாராகிய குலச்
சிறைநாயனுடைய அன்புணுலும் அரசனிடத்தில் அபராதம் உறுதலா
லும், அவனுக்கு மீண்டு சைவமார்க்கத்தை அடையும் விதி உண்மையாலு
ம்அவன் வெப்புநீங்கும்படி தம்முடைய அருமைத் திருக்கரங்களினுலே தீ
ண்டி விபூதி சாத்தும் பெருஞ்பேற்றை உடையனுதலாலும் தீப்பிணியைப்
பையவே செல்க என்று அருளிச்செய்தார் திருப்பதிகம் பாடியவுடனே அ
க்கினி வெம்மைப்போய்ப் பாண்டியனை அடைந்தது. சூரியன் உதித்தபின்
'பாண்டிமாதேவியார் இரவிலே சமணர்கள்செய்த தீங்கைக் குலச்சிறையா
ரோடு கேள்வியுற்று திருஞானசம்பந்தப்பிள்ளையாரை இந்தப்பாதகர்களு
டைய காட்டிலே வர அழைத்தனுங்கள் இறப்பதே திண்ணம் என்று மன
மயங்கி அச்சுற்று பதைபதைத்தார். பின்பு திருமடத்திலே தீதின்றையை
த்தெளிந்து சமணர்கள் செய்த தீங்கு இறுதியில் எப்படி மூடியுமோர்என்று

வினைக்கும்பொழுது அரசனுக்கு வெப்புநோய் அடுத்தது என்று கஞ்சுகி
ல்வந்து சொல்ல மாதேவியார் பதைபதைத்து சென்றார். குலச்சிறையா
ரும் விரைந்துபோனார் பாண்டியன்வெப்புநோயினாலே மிகவருந்தி வைத்தி
யர்கள் வந்து பல வைத்தியங்களைச் செயதும் அந்நோய் சிறிதும் நீங்காம
ல்மேற்பட அறிவிழந்து பேச்சின்றிக்கிடந்தான் சமணர்கள் அதனைக் கேள்
வியுற்று வெய்துயிர்த்து ஓடிவந்து அந்நோயினமூலம் இது என்று அறியா
மல் தங்கள் மந்திரங்களைச் சொல்லி மயிர் பீலியினாலே தடவ பீலிகள் பிர
ம்பினோடு தீந்து பொரிதலறி விழுந்தன அவ்வெப்பின் அதிசயத்தைநோக்கி
தங்கள் கையிலே தூங்குகின்ற குண்டிகையிலுள்ள ஜலத்தை அருகனை
காவாய் அருகனைகாவாய் என்று சொல்லி பாண்டியன்மேலே தெளிக்கஅந்
தஜலம் மிகசுவாலிக்கின்ற அக்கினியிலே சொரிந்த நெய்போலாக பாண்டி
யன் மிகவருந்தி சமணர்களை நோக்கிய நீங்கள் ஒருவரும் இங்கே இராமல்
போய்விடுங்கள் என்றுசொல்லி அறிவு சோர்ந்தான் பாண்டிமாதேவியார் ப
யமெய்தி குலச்சிறைநாயனாரை நோக்கி இராத்திரியிலே திருஞானசம்பந்
தமூர்த்தி சுவாமிகளுக்குச் சமணர்கள்செய்த தீங்கு இப்படி முடிந்ததோ
என்றுசொல்ல குலச்சிறையார வணங்கிநின்று அசுரர்களுடைய முப்புரத்
தையும் எரித்த பரமசிவனுடைய அடியாராகிய திருஞானசம்பந்தமூர்த்தி
சுவாமிகளுக்கு இவர்கள் செய்த தீங்கே அரசனிடத்திலே பலித்தது இவர்
கள் தீர்க்கப்புகில் அது முதிர்வதையாகும் என்றார மாதேவியாரும் மந்திரி
யாரும் அரசனை வணங்கிநின்றி திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளுக்கு
ச்சமணர்கள் செய்த தீங்கினாலே உமக்கு இந்த வெப்புநோய் அடுத்தது ஆ
தலால் இந்தப்பாதகர்கள் செய்யும் மாயம் இந்நோயை வளர்ப்பதேயன்றி
த்தீர்ப்பதில்லை. அத்தத் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருவுளமிரங்
கிக் கூடாட்சிப்பாராயின் இந்த வெப்புநோய் மாத்திரமா எவர்களாலும் நீங்
குதகரிய பிறவிநோயும் நீங்கிவிடும இது சத்தியம் எனறார்கள் பாண்டி
யன் தன்செவியிலே மெய்யறிவினையுடைய அவ்விருவரும் சொலலி "திரு
ஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்" எனகின்ற திருமந்திரம் புருத்தவுடனே
அயர்வுநீங்க, இத்தச் சமணாகள்செய்யும் செய்கைகள் எல்லாம இந்நோய்
க்கு ஏதுவாயே இருக்கின்றன என்று நினைந்து, அவ்விருவரையும் நோக்கி
அந்தத் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளை இங்கே அழையுங்கள் என்
னுடைய நோயைநீக்கி வென்றவர் எவரோ அவர்பக்கஞ் சேர்வேன் என்ரு
ன்மங்கையர்க்கரசியார் அதுகேட்டு பெருங்களிப்புடையவராகி சிவிகையி
லேறி பெண்கள்சூழ குலச்சிறைநாயனர் குதிரையிலேறிக்கொண்டு முன்
னேசெல்லசென்று திருமடத்தை அடைந்தார், குலச்சிறைநாயனர் குதி
ரையினின்றும் இறங்கி பரிசனங்களோநோக்கி அடியேங்கள்வந்து நிற்றலைச்
சுவாமிக்கு விண்ணப்பஞ்செய்யவேண்டும் என்றார், அவர்கள் உள்ளேபுகு

த்து திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளை வணங்கி நின்று சுவாமீ பாண்டிமாதேவியாரும் குலச்சிறைநாயனாரும் வந்து நிற்கின்றனர் என்று விண்ணப்பஞ்செய்ய பிள்ளையார் அவர்களை இங்கே அழையுங்கள் என்றுஅருளிச்செய்தார், பரிசனங்கள் மீண்டுபோய் அழைக்க அவர்கள் இருவரும்உள்ளே பிரவேசித்து திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளைக் கண்களிக்கக்கண்டுசமணர்கள் செய்த கொடுந்தொழிலை நினைந்து வெதுப்பியிரத்து சோகபாஷ்பம் சொரிய ஸ்ரீ பாதங்களின் கீழே விழுந்தார்கள், உரோகுழாசரீரம்நடுங்கி ஒன்றும் அறிக்கிலராகி நிலத்திலே புரண்டு அயர்ந்து திருவடிகளைப்பற்றிக்கொண்டு தவஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ

திருவாலவாய் - பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

காட்டுமொவதுரிபோர்த்துட, னுட்டமூன்றுடையாயுரைசெய்வனன்
வேட்டுவேள்விசெய்யாவமண்கையரை, யேடடிவாதுசெயத்திருவுள்ளமே

செந்தெனுமுரலுந்திருவாலவாய், மைந்தனேயென்றுவல்லவமணசமண
சந்தமார்தமிழ்கேட்டமெய்ஞ்ஞானசம், பந்தன்சேர்ப்பகரும்பழிநீங்குவே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமியுடைய திருவுள்ளத்தை அறிந்து பின்னும் சமணர்களை வாதில் வென்று அழிக்கும் பொருட்டும் சிவாகமத்தையே பரப்பும்பொருட்டும "வேதவேள்வியை" என்னுந் திருப்பதிகத்தைப்பாடியருளினார்.

திருவாலவாய் - நாலடிமேல்வைப்பு - பண் - பழம்பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

வேதவேள்வியைநிந்தனைசெய்தமு, லாதமில்லியமணெடுகேரரை
வாதில்வென்றழிக்கத்திருவுள்ளமே, பாதிமாதுடனாயபரமனே.

ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென், னாலவாயிலுறையுமெம்மாதியே.

கூடலாலவாய்க்கோனெனிடைகொண்டு, வாடன்மேனியமணரைவாட்டிட
மாடக்கழிச்சம்பந்தன்மகிழ்தவிப், பாடவல்லவர்பாக்கியவாளரே.

திருச்சிற்றம்பலம்.

திருவருள்பெற்று திருவுளமகிழ்ந்து விடைகொண்டு கோபுரவாயிலுக்கடந்து முத்துச்சிவிகைமேல் ஏறி முத்துக்குடைநிழற்ற அடியார்கள் சூழ பலவகைப்பட்ட வாத்தியங்கள் தொனிக்க, முத்துச்சின்னங்கள் ஊத, மங்கையர்க்கரசியார் முத்துச்சிவிகைமே லேறிக்கொண்டு பின்னாலவர குலச்சிறையார் முன்னே அடியார் கூட்டத்திற்செல்ல பாண்டியனுடைய மோயிலுக்கு எழுந்தருளினார், குலச்சிறைநாயனர் முன்னே விரைந்து பாண்டியனிடத்திற் சென்று திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகளுடைய வரவைச் சொல்ல பாண்டியன்தன்னுடைய துயரம சிறிதுநீங்கி தன முடியின் பக்கத்திலே இரத்தினாசனத்தை இடுவித்து குலச்சிறைநாயனாரைப் பின்னும் எதிர்கொள்ளும்பொருட்டு ஏகினனன் குலச்சிறைநாயனர் மனமகிழ்ந்து எதிர்கொளச்சென்றார். சமணர்கள் அரசனுடைய தன்மையைக்கண்டு மகாராஜனே! நம்முடைய சமயத்தை ஸ்தாபிக்கும்மெறி நீதுவோ என்று மின்னும்

உம்முடைய தருமநெறியை நீரே காத்தருளவேண்டும், ஆயில் அவரை இங்கே அழைத்தீர், உம்முடைய நோயை அவரும் நாங்களும் ஒருங்கு தீர்க்கும்படி சொல்லி, முழுமையும் அவராலேயே தீர்க்கப்பட்டதாயினும் எங்களாலும் தீர்க்கப்பட்டதாகச் சொல்லும் என்றார்கள். அதுகேட்ட அரசன் தான் பூர்வஜன்மத்திலே செய்த தவப்பயனே அடையும்சமயம சமீபித்தலால், சமணர்களை நோக்கி நீங்கள் இருபக்ஷத்தீரும் உங்கள் உங்கள் தெய்வச்சார்பினாலே தீருங்கள், நான் வஞ்சகம் பேசேன் என்றான். அதைக்கேட்ட சமணர்கள் என்செய்வோம் என்று கவலைகொண்டிருந்தார்கள். அப்பொழுது தமிழ்நாடுசெய்த தவக்கொழுந்துபோலும் திருஞானசமபந்தமூர்த்தி சுவாமிகள் அரண்மனைவாயிலுள் அணைந்து, முத்துச்சிவிகையினின்றும் இறங்கி, குலச்சிறையார் முன்செல்ல பாண்டிமாதேவியாரும் சிவிகையினின்றும் இறங்கி உள்ளே எழுந்தருளினார். பாண்டியன் பிள்ளையாரைக் கண்டவுடனே அஞ்சலிசெய்து அவர் பாதபத்மத்தில் வீழ, அவரை நோக்கி தனமுடியின் பக்கத்தில் இருக்கின்ற இரத்தினசனத்தைக்காட்டி அவர் அதில் விரும்பியிருந்தருளினார். சமணர்கள் எல்லாரும் அச்சங்கொண்டார்கள். பாண்டியன் பிள்ளையாருடைய திருமனியைத் தரிசிக்கப்பெற்றதனால் வெப்பு நோய் சிறிது நீங்கி சுவாமி தேவரீருடைய ஊர்யாது? என்ன, பிள்ளையார் "தடமலர்ங்கருதுமூர்" என்று திருப்பதிகத்தினாலே தாங்கொடுத்தருளினார்.

திருப்பிரமபுரம் திருச்சத்தகமாற்று - பண் - காந்தாரம்.

திருத்சிற்றம்பலம்.

பிரமனூர்வேணுபுரம்புகலிவெங்குரும்பிரமபுரத்தலமிப்
புரமன்னுபூந்தராய்பொன்னகரிவிரபுரம்புறவஞ்சண்பை
யமன்மன்னுதண்காழிகொச்சையழுவத்தினிட்டங்காதியாய
பரமனூர்பன்னிரண்டாய்நின்றதிருக்கழுமலமாம்பாவுபதி.

காவிமலர்புரையுங்கண்ணுர்கழுமலத்தின்பெயரைகாரும்
பாவியசிர்ப்பன்னிரண்டுன்னூலாப்பத்திமையாற்பலவன்மாலை
நாவினலம்புகழ்ஞான்மறையான்ஞாளசம்பந்தனசொன்ன
மேவியிசைமொழிவார்விண்ணவரிலெண்ணுதற்கல்விருப்புளாரே.

திருச்சிற்றம்பலம்.

பிள்ளையார் இரத்தினசனத்தில் இருந்தபொழுது சமீபத்தில இருந்தசமணர்கள் பொறுமைகொண்டு தங்கள் உள்ளத்திலுள்ள அச்சத்தை மறைத்து கோபாக்கினி சொலிக்கக் கண்கள் சிவந்து பாலசூரியனைச் சூழ்ந்தி

ன்ற கருமுகிற்குழாங்கள்போலப் பிள்ளையாரைச் சூழ்ந்து அவரை வாதினல்வெல்லக்கருதி, தங்கள் சமயநூல்களே எடுத்துச்சொல்லிக் குரைத்தார்கள். பிள்ளையார் அதைக்கேட்டு உங்கள் சமயநூற்றுணிவை உள்ளபடி கிரமமாகப் பேசுங்கள் என்று சொல்லியருள சமணர்கள் தள்ளி எழுந்து அனேகர்களாய்ச் சூழ்ந்து பதறிக் கதறினர்கள். பாண்டிமாதேவியார் அதைகண்டு பொருராகி மனம் நடுங்கி பாண்டியனே நோக்கி சுவாமிகள் சிறுபாலர் இச்சமணர்களோ எண்ணில்லாதவர்கள் என் பிராணநாயகரே! எங்களுவர் மிகள் உம்முடைய நோயை நீக்குக, பின்பு இச்சமணர்கள் பேசவல்லர்ல்பேசுக என்றார், பாண்டியன் தேவியாரை நோக்கி நீ வருந்தேல் என்று சொல்லி சமணர்களேநோக்கிநீங்களும் இந்தச்சிவபதருமம்உங்களுங்கள் தெய்வத்தன்மையை என்னுடைய வெப்புநோயை நீக்குதலினுலே தெரியியுங்கள் என்றான் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் பாண்டிமாதேவியாரை நோக்கி மாதேவியே என்னே நீ பாலன் என்று அஞ்சவேண்டாம திருவாலவாயரன் நிறை நான் சமணர்களுக்கு எளியேன் அல்லேன் என்னுங்கருத்தினையுடைய திருப்பதிகத்தைப் பாடியருளினர்.

திருவாலவாய் - பண் - தொல்லி

திருச்சிற்றம்பலம்.

மானினேர்விழிமாதராய்வழுதிக்குமாபெருந்தேவிகள்
ஞானல்வாயொருபாலனீங்கிவனென்றுநீபரிவெய்திடே
லானடாமலையாதியாயவிடங்களிற்பலவல்லல்சே
ரீனமாகட்கெளியேனலேன்திருவாலவாயரனிற்கவே.

எக்கராமமண்கையருக்கெளியேனலேன்றிருவாலவாயச்
செங்கனெனனுளிருக்கவேதுளங்கும்முழுத்தென்னன்முன்னினவ
தக்கசீர்ப்புகலிக்குமன்றமிழ்ஞானசம்பந்தன்வா
யொக்கவேயுரைசெய்தபத்துமுரைப்பவரக்கிடரில்லையே.

திருச்சிற்றம்பலம்.

அதுகேட்ட அரசன் பிள்ளையாரையும குரைத்தல் ஒழியாத சமணர்களேயும் நோக்கி நீங்கள் என்னுடைய நோயை இதனித்தீர்ந்துள்.' தீத்தவர்எவரோ அவரோ வாதில்வென்றவர்என்றுசொல்ல சமணர்கள மகாராஜரே. உம்முடைய இடப்பாகத்து நோயை நாங்கள் எங்கள் சமயமந்திரதந்திரலேதீர்ப்போம் அவர் வலப்பாகத்து நோயைத் தீர்க்கக்கடவர என்றுசொல்லி அரசனுடைய இடப்பாகத்தைப் பீலியினுலேதடவினர்கள் அதினுலேவெ

ப்புகோய்வளர பாண்டியன் அதைப் பெறுக்கலாற்றுதவனகி பிள்ளையாரை ப்பார்த்தான். பிள்ளையார் அரசனுடைய நோக்கத்தைக்கண்டு "மந்திரமாவதுநீறு" என்னுந் திருநீற்றுப்பதிகத்தைப் பாடியருளினர்.

திருவாலவாய் - திருநீற்றுப்பதிகம் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மந்திரமாவதுநீறுவானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறுதுதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறுசமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமைபங்கன்றிருவாலவாயான்றிருநீறே.

ஆற்றலடல்விடையேறுமாலவாயான்றிருநீற்றைப்
போற்றிப்புகலிநிலாவியபூசுரன்ஞானசம்பந்தன்
நேற்றமித்தென்னுடனுற்றநோய்பிணியாயினதீரச்
சாற்றியபாடல்கள்பத்துமவல்லவர்தன்மை.

திருச்சிற்றம்பலம்.

அவனுடைய வலப்பாகத்தை விழுங்கி கொண்டு திருக்கையினுலே தடவியருள அவ்வலப்பாகம் வெப்நோல் நீங்கிப் பொய்கைபோலக் குளிர்ந்தது. இடப்பாகத்து வெப்புநோய் முன்னையினும் திருமடங்காய் மிகுத்து பொங்க, சமணர்கள் மனம் நடுங்குற்று மயிற்பீலி நீய, அவ்வெப்புத்தீ தம்மேலும்தாவ சரீரமுங்குன்றி பொருக்கு அழிந்து அருகுவிட்டுத் தூரத்திலேகின்றார்கள். பாண்டியன் சமணர்களேநோக்கி சமயர்களே! நீங்கள்தோற்றுப்போனீர்களை எனனவிடு அரஸ்பாய்விடுங்கள் என்று சொல்லி பின் பிள்ளையாரை நோக்கி அடியேனை ஒரு பொருளெனக்கொண்டுஉய்வித்த காருண்ணிய சாகரமாகிய சுவாமி இடப்பாகத்து வெப்பையும் தேவரீரே நீக்கியருளும் எனறு, மனசினுல் வணங்கி பிரார்த்தித்தான். பிள்ளையார் இடப்பாகத்தையும் முன்போல விழுங்கிகொண்டு கடவிய நுள பாண்டியன்வெப்பு நோய் முழுதும்நீங்கி உய்ந்தான் அதுகணை பாண்டிமாதேவியாரும் குலச்சிறையாரும் பிள்ளையாருடைய திருவடிகளே விழுந்து நமஸ்கரித்து எங்கள் அரசர பிறவாமென்மை பெற்றனர் என்று களிப்படைந்தார்கள். பாண்டிய ர்சயனத்தைவிட்டெழுந்து இரண்டுகைகளேயும் சிரசின்மேலேறக்குவித்து, 'பொய்யராகியசமணர்கள் முன்அடியேனுடைய நோயை நீக்கியருளியதிரு ஞானசமபந்த சுவாமியுடைய ஸ்ரீபாதங்களேஅடைக்து உய்ந்தேன் என்றார் சமணர்கள் பிள்ளையாருடைய சொல்வெற்றியை அவர் தமிழ்ப்பதிகத்தினுலேபாண்டியனுடைய வெப்புநோயை நீங்கினமையால் அரிக்தபின்தருக்கம்

பேசி அவரை வெல்லுதல் கூடாது அக்கினியினாலும் ஜலத்தினாலும் வெல்லல்வேண்டும் என்று தங்களுள்ளே சித்தாந்தசைவர்கள் பிள்ளையார் சமணர்களை நோக்கி இனி உங்கள் சமயநூற்றுணிவைப் பேசுங்கள் என்று அநுளிச்செய்ய சமணர்கள் தருக்கம்பேசி வெல்லவேண்டுவதில்லை நாங்கள் இருபக்ஷத் தேமும் எங்கள் எங்கள் சமயஉண்மையை உள்ளபடி பிரதிபக்ஷமாகக்காட்டி வெல்லுவோம் என்று ஓட்டினார்கள். அப்பொழுது பாண்டியராஜர் என்னுடைய வெப்புநோயை நீங்கள் ஒழிக்கிலீர்கள் உங்களுக்குஎன்னவாது என்று சொல்ல சமணர்கள் அரசர் உங்களுக்கு என்னவாது என்றதையே வினவாகக்கொண்டு நாங்கள் இருபக்ஷத்தினும் எங்கள் எங்கள் சமயக்கருத்தை எட்டிலே நீட்டி, அக்கினியில் நிடதவோம் வெவ்வேறுமை யேவெற்றி என்குர்கள், அபோது அரசர் என்றும் சொல்லும்முன் பிள்ளையார் நீங்கள் சொல்லியது என்ன அரசன் பாகத்தில் அப்படியே செய்வோம் வாருகள் என்று சொல்லியருளினர். பிள்ளைபாதையை யுஞ்ஞையினை பாண்டியர் சபைமுன்னே அக்கினி அமைக்கும்படி வேலேங்காரை ஏவ, அவர்களும் அக்கினி அமைத்தார்கள், பிள்ளையார் சமீபத்திலிலழுந்தருளி வந்து பரமசிவனே மெய்ப்பொருள் என்று தாம் பாடியருளிய தமிழ்வேதத் திருமுறையை ஸ்தோத்சரஞ்செய்து எங்கள் பரமசிவனே பரம் பொருள் என்று சொல்லி வணங்கி, தருக்கத்தினால் எடுத்து சிரசின்மேற் கொண்டு திருக்காப்பிட்ட கயிற்றை அவிழ்த்து அத்திருமுறையைத்தமது திருக்கரத்தினால் மதிக்க திருவள்ளாறறின்மேலதாகிய "பிராகமார்த்த பூண் முலையாள்" என்னும் திருப்பதிகம் வந்து பிறந்தது.

திருவள்ளாறு - பண் - பழந்தக்காகம்.

திருச்சிற்றம்பலம்.

பிராகமார்த்தபூண் முலையாள்தன்னோடும் பின்னைகலம
பாகமார்த்தடைங்கண்வெள்ளத்தண்ணீர்ப்பரமேட்டி
யாகமார்த்ததோலுடையன்கரவணவாலுடையின்மேல்
நாகமார்த்தரம்பெருமான்மேய நாரையூர்தானே.

தண்புனலும்வெண்பிறையுந்தாங்கியதாழ்சடையன்
கண்ணிலலார்மல்குகாழிஞானசம்பந்தனல்ல
பண்புகள்வாதோத்துபாடல்பத்துமிவைவல்லா
ருண்புகிங்கிவானவரோடுலகிலுறைவாமே.

திருச்சிற்றம்பலம்.

பிள்ளையார் அத்திருப்பதிகத்தையே விரும்பி, திருவள்ளாறரை வணங்கி, அது எழுதப்பட்ட திருவேட்டைக்கழற்றி, திருக்கரத்தில் கொண்டு

பரமசிவனே மெய்ப்பொருள் என்பதைச் சமஸ்தருக்கும் உணர்த்தும்பொருட்டு, இவை அக்கினியில் இடப்படுமாயில் பழுதில்லை இது சத்தியம், என்னும் கருத்தை யுடைய "தளிரிளவளரொளி" என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினர்.

திருநள்ளாறு திருவிராகம் - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

தளிரிளவளரொளிதனதெழிறருதிகழ்மலைமகள்
நுளரிளவளரொளிவனமுலையிணையவைகுலவலி
னெளரிளவளரொளிமருவுகள்ளாறர்க்காமமே
மிளிரிளவளரெரியிரவிலைவபாழதிலேமெய்ம்மையே.

சிறுமை யிலைவதன்வனமுலையிணைபொடுசெறிதரு
நற்புறமுழுகுமலகர்ஞானசம்பந்தன்
கொற்றவனெதிரிடையெரியிலிடுவிலைவகூறிய
சொற்றெறியொ நுபதமுமிபவர்கையிலர்தாயினே.

திருச்சிற்றம்பலம்.

பாஷண்டர்கள் சமஸ்தருங்காண சமணர்களுடைய சித்தைவேவ அவ்வக்கினியிலே அவ்வேட்டை இட்டருளினர். இட்ட எட்டில் எழுதப்பட்ட திருப்பதிகம் ஞானம் அஞானம் என்கின்ற இருதனங்களையுடைய உமாதேவி பாதராகிய பரமசிவனே பொருள் என உடைமைபற் மிகச் சுவாலிக்கின்ற அக்கினியிலே பச்சையாய் விளங்கிற்று, சமணர்களும் தங்கள் தூற்பொருளே எழுதிய எட்டை இது உய்யுமோ என்கின்ற கவலையோடுடுங்கினின்று அக்கினியில் இட்டார்கள். அது தகிக்கப்பட்டொழிந்தது, அதுகண்டு பய்த்தினிலே மனஞ்சோர்ந்து நின்றார்கள். திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தாம் அக்கினியில் இட்ட எட்டைக்குறித்த காழிகையிலே எனமின்னைண்டியாவரும் விபக்கும்படி எடுத்தார் அது முன்னேயிலும் பசுமையும் புதுமையும் உடைத்தாய் விளங்கிற்று பிள்ளையார் அவ்வேட்டைச் சபைமுன்னேகாட்டி, திருமுறையிலே முன்போலக் கோத்தருளினர் அரசர் அத்தியந்த ஆச்சரியம் அடைந்து சமணர்களே நோக்கி நீங்கள் இட்டவேட்டைக்காட்டுங்கள்என்றார். சமணர்கள் தாங்கள் இட்ட எட்டை எடுக்கும்படிசென்றணையும்போது அக்கினிமிகச்சுவாலித்தமைகண்டு திரும்பிவிட்டார்கள். அதுகண்ட அரசர் ஜலத்தினிலே அக்கினியைத் தணிப்பித்தார், சமணர்கள் அங்கே சரம்பலுங் கரியுமன்றி மற்றொன்றுங் காணாராகி செய்வதொன்றறியாது திகைப்பினிலே திரண்ட சாம்பரைக் கையினு

லே பிசைக்து தூற்றிப் பார்த்தார்கள் அதுகண்ட அரசர் புன்முறுவல் செய்து ஏட்டை இன்றும் அரித்துப்பாருங்கள் பொய்நெறியையே மெய்க்நெரியாகக் கொண்டு உலகின்றவர்களே போங்கள் முன் நான் வெப்பாகிய நீயினின்றும் உய்ய நீங்கள் அப்பொழுது தோற்றீர்கள் ஆதலால் அதுவே வழியாக இப்பொழுது அங்கினியில் இடப்பட்ட ஏடு உய்ந்ததில்லே என்றால் நீங்கள் தோற்றிலீர்போலும் எனறார். சமணர்கள் பாண்டியர் முகை உட்கொண்டு சொல்லிய சொறபொருளே அரியாராகி நித்துணர்ந்து முன்னே இரண்டுதரம் வாதுசெய்தோம் இன்னும் ஒருதரம் செய்யவேண்டும் மூன்றுதரத்தில் ஒருதரமாயினும் வெற்றி பெறுவோம் என்றார்கள், பாண்டியர் இது எனைவார்த்தை என்றும்றுத்தபின்னு ம்பிள்ளேயார் சமணர்களே நோக்கி இனி என்னவாது செய்வோம் என்று வினவியருள சமணர்கள் நாங்கள் இருபட்சத்தேமும் எங்கள் எங்கள் சமய உண்மையை எழுதிய ஏட்டை ஓடுகின்ற வையையாற்றிலே இடுவோம் எ நிர்த்து செல்லும் ஏடே மெய்ப்பொருளே உடையது என்றார்கள், பிள்ளே யாரும் அப்படியே செய்வோம் என்று அருளிச்செய்தார்.

அப்பொழுது குலச்சிறைநாயனர் சமீபத்தில் வந்து இனிச்செய்யப்படும் இவ்வாதிலே தோற்றவர்கள் செய்வதுயாது என்றார் அதைக்கேட்ட சமணர்கள் அவர்மேற கோபங்கொண்டு பொறுமை காரணமாக தங்கள் வாய்சோர்ந்து நாங்கள் வாதிலே தோற்றுமாகில் எங்களே இவ்வரசர் கழுவில் ஏற்றுக என்றார்கள். அதைக்கேட்ட அரசர் வையையாற்றிலேயிடு இடும்பொருட்டுப் புறப்படுங்கள் என்று சொல்ல முன்னே பிள்ளேயார் நிரத்தினஞசனத்தின்மை நிறங்கிப்பாய் முந்துபரிவிலகைமற்கொண்டு சென்றார் அவர் பின்னே பாண்டியர் குங்கமம்மற்கொண்டுசென்றார் சமணர்கள் மயகமேறகொண்டு சென்றார்கள் எழுத்திரத்தைநோக்கித் நிரை எறிந்து அதிவேகத்துடன் பாய்கின்ற வையையாநீரின் கலகை அடைத்தவுடனே பாண்டியர் இருபகூத்தாரும் தங்கள் தங்கள் சமய உண்மையை எழுதிய ஏட்டை இடக்கடவர் என்றார் அரியாகிய உள்ளீடில்லாத நெற்பதர் போல அறிவாகிய உள்ளீடு இல்லாத மக்கட்பதராகிய சமணர்கள் "அத்தி நாத்தி" என்று எழுதிய ஏட்டை அது அதிவேகத்துடன் பாய்தலேக்கண்டும், அவாவின்மேலீட்டினுல் இடவும் அது விரைந்துகொண்டு கடலேநோக்கி ஒழிந்தது. சமணர்கள் ஆறுகொண்டோடும் ஏட்டைத்தொடர்ந்து எதிரே அணைப்பவர்போலக் கரைமேல் ஓடிப்போனர்கள். அவ்வேடு நூறுவிற்கிடைக்கு அப்பாற்சென்றமையால் அதைக்காணுதற்கும் கூடாதவர்களாகி வேறுரு செயலுமின்றி தங்களுக்கு நாசகாலம் வந்தது என்று அஞ்சி கடுநடுங்கி அரசருக்கு எதிரேவந்து தங்கள் நெஞ்சில் அச்சம் வெளிப்பட ஒளிப்பார்போல பிள்ளேயாரை நோக்கி நீரும் உம்முடைய ஏட்டை இட்டால் அ

நியலாம் என்னூர்கள் பாண்டியராஜர் அவர்களே விட்டு பிள்ளையாருடையதி ருக்குறிப்பைநோக்க தம்மை அடைந்த அன்பர்களுடைய சனனமரணங்க ளுக்கு ஏதுவாய் நிகழ்கின்ற மலமாயாகர்மங்களே நீக்கியருளும் தேசிகோ த்தமராகிய திருஞானசம்பந்தப்பிள்ளையார் பாண்டியராஜர் தம்முடைய அ ருகமந்திருக்கரத்தினாலே நீண்டி விபூதி பூசப்பெற்று மலபரிபாக சுர்மசம த்துவம உற்றவிடத்தால், அவருக்கும் அவர்போலப் பக்குவப்படும்சமஸ்த ஆன்மாக்களுக்கும் சைவசமயத்துண்மைப்பொருளே விளக்கும் உபதேச மொழியாகிய "வாழ்கவந்தணர்" என்னும் திருப்பாசுரத்தைப்பாடி ஏட்டி லெழுதி, அத்திருவேட்டைத் தமது திருக்கரத்தினாலே வையைநதியில் இ ட்டருளினர்.

திருப்பாசுரம் - பண் - தெளசிகம்.

திருச்சிற்றம்பலம்.

வாழ்கவந்தணர்வானவரானினம்
வீழ்கதண்புனல்வெல்கமெய்ந்நெ
ஆழ்கதீயதெல்லாமரனமமே
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே.

அரியகாட்சியரய்த்தமதங்கைசெ
ரியமோதகத்தெறுவர்கண்டமுங்
கரியகாடுமுறைவாழ்க்கையாயினும்
பெரியராதிவரவாபெறற்பெயர்.

வெல்கசம்பல்வினாவெனப்பூசியே
தெல்லைபாரொடுதாழினீர்மையே
சிந்தியாவெழுவார்வினைதீர்ப்பரா
லெல்லையாரவரெவ்வகையார்கொலா.

ஆலவர்க்கருளும்வண்ணமாநிமாண்புங்
கூடபொன்புனிலளவில்கிளக்கவேண்டா
கோட்பாலனவுவினையுங்குறுகாமையெந்தை
தாட்பாலவணங்கித்தலைநின்றவைகட்கதக்கார்.

ஏதுக்களாலுமெடுத்தமொழியாதுமிக்குச்
சோதிக்கவேண்டாசுடர்விட்டுளனெங்களசோதி
மாதுக்கநீங்கலுருவீர்மனம்பற்றிவாழ்மின்
சாதுக்கள்மிக்கிறையேவத்துசார்மின்களே.

ஆடும்மெனவும்மருங்கூற்றமுதைத்துவேதம்
பாடும்மெனவும்புகழல்லதுபாவநீங்கக்
கேடும்பிறப்புந்மறுக்கும்மெனக்கேட்டீராகி
ஞடுக்கிறத்தாக்கருளல்லதுகாடலாமே.

கடிசேர்ந்தபொதுமலரானகைக்கொண்டுநல்ல
படிசோர்ந்தபால்கொண்டங்காடிடத்தாதைபண்டு
முடிசேர்ந்தகாலியறவெட்டிமுக்கண்மூர்த்தி
யடிசேர்ந்தவண்ணம்மறிவார்சொலக்கேட்டுமன்றே

வேதம்முதல்வன்முதலாகவிளக்கிவையம்
மேதப்படாமேயுலகத்தவர்தாத்தல்செய்யப்
பூதமுதல்வன்முதலேமுதலாகப்பொலிந்த
சூதன்ஞெலிமாலியென்றேயுலிக்கோவைசொல்லே.

பாராழிவடடம்பகையானலிர்தாடவாடிப்
பேராழியானதிடர்கண்டருள்செய்தல்பேணி
நீராழிவிடேறிநெஞ்சிடங்கொண்ட வர்க்குப்
போராழியீர்தப்புகழும்புகழுற்றதன்றே.

மாலாயவனும்மறைவல்லநான்முகனும்
பாலாயதேவர்பகரில்லமுதூட்டல்பேணிக்
காலாயமுகநீர்சுடைந்தார்க்கரிதாயெழுந்த
வாலாலமுண்டங்கமரர்க்கருள்செய்ததாமே.

அற்றன்றியந்தண்மதுரைத்தொகையாக்கினனும்
தெற்றென்றுதெய்வத்தெளிபார்கைக்கோலதெண்ணீர்ப்
பறறின்றிப்பாங்கெதிரிவும்பண்புகாக்கிற்
பெற்றென்றுயர்த்தபெருமான்பெருமானுமன்றே.

நிலவார்கள்சேர்புகலிஞானசமபந்தனல்ல
வெல்லார்களும்பரவுமீசனேயத்துபாடல்
பல்லார்களும்மதிகப்பாசுரஞசொன்னவேத்தும்
வல்லார்கள்வானுலகாளவும்வல்லரன்றே.

திருச்சிறறம்பலம்.

அந்தத் திருவேடு நதியிலே எதிர்த்து ஜலத்தைக்கிழித்துகொண்டு, சர்வான்மாக்களுக்கும் இதுவே மெய்ப்பொருள் என்று காட்டிகொண்டு சென்றது பரமசிவனே எல்லாப்பொருளும் என்று எழுதியதிருவேட்டிலே "வேத்தனும்வெல்க" என்று பாடியருளியபடியால் பாண்டியராஜருடைய

கூன்நிமிர்ந்தது ஏடு எதிர்க்து செல்லும்பொழுது தேவர்கள் எல்லாரும் ஸ்தோத்திரஞ்செய்து புஷ்பமாரி பெய்தார்கள் பாண்டியர் அற்புதங்கொண்டு நின்றார். சமணர்கள் எல்லாரும் அஞ்சிப் பதைபதைத்து தலைகுனிந்துநின்றார்கள் குலச்சிறைநாயனார் அத்திருவேட்டைத்தொடர்ந்து எடுத்தற்குவிரும்பி காற்றைப்போல அதிவேகத்தோடு செல்கின்ற குதிரைமேல் ஏறிக்கொண்டு பின் சென்றார் பிள்ளையார் அவ்வேடு தங்கும்பொருட்டுத் திருப்பதிகம் பாடியருளினார்.

திருவடகம் - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

வன்னியுமத்தமுமதிபொதிசடையினன், பொன்னியதிருவடிபுதுமலரதுகொடு
மன்னியமறையவர்வழிபடவடியவ, ரின்னிசைப்பாடலதேடகத்தொருவனே.

கோடெந்தனமில்கொண்டிழிவைகைநீ, ரோடுசென்றனைதருமேடகத்தொருவனே
நாடுதென்புகலியுண்ஞானசம்பந்தன், பாடல்பத்திவைவல்லாக்கில்லையாம்பாவமே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு குலச்சிறைநாயனார் சிவாலயத்துக்குப் பக்கத்தில் இருக்கின்ற நீர் ஓடுவிலே போகுந்து, அங்கே தங்கிய ஏட்டை எடுத்துச் சிரமேற்கொண்டு பெருமகிழ்ச்சி பொங்கலையில் ஏறி திருவேடகத்தில் வீற்றிருக்கும் கடவுளை வணங்கித் துதித்து பாண்டியர் முன்னே கொண்டுவந்து சமஸ்தருக்குக்காட்ட அடியார்கள் எல்லாரும் அத்தியந்த ஆனந்தத்துடனே ஹரஹர என்று ஆரவாரித்தார்கள். பாண்டியராஜர்கண்டு குலச்சிறையாரை நோக்கி வாதிலே ஓட்டித்தோற்ற இத்தச்சமணர்கள் முன்னே எங்கள் பரமாசாரியராகிய சுவாமிகளிடத்திலே அநுசிதம செய்தவர்கள் ஆதலால் இவர்களைக் கழுவிலே ஏற்றுக என்றார். குருஞானசரராகிய பிள்ளையார் அதைக்கேட்டு தாம் அவர்கள்மேற் சிறிதும் பகையிலராயினும் அவர்கள் சிவனடியார்கள் வாழும் திருமடத்திலே செய்த தீங்கு அதிபாதகம் ஆதலாலும் அதிபாதகம் செய்தார் யாவராயினும் அவரைக்கொல்லல் வேண்டும் என்பது சைவாகமத்துணிவாதலாலும் பாண்டியருடைய குற்றமற்ற செய்கையை விலக்காதிருந்தார் நிடபத்தியையுடைய குலச்சிறைநாயனார் கழுத்தறிவே நிகாயகாரட்டுவித்து அவைகளில் ஏற்ற அதிபாதகர்களாகிய சமணர்கள் எண்ணாயிரரும் ஏறினார்கள் பிள்ளையார் பாண்டியராஜருக்கு விபூதிகொடுக்க அவர் அவருடைய ஸ்ரீபாதங்களே விழுந்து நமஸ்கரித்து எழுந்துவாங்கி அணிந்து நின்றார் பாண்டியநாட்டுள்ள சமஸ்தரும் விபூதி அணிந்து கொண்டார்கள் அமைச்சர் சைவராயினமையால் சமணசமயம் பாழாக சைவசமயமே தழைத்தோங்கிற்று. திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுடைய திருப்புகழே எ

ங்கும் பரந்தது பிள்ளையார் சொக்கநாதசுவாமியைத் தரிசிக்கவேண்டும்என் றுளமுருகுதுசென்று, முத்துச்சிவிகைமேற் கொண்டுபோனர். பாண்டியரும் மங்கையர்க்கரசியாரும் அவரை ஸ்தோத்திரம் செய்துகொண்டு உடன் சென்றார்கள். அடியார்கள் சமஸ்தரும் பெருமகிழ்ச்சிபொங்க, பிள்ளையாரைத் துதித்துக்கொண்டு கூடிப்போனார்கள் பிள்ளையார் கோயிலை அணைந்து, முத்துச்சிவிகையினின்றும் இறங்கி பாண்டியராஜரும் மாதேவியாரும் மந்திரியாரும் தம்மை ஸ்தோத்திரஞ் செய்துகொண்டு உடன்புகப் புகுந்து, வலஞ்செய்து சந்நிதானத்தை அடைந்து, சொக்கநாத சுவாமியை வணங்கித் திருப்பதிகம்பாடியருளினர்.

திருவாலவாய் திருவிராகம் - பண் ; கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

வீடலாலவாயிலாய்விழுமியார்கணின்கழற்
பாடலாலவாயிலாய்பரவநின்றபண்பினை
காடலாலவாயிலாய்கவலிநீள்கடிம்மதிற்
கூடலாலவாயிலாமிகுலாயதென்னகொள்கையே.

போயநீர்வளங்கொருநம்பொருபுனற்புகை
பாயகேள்விஞானசம்பந்தனல்லபண்பினை
லாயசொல்லின்மாலைகொண்டலாலவாயிலண்ணலைத்
தியதிரவெண்ணுவார்கள்சித்தையாயதேவரே.

திருச்சிற்றம்பலம்.

பாண்டியர் சொக்கநாதசுவாமியை நமஸ்கரித்து நின்று, திருவாலவாயில் வீற்றிருக்கும் சுவாமி சமணர்களுடைய மாயையினுலே மயங்கித் தேவரீரை அறியாதிருந்த சிறியேனைச் சனனமரணத் துன்பங்களை நீக்கி ஆட்கொள்ளும் பொருட்டுத் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளை தந்தருளிய பெருங்கருணையை என்னென்று பேசுவேன் என்று ஸ்தோத்திரம் பண்ணினார் பிள்ளையார் சுவாமியை வணங்கி அருள்பெற்று அங்கு நின்று அரிதில் நீங்கி, திருமடத்திற் சென்று வீற்றிருந்தருளினர். பாண்டியரும் மாதேவியாரும் பிள்ளையாரை வணங்கி அனுமதி பெற்றுக்கொண்டு தங்கள் மாளிகைக்குப்போனார்கள் பிள்ளையார் திருவியமதத்தில் திருநல்கண்டப். பெரும்பாணருக்கு அருளிய நிறத்தையும் துதித்து அவரோடும் அளவளாவி இருந்தார்.

திருவாலவாய் - திரு இயமகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆலநீழலுகந்தஇருக்கையேயான்பாடலுகந்தஇருக்கையே
பாலினோர்மொழியாளொருபங்கனேபாதமோதலர்சேர்புரபங்கனே
கோலநீறணிமேதகுபூதனேகோதிலார்மனமேவியபூதனே
பாலுகஞ்சமுதண்டகளத்தனேயாலவாயுறையண்டர்களத்தனே.

சனஞானிகடம்மொடுவீரகனேயேறுபல்பொருண்முத்தமிழ்விரகனே
யானகாழியுண்ஞானசம்பந்தனேயாலவாயின்னிலேமெயசம்பந்தனே
யானவானவர்வாயிலுளத்தனேயன்பரானவர்வாயிலுளத்தனே
நானுரைத்தனசெந்தமிழ்பத்துமேவல்லவர்க்கிவைநற்றமிழ்பத்துமே.

திருஞ்சிற்றம்பலம்.

பிள்ளையார் பாண்டியரும் மாதேவியாரும் குலச்சிறையாரும் தினந் தோறும்வந்து தம்முடைய திருவடிகளே வணங்கித் துதிக்க தாம் சொக்கநாதசுவாமியை வணங்கித் துதித்துக்கொண்டு இருக்கும்நாளிலே சீர்காழியிலிருந்த சிவபாதவிருதயர் சமணர்களுடன் வாதுசெய்து வெல்லுதற்கும் பாண்டிநாடெங்கும் விபூதியைப் பரப்புதற்கும் போயருளிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளிடத்தில் நிகழ்ந்தவற்றை அறிவேன் என்று புறப்பட்டு, மதுரையை அடைந்து திருவாலவாயிறசென்று சொக்கநாதசுவாமியை வணங்கிக்கொண்டு பிள்ளையார் வீற்றிருக்கின்ற திருமடத்தை அணைந்தார். பிள்ளையார் தந்தையார் வந்தமையை அறிபார்கள் சொல்லக்கேட்டு திருவுள மகிழ்ந்து எழுந்தருள சிவபாதவிருதயர் தொழுதுகொண்டு முன் சென்றணைய பிள்ளையார் அவரை எதிர்தொழுது தமக்குச் சிவஞானம் அருளிய திருத்தோணியப்பரை நினைந்து சீர்காழிமேலே திருப்பதிகம் பாடியருளினர்.

திருக்கழுமலம் - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

மண்ணினல்லவண்ணம்வாழலாம்வைகலு
மெண்ணினல்லகதிக்கியாதுமோர்குறைவிலம்
கண்ணினல்லஃதிறுக்கழுமலவளநகர்ப்
பெண்ணினல்லாளொடும்பெருந்தகையிருந்ததே.

கருந்தடந்தென்மல்குகழுமலவளநகர்ப்
பெருந்தடங்கொங்கையோடிருந்தவெம்பிரான்றனை
யருந்தமிழ்ஞானசம்பந்தன்சிந்தமிழ்
விரும்புவாரவர்கள்போய்விண்ணுலகாள்வரே.

திருச்சிற்றம்பலம்.

சிலநாள் ஆயினபின் பிள்ளையார் அடியார்களோடு பிறதலங்களையும் வணங்கும் பொருட்டுப் பூதப்பட்டு பாண்டியரும் மாதேவியாரும் குலச்சிறையாரும் பிறவாற்முலையால் உடன்செல்லசென்று திருப்பரங்குன்றம். ஆப்பனூர், திருப்புத்தூர், திருப்பூவணம், கானப்பேர், திருச்சுழியல், திருக்குற்றாலம், குறும்பலா திருநெல்வேலி என்னுந் தலங்களை வணங்கிப் பதிகம்பாடியருளினர்.

திருப்பரங்குன்றம் - பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நீடலர்சோதிவெண்பிறையோடுநிறைகொன்றைச்
சூடலனத்திச்சுடரெரியேந்திச்சுடுகானி
லாடலனஞ்சொலணியிழையாளோர்பாகமா
பாடலன்மேயகன்னகர்பொதும்பரங்குன்றே.

தடமலிபொய்கைச்சண்பைமன்ஞானசம்பந்தன்
படமலிநாகமரைக்கசைத்தான்றன்பரங்குன்றைத்
தொடைமலிபாடல்பத்துமவல்லார்தூயராகி
விடமலிகண்டனருள்பெறுதன்மைமிக்கோரே.

திருச்சிற்றம்பலம்.

திருஆப்பனூர் - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

முற்றுஞ்சடைமுடிமேன்முதிரரவிளம்பிறையு
ஞற்றைப்படவரவமதுகொண்டரைக்கணிந்தான்
செற்றமிகுசீராணைத்திருவாப்பனூர்மேய
பற்றுமனமுடையார்வினைப்பற்றறுப்பாரே.

அந்தண்புனல்வைகையணியாப்பனூர்மேய
சந்தமலர்க்கொன்றைசடைமேலுடையானை
ஞந்தியடிபரவுகலஞானசம்பந்தன்
சந்தமிவைவல்லார்தமைத்தாமுறாவாரே.

திருச்சிற்றம்பலம்.

திருப்புத்தூர் - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

வெங்கள்வீம்மூவெயிலார்பொழிற்சோலைத், திங்களோடுதிளைக்குந்திருப்புத்தூர்
கங்கைதங்குசடையாரவர்போலு, மெங்களுச்சியுறையுமிறையாரே.

நல்லகேள்வி ஞானசம்பந்தன், செல்வர்சேடருறையுந்திருப்புத்தூர்
சொல்லல்பாடல்வல்லார்தமக்கென்று, மல்லல்தீருமவலமடையாவே.

திருச்சிற்றம்பல

திருப்பூவனம் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்

அறையார்புனலும்மாமலருமாடையார்சடைமேற்
குறையார்மதியஞ்சூடிமாதேராகூறுடையாவிடமா
முறையால்படிசேர்தென்னாசைசார்சொற்சடாமவணங்கும்
திறையாரொளிசேர்செம்மையோங்குதென்பூவணமே.

தின்னாரபுரிசைம்மடமோங்குதென்பூவணத்துப்
பெண்ணாணலியெம்மிறையாபெரியவினாமிதால்
கண்ணாடகுகாழிமலகுஞானசம்பந்தனதெனனை
பண்ணாபாடலபத்துமவல்லார்பயில்வதுவானிடையே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கானாட்டோ - பண் - கொலலி.

திருச்சிற்றம்பலம்

பிடியேலாம்பினசெவ்விபொருங்கைமாமலர்தழி
விடியேதமுழுகிவிழியினலவழிபடு
கழியாமபூமபொழிறமானாபிரவணனினை
னடியாலடைசதுமேயபோவதுயிரே.

காடடகத்தாடலுங்காதபகானபலர்
கோடகத்தினவாகுதிகொளுகாழியா
னடசதேகாங்குரிஞானமபாடுமன
பாடகநலவல்லாக்கில்லையாமபாவமே.

திருச்சிற்றம்பலம்.

திருக்குற்முலம் - பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்

வமாரருள்றறியாசார்ல்வளர்வேங்கைக்
கொம்பாசொலக்கோலவண்டியாழசெய்குறுல
மம்பானெய்யோடாடலமர்த்தானலர்கொன்றை
நம்பாண்மேயநன்னகர்மாலுசமாங்காள்.

மார்டவீதிவருபுனற்காழியார்மன்னன்
சோடலீன்றுகொழுபுனேகூம்புகுபுரு
கார்டவல்லகற்றுழிழ்ஞானசம்பந்தன்
பாடல்பத்துமபாடகம்பாவமாறையுமே.

திருசுசிற்றம்பலம்.

திருக்குறும்பலா - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

திருந்தமதிருநுதற்றெண்ணீரசடைகரந்தகவிபாகம்
பொருந்திப்பொருந்தாதவேடத்தாறமதிறைதல்பிரிதசெல்வ
நிருந்தகவிடம்மினவிலங்கமழுசூலியின்வண்டியாழ்செய்
குருந்தமணாறுங்குன்றிடுசூழ்தண்சாரறுஞ்குறும்பலாவே.

கொய்யாபூருசோலைத்துறும்பலர்மேவியகொல்லேற்றண்ண
லம்பாவடிபவுலமபுயானருசம்பக்தன்சொன்ன
வின்பாயபாடலெவைபகதும்வல்லாரிவிநம்பிகேட்பார்
தமபாபதீவிம்மலெபாயபுலவினரடளராவதேற.

திருசுசிற்றம்பலம்.

திருநெல்வேலி - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்

மருந்தவைமந்திரமறுடனன்னெறியவைமற்றுமெல்லா
மருந்துயர்கெடுமவர்நாமமெரிந்தைசெய்நன்னெஞ்சமே
பொருந்துதண்புறவினற்கொன்றைபொன்சொரிதருந்துயைம்பூஞ்
செருந்திசெம்பொன்மலாதிருகெல்வெலியப்பரசெல்வர்தாமே.

பெருந்தண்மாமலர்மிசையடனவனனையவர்பெணுநல்விக்
திருந்துமாமுறையவர்திருகெல்வெலியுறைசெல்வர்தம்மைப்
பொருந்துசீர்த்தடமலருபுகலியுண்ஞானசம்பந்தன்பொன்ன
வருந்தமிழ்மாலைகள்பாடியாடக்கெடுமருவினையே.

திருச்சிற்றம்பலம்.

பின்பு இராமேச்சரத்தை அடைந்து சுவாமிதரிசனஞ்செய்து பதிகம்பாடி அங்கே இருந்தருளினர்.

திருவிராமேச்சரம் - பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

அலைவளர்தண்மதியோடையிலேயடக்கியுமை
முலைவளர்பாகமுயங்கவல்லமுதல்வன்முனி
யிலைவளர்தாழைமுகள்விம்முகானவிராமேச்சரந்
தலைவளர்கொலைகன்மாலையன்றுரிசெர்தாட்கியே.

பகலவன்மீதியங்காமைக்காத்தபதியோன்றன்னை
யிகலழிவித்தவனேத்துகோயிலிராமேச்சரம்
புகலியுண்ஞானசம்பந்தன்சொன்னதமிழ்புந்தியா
லைகலிடமெங்குகின்றேததவல்லார்க்கில்லையல்லலே.

திருச்சிற்றம்பலம்.

அருகிருக்தே ஈழமண்டலத்திலுள்ள திருக்கோணமலை, திருக்கேதீச்சரம்என்னும் ஸ்தலங்களே வணங்கித்திருப்பதிகம்பாடினர்.

திருக்கோணமாமலை - பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

நிரைகழலரவஞ்சிலம்பொலியலம்புகிமலர்நீணிதிருமேனி
வரைகெழுமகளோர்பாகமாப்புணர்ந்தவர் விரைகொடணிலிடையர்
கரைகெழுசந்துங்காகிறபிளவுமளப்பருங்கனமணிவரன்றிக்
குரைகடலோதநிதிலங்கொழிக்குங்கோணமாமலையமர்ந்தாரே.

சூற்றமிலாதார்குரைகடல்சூழ்ந்தகோணமாமலையமர்ந்தாரைக்
கற்றுணர்ஞான்விக்காழியர்பெருமான்கருத்துடைஞானசம்பந்த
னுற்றசெந்தமிழ்மாலையீரைதுமுரைப்பவர்கேடிலவருயர்க்தோர்
சுற்றமாகித்தொல்லினையடையார்தோன்றுவார்வானிடைப்பொலிக்தே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கேதீச்சரம் - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

விருதகுன்றமாமேருவினாரவாவனலெரியம்பாற்
பொருதமூவெயில்செற்றவன்பற்றினின்றுறைபதியெக்காளுங்
கருதினின்றதேதீச்சரங்கைதொழக்கடுவினையடையாவே.

மாடெலாமணமுளைசெனக்கடலினிதெழிகடன்மாதோட்டத்
தாடலேறுடையண்ணல்கேதீச்சரத்தடிகளாயனிகாழி
காடுளார்க்கிறைஞானசம்பந்தன்சொனவின்றெழுபாமாலே
பாடலாயினபாடுமின்பத்தர்கள்பரகதிபெறலாமே.

திருச்சிற்றம்பலம்.

சிலகாள் சென்றபின், இராமேச்சரத்தை நீங்கி திருவாடானை, திருப்புனவாயில் என்னுந் தலங்களை வணங்கித் திருப்பதிகம் பாடியருளினர்.

திரு ஆடானை - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

மாதோர்கூறுகந்தேறமேதறிய, வூதியானுறையாடானைப்
போதினார்புனைந்தேத்துவார்தமை, வாதியாவினைமாயுமே.

வீடினார்மலிவெங்கடத்துநின், றுடிஞனுறையாடானை
நாடி ஞானசம்பந்தன்செந்தமிழ், படநோய்பிணிபாறுமே.

திருச்சிற்றம்பலம்.

திருப்புனவாயில் - பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

களந்தைவேந்தராகிய கூற்றுவநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை விதிப்படி உச்சரிப்பவர், சிவனடியார்களுக்குத்தி ருத்தொண்டு செய்பவர், அவர் திருவருள் வலியினால் மகா ஐசுவரியம் உ டையவராகி கஜரததுரகபதாதி என்னும் சதுரங்கங்கள் நிறைந்த வீரச்செ ருக்கில் மேலாயினர், பல அரசர்களோடு யுத்தமசெய்து அவர்களையும்ஜயி த்து அவர்களுடைய நாடுகள் எல்லாவறையும் கவர்ந்து அரசர் திருவில் முடி ஒன்று தவிர மற்றவைகள் எல்லாவற்றையும் உடையராயினர் உலக த்தை ஆளுதற்குத் தமக்கு முடிசூட்டும பொருட்டு தில்லைவாழ்தண்ட ளை வேண்ட அவர்கள் நாங்கள சோழகுலத்தாருக்கே அன்றி மற்றவர்களு க்கு முடி சூட்டோம் என்று மறுத்து தங்களுள் ஒருநடியை முடியைக் காத்துக் கொள்ளும்படி இருத்தி சேரமண்டலத்துக்குப் போயினர்கள். கூ ற்றுவநாயனர் ஐயுறவினாலே மனந்தளாராது சபாநாயகரைப் பணிந்து அற் றைநாள் இரவிலே அடியேனுக்குத் திருவடியையே முடியாகத் தந்தருள ல் வேண்டும் என்ற பிரார்த்தித்துக்கொண்டு நித்திரை செய்ய சபாநாயகர் அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி தம்முடைய திருவடிகளைக் கொடு த்தருளினர். கூற்றுவநாயனர் அவைகளையே முடியாகச்சூடி பூமிமுழுதை யும் பொதுநீக்கி ஆண்டார். பரமசிவன் வீற்றிருக்கின்ற முக்கிய தலங்க ள் எங்கும்சென்று வணங்கி திருப்பணிகள் செய்து சிவபதம் அடைந்தார்

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஏழாவது,

பொய்யடிமையில்லாத சருக்கம்.

நாற்பத்தேராவது

பொய்யடிமையில்லாத புலவர்புராணம்.

பொயமதியாகுமிலரொடுபரணராகிப் புலவோர்பொறையார்கிலைகள் பொருந்தவேதித், செய்யுளிடைவளராசுமதுராகல்ல சித்திரவித்தாரமென த்தெரிக்குஞ்செம்மை, மெய்யுளை யதொடைகளெல்லாமன்றளாடன்மே வியகோனிருதாளில்விரவச்சாத்தக், கையுடையருளியினாய நாளான்மே லுக் கருதரியவமருலகுங்ணகக்கொண்டாரே.

பாண்டிநாடடிலே சிறந்து விளங்குகின்ற துவாதசாந்தபுரமாகிய ம துராபுரியிலே சொக்கநாத சுவாமியே தந்தில சதாரமாய் இரண்டுசாண் அ ளவினதாகி மெய்ப்புலவர்களுகெல்லாம் முழம் வளர்த்து இருந்தநாத்து இட ங்கொடுக்கின்ற சங்கப்பலகையைப் பெற்றி அகவில் இருந்து தமிழமொ ழியை வளர்த்த கடைச்சங்கப்புலவர்கள கபிலர், பரணர், நக்கீரர், முதலா கநாற்பத்தொன்பதின்மர். அவர்கள் விடிந்திருந்தியாகஉ தாணர்களாம் ஸ்ரீப ஞ்சாக்ஷராஜபரர்களாகி அகத்தியம், தொல்காப்பியம என்னும் இலக்கண நூல்களின்படி ஆசு - மதுரம் - சித்திரம் - வித்தாரம் என்னுமாறுகவிபளி னலும் அத்தியந்த மெய்ப்பத்திபோடு பரமசிவனியே பாடி பொய்யடிமை யில்லாத புலவர்கள எனப்பெயர் பெற்று சிவபதம் அடைந்தார.

உ

சிவமயம்.

நாற்பத்திரண்டாவது.

புகழச்சோழநாயனார் புராணம்.

பொழின்மருவுங்கருவூர்வாழ்புகழார்சோழர் போதகம்போலென்னு யிரும்போக்குமென்றே, யழலவிரவாள்கொடுத்தபிரானதிகைமானின்மே லட



Kalpa Sūtra, Jain manuscript, 15th century

ர்ந்தபெரும்படையெவ வவர்கொண்டெய்ந்த, தழல்விழிகொடலைகாண்பார் கண்டதேர்புன் சடைத்தலையழித்தலைபாறறழ்ந்துவர்ங்கி, யழல்பரவி யதுகிரத்திநோய்வாய்த்தணன்மூழ்கியிறவனடிகைக்கொண்டாரே.

சோழநாட்டிலே உறையூரிலே புகழ்ச்சோழநாயனர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் மற்றை அரசர்கள் பணிகேட்க உலகம் தம்முடைய கெங்கோலின் முறை நிற்க சைவசமயம் தழைக்க, அரசியற்றினர். சிவாலயங்கள் எல்லாவற்றிலும் நித்திய நைமித்திகங்களீல் வழுவின்றி நடத்துவிப்பார். சிவனடியார்களுக்கு வேண்டுவனவற்றைக் குறிப்பறிந்துகொடுப்பார். இப்படி யிருக்கும் காளிலே கொங்குநாடு தலிய குடதேசங்களின் அரசர்கள் தரும் நிறையை வாங்கும்பொருட்டு தங்கள் குலத்தார்களுக்கு உரிய கருவூர் என்னும் நாஜதானியிலே அரசுசெய்துகொண்டு வந்தனர். அங்குள்ள ஆனிலை என்னும் கோயிலை நினைக்கின்றபோது சிவனை வணங்கி, மாளிகையிலே புகுந்து அத்தானமண்டபத்திலே சிங்காசனத்திலே வீற்றிருந்து குடதேசத்து அரசர்கள் கொணர்ந்த திறைகளைக் கண்டு அவர்களுக்கு அநுஸ்புரிந்து மந்திரிமாரை நோக்கி தம்முடைய ஆஞ்ஞாசக்கரத்தைக் குஅமையாத அரசர்கள் நினைக்கின்ற அரணங்கள் உளவாகில்தெரித்துசொல்லுங்கள் என்றார். இப்படி நிகழும் காளிலே சிவகாமியாண்டார் கொணர்கின்ற புஷ்பங்களீல் சிதறியு தமமுடைய யானையையும் ஆதிதாணர்களீனையும் கொன்ற எறிபத்த நாயனரை அணைந்து என்னையுங் கொன்றருளும் என்று தமது வாளைக்கொடுத்து திருத்தொண்டிலே மிகச்சிறந்து விளங்கினர். மந்திரிமார்கள் புகழ்ச்சோழ நாயனரை வணங்கி நினைகொணராத அரசன் ஒருவன் உளன் என்றுசொல்ல புகழ்ச்சோழர் வியப்பினுலே புன்முறுவல் செய்து அவன யாவன் என்று வினவ மந்திரிமார் அவன் அதிகன் என்பவன் அவன் சமிபத்தில் மலையாணைதனதுள்ள நிருபவலனென்றார்கள். அதுகேட்ட புகழ்ச்சோழர் நீங்கள் படைகொண்டு சென்றுஅவ்வரணத்தைத் திகளாரபபறறுந்து வாருங்கள் எனஞ் ஞாபித்த மந்திரிமார் சேனையோடு சென்று அம்மலையாணைப் பொடிபடுத்து அதிகனுடைய சேனைகளை வதைத்தார்கள். அதிகன் அஞ்சி முடிப்பூட்டை சுரத்தில் ஒளித்துவிடான. புகழ்ச்சோழருடைய படைவீரர்களிறபலர் அதிகனுடைய படைவீரர்களின் தலைகளையும் மறறவர்கள் கிடக்குவைகளோயும் யானை குதிரைகளோயும் கொண்டு மந்திரிமாரோடு கருவூரிலே வந்து சேர்ந்தார்கள் புகழ்ச்சோழ நாயனர் தமக்கு முன்னே படைவீரர்கள் கொண்டுவந்த தலைக்குவைகளுள் ஒருதலையின நடுவிலே ஒரு புன்சடையைக் கண்டார். கண்டபொழுதேநடுங்கி மனங்கலங்கி கைதொழுது பெரும் பயத்தினுடனே யதுசெனறு அத்தலையிற் சடையைத் தெரியப்பார்த்து கண்ணீர்சொரிய அழுது தான்சைவகெறியைப் பரிபாலித்து அரசியறறியபடி மிக அழகிய சலடமுடியையுடையவர் பரமசிவன அநனிச்செய்கையெனத்தெரியக்கண்டவர் அவருடையசடைத்தலையைத்தாங்கிவரக்கண்டும் அந்பாதகனுடையதானபூமியைத் தாங்குதறகு நினைத்தேனென்றுசொல்லி ஒனறுசெயயத் துணிந்து மந்திரிமாரை நோக்கி பூமியைகாத்து அரசளிதறகுப் பரமசிவனுக்கு வழித்தொண்டு செய்யும்பொருட்டு எனதுடைய குமாரனுக்கு முடிசூடுங்கள் என்று வி

தித்து அதனைக்கேட்டு அயரும் மந்திரிகளைத்தேற்றி அக்கினிவளர்ப்பித்து விபூதியை உத்தூளனஞ்செய்து சடைச்சிரத்தைஒருபொற்கலத்தில் ஏந்தி தம்முடைய திருமுடியிலே தாங்கி அவ்வக்கினியை வலஞ்செயது உயிர்த்தலீயாகிய ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை எடுத்து ஒதி அதனுள்ளே புகுந்து பரம சிவனது திருவடிகழலிலே அமர்ந்து இருந்தார்.



ஓ

சிவமயம்.

நாற்பத்துமூன்றுவது

நாசிங்கமுனையரையர்புராணம்.

நாடுபுகழ் முனைப்பாடிநாடுமேய நரசிங்கமுனையர்புவியகத்துமன்றுளாடுமவராதிநாளாடியாகமபொனமுதளிபபாரொளிவெண்ணீறணிந்து தூர்த்த, வெடமுடையவரக்கிரடடிச்செமபொனீந்து வீடுத்தமுகாரலயங்களிலிங்கச்செய்து, தோடலாதா நடையபிரானருளேயாளத் தோன்றினரொனையருளினான்றினரே.

திருமுனைப்பாடி நாட்டிலே நரசிங்கமுனையரைய நாயனார் என்பவர்ஒருவர் இருந்தார். அவர பரமசிவனது திருவடியை அடைதலில தமக்குப் பெருமபேறு எனத்துணிந்தவர அநித்தியமும துக்கமுமாகிய அரசியறகையில் வைதவிநிபபத்தாலனறு சாவானமாக்களும சறசமயமாகிய சைவத்தைக் கைக்கொணடு பூததயிர பாதத்தை அனைதல்வேண்டும் எனனும பெருங்கருணையினால பலசத்துநபுனிகளைகடந்து சைவநெறி வாழும்படி திருவாளை புன்னடமே நின்று அரசாள்வர். சிவாலயங்கள்தோறுமநித்திய நைமித்திகங்களை ஒழுகுமுறைபடி நடதுவிப்பார். திருவாதிரைநக்ஷத்திரத்தோறும விசேஷபூசை செயவித்து தமமிடத்தில் வரும சிவனடியார்களைத் திருவமுது செபவித்து அவர்களுக்குத் தனித்தனியே நூறுபொன் கொடுபபார். ஒரு திருவாதிரைநக்ஷத்திரதனமே அப்படியே அடியார்களுக்குப் பொனகொடுக்கும பொழுதே தூரத்தேவெடமுள்ள ஒருவர் விபூதி அணிந்துகொண்டு வந்தார். அவருடைய வடிவு இருந்தபடியைக் கண்டுபக்கத்தில்உள்ளவர்கள் இகழ்ந்து ஒதுங்க நரசிங்கமுனையரையர அதுகண்டு எதிரே சென்று அவரை அஞ்சலிசெய்து அழைத்துக்கொணடுபோய் அவரமிக உபசரித்து சிலம இல்லாதவர்களாயினும விபூதியை அணிந்தவர்களை உலகத்தார இகழ்ந்து நாகத்தில்மீழாவண்ணம் அவருக்கு இரட்டிப்பொன்கொடுத்து அவரை வலங்கி இன்சொற்சொல்லி விடைகொடுத்தனுப்பினார். இந்தப்பிரகாரம் அநுமையாகிய திருத்தொண்டுகள் பலவற்றைச்செய்து சிவபதப்பிராப்தியானார்.

(மஹாபாரதயுத்தத்தில் துரியோதனன் - இறந்த - உடன்)



1877

சந்-வகை-அகியக்கரையர்

சிவமயம்.

நாற்பத்துநான்காவது

அதிபத்தநாயனார் புராணம்.

அலையாருங்கடனாகைகருள்வாழ்மதிபத்தர்பரதவர்களதிபர்வேலை
வலைவாரிவருமீனிற்றலைமீனீசன்வார்கழற்கேயென்றுவிடுமரபார்பன்னுட்
டலையானதொருமீனைசாராதாருந்தொழிலால்விடுத்துமிடிசாரச்செம்பொ
னிலையாருமணிகயந்தமீனென்றெய்தநீத்தநளாலிறைவனடிநேர்த்துளாரே.

சோழமண்டலத்திலே நாகப்பட்டணத்திலே சமுத்திர தீரத்திலே உள்ள நுளைப்பாடியிலே பரதவர் குலத்திலே அதிபத்தநாயனர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் பரதவர்களுக்குத் தலைவராகி அவர்கள் வலைப்படுத்திக் குவிக்கும் மீன்களைகளைப் பெறாது வாழ்வார் சிவபத்தியில் மிகச் சிறந்தவராதலால் அகப்படும் மீன்களிலே ஒருதலைமீனை இது பரமசிவனுக்கு என்று மிகுந்த அன்பினோடு எப்பொழுதும் விடுவந்தார். ஒருநாளிலே ஒருமீனை வரினும் அதனைப் பரமசிவனுக்கு என்றே விடுவார். இப்படி ஒருமுகம் நாட்களிலே அடுத்தடுத்து அநேகநாட்களிலே ஒவ்வொரு மீனே அகப்பட அதனைக்கடலிலே விட்டுவந்தார் மீன் விலையினாலே மிகுஞ்செல்வம் மறுத்தனையால்தம்முடைய இல்லாகள் உணவினாற் வருந்தவும தாம் வருந்தாது பட்ட மீனைப் பரமசிவனுக்கு என்றேவிட்டு மகிழ்ந்தார். இப்படிநெடுநாள் வர உணவின்மையால் திருமணி தளரவும் தமமுடைய தொழிலிலே நிலை நின்றமையைப் பரமசிவன் அறிந்து அவரது அன்பெனனும் அமுதை உணபாராயினார். இப்படி நிகழும்நாளிலே வேறு ஒருநாள் பரதவர்கள் அவவொரு மீனையும் அவ்வாறேவிட்டு விலைமதிப்பில்லாத மகா திவவியப் பிரகாசங்கொண்ட நவரத்தினங்களாலே உறுப்பமைந்த அறபுத மயமாகிய ஒருபொன்மீனை வலைப்படுத்து கரையிலேறியபோது அம்மீன சூரியன் உதித்தாற்போல உலகமெல்லாம் வியக்கும்படி மிகப் பிரகாசிக்கக் கண்டு அதனை எடுத்து ஒருமீன் படுத்தோம் என்றார்கள, அதிபத்தநாயனர் அமமீனைக் கண்டு இது திரத்தினங்களால் உறுப்பமைந்த பொனமீனுதலால என்னை ஆட்கொண்டருளியபரமசிவனுக்கு ஆகும் என்று கடலிலேவிட்டார அப்பொழுது பரமசிவன் இடபாரூடராய் ஆகாயத்திலே தோன்றியருள அதிபத்தநாயனர் ஆனந்தஅருவிசொரிய மனங்கசிந்துருகி கமல்கரித்து சிரசினமேல் அஞ்சலிசெயதார். சுவாமி தமது உலகத்திலே அடியார்களோடு இருக்கும்படி அவருக்கு அருள்செய்தார.

சிவமயம்.

நாற்பத்தைந்தாவது

கலிக்கம்பநாயனார் புராணம்.

கடவுளருட்கண்ணுர்கள் பயிலுர்தொலலைக் கடத்தைதகர் வணிகர்கலிக்கம் பரன்பர்க், கடமையுறவழுதனிப் பாரடியானீங்கியருளுரு வாயன்புருடனணியவேத்தி, யிடையிலவரடியிணையும் விளக்காநிற்பவிகழ் மனவிடரக

மனிரண்டுகையும், படியில்விழவெழித்தவள் செய்பணியுந்தாமே பரிந்து பிரித்தானருளேபறறினரே.

சோழமண்டலத்திலே பெண்ணாடகத்திலே வைசியாகுலத்திலே கலிக்கம்பநாயனர் என்பவர் ஒருவர்இருந்தார். அவர் அந்தத் திருப்பதியில் உள்ள னங்காமனீமாடம் எனனுங் கோயிலில் வீறறிருக்கும் பரமசிவனுக்குத் திருத்தொண்டு செய்பவர் சிவலிங்கத்தைவழிபடினும் சிவனடியார்களை வழிபடா தொழியில் அவ்வழிபாடு நிஷ்பலமாம் என்று சிவாகமம் செப்புதலால்தினந்தோறும சிவனடியார்களை அத்தியந்த ஆசையோடு திருவமுதுசெய்வித்து அவர்களுக்கு வேண்டுந் திரவியங்கள் எல்லாவற்றையும் கொடுப்பார். இப்படி ஒருரும நாளிலே ஒருநாள் தமதுவீட்டிலே அமுது செய்பவர்த சிவனடியார்கள எல்லாரையும பழைபமுறைப்படி அமுதுசெய்யத் தொடங்குவித்தருளு அவர்களை முன்பு அழைத்து தமது மனைவியார் கருகரீவார்க்க அவர்களுடைய திருவடிகளை விளக்குமபொழுது முன்பு தமக்குப்பணிவிடைக்காரராய் இருந்து பணிவிடையை வெறுத்துசென்ற ஒருவர் சிவலோக தரங்கிவர அவருடைய திருவடிகளையும விளக்கப்புகுந்தார் மனைவியார இவர்எங்களிடத்திலே பணிவிடைக்காரராய் இருந்துபோனவர்பாலுமஎன்று சிந்தித்தலால் கரகரீர்பார்க்கத்தாழ்க்க கலிகமபநாயனர அதிகண்டி இவர் இந்தச்சிவனடியாருடைய முந்தியநிலையைச் சிந்தித்து வெள்ளி நீர்வாராதொழிந்தாள் எனறு தணிந்து வாளைஎடுத்து அமமனையியார் கையிற கரகத்தைவாங்கி அக்கையைத் தறித்துஅக்கரகநீரைஎடுத்ததாமே அவருடைய திருவடிகளை விளக்கி அத்தியந்த ஆசையோடுதாமே வேண்டுவனவெல்லாம செய்து அவவடியாரை அமுதுசெய்வித்தார். அந்நாயனர் பினனும் சிலகாலம் திருத்தொண்டின் வழிநின்று சிவபதத்தை அடைந்தார்.

சிவமயம்.

நாற்பத்தாறாவது

கலியநாயனார்புராணம்

நடமலில்சூழொமதிபூர் நகருள்வாழுஞ்சக்கரப் பாடியர்குலமெய்த்த வமையுள்ளார், படாபுடைபூார் கலியனர்கனியும் கூறைப்பாய்த்துவர்க்கு விளக்கெரிக்கும பரிவான்மன்றே, ருடலிலராய்ச் செக்குழல்வார்க்கதவு கோதுயர்மனைவிலையக் கொள்வாருளருமின்றி, மிடறுதிரமகனிறைய வரியாத வன்வியன்கைகொடு பிடிப்பவருண்மேனினரே

(சருசு – வது, – கலியநாயனார்.)

சுதாவுடன் திருநாயனார்

தொண்டை மண்டலத்திலே திருவொற்றியூரிலே வள்ள சக்கரப்பாடியிலே செக்கார்குலத்திலே கலியரையனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் பெருஞ்செல்வராகி செல்வகிலையாமையும் யாக்கைகிலை யாமையையும் உணர்ந்து சிவபுண்ணியம் செய்தல் வேண்டும் எனத்தெளிந்து அத்தத் திருப்பதியில் உள்ளசிவாலயத்தின் உள்ளும் புறம்பும் அலலும் பகலும்எண்ணிறந்தநிருவிளக்கு எற்றுவாராயினர். பரமசிவன்கெடுங்காலம இத்தெண்டைச் செய்தவரும் அவ்வடியாருடைய பத்திவலிமையைப் பிறர்க்குப் புலப்படுத்தும் பொருட்டு அவரிடத்து உள்ளசெல்வம் எல்லாம் குன்றும்படி அருள்செய்தார். அவர் தாம் வருமை எய்தியும் தமது மாழில் உள்ளோர்தரும் எண்ணெயை வாங்கிக் கூலி விற்றுக்கொணர்ந்து கூலிபெற்று தாம்செய்யும்திருத்தொண்டை வழுவாது செய்தார். சிலநாளாயினபின் அவர்கள்கொடாதொழிய அவர் மனத்தளர்ந்து தைலவினை செய்யும் இடத்திற்சென்று தொழில்செய்து கூலிவாங்கி திருவிளக்கிட்டார். பின்பு அத்தொழில் செய்வோர்கள் பலராய்ப் பெருகினமையால்அத்தொழிலால்வரும்பேறும்கிடையாது முட்ட ஒருநாள் கவலைகொண்டு தம்முடைய மனைவியாரை விற்பதற்கு நகரெங்கும் கூவிவாங்குவார் இன்மைபால் மனத்தளர்ந்து ஆலயத்தை அடைந்து திருவிளக்கு ஏற்றும் சமயத்திலே திருவிளக்குப் பணிமாறில் நான்றறந்துவிடுவேன் என்று துணிவுகொண்டு நிரி இட்ட அகல்களோப்பரப்பி எண்ணெய்க்குப் பிரதியாகத் தமது இரத்தத்தை நிரைக்கும் பொருட்டு ஆயுதத்தினாலே கழுத்தை அரிந்தார். அப்பொழுது திருபாசமுத்திரமாகிய பரமசிவன் கேர்வந்து அவருடைய கையைப்பிடித்து அவருக்கு முன்னே இடபாரூடராய்த் தோனறியருள அவர்தாம் உற்ற ஊறுநீங்கிசிரசின்மேல் அஞ்சலிசெய்துகொண்டு நின்றார் சுவாமி அம்மைதம தமது திருவடியிலே சேர்த்தருளினார்.

உ

சிவமயம்.

நாற்பத்தேழாவது

சத்தி நாயனார் புராணம்

விரிதருகாவிரிநாட்டு வரிஞ்சியூர்வாழ்வேளாளர் சத்தியார்விமலர்ப்பதத், தரியவர்களடிபரவு மொருமையார் நாவோ வாமேயைத் தெழுத்துமுமைக்குரோ, நிருளின்மிடறுடைய பிரானடியார்தம்மை யிகழ்வார்கரத்தண்

டாய்ந்திடுக்கிவாங்கி, யரியமதந்திருத்தொழிலர் வுடையார்மன்னுமாடியசே வடிநீழலடைக்துளாரே.

சேழநாட்டிலே வரிஞ்சி யூரிலே வேளாளர் குலத்திலே பரமசிவனுடைய திருவடிகளே மறத்தல் சிறிதும்இல்லாத பெரும்பத்தர் ஒருவர் இருந்தார். அவர்சிவனடியார்களே இகழ்ந்துபேசும் அநிபாதகிகளுடைய காக்கை கைத்தண்டாயத்தால் இடிக்கித தமது கையும் சத்தியினல் அரிதலாகிய அபபெருமைதந்திருத்தொண்டைநெடுங்காலமனம்பினேடு செய்துகொண்டு இருந்து சத்திகாயனர் என்னும பெயரைப்பெறறு பரமசிவனுடையதிருவடி நீழல் அடைந்தார்.

சிவமயம்.

நாற்பத்தெட்டாவது

ஐயடிகள்காடவர்கோநாயனார் புராணம்.

வையகிகழபல்லவர் தங்குலத்து வந்தமாமணிமா நிலமுழு தமகிழ்ந் தாகாக்கு, மைபடிகள்காடவர் கோனருளாலுல்க ளறிக்தரசுபுரிந்திடு தல மையுமென்றே, பொய்யனேயவுடல் வாழ்வுகழியுமாறு பொருந்தியிடும்புகழ் வெண்பாபுனேயுர்மேவுவு, செய்யதிருவடி முதலாப்பதிகடோறுஞ செப்பினு ரென்னினேகடபிறைசே.

தொண்டை மண்டலத்திலே காஞ்சிபுரத்திலே பல்லவர் குலத்திலே சைவத்திருநெறி வாழும்படி அரசியற்றும ஐயடிகள் காடவர்கோனுயனர்என்பவர ஒருவர் இருந்தார். அவர் எலவுயிர்களும் இம்மை மறுமை இன்பங்களையும் முத்தியையும் அடைதல்வேண்டும் என விருமபி பிறதேசக்களையும் தமக்கு அதீனப்படுத்தி சைவம தழைததோங்க அரசர்களும் பணிசெய்ய அரசியற்றினர். சிலகாலம் சென்றபின் "அரசாட்சி துன்பமயம் எனக்கருதி அதனை வெறுதது அப்பாரத்தை இறக்கித் தம்முடைய புத்திரன்மேல் எற்றி பூமியிலுள்ள சிதம்பரம் முதலாகிய சிவஸ்தலங்கள் தோறும் சென்று சுவாமி தரிசனம்பண்ணி திருப்பணிசெய்து ஒவ்வொரு திருவெண்பாப் பாடினர். இந்தப்பிரகாரம் நெடுங்காலம் நிருத்திதாண்டு செய்துகொண்டிருந்து சிவபதத்தை அடைந்தார்.

சிவ-வது-ஐயடிகள்காடவாகோனயனர்.)



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

எட்டாவது,

கூறைக்கண்டன் சருக்கம்

நாற்பத்தொன்பதாவது

கணம்புல்லநாயனார்புராணம்.

இலகுவட வெள்ளாறுமதரெண்பாலவாழுமிருக்குவேளிரதிபதிழில் லார்சென்னிக, நல்நிலவாரடி பரவுங் கணம்புல்லர்திலலைக்கருது புலீச்சரத் தாற்குக்காதற்றிரு நிலைகரத்தாமிட மிடியா லொருகாட்புல்லா னீடுவிளக்கி டவதுபுரிதாதகத், தலாயினெரிகொளவு மளவினகன்முவாதகவாழ் வருளுந்தன்மையாரே.

வடவெள்ளாற்றிற்குத் தென்கரையில உள்ள இருக்கு வேளிரில்லசி வபதியிற் சிறந்தவரும் பெருஞசெல்வரு மாகிய ஒருவா இருந்தார் அவர் செல்வம் பெற்றதினுல் அடையும்பயன் இதுவே என்று சிவாலயத்தினுள் ளே திருவிளக்கேற்றி ஸ்தோத்திரம் பண்ணுவாராயினர் நெடுங்காலஞ்செ ன்றபின் வறுமை எய்திதம்பாலுள்ள அலகது சாபகாயகதை தரிசன ஞ்செய்துகொண்டு தம்முடைய வீட்டில் உள்ளபொருள்களை விற்று அங் குள்ள திருப்புலீச்சரம் என்னும் ஆலயத்தில் திருவிளக்கேற்றிவந்தார் இப் படி ஒழுகும் காளிலை வீட்டுப்பொருள்களும் ஒழிந்துவிட கணம் புல்லுக் களை அரிதுகொண்டுவந்து விற்று நெய்வாங்கித் திருவிளக்கெரித்தார். அத னல் அவருகுக் கணம்புல்ல நாயனர் எனனும் பெயர் உண்டாயிற்று. ஒ ருநாள் தாம்அரிந்த கொண்டுவந்த புல்லு விலைப்படா தொழியவும் தம்மு டைய பணிதவறுது அப்புல்லையே மாட்டிவிளக்கெரித்தார். பூணூல விளக் கெரிக்கும் யாழம் அளவும் எரித்தற்கு அப்புல்லும் போதாமையால்அடுத் தவிளக்கிலே தம்முடைய திருமுடியை மடித்து எரித்தார். அப்பொழுது பரமசிவன் பெருங்கருணை செய்தருள கணம்புல்லநாயனர் சிவலோகத் தை அடைந்தார்.

சிவமயம்.

ஐம்பதாவது

காரிநாயனர்புராணம்.

ர்வருமுரவோர்காரியரார் திகழ்தொண்டர்வண்டமிழ்தூ
ரிருந்தவோதி, விருப்பொடுதம்பெயராற்பாவிளபபி மும்மைவேந்தரையு
முறைமுறையேமேவியங்க, ணுளாத்தவுரைகயமாக்கியவர்பாலெய்ந்தவொ
ண்பொருளாலயங்களோங்கச்செய்து, தனைக்குளருந்தவர்க்கேவறகமுன்
போற்றுந் தன்மையாலருள்சேர்ந்தகண்மையாரே.

திருக்கடவூரிலே தமிழ்மொழியிலே மகா பாண்டித்தியம் உள்ள கா
ரிநாயனர் என்பவர் ஒருவர் இருந்தார், அவர் தம்பெயரால் தமிழ்க்கோ
வைபாடி தமிழ்நாட்டு மூவேந்தரிடத்திலும சென்று அவர்கள் மகிழும்படி
உரைத்த உரைகளை நயமாக்கி அவர்களிடத்திற் பெற்ற திரவியங்களைக்கொ
ண்டு சிவாலயங்கள் பலவற்றைக் கட்டுவித்தும், சிவனடியார்களுக்கு வே
ண்டும் திரவியங்களைக் கொடுத்து திருக்கைலாயமலையை மறவாத கருத்தி
னராகி உலகம் எங்கும் தம்முடைய சிவதீர்த்தியை நிறுத்தி பரமசிவனது
திருவருளைப் பெற்று மனம்போல உடம்பும் திருக்கைலாசமலையை அடை
யப்பெற்றார்.

சிவமயம்.

ஐம்பத்தோராவது

நின்றசிர்நெடுமாறநாயனர் புராணம்.

கன்னன்மலிகெல்வேலிக்கவினர்மாறர் கவுரியர்கோனமணருறுகலக்க
மெல்லாம், பொன்னெயில்சூழ்சிரபுரக்கோனணயமாற்பிப்புதிதமிருநீறணி
த்துபோற்றிசெய்து, மன்னுபுகழ்மங்கையருக்கரசியாரா மலர்மாதுமணி
மார்பமகிழ்த்துமாற்றா, வெங்நீடுதல்கண்டரசுபுரிந்துகாழி வேந்தருள்சே
ர்ந்தபெருவிறலினரே.

பாண்டிநாட்டிலே மதுராபுரியிலே கூன் பாண்டியர் என்பவர் ஒருவ
ர்இருந்தார். அவர் சமணர்களுடைய தூர்போதனையினாலே பொய்ம்மார்க்
கமாகிய ஆருகதமதத்திலே பிரவேசித்தும், சோழராஜாவுடைய புத்திரியா
ரும் சைவசிகாமணியுமாகிய மங்கையர்க் கரசியாரை மனைவியாராகவும் கு
லச்சிறைநாயனரை மந்திரியாராகவும் பெற்றிருந்தமையால் சமயகுரவ
ராகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருக்கரத்தினாலே தீண்டிவிபூ
திசாத்தப்பட்டு அவர் அருளிய மெய்யுபதேசத்தைப்பெற்று கூன்நிமிர்ந்து
நெடுமாறநாயனர் எனப்பெயர் பெற்றார் தம்மோடு பொரவந்த வடபுலத்
தஅசர்களோடு திருநெல்வேலிப் போர்க்களத்திலே யுத்தம் செய்துவெ
ன்று சைவசமயம் அபிவிர்த்தியாகும்படி நெடுங்காலம் அரசியற்றிக்கொண்
டிருந்து சிவபதம் அடைந்தார்.

சக-வது-காரிநாயனர்.

நிம-வது-நெடுமாறநாயனார்.

-வது- முனையதுவாக நாயகை



திருவாதவூரடிகள்

உ

சிவமயம்.

ஐம்பத்திரண்டாவது

வாயிலார் நாயனார் புராணம்.

ஞாயிலார்மதிற்றெண்டைநாட்டுமேன்மை நண்ணுமயிலாபுரியின் வேளாண்டொன்மை, வாயிலார்மல்லிவில்லானடியேபோற்றி மரவாழைதலை நின்றமகமேசெம்பொற், கோயிலாவுயர்ஞாநம்விளக்காநீராக் குலவியவாசந்தமன்பேயமுதாக்கொண்டு, தாயிலாவிருசரணநிகழவேத்தித் தனமையாரருள்சேர்ந்தகன்மையாரே.

தொண்டைநாட்டிலே மயிலாப்பூரிலே வேளாளாகுலத்திலே வாயிலார்நாயனர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் பரமசிவனே ஒருபொழுதும் மறவாத மனமாகிய ஆலயத்துள்இருத்தி ஞானமாகிய திருவிளக்கை ஏற்றி ஆனந்தமாகிய திருமஞ்சனம்ஆட்டி அனபாகிய அமுதத்தை நைவேதனம் பண்ணுதலாகியஞானபூசையைநெடுங்காலம் செயதுகொண்டிருந்து சிவபதத்தை அடைந்தார்.

உ

சிவமயம்.

ஐம்பத்துமூன்றாவது

மூனையடுவார் நாயனார் புராணம்.

பொன்னிவளத்தருநாட்டுப்புகழ்நீர்ப் பொருவிறிருமலிவேளாண்டொனமைமிக்கர், முன்னியவர்மூனையடுவழிகலார்போரின் முரணழிவாதமக்காமொழிந்தகூலி, மன்னுநிதிகொண்டுசயங்கொடுத்துவந்த வளாபொருளாலிறைவனடிவழுவாவனபர்க், கனனமவர்நசையின்மிகமிசையாலகுமன்பர்தின்பமவையாவுமகன்றுளாரே.

சோழநாட்டிலே திருநீடூரிலே வேளாளர்குலத்திலே சிவனடியார்களிடத்தே மிகுந்த பத்திஉள்ள ஒருவெளியர் இருந்தார். அவர் சத்துருக்களுடைய போராமூனையிலே தோற்றவர்கள தம்மிடத்தில் வந்து கூலிபேசினால் அவர்களுக்காகப் போய்ப் போர்செய்து வென்று பொருள்சம்பாதித்து சிவனடியார்களுக்குச் சொன்னபடியே நிரம்பக்கொடுத்து அவாகளைத் திருவமுதுசெய்வித்துக்கொண்டு இருந்தார். அதனால் அவருக்குமூனையடுவார்காயனர் என்னும் திருநாமம் உண்டாயிற்று அவர் நெடுங்காலம் இவவருமையாகிய திருத்தொண்டைச் செய்துகொண்டிருந்து சிவபதம் பெற்றார்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஒன்பதாவது,

கடல்சூழ்ந்த சருக்கம்.

ஐம்பத்து நான்காவது
கழற்சிங்கநாயனார்புராணம்.

காடவர்தங்குலமுவக்தகழலாசிங்கர் காதன்மிகுதேவியுடன்காவலரூ, ராடவலபெருமானிணம்பணிவாங்கோ ரகன்றமலர்தினைமோந்தவரிவை மூக்கைக், கோடையெருத்தினையாரியக்கோட்டித் திறலரசர்மலரெடுத்தசெங்கையன்மேற், சூடகமுன்கைதடிந்துஞாலங்காத்த தூய்மையரருள் சேர்ந்தவாய்மையரே.

காடவர்குலத்திலே பரமசிவனுடைய திருவடிகளையன்றிமற்றெ ன்றையும் அறியாத கழற்சிங்கநாயனர் என்பவர் ஒருவர் திருந்தார். அவ ர்பரமசிவனது திருவருள் வலிமையினால் வடபுலத்தரசர்களைப் பொரில வென்று அவர்கள் நாடுகளைக் கவர்ந்து எங்கும் சைவசமயம் தழைத்தோ ங்கும்படி அரசாண்டார். இப்படி ஒழுகும்காலத்திலே மாதேவியாகியவஸ்த லங்கள் தோறும்சென்று சுவாமிதரிசனம்பண்ணித் திருத்தொண்டு செய்வ ராகி திருவாரூரை அடைந்து கோயிலிற்பிரவேசித்து சுவாமியை வண க்கினர். அப்பொழுது அவருடைய மாதேவியாகியவஸ்துளசிறப்புடன்எல்லாவற்றையும்தனதுமத்தனியேயபார்த்துக்கொண்டுவந்துதிரு மாளிகைக்கும் மண்டபத்தின்பக்கத்திலே விழுந்துகிடக்கஒரு புதுப்பூவைஎடு த்துமோந்தாள். உடனே செருத்தினைநாயனர் இதனைப்புஷ்பமண்டபத்து ள்எடுத்துமோந்தான் என்று நினைத்து விலாவுக்கு ஓர்வந்து அவளைக் கூந்த லிலேபிடித்து இழுத்து வீழ்த்தி அவருடைய முக்கைப் பிடித்து, கத்தியி னலே அரிந்தார். அவள் சோகத்தாலம்பினாள். அப்பொழுது கழற்சிங்கநா யனரும் சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு அவனுக்குச் சமீபத்தில்வந்துஅ வனைப்பார்த்து மிகக்கோபித்து சிறிதும் அஞ்சாமல் இந்தக்கொடுஞ்செய் கையைச் செய்தவர் யாவர் சீன்றுவினவ பெருத்தினைநாயனர் இவள் சு வாமிக்குச் சாத்தற்பாலதாகிய புஷ்பத்தை எடுத்து மோந்தமையால்நானே இப்படிச் செய்தேன் என்றார். அப்பொழுது கழற்சிங்கநாயனர் அவனை நோக்கி புஷ்பத்தை எடுத்தகையை யன்றோ முன்தணிக்கவேண்டும் என் றுசொல்லி கட்டிய உடைவாளை உருவித் தம்முடைய மாதேவினதுபுஷ்ப மெடுத்த கையைத் துணித்தார். அதுகண்டு தேவர்கள் புஷ்பமாரிபொழிந் தார்கள் இவ்வரிய திருத்தொண்டைச்செய்த கழற்சிங்கநாயனர் நெடுங் காலம் சைவநெறிதழைத்தோங்க அரியற்றி பரமசிவனுடைய திருவடிநீ ழல் அடைந்தார்.

நூறு-வது-கழற்சிங்க நாயனார்.

சிவமயம்.

ஐம்பத்தைந்தாவது

இடங்கழி நாயனார் புராணம்.

கோனாட்டுக்கொடும்பாளூரிருக்கும்வேளிர் குலத்தலைவரிடங்கழியார்கொங்கிற்செம்பொ, னாநேற்ரர்மன்னின்முடம்பொன்மேய்ந்த வாதித்தன்மரபோர்நெற்கலர்ந்தீதாரன்பர், போகாப்பணிருளின்கட்காவலாளர் புரவலர்முன்தொணரவவர்புகலக்கேட்டு, மானேற்ரடியாரேகொள்கவென்று வழங்கியரசாண்டருளின்மன்னினார்.

கோனாட்டிலே கொடும்பாளூரிலே வேளிர்குலத்திலேகனகசபையின் முகட்டைக் கொங்கிற்செம்பொன்னுவேய்ந்த ஆதித்தன்குடியிலே இடங்கழிநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சைவநெறியும் வைதிக நெறியும் தழைக்க சிவாலயங்கள் எங்கும் நித்திய நைமித்தியங்கள் சிவாகமவிதிப்படி நடக்க அரசியற்றுங் காலத்திலே சிவனடியாராகளைத் திருவமுது செய்விக்கும ஓரடியவர் ஒருநாள் திருவமுது செய்வித்தறகுப் பொருள் எங்கும் அகப்படாமையால் மனத்தளர்ந்து மகேசுரபூசைமேல் வைத்த அத்தியந்த ஆசையினால் விழுங்கப்பட்டமையால் செயற்பாலது இதுவன்பது தெரியாமல் அவரிடங்கழிநாயனருடையபண்டாரத்திலே நெற்கூட்டுநிரைகள் நெருங்கிய கோட்டகாரத்தில் அத்தராத்திரியிலே புகுந்து முகந்து எடுத்தார். காவலாளர்கள் அதைகண்டு அவரைப்பிடித்து இடங்கழி நாயனருக்குமுன் கொண்டுவந்தார்கள் இடங்கழி நாயனர் அவரடியாரைப்பார்த்து நீர் என் நம்முடைய நெற்பண்டாரத்தைக் கவர்ந்தீர் என்றுவினவ அவ்வடியவர் நான் சிவனடியார்களை அமுதுசெய்விக்தற்குப் பொருள் இன்மையால் இங்ஙனம் செய்தேன் என்ரர இடங்கழி நாயனர் அதுகேட்டு மிக இரங்கி எனக்கு இவறன்மேர பண்டாரம் என்றிசொல்லி சிவனடியார்கள் எல்லாரும்நெற பண்டாரத்தை மாத்திரம் அன்றி மற்றை நிதிப்பண்டாரங்களையும் எடுத்துக்கொள்க என்று எங்கும் பறை அறைவித்தார், பின்னும்நெடுங்காலம் திருநீற்றின் நெறி தழைநகரும்படி தண்ணளியோடு அரசியற்றிக் கொண்டிருந்த சிவபதத்தை அடைந்தார்.

சிவமயம்.

ஐம்பத்தாரூவது

செருத்துணை நாயனர் புராணம்.

இரைத்தணையார்புனற் பொன்னிமருதன்னட்டெழிலாருந்தஞ்சை நகருழவர்த்தஞ், செருத்துணையார் திருவாரூர்சேர்ந்துவாழ்வார் செல்வ மிகும்பல்லவர்கோன்றெவிவீழ்நத, மருத்துணையார்மலரெடுத்து மோப்பக்

ண்டுவளமலிபூக்கத்தி யாலவண்மூக்கிர்ந்த, கருத்துணையார் வீறற்றிருத் தொண்டினையே செய்துகருதலருமமருலகங்கைக்கொண்டாரே

சோழமண்டலத்திலே மருதகாடடிலே தஞ்சாவூரிலே வேளாளர்கு லத்திலே சைவசிரோமணியாகிய செருத்துணைநாயனர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர்திருவாரூரை அடைந்து காலந்தோறும் வன் மீகநாதரை வணங்கி திருத்தொண்டுகள். செய்துகொண்டு இருந்தார், இருக்கும்நாளிலே அங்கே சுவாமிதரிசனம் செய்யவந்த கழற்சிங்கநாயனருடைய மாதேவி பூமாலைகூட்டும் மண்டபத்தின் பக்கத்திலே விழுந்துகிடந்த ஒருபூவை எடுத்துமோந்ததைக்கண்டு அம்மண்டபத்திற்பூவை எடுத்துமோந்தாள்என்று கினைந்து கத்தியினலே அவளுடைய மூக்கை அரிந்தார். பினனும்நெடுங்காலம் திருத்தொண்டின் வழிநின்று சிவபதத்தை அடைந்தார்.

சிவமயம்.

ஐம்பத்தேழாவது

புகழ்த்துணைநாயனர்புராணம்.

புண்ணியர்கள்புகழ்முகார் திருப்புத்தூர்வாழ புகழ்த்துணையாரகத்த டிமைப்புதிதாரினனுண், மண்ணிகழ்மழைபொழியா வற்காலத்தால் வருந் துடலகடுவிங்கிட வுமணிநீரேந்தி, யண்ணன்முடி பொழிகலச முடிமேல்வீழவய ர்ந்தொருகாட புலம்பவானருளாலேகத, கனைஎலருமொரு காகப்படியால் வாழ்ந்துலகமலி சிரம நலகண்ணினர்தாம்.

செருவிலிபுத்தூரிலே ஆதசைவா குலத்திலே புகழ்த்துணைநாயனர் எனபவர் ஒருவர் இருந்தார். அயாசிவாகமப்படி பரமசிவனை அருச்சனைசெய்துவருங காலத்திலே பஞ்சம உண்டாயினமையால் பசிமிகப் பெற்றும்அருச்சனையை விடுவேன அல்லேன எனறு அலுத்மாகலும அருச்சிப்பார். ஒருநாள் திருமஞ்சனம ஆடுமபொழுது மிகுந்த பசிநோயினல் கைசோர்ந்தகலசம திருமுடிமேல்விழ தாம் திருவடியிலே விழுந்துஅயர்ந்து திருவருளினுலே நித்திரை அடைந்தார். அப்பொழுது பரமசிவன அவருக்குச்சொப்பனத்திலே தோனறி பஞ்சமநீங்கும் வரைக்கும உனக்குத் தினந்தோறும் இங்கோ ஒவ்வொரு காசுவைப்போம் என்று அருளிசெய்தார், புகழத்துணைநாயனர் விழித்து ஏழுந்து பீடத்தின் கீழே ஒருகாசு இருக்கக்கண்டுஅதனைக கைகொண்டு வாழ்ந்தார். அதனாற்போல எந்நாளிலும்அப்படியே ஒவ்வொரு காசுபெற்று பஞ்சநீங்கிய பின்னும் நெடுங்காலம் மெய்யடிமைத் தொழில்செய்து பரமசிவன்து திருவடிநீழலே அடைந்தார்.



இலமயம்.

ஐம்பத்தேட்டாவது

கோட்புலிநாயனார்புராணம்.

சூலவடிவுகழ்காட்டியத் தானகுடிவேளாளர் கோடபுலியார்குலித்தியர்
த்தசெங்கெற்கூடு, நிலவணிவார்க்கமைத்தாணை நிறுத்தியொனனர் கோம
லவார்திருவாணியாளேதெற்,சிலமிடியாலழித்தபடியரிந்துவளார்சே
ர்ந்தபெருங்கினைஞருடல்சிதறவீசி, யிலகுமொருகுழவியையுமிமிந்துதாத
னெண்ணரியகருணைநிழலெய்தினரே.

சோழநாட்டிலே காட்டியத்தான் குடியிலே வேளாளர் குலத்திலேயி
வபத்தியிற் சிறந்த கோட்புலி நாயனர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் அ
ரசனிடத்தில் சேனைபதி யுத்தியோகஞ்செய்து அதனாலே தமக்குக் கிடை
க்கும் வேதனத்தைக் கொண்டு சிவாலயங்களுக்குத் திருவமுதினபொருட்
டு செல்லுவாங்கிக் கட்டுதலாகிய திருப்பணியை நெடுங்காலம செயதுவந்
தார். இப்படி ஒழுகுங்காளிலே அரசனது ஏவலினால் போர்முனையிற் செல்
லவேண்டி சுவாமிக்குதிருவமுதின் பொருட்டுத் தாம் திரும்பிவரும் வரை
க்கும் வேண்டும் நெல்லைக்கட்டி தமமுடைய சுற்றத்தாரகள் எல்லாருக்கு
ம் தனித்தனியே அதில் எடுத்துச் செலவழியாதிருக்கும்படி ஆணையிட்டு
போருக்குப் போயினர். சிலகாலிலே பஞ்சம் வந்ததமையால் அந்தச்சுற்ற
த்தாரகள் நாங்கள் உணவின்றி இறப்பதினும் சுவாமிக்குத் திருவமுதின்
பொருட்டுக் கட்டப்பட்ட இந்நெல்லைக் கொண்டாயினும் பிழைத்து பின்
கொடுப்போம்என்று நெல்லைக் கொண்டாயினுப்பிழைதது பின்கொடுப்போ
ம் என்று நெல்லைக்கூடுகுலித்து எடுத்துச் செலவழித்தார்கள். கோட்புலி
நாயனர் அரசனுடைய பகைஞராப் போர்முனையிலே வென்று அவனிட
த்திலே நிதிக்குவைபெற்று தமமுடைய ஊரை அடைந்ததம்முடையசுற்ற
த்தார்கள் அதிபாதகம் செய்தமையை உணர்ந்து ஒன்றுசெய்யத் துணிந்து
தம்முடைய வீடடிலேபுகுந்து அவர்கள் எல்லாரையும் அழைப்புதது தம்
பேரோர் கடைக்காக்க சிவத்திரவியத்தை கிடத்துச் செலவழித்த அதிபாத
கிகளாகிய தந்தைதாய் உடன்பிறந்தார் மனைவி முதலிய சுற்றத்தார்சமஸ்
தரையும் பணிவிடைக்காரரையும்வாளினாலேதுணித்தார். அப்பொழுது தம
பேரோர் அங்கே பிழைத்த ஒருஆண்பிள்ளையைப்பார்த்து இப்பிள்ளை அவ்
வன்னத்தை உண்டதன்று இது நீக்குடிக்கு ஒருபிள்ளை இதனைக்கொல்லா
தருள்செய்யும் எனறுவேண்ட கோட்புலிநாயனர் இது இக்கெல் உண்டவ
ருடைய முலைப்பாலை உண்டது என்று அதை எடுத்து எறிந்துவாளினாலே
துணித்தார். உடனே பரமசிவன் கோட்புலிநாயனருக்குத தோன்றி அன்ப
னேஉன் கைவாளினாலே தங்கள் பாவத்தினின்றும் நீங்கிய உன் சுற்றத்தா
ர்கள் சிவலோகத்தை அடைய நீ இத்தப்படியே கம்முடன வருவாய் எனறுக
ருணைசெய்து எழுந்தருளினார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பத்தாவது,

பததராய்ப்பணிவார்சருகசம்.

ஐம்பத்தொன்பதாவது.

பத்தராய்ப்பணிவார்புராணம்.

தொண்டாடித்தொழல பூசைத்தொழின்மகிழ் தலழகார்துளங்கியவ
ர்ச்சனைபுரிதருருகுதிநியமங்கள், கொண்டபணிதிருவடிக்கே கொடுத்தலீச
ன்குணமருவுமருங்கதையைக் குலவிக்கேட்டு, மண்டிவிழிதிதுளும்பன் மயிர்
சிலும்பலுன்னன்மருவு திருப்பணிகாட்டிவருபவாங்கி, யுண்டிகொளாதொ
ழிதலெனவிவையோரெட்டு முடையவர்பத்தரெனவுரைத்தளாரோ.

சிவனடியாக்களைக் கண்டால் அவர்களுடைய சாதியை விசாரியாமல் அவர்களைச் சிவன்எனப் பாவித்து கமஸ்கரித்து குதருதித்து கொண்டா
டி மனமகிழ்ந்து அத்தியந்த ஆசையுடன் பசுவிக்குபபின் கன்று அணைதல் போல அணைத்து அவர்களுடன் பேசுங்காலத்து அவர்களைப் பேசும்பூச்சி யவசனமும் கைச்சியவசனமும் தம்புமோஎன்னும் கூச்சத்துடனேபேசி அ வர்களுக்கு வேண்டும்கருமமே தங்களுக்குவேண்டும் கருமமாகச்செய்தலு பரமசிவனையிருத்தன்பினுடஎவ்விடத்தும்பாவர்களும்விதிப்படி அருச்சித் தலைக்கண்டாலுமனமகிழ்தலும்பரமசிவனையும்,அவருடைய அடியார்களையும் தெவிட்டாத விருப்பத்தோடு சைவாகமவிதிப்படி ருச்சித்தலும்தங்கள் உட
ம்பினால செய்யும் புண்ணியங்கள் எல்லாவற்றையும்பரமசிவனதிருவடி
க்கே கொடுத்தலும் சிவசரித்திரங்களையே அன்பினோடுகேட்டலும், பரமசி
வனையேவணங்கி மனம் நெக்குநெக்குருகிச் சரீரம் நடுக்குற்று உரோமப்பு
னகிதம் உண்டாக மதகினிற் புறப்படும் ஜலம்போல ஆனந்தபாஷ்பம்பொ
ழியாதிருத்தலும் பப்பரவசமாதலும் நின்றலும் இருந்தாலும கிடந்தாலும் க
டந்தாலும் உண்டாலும் துயின்றலும் விழித்தாலும் பரமசிவனை ஒருபோ
தமமறவாதிருத்தலும் சிவவேடம தரித்துத்திருத்தொண்டர்போலநடித்து
அதனால் சீவனம் செய்யாமையும் ஆகிய இவ்வெட்டினையும் உடையவர்க
ளே பத்தராய்ப்பணிவா என்று செல்லப் படுவார்கள்.

உ

சிவமயம்.

அறுபதாவது

பரமனையேபாடுவார்புராணம்.

அருந்தமிழால்வடகலையாறுலருளாதொன்று லறிவுநெறிமருவுமுரும்
கலிகள்யாவுஞ், திருந்தியவானவர்பணிய மன்றுளாடுந்தேவர்பிரான் கழலிணை





யேசேரவோர்ந்து, விருந்திடுநாவுடையபயன்மேவினோர்தாமேலானேமெனமகிழ்ந்துவிழிநீர்சோரப், பரிந்தருளாற்பரமனையே பாடவல்லபோன் மையரொ. மையாருமேன்மையாமே.

சமஸ்கிருதம் தமிழ் என்னும் பாஷைகளைக்கற்று அவைகளுக்கு உரிய இலக்கணங்களிலே மஹா பாண்டித்தியம் உடையவர்களாகி ஜனனமரணப்பட்டு உழல்கின்ற பசுக்களாகிய பிரம விட்டுணுமுதலிய தேவர்களையும் மனிதர்களையும் மதித்து அவர்களுக்குக் கர்மானுகூலமாகக்கிடைத்தஅநித்தியமும் துக்கமுமாகிய வாழ்வைமெய்யெனக்கருதி அவர்களைப்பாடிவாணாளைவிணாளாகப் போக்காது பரியாயிய பரமசிவனது மகிமையை வேதாகம புராணவழியால் உள்ளபடி அறிந்து அவருடைய திருவடிகளை அடைந்து மனங்கசிந்துருக உரோமம் சிலிர்ப்ப .ஆனந்த அருவிசொரிய அவரை மெய்யன்பொடுபொழி நாம சுவதந்திரராகிய பரமசிவனுக்கே ஆளாயினோனும் பரதந்திரராகிய மற்றுள்ளோர்களில் ஒருவருக்கும் குடியல்லம் அவர்கள் எல்லாருக்கும் மேலானும் என்று இறுமாப்பு அடைந்திருப்பின்றவர்களே பரமசிவ பாடுவார் என்று சொல்லப்படுவர்கள்.

சிவமயம்.

அறுபத்தோராவது

சித்தத்தைச்சிவன்பாலேவைத்தார்புராணம்.

பாரணவம்புலனத்தக் காரணமொன்றம்படராமேகநாடியநானதங் காரணபங்கயன்முதலாமைவர் வாழ்வுங்கழியுநெறி வழிபடவுங்கருதிமேலப் பூரணமெய்ப்பரஞ்சோதிப் பொலிவுதோக்கிப் புனர்ந்தணைந்தசிவாதபவபோகமேவுஞ், சீரணவுமவரன்றெவெம்மை யாஞ்சித்தத்தைச் சிவன்பாலே வைத்துளாரே.

உச்சுவாச நிச்சுவாச இரண்டையும் அடக்கி சுழுமுனைமார்க்கத்திலே பிராணவாயுவை நிறுத்தி விஷயங்களின் வழி மனசைப் போகவொட்டாமல் நிருபபியிலே நிறுத்தி மூலாதாரம் சுவாதிட்டானம்மணிபூரகம் அநாகதம் விசுத்தி ஆக்கினையென்னும் ஆறுதாரங்களின் அந்தர்மாதிருக்காக்கிரமத்தை அமைத்து அவ்வவதாரங்களிலும் அதிதேவதைகளைத் தியானித்து அவ்வாறுதாரங்களிலும் அச்சபாசத்தி சிவான்மிகையாய் நிற்கும் முறைமையைப்பார்த்து மூலதாரந்தொடங்கி விநாயகர்முதலாகிய தேவதைகளைப்பொருந்தி அபிமுகம பண்ணிக்கொண்டு ஆறுதாரத்துக்கும் மேலாகியபிரமரந்திர மளவும் அசபையுடன் சென்றணைந்து அந்தப்பிரமரந்திரத்திலே அதோமுகமாய்ச் சகலதளமாய் இருக்கிற தாமரை முகையைச்சோதிசோதிபதோச்சரணத்தாலே உதிக்கும் சிவார்க்கனாலே அலரச்செய்து அத்தத் தாமரைப்பூவின் கேசரார்க்கிரத்திலே உள்ள சந்திரமண்டலத்தை ஆருஞ்சனஞ் செய்தலினாலே மூலாக்கினியை அக்கினிபீசார்க்கர உச்சாரணத்தினாலே எழுப்பி நாடி சக்கரத்தைப் பேதித்து அவ்வக்கினியினு

லே சந்திரமண்டலத்தை இளகப்பண்ணி அந்த அமிர்தத்தைச் சர்வகாரிய சித்தியாக நிரப்பி, அவ்விடத்தில்உண்டாகிய கலேபதயத்தில் அந்தமயமானஞா னமூர்த்த அவத்தை அடைக்து நின்று, சோமஸ்கந்தமூர்த்தியினிப் பிரகாசாதிகளா கிய பிரத்தியேகப் பிரகாசங்கள் எல்லாம் சூரியோதயத்திலே சகஸ்திரராசி ப் பிரகாசங்கள் அடங்கினும்போலத் தன்னிடத்தடங்கச் சர்வதோமுகமாய் ஸ்வயபரப்பிரகாசகமாய் இருக்கின்ற பூரணப் பிரகாசத்தைப் பாவிக்கின்றவ ர்களே சித்தத்தைச் சிவன்பாலவைத்தார் என்று சொல்லப்படுவார்கள்.

சிவமயம்.

அறுபத்மூன்றாவது

திருவாரூர்ப்பிறந்தார் புராணம்.

பொங்கியமாசவமுடையார்வருணகான்கிற்பொருந்திரைளல்லாதபுகழினுள்ளார் ரங்கையிலாவருந்தவமுன்புரிந்தாரிங்குச்சார்விலாரினறவனருளசாதலாலே கங்கைவாழ்சடைமுடியா ருளேநீங்காக்கணநாதனொவாழுங்கருத்தர்கள்னிச் செங்கண்வரால்வளர்வாவிதிகழுமூரர்ச்சிறந்தளாமையானப்பிறந்தளாரே.

பூர்வஜன்மத்திலே செய்த புணையியத்தினுலே திருவாரூர் என்னும் சிவஸ்தலத்திலே சைவமரபினராய்ப் பிறந்தவர்கள் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் சூத்திரர் என்னும் நான்குவருணத்தாராயினும் சங்கரசாதியாரா யினும் பரமசிவனுடைய திருவருளே அடைதலால் சிவகணநாதர்களாய் இ ருப்பர்கள் திருவாரூர்ப்பிறந்தார் எல்லாரும் சிவகணநாதாகள்என்று சிவ னே நமிநந்தியடிகளுயனுக்கு அருளிச்செய்தனர். அந்நாயனூரும்அவர்கள் எல்லாரும் சிவநணநாத வடிவினராயத் தோன்றக்கண்டனர்.

சிவமயம்.

அறுபத்துமூன்றாவது

முப்பொழுதுந்திருமேனிதீண்டுவார் புராணம்.

செப்பலருந்தவமுடையசெம்மையாளனிறுகாலேமேலார்வவிதிகமழமூழ்கி யெப்பிறிருநீறணிந்தியலியாற்றியோவாமேனையந்தெழுத்துமுளாதமேன்மை தப்பில்சிவாகமவிதியாலின்பாலனபாந்தன்மையாநன்மையாந்தகையாரென்று மூப்பொழுதுந்திருமேனிதீண்டவல்லமுறைமையார்பிறவிதொறுநிறமையாரே.

சிருட்டிகாலத்திலே அகாதிசைவராகிய சதாசிவமூர்த்தியுடைய சத் தியோசாதகம் வாமதேவம அகோரம்தற்புருடம், ஈசானம் என்னும்பஞ்சவ க்த்திரத்தி னின்றும் தோன்றிய கௌதமர், காசிபர், பாரத்துவாசர், கௌத மர், அகத்தியர் என்னும் பஞ்சரிஷிகோத்திரத்திலே ஜனித்த சிவப்பிராமண ர்கள் ஆசிசைவா என்று சொல்லப்படுவார்கள். அவர்களுள் சமயதீக்ஷை

சாவ - வது - மும்பொழுதந்திருமேனி தீண்டுவார்.



சாகாவது : அப்பாலுமுடிச்சாரநாதர்.



விசேஷதீக்ஷை நிர்வாணதீக்ஷை ஆசாரியாபிஷேகங்களைப்பெற்றவர்களே சைவாதிகாரிகள என்றும் உத்தமோத்தமசிவாசாரியர்கள் என்றும் சிவாகமங்கள் செப்பும் பார்த்தபின் நிடைபரார்த்தபூசைகள் செய்தற்கு அவர்களே உரியவர்கள். மற்றையர்கள் உரியர்கள் அல்லர் அதனால் அவர்களே சிவாகமவியுற்பன்னர்களாகி, கிரந்தரித்தியராம் முப்பொழுதினும்சிவலிங்கத்தை அருச்சிப்பார்கள் ஆதலால் அவரேளே முப்பொழுதும் திருமேனிதீண்டுவார்கள் னறு சொல்லப்படுவார்கள்.

ஓ

சிவமயம்.

அறுபத்து நான்காவது

முழுநீறுபூசியமுனிவர் புராணம்.

கற்பமனுகற்பமுபகற்பமென்றிக்கடனீண்டநிருநீறுங்கனற்கணீறும்
பொற்புடையவரனுசானங்கியாதுபொல்லாசபூமியெரிப்புனைதலாகா
வற்புதமாந்திரிபுண்டமறியின்பாநியகிலாங்கங்கீடமிகுமழகார்வட்ட
முற்பொலியவுடலணியுமுறையானமேருமுழுநீறுபூசவல்லமுனிவர்தாமே.

உற்பத்தியினாலே கற்பம் அனுகற்பம் உபகற்பம் எனமூவகைப்படும்விபூதியை ஆயினும் நித்தியாக்கினியில் எடுத்த விபூதியை ஆயினும் சிவன்முன்னும் அக்கினிமுன்னும் குருமுன்னும் அசுத்தநிலத்தை வழிநடக்கும்போது பூசாத உத்தூளனம் திரிபுண்டராம பிஷ்மவடிவம் முக்கோணவட்டம் ஆகர் சிவாகமவிதிபடி அன்பாடு பூசுகின்றவாகள் முழுநீறுபூசியமுனிவர் என்று சொல்லப்படுவார்கள்.

ஓ

சிவமயம்.

அறுபத்தைந்தாவது

அப்பாஅமடிச்சார்ந்தார்புராணம்.

தாராருமூவேந்தர்பயிலுந்தொல்லைத் தமிழ்நாட்டப்புறத்திறைவன் சரணஞ்சார்ந்த, சீராருந்தொண்டர்களுண்டாரேத்துந் திருத்தொண்டத் தொகையருளாதசெப்புங்காலத், தேராருந்தொடையினுரைத்தபாலப்பாலெந்தைபிரானடியடைந்தவியலபிமானரு, மாராதகாதலுடையவர்களன்மூவப் பாலுமடிசார்ந்தவடியார்தாமே.

சேரசோழ பாண்டியர் என்னும் மூவேந்தருக்கும் உரிய தமிழ்நாட்டுக்கு அப்புறத்திலே பரமசிவனுடைய திருவடிகளே அடைந்தவாகளும் சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய திருத்தொண்டத் தொகையிலே சொல்லப்பட்ட திருத்தொண்டர்களுடைய காலத்தகு முன்னும்பின்னும் பரமசிவனுடைய திருவடிகளே அடைந்தவர்களும் அப்பாஅமடிச்சார்ந்தார் என்று சொல்லப்படுவார்கள்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பதினேராவது,

மன்னியசீர்ச் சருக்கம்.

அறுபத்தாறாவது

பூசலார்நாயனார்புராணம்

பொருவருந்தண்டகநாட்டுநின்றவூர்வாழ் பூசுரர்கோப்பூசலார்புந்தி
யாலே, யிருநிலையுந்தழியாலயமுமுதற்கி யெழுந்தருளப்பாண்ணுவதாவெண்
ணுங்காலே, யானதனைக்காடவர்கோற்கருளமன்னை யங்கரமணிந்தவ்வாற
றிக்குதாழு, மிவ்வமலக்கோயிலுறவிருத்தியங்கண் வேண்டுவகொண்டிறை
ஞசியருண்மெவினெ.

தொண்டை மண்டலத்தில் திருநின்றவூரில் பிராமணர்குலத்தில் பூசலார்நாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சிவனடியார்களுக்குவே
ண்டுவனவற்றை எப்படியும் தேடிக்கொடுத்து, பரமசிவனுக்கு ஓர் ஆலயம்
கட்டுதற்கு விரும்பி எங்கும் வருந்திப்பொருள்தேடி அற்பமும் கிடையாமை
யால் முடிக்க நினைத்து யாதுசெய்வேன் என்று ஆலோசித்த மனோபாவனை
யினால் ஆலயம்கட்டத் தொடங்கி மனதினால் அதற்கு வேண்டும் திரவிய
ங்களையும் உபகரணங்களையும் சிற்பாயையும் தேடி சுபதினத்திலே அடிநிலை
பரித்து ஒரேநாளும் நிகழவும் நெருங்கக் கூடக்கோயில் கட்டிமுடித்து
பிரதிட்டை செய்தற்கு உரிய காரியத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தா
ர். அதிற்க காடவராஜர் காஞ்சிநகரிலே ஒரு சிவாலயம் கட்டுவித்தார். அ
திலே பிரதிட்டைசெய்ய பெரிய சுபதினத்துக்கு முதற்றினத்திலே பர
மசிவன்பூசலார் நாயனுடைய நினைப்பை விளக்குமபொருட்டு அவ்வரசரு
க்குச் சொப்பனத்திலே நீதான்றி நின்றவூரில் இருக்கின்ற பூசலன் என்பவ
னுக்கு ஒருகோயில் கட்டியிருக்கின்றான் அதிலாளுக்கு நாம்போவோ
ம் உன்கோயிலில் பிரதிட்டையை நாளை முடித்தின் கொள்வாய் என்றுஅ
ருளிச்செய்து மலைத்தருளினார். காடவராஜர் விழித்து எழுந்து அந்தப் பூ
சலார்நாயனார் வணங்குதற்கு விரும்பினின்றவூரை அடைந்து அங்குவசி
தார் சிலரைநோக்கி பூசலார் நாயனார் கட்டியகோயில் எவ்விடத்தது என்று
வினவஅவர்கள் அவர் இங்கே கோயில்கட்டிற்றிலர் என்றார்கள் உடனேகா
டவராஜர் அவ்வூர்ப் பிராமணர்களை அழைப்பித்து பூசலார்நாயனர்என்பவ

ಚಿತ್ರ - ಅಲ್ಲಿ ಭೀಮನು ಕುಳಿತಿರುವನು.

தன்னை தானே தண்டிக்கும் நிலை

ர்யாவர் எல்லாரு விஞவ அவர்கள் எல்லாரும் அவர் பிராமணர்இவ்வூரார்என் றுசொல்லி அவரை அழைத்தற்குப் புறப்பட்டவர்கள் அப்பொழுதே காட வராஜர் அவரை அழைகஎட்டாமல் தாமே அவரிடத்திற்சென்று அவரை வணங்கிசுவாமீ நீர் ஒருசிவாலயம் கட்டியிருக்கிறீர் என்றும் பிரதிட்டைசெ ய்யும்காள் இன்றோ னாளோ என்றும் பரமசிவனுல் அறிந்து உம்மைத் தரிசித்துவண ங்குதற்கு வந்தேன் அவ்வாலயம் யாது என்று வினவப்பம்செய்ய பூசலா ர்நாயனர் மருண்டுநோக்கி பரமசிவன் என்னைஒருபொருளாகக்கொண்டு அ ருளிச்செய்தது ஞானதிரஷ்டியம் இல்லாமையால் மனோபாவனையினுலேகட்டி ய கோயிலேயென்று நினைத்து நிகழ்ந்ததை எடித்துச்சொன்னர் காடவரா ஜர் அதைக்கேட்டு வியந்து அவரைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து ஸ்தோ த்திரம்செய்து அனுமதிபெறுதுகொண்டு தமது ஊருக்குத் திரும்பிவிட் டார். பூசலார் நாயனர் தாம் மனசினுலே கட்டியகோயிலிலே சுபமுகூர்த்த த்திலே பரமசிவனைப் பிரதிட்டைசெய்து நெடுங்காலம் பூசைசெய்து கொ ண்டிருந்து சிவபதத்தை அடைந்தார்.

சிவமயம்.

அறுபத்தேழாவது

மங்கையர்க்கரசியார்புராணம்.

மங்கையர்க்குத்தனியரசி வளவர்குலக்கொழுந்துமன்னவர்சூழ்தென் னவர்க்குமாதெவியார்மண், சங்கைகெடவமண்சமயஞ்சாடவல்ல சைவசி காமணிஞானத்தமிழ்ஈன்கோதித, பொங்குதிருவருளுடையபொதுவல்லிபொ ருவினெடு மாறனர்புயமேல்வாழுஞ, செங்கலசமுலையாடனருளா லின்பஞ் சேர்ந்தவரைப் புகழ்ந்தடியேன்வாழ்ந்தவாதோ.

மதுரையில் இருந்த நெடுமாறர்யனருக்கு மனைவியார் சோழராசா வுடைய புத்திரியாராகிய மங்கையர்க்கரசியார் அவர் சமயகுரவராகி திரு ஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளால் திருப்பதிகத்திலே சிறப்பித்துப்பாடப் பட்டவர் அதற்ப் பரமாசாரியருடைய திருவருளினுலே நெடுங்காலம் தம் முடைய நாயகருக்குச் சைவவழித்துணையாகி பாண்டி நாடெங்குமசைவத் திருநெறியைப் பரிபாலனம் செய்துகொண்டிருந்து அந்நாயகரோடு சிவபத த்தை அடைந்தார்.

சிவமயம்.

அறுபத்தெட்டாவது

நேசநாயனர்புராணம்.

சாலியர்கோக்காம்பீலித்தலிவர்மேன்மைதாவாதபுகழ்நேசர்தஞ்சொ லென்றும், கோலியவைவ்தெழுத்தோதிச் சித்தையுன்னிக்கொண்ட பொருள

ன்பர்கொளக்கொடுத்துவாழ்வர், சிலமிருக்திருத்தொண்டர்க் [illegible]ருடையுங் கி
ளுந்திருந்திய வெண்கோவணமுஞ்சேரவிக்து, பாலினையவெளிளி நீற்றுண்பா
நமித்திப்பாரலோக முழுதாண்டபான்மையாரே.

காம்பிலிகரத்திலே சாலியர்குலத்துக்குத் தலைவராயிருந்தசாரயனூர்
என்பவர் ஒருவர் இருந்தார் அவர்தம்முடைய மனத்தின்செய்கையைப் பர
மசிவனுடைய திருவடிக்கு ஆக்கிவரக்கின்செய்கையைஸ்ரீபஞ்சாக்ஷரத்தக்
கு ஆக்கி கையின்செய்கையைச் சிவனடியரீர்களுக்கு ஆக்குவராகிவஸ்தி
ரமும் நீறும் கோவணமுங்கொடுத்து தம்மிடத்தில் வரும் சிவனடியார்களுக்
குறிடைபருதுகொடித்து நாடோறும் அவர்களை வணங்கித் தழித்துக்கொ
ண்டிருந்து சிவபதத்தை அடைந்தார்.



வ

மயம்.

அறுபத்தொன்பதாவது

கோச்செங்கட்சோழநாயனார்புராணம்.

மிவண்ணவலிறைக்கொளிரூற் பதர்செய்தவியன்சிலம்பியது வழி
த்தவெள்ளாங்கை, யுண்ணுடிக்கடித்த வடலிழியச்சோழனுயர் குலத்
துச்சுபதேவன் கமலத்தேங்கும், பெண்ணையவள் வயிறறில்வைகிச் செங்
கட்பெருமானுய்த்தெனனவராய்ப்பெருங்கோவிலுலவுஞ், கண்ணுர்வித்தய
ர்தில்லைமலையவர்க்குமுறையுள் கனகமயமாக்கியருள் கைக்கொண்டாரே.

சோழமண்டலத்திலே சந்திரதீர்த்தத்தின் பக்கத்திலே ஒருசோலை இ
ருந்தது அதிலே நின்ற ஒருவெண்ணுவல் மரத்தின்கீழே ஒரு சிவலிங்கமவெ
ளிப்படலும் ஒருவெள்ளாளனே அதைக்கண்டு நாடோறும் புழைக்கையினு
ல்தீர்த்தம் முகந்துவந்துபூட்டி புஷ்பங்களிச்சாத்தி வழிபட்டு ஒருகும் அதனுல்
அந்த லதலத்துக்குரிதிருவானைக்கா என்று பெயராயிற்று அறிஞர்களுடை
ய ஒருசிலத்தி அந்தச்சிவலிங்கத்தின்மேல் சருகு உதிராவண்ணம் தன்வாய்
நூலினுலே மேற்கூட்டி செய்தது சிவலிங்கத்தை வணங்கவந்தவெள்ளாளன
அதைக்கண்டு அதுஅதுசிதம என்று நினைந்து அதைச்சிதைக்க சிலந்திமீள
வும் மேற்கட்டிசெய்தது வெள்ளாளன் மற்றநாள் அதையும் சிதைத்தது அ
துகண்டு சிலந்தி எங்கள் சுவாமிமேல் சருகு உதிராவண்ணம் நான்வருந்தி
ச்செய்தமேற்கூட்டியை இது அழிக்கலாமா என்றுகோபித்து வெள்ளாளனுயி
னது புழக்கையினுள்ளே புகுந்துகடிக்க வெள்ளாளன் கையை நிலத்திலே
மோதிக்கொண்டு வீழ்ந்து இறந்தது கையைமோதியபோது அதனுள்ளேபு
குந்தசிலந்தியும் இறந்தது சுபதேவஞ்சோழ மகாராஜன் தன்மனை
வியாகிய கமலவதியுடன் சிதம்பரத்தை அடைந்து சபாநாயகரை உபாசனை
செய்துகொண்டு இருக்கும் நாளிலே கமலவதி புத்திரபாக்கியம் இன்மை
யால்வரம்வேண்ட அந்தசிலந்தி திருவாதனிலே அவளுடையவயிற்றிலே
கருவாய்வந்து அடைந்ததுகமலவதிக்குப் பிரசவகாலம் அடுத்தபொழுது
சோதிடர்கள் இப்பிள்ளை ஒருநாழிகை தழிதலும் பிறக்குமாகில் மூப்புவரா

ங்களையும் அரசாளும் என்றாகள கமலவதி என்பிள்ளை இப்போதுபிறவாத
ல்லருநாழிகைகழித்துப் பிறக்கும்படி. என்னைத் தலைகீழாகத் தூக்குங்கள்
என்றுசொல்ல அங்குள்ளவர்கள் அங்ஙனம் கட்டித் தூக்கிசோதிடர்கள்கு
றித்த காலமளவுக் கடவிழித்துவிட்டார்கள் கமலவதி இறவாதொழிக்தி
பெற்றெடுத்தேன் ஈசர்செங்கண்ணரேனே என்று சொல்லி பிள்ளையைப்பெ
ற்று இறந்தாள் சுபதேவன் அப்புதலவரைவளர்த்து முடிசூட்டி அரசை அ
வரிடத்தில்ஒப்பித்து தான்தவஞ்செயது சிவலோகத்தை அடைந்தான் கோ
ச்செங்கட்சோழர் பரமசிவனது திருவருளினால் பூர்வசன்மவுணர்ச்சியோ
டுபிறந்து சைவநெறிதழைக்க அரியபற்றுவாராகி சிவாலயங்கள் பலவற்றை
க்கட்டுவித்தத்தொடங்கினார். திருவானைக்காவிலே தாம்முன்னே அருள்பெற்
றதை அறிந்து அங்கே வெண்ணவலுடன் பரமசிவனுக்குக் கோயில் கட்டு
வித்தார் மற்றிராவே ஏவி சோழநாட்டில் வெவ்வேறிடங்களிலே சிவாலயங்க
ள்கட்டுவித்து அவ்வாலயங்கள் தோறும் நியந்தங்கள் அமைத்தார். பின்பு
சிதம்பரஸ்தலத்தை அடைந்து சபாநாயகரைத் தரிசித்து வணங்கி தில்லை
வாழந்தணர்களுக்கும் திருமாளிகைகள் கட்டுவித்துப் பின்னும் பலதிருத்
தொண்டுகளைச செய்துகொண்டிருந்து சபாநாயகருடைய திருவடிநீழலை
அடைந்தார்.

ஓ

சிவமயம்.

எழுபதாவது

திருநீலகண்டயாழ்ப்பாண நாயனார் புராணம்.

பிறங்கொருக்கத்தம்புலியூர் வாழும்பெரியோர்ழ் பேணுதிருநீலகண்டப்
பெருமபாணனாகிர், நிறைந்தருசெம்பொற் பலகையாலவாயினி லமர்பாம்
பெறரருளர்கோக்தகிவண்வாயி, றிறந்தருஞம்வடதிசையே சேர்ந்துபோற
றித்திருஞானசம்பந்தர் திருத்தாள்வாழ்த்தி, யறந்திகழுந்திருப்பதிகம்யாழி
லேமறியாகிறிருப்பொருமணஞ் சேர்ந்தருள்பெற்றாரே.

சோழநாட்டிலே திருவெருக்கத்தம் புலியூரிலே திருநீலகண்ட யாழ்
ப்பாணராயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் பரமசிவனுடைய திரு
ப்புகழை யாழில் இட்டுப் பாடுவாராகி சோழநாட்டில் உள்ள சிவஸ்தலங்க
ளை வணங்கிகொண்டு சென்று பாண்டிநாடு முதல சோந்து மதுரையில் இருக்
கின்ற சொக்கநாதசுவாமியினுடைய கோயில்வாயிலை அடைந்துநின்று பர
மசிவன் மேலனவாகிய பாணிகளை யாழில் இட்டு வாசித்தார சொக்கநாதசு
வாமி அதனைத் திருவுள்ளத்துக்கொண்டு அன்றிரவிலே தம்முடைய அடி
யார்கள் எல்லாருக்கும் சொப்பனத்திலே தோன்றி ஆஞ்ஞாபிக்க அவர்கள்
மறறநாள் திருநீலகண்டப் பெரும்பாணரைச் சுவாமிக்குத் திருமுன்னே
கொணடுவந்தார்கள் திருநீலகண்டப் பெரும்பாணர் அதுசுவாமியுடைய ஆ
ஞ்ஞையென்று தெளிந்து திருமுன்பே இருநது யாழ்வாசித்தார். அப்பொ
ழுதுஇந்தப்பாணர் அன்பினோடு பாடுகின்ற யாழ் பூமியிலே உள்ள சிதம்நா
க்கினால் விக்கு அழியும் ஆதலால் இவருக்குப் பொற்பலகை இடுங்கள்என்
றுஆகாயத்தினின்றும ஓர் அசரீரிவாக்கு எழுந்தது அதைக்கேட்ட அடியா

நக்கன் பொற்பலகையிடை திருநீலகண்டப் பெரும்பாணர் அதில் ஏறியாழ்வா சித்தார். பின்பு பலதலங்களை வணங்கிக்கொண்டு திருவாரூரிற்சேர்ந்துகோ யில்வாயிலை அடைந்து யாழ்வாசிக்க பரமசிவன் வடதிசையிலே ஒருவாயி லவருக்குத் திருநீலகண்டப் பெரும்பாணர் புகுந்து வண்மீகநா தரை வணங்கினர் தெடுகொள் ஆயினபின் அவ்விடத்தினின்றும் நீங்கி சீகாழியில் வீற்றிருக்கின்ற சமயகுரவராகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுடைய திருவடிகளை அடைந்து வழிபட்டு அவரை ஒருபொழுதும் பிரியாது அவர் பாடியருளும் திருப்பதிகங்களை யாழில் இட்டி வாசிக்கும் பெரும்பேற்றைப் பெற்று திருநல்லூர்ப் பெருமணத்திலே அவருடனே சிவபதத்தை அடைந்தார்.

சிவமயம்.

எழுபத்தெட்டாவது

சடையநாயனார் புராணம்.

சங்கையிலாவரன்மறையோர் காவலூர்வாழ்தவாதிபர் தம்பிரான்றோழராய வெங்கள்பிரான்றவ நெறிக்கோரிலக்கு வாய்த்தவிசைஞாநியார் தநய ரெண்ணரிங்க, மங்கையர்க்கொருமும் பரமவைமணவாளரம்பிவந்துதிக்கமா தவங்கள்வருந்தச்செய்தார், வெங்கணாவிளைகு மிளம்பிறைசே சென்னி விடையினருள் சேர்ந்தசடையனரே.

திருநாவலூரிலே ஆதிசைவர்குலத்திலே சடையநாயனர் என்பவர்ஒ ருவர் இருந்தார். அவர் உலகம் எல்லாம் மெஞ்ஞான ஒளியைப்பெற்று உய்யும்படி சமயகுரவராகிய சுந்தரமூர்த்திசுவாமிகளைப் புதல்வராகப் பெற்ற பெரும்பேற்றை உடையவர்.

சிவமயம்.

எழுபத்தொன்பதாவது

இசைஞானியார் புராணம்.

நாவலர்திருப்பதிக்கோர்செல்வச்சைவ மாமகளாஞ்சடையனாநயந்தவின்பப் பூவைக்குலமடந்தைபொற்பாதகொம்புபுரிதமிகுதிருணக்துபோற்றிசெய்தே யாவிற்றிகழுந்தலேவனவலியவாண்டவாரூரவதரிக்கவருந்தவங்கள்புரிந்தா யாவர்க்குமெட்டாதவிசைந்தவினபவிசைஞானியெனஞாலபெளிதாமன்றே.

சடைய நாயனருடைய மனைவியார் இசைஞானியார் என்பவர் எம்பிரான்றோழராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளைப்பெற்றருளிய அவருடையபெரும்புகழைச்சிரியேனுடையபுன்மொழியினலே புகழமுடியுமோ முடியாது.

திருத்தொண்டர் புராணம் முற்றிற்று.

நிருச்சிற்றம்பலம்.